மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

III. 16. (அ)

கணபதிதுணை.

867

# திருவாரூர்த்
# தியாகராசலீலை.

திருவாவடுதுறையாதீனத்து மஹாவித்துவான்
திரிசிரபுரம்

## ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

இது
தேவிகோட்டை,
ம-ள-ள-ஸ்ரீ ராம.மெ.சித.சிதம்பரசெட்டியாரவர்களுடைய
விருப்பத்தின்படி
இந்நூலாசிரியர் மாணாக்கரும்
சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய
உத்தமதானபுரம்

## வே. சாமிநாதையரால்

நூதனமாக எழுதிய அரும்பதவுரை முதலியவற்றுடன்

சென்னை:
பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

விலை. அணா ௧௨.

விசுவாவசுஞு ஆவணிமீ.

1905.

*Copyright Registered.*

GF
023°.38 T-7648
D5

# இப்புத்தகத்திலடங்கியவை.


| | | பக்கம். |
|---|---|---|
| க. | முகவுரை ... ... ... ... ... | 1. |
| உ. | இந்நூலிலுள்ள சிறந்தசெய்யுட்கள்... ... ... | 4. |
| ங. | திருவாரூர்த்தியாகராசலீலை... ... ... | க. |
| | கடவுள்வாழ்த்து ... ... ... ... | க. |
| | நூலியற்றுதற்குக்காரணம் ... ... ... | எ. |
| | அவையடக்கம் ... ... ... ... | அ. |
| | திருநாட்டுப்படலம் ... ... ... ... | கூ. |
| | திருநகரப்படலம் ... ... ... ... | ௩௦. |
| | நைமிசப்படலம் ... ... ... ... | ருக. |
| | முதலாவதுலீலை ... ... ... ... | ருஅ. |
| | இரண்டாவதுலீலை... ... ... ... | சுஉ. |
| | மூன்றாவதுலீலை ... ... ... ... | சுச. |
| | நான்காவதுலீலை ... ... ... ... | சுஎ. |
| | ஐந்தாவதுலீலை ... ... ... ... | சுஅ. |
| | ஆறாவதுலீலை ... ... ... ... | எ௦. |
| | ஏழாவதுலீலை ... ... ... ... | எஉ. |
| | எட்டாவதுலீலை ... ... ... ... | எச. |
| | ஒன்பதாவதுலீலை ... ... ... ... | எசு. |
| | பத்தாவதுலீலை ... ... ... ... | எஎ. |
| | பதினொன்றாவதுலீலை ... ... ... | எஅ. |
| | பன்னிரண்டாவதுலீலை ... ... ... | எகூ. |
| | பதின்மூன்றாவதுலீலை ... ... ... | அஉ. |
| | பதினான்காவதுலீலை ... ... ... | அசு. |
| ச. | நூலின் குறிப்புரை ... ... ... ... | அகூ. |
| ரு. | நூலின் விஷயசூசிகை ... ... ... ... | க௦கூ. |

கணபதிதுணை.

# முகவுரை.

## தேவாரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

திருச்சிற்றம்பலம்.

சித்தந்தெளிவீர்கா, ளத்தனரூரைப்
பத்திமலர்தூவ, முத்தியாகுமே.

திருவாரூருக்குரிய பழைய சரித்திரங்களைத் தெரிவிக்கும் நூல்கள் வடமொழியில் அஜபாரஹஸ்யம், ஆடகேச்வர மாஹாத்மியம், கமலாலய மாஹாத்மியம், சமத்காரபுர மாஹாத்மியம், தியாகராஜ மாஹாத்மியம், தியாகராஜலீலை, தேவயாகபுர மாஹாத்மியம், தேவாச்ரய மாஹாத்மியம், நாகரகண்டம், முசுகுந்தபுர மாஹாத்மியம், ராமகயா மாஹாத்மியம், ஸ்ரீபுர மாஹாத்மியம், ஸ்கந்தபுர மாஹாத்மியம், க்ஷேத்திரவர மாஹாத்மியம் எனப் பல உள்ளனவென்று சொல்லுகின்றனர்.

அவற்றுள், கமலாலயமாஹாத்மியம், நாகரகண்டம், தியாகராஜலீலை என்னும் இம்மூன்றும் தமிழிற் செய்யுள்நடையாகச் செய்யப்பெற்றுள்ளன.

கமலாலய மாஹாத்மியமென்பது, சிதம்பரம் ஸ்ரீ மறைஞான சம்பந்தரென்பவரால், இயற்றப்பெற்றுக் கமலாலயச்சிறப்பென்னும் பெயரால் வழங்குகின்றது; அதன் திருவிருத்தத்தொகை - ௧௦௬௫. அதனை அவர் செய்யத் தொடங்கியகாலம், கலியப்தம் சசுசஎ-ம்ஞூத்தின் பின்னதாகிய பராபவ வருஷமென்று (சாலி - ௧௪௬௯; கி. பி. 1547.) ஷை நூலின் பாயிரச்சருக்கத்துள்ள உ௫ - ம் செய்யுள் தெரிவிக்கின்றது. அவரியற்றிய பதிபசுபாசப் பனுவலென்னும் நூலின் சிறப்புப்பாயிரத்திலுள்ளதாகிய, "ஆதி கமலா லய முதற் புராண, மோது மதியாற் சூதனை யொப்போன்" என்னும்பகுதியும் அந்நூல் அவரியற்றினரென்பதை வலியுறுத்தும். அந்நூல் இன்னும் அச்சிடப்படவில்லை.

நாகரகண்டமென்பது அளகைச் சம்பந்தமுனிவரென்னும் வணிகர் பெருமானல் இயற்றப்பெற்று, நாகரகண்டமெனவும், திருவாரூர்ப்புராணமெனவும் வழங்குகின்றது. அதன் திருவிருத்தத்தொகை - உ௯௧௫. அதனை அவர் இயற்றி அரங்கேற்றியகாலம், சாலிவாகனசகாப்தம் ௧௫௧௪ - (கி. பி. 1592.) பங்குனிமீ மென்று அந்நூலின் பாயிரத்துள்ள ௩௫ - ம் செய்யுளால் தெரிகின்றது. அஃது, அச்சிடப்பட்டுள்ளது.

தியாகராசலீலை யென்பது, ஸ்ரீ வீதிவிடங்கத் தியாகராஜமூர்த்தியின் முந்நூற்றறுபது லீலைகளையுணர்த்துவது. அவற்றுள், முதலிலுள்ள பதின்மூன்றுலீலைகளும் ௧௪-ம் லீலையின் முதற்பாகமும், திருவாவடுதுறையாதீனத்து மஹா வித்துவானும் கவிஞர்பெருமானுமாகிய திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களால் இயற்றப்பெற்று, தியாகராசலீலையெனவும் திருவாரூர்த் திருவிளையாடலெனவும் வழங்கும். இதன் திருவிருத்தத்தொகை-௬௯௯. இந்நூலைப் பிள்ளையவர்கள் செய்யத்தொடங்கியகாலம், சென்ற விசுவாவசுவ்ருடமென்று (கி. பி. 1845.) தெரிகிறது.

இதனைச் செய்தற்குக்காரணம், இப்புத்தகம், ௭-ம்பக்கத்துள்ள, "காரொலாந்தவழும்" என்னும் செய்யுள்முதலியவற்றால் விளங்கும்.

இதன் மேற்பாகமான வடநூலைப்பெறுவதற்கு எத்தனையோமுறை முயன்றும் அது கைக்குவாராமையாலேதான், அந்தப்பாகம் இவர்களாற் செய்யப்பெறவில்லை. அந்தக்குறை இவர்களுக்கு வாழ்நாளளவும் இருந்தே வந்தது.

லீலைகள் முந்நூற்றறுபதாதலால், அவற்றிற்குத்தக்கபடி இருக்கவேண்டுமென்றுநினைந்தே கடவுள்வாழ்த்து, திருநாட்டுப்படலமுதலியவை மிக்க விரிவாக இதிற் செய்யப்பெற்றன.

இந்தப்பாகம் முழுவதையும் ஏட்டுப்பிரதியில் அப்பொழுதப்பொழுது தாமே எழுதிவந்தவரும் கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதராக இருந்தவருமாகிய, ஸ்ரீ. சித. தியாகராசசெட்டியாரவர்களுக்கு இந்நூற் செய்யுட்கள்யாவும் முகஸ்தமாதலால், அவர்கள், தம்பால்வந்தவர்களுக்கு இதிலுள்ள அருமையானபாடல்களை எடுத்துச்சொல்லிப் பரவசத்தோடு பிரஸங்கித்தலை எத்தனையோமுறை கண்டிருக்கிறேன். இன்னஇன்ன அமயத்தில் இன்ன இன்னபாடல்கள் செய்யப்பட்டனவென்றும் அவர்கள் சொல்லக் கேள்வியுண்டு. விரிவஞ்சி அவ்வரலாறுகள், இப்பொழுது விடுக்கப்பெற்றன.

திருவாவடுதுறை ஆதீனத்தில் ௧௫-ம்பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் சுப்பிரமணியதேசிகரவர்களுக்கு இந்நூலில் மிக்க பிரீதியுண்டு; அவர்கள், தம்பால் தமிழ்ச்சுவையறிந்தோர்கள் வந்தகாலங்களில், பிள்ளையவர்களைக்கொண்டேனும் மேற்கூறிய செட்டியாரவர்களைக்கொண்டேனும் ஆச்சரிய ஸங்கீதவித்துவானாக இருந்த ஸ்ரீ மகாவைத்தியநாதையரவர்களைக்கொண்டேனும் அடியிற்குறிப்பிட்டுள்ள பாகங்களுள் ஏதாவது ஒருபாகத்தைச்சொல்லுவித்து மகிழ்விப்பார்கள்.

நைமிசப்படலம், ௫ - ௧௦.
முதலாவதுலீலை, ௧ - ௧௦.
மூன்றாவதுலீலை, முற்றும்.

பிள்ளையவர்களுடைய தமிழ்நூற்புலமையையும் கவிவன்மையையும் இத்தமிழுலகம் மிகச் செவ்வையாக அறிந்திருத்தலால், இதில் அவ்வவ்விடங்களில் அமைந்திருக்கும் பழைய தமிழ்நூற்பிரயோகங்களையும் சொல்லணி பொருளணிகளையும் செய்யுட்களின் நடைச்சிறப்பையும் சைவசித்தாந்த நூற்கருத்துக்களையும் சிவோத்கர்ஷங்களையும் பிறவிசேடங்களையும் எடுத்துக்காட்டுதல் மிகையென்று இம்மட்டோடு நிறுத்தலானேன்.

தொடங்கிய ஒவ்வொரு புஸ்தகவேலையினிடத்தும் அன்புபாராட்டி என்னை ஆதரித்துவரும், திருவாவடுதுறை ஆதீனத்துத் தலைவர்களாகிய ஸ்ரீமத் அம்பலவாணதேசிகரவர்கள் இந்நூற் கையெழுத்துப்பிரதியை உதவிசெய்தவிஷயத்தில் நிரம்ப நன்றியறிவுள்ளவனாக இருக்கிறேன்.

இந்நூலைப்பதிப்பித்தற்குரிய அச்சுக்கூலிமுதலியவற்றில் யாதொரு கவலையுமில்லாமலிருக்கும்படி பொருளுதவிசெய்த தேவிகோட்டை ம-ා-ා-ஸ்ரீ ராம. மெ. சிந. சிதம்பரசெட்டியாரவர்களுடைய பெருந்தகைமை இக்காலத்தில் மிகப் பாராட்டற்பாலது.

இதனைப்பதிப்பிக்குங்காலத்தில் உடனிருந்து அன்புடன் உதவிபுரிந்தவர்கள்:—சென்னை, ந்யூஇங்டன்ஸ்கூல் மதபோதகாசிரியராகிய, தமிழ் வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ தி. கிருஷ்ணையரவர்கள்; திருமயிலை பி. சுப்பிரமணியம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ இ. வை. அநந்தராமையரவர்கள்.

திருவாரூர், போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ சந்தானமையங்காரவர்கள், இதில்வந்துள்ள பழைய சரித்திரங்கள் சிலவற்றை விசாரித்து விளங்க எழுதியனுப்பினார்கள்,

**விருத்தம்.**

எண்ணிய பலவு மாணவர்க் கன்பி னீந்திடு நிதிதமிழ் விளங்க
நண்ணிய புகழ்மீ னாட்சிசுந் தரநன் னாவல னன்கினி தாய்ந்து
பண்ணிய வீதி விடங்கர்த மாடற் பனுவலைப் பதிப்பிக்க வியைந்த
புண்ணிய மதனை நினைதொறு மெனது புந்திமிக் கின்புறு மாலோ.

**கட்டளைக்கலித்துறை.**

தேனாட்சி செய்கவி யானின் செயன்முற் றுஞ் செப்புமுன்னே
மீனாட்சி சுந்தர வள்ளலை யெங்கள் விழுப்பொருளை
வானாட்சி செய்யப் புரிந்ததென் னோமன் வடிவுகொடு
தானாட்சி செய்திரு வாரூர்த் தியாகசிந் தாமணியே.

இங்ஙனம்,

வே. சாமிநாதையன்.

## இந்த நூலினுள்ளே ஒவ்வொரு நயவிசேடத்தாற் சிறந்தசெய்யுட்கள் வருமாறு :—

**கடவுள்வாழ்த்து.** ௧, ௪, ௭, ௧௦, ௧௧, ௧௩, ௧௬, ௨௭, ௩௦, ௩௨, ௩௩, ௩௭, ௩௯.

**அவையடக்கம்.** *முழுவதும்.*

**திருநாட்டுப்படலம்.** ௧ - ௧௦, ௨௮, ௩௨, ௩௯, ௪௬, ௪௯, ௫௩, ௫௪, ௫௭, ௬௧, ௬௩, ௮௦, ௮௨ - ௮௫, ௯௦, ௯௩, ௯௫, ௯௯, ௧௦௦, ௧௦௨, ௧௦௫, ௧௦௬, ௧௧௨, ௧௧௪, ௧௧௫, ௧௧௭, ௧௨௧, ௧௨௭, ௧௩௦, ௧௩௨, ௧௩௩, ௧௩௭, ௧௪௩ - ௧௪௫, ௧௪௭ - ௧௪௯, ௧௭௦, ௧௭௩.

**திருநகரப்படலம்.** ௧ - ௧௦, ௧௬, ௨௨, ௫௧ - ௬௦, ௮௯, ௯௩, ௧௦௨, ௧௦௬, ௧௧௦, ௧௧௧, ௧௧௭, ௧௨௯, ௧௩௪, ௧௫௯, ௧௬௧, ௧௬௮, ௧௭௧.

**நைமிசப்படலம்.** ௫ - ௧௦, ௧௩, ௧௪, ௧௬, ௧௯, ௨௪, ௨௬, ௨௭, ௩௧, ௩௭, ௩௯, ௪௦, ௪௨.

**முதலாவதுலீலை.** ௧ - ௧௦, ௩௫ - ௩௬.

**மூன்றாவதுலீலை.** *முழுவதும் - (தியாகராசமூர்த்தியின் அரசத்திருவுருவவர்ணனை).*

**ஏழாவதுலீலை.** ௪ - ௮.

**எட்டாவதுலீலை.** ௪ - ௧௫.

**பன்னிரண்டாவதுலீலை.** ௧௦, ௧௧.

**பதின்மூன்றாவதுலீலை.** ௧௮.

**பதினான்காவதுலீலை.** ௪, ௧௪, ௧௮.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருவாரூர்த்
# தியாகராச லீலை.*

## கடவுள்வாழ்த்து.

### காப்பு.

திருமன்னு மணிமார்பன் றேமன்னு தாமரைப்பூந் தேவ னுகா
ருருமன்னு புகழ்க்குடிலைக் குரியபொரு ளொருதானென் றுலகோர்ந் துய்ய
மருமன்னு செழுங்கடுக்கை மலர்மாலை முடிக்கணிந்து வயங்கா நிற்குந்
தருமன்னு மைங்கரத்தங் குஞ்சரப்பொற் செஞ்சரணந் தலைமேற் கொள்வாம்.

### வாதாவிவிநாயகர்.

வழிவருமைந் தர்கள்வாரா மைந்தர்களுக் கிதம்கித மருவ வாற்றிப்
பழியினலம் பொருத்துபுகழ்த் தந்தையென வறமாதி படர்தீர்ந் தெய்தக்
கழிநசையின் வழிபடுவார் படாதவருக் கறமறமாங் கருணை யாற்றி
யிழிவில்சுகப் பேறருளும் வாதாவி மழகளிற்றை யிறைஞ்சு வாமே. (௨)

### விட்டவாயில்விநாயகர்.

இருகவுணின் றொழுகுமத முண்ணவெளிர் நிறத்தொழுங்கி னிளைத்து மொய்த்த, கருநிறவண் டினம்பிறைக்கோட் டொளிமூழ்கி வெண்ணிறமாய்க் கதிர்த்த னொக்கி, மருவுபிதா வெனத்தலைமா லிகையிவர்கு டினர்சொ லென வானோ ரேத்தி, வெருவில்களி யுறவமரும் விட்டவா யிற்களிற்றை விடாதுள் வாமே. (௩)

### ஆகாசவிநாயகர்.

விரவுபிரு திவித்தலத்துக் கபோலமத வெள்ளமன்பர் வினைக ளென்னும்
பரவுதரு வேர்பறித்துத் தள்ளகிரி யாணவழல் படர்ந்து பற்றி
யுரவுசிதர் துகளாக்கச் செவிக்காற்றுத் தூற்றவினி துவந்து மேவும்
புரவுவள ராகாசக் களியானை யொளிர்பாதம் போற்று வாமே. (௪)

---

* திருவாரூர்த் திருவிளையாடற்புராணமெனவும் வழங்கும்.

## நடுக்கந்தீர்த்தவிநாயகர்.

சீர்த்தவனை முழுத்தவனை யெடுத்தவனை வண்டுடைவேள் செயல்போய் மாய
பார்த்தவனை முகத்தவனை யுறுமார்பிற் றுழாய்க்கமடப் பார வோடு [ப்
சேர்த்தவனை யுடுத்தவனை யெடுத்தொரர வார்த்தவனைத் தீரா தோங்கு
நார்த்தவனை யாணடுக்கந் தீர்த்தவனை யடைந்தவனை நாமுள் வாமே. (௫)

## மாற்றுரைத்தவிநாயகர்.

தந்தையிலாத் தந்தைநகை தம்மிடத்தே தங்கவுமத் தந்தை யாற்செய்
நிந்தையறு தொழிலென்ப துணர்ந்துநடு நிலையேதா நிற்ற னன்றென்
றெந்தைபிரா னூரன் செழுங்கனகந் தாழ்வுயர்வென் றியைய வோர்ந்து
சிந்தைகொள மாற்றுரைத்தா ரடிக்கமல முடிக்கணியாச் சேர்த்து வாழ்வாம்.

## சோழவிநாயகர்.

தேருமுனி வரர்சிவா கமம்பொறித்த கோசங்கள் சிதைவு றாம
லாருமவர் செய்கருமந் தவறாமற் றவச்சாலை யடிய றாமற்
பாருநெடு விண்ணுமிடர் மருவாம லங்குசம்வெம் பாச மேந்திக்
கூரும்வலி மூடிகமூ ரழகியசோ ழக்களிற்றைக் குறித்து வாழ்வாம். (௭)

## நிட்களசிவம்.

பூமேவு கருணையினாற் பல்லுயிர்க்கும் பவநல்கிப் போக மூட்டித்
தாமேவு மலமகல வறிவறியா மையினுமறஞ் சார வாற்றித்
தூமேவு சத்திபதித் தொழியாம லானந்தஞ் சுரவா நிற்கு
மாமேவு சதியளிக்குந் தனிமுதலை யெஞ்ஞான்றும் வாழ்த்தி வாழ்வாம். (௮)

## வன்மீகநாதர்.

தடங்கொண்ட தாமரைமே லுறைவானு நிறைவானுந் தயங்கு காசொண்
படங்கொண்ட பாப்பணைமேற் படுப்பானுங் கடுப்பார்வெண் பகடேர் மொய்ம்
றிடங்கொண்ட புரந்தரனு நிரந்தரஞ்சூழ் நிறைசெல்வத் திருவா ரூர்ப்புற் [பிற்
றிடங்கொண்ட பெருமானை வலங்கொண்டு மலர்தூவி யிறைஞ்சு வாமே. ()

துன்னுபொறி செறிபடப்பாம் பணிந்தசா தனத்தானே துகடீ ரன்பின்
மின்னுமொரு பாம்புதொழ நடநவிலுந் திறத்தானே விரிபா லாழி
யுன்னுமொரு பாம்புயிர்த்த விடமமுது செயுங்குணத்தா னேவன் மீக
மன்னுமொரு மாமணியைப் போற்றுவாம் வினைப்பிறவி மாற்று வாமே. (௧௦)

## அசலேசர்.

பரவுதமை யடைந்தவர்கள் வெம்மையரா யினுந்தண்மைப் பால ரேனும்
விரவுபகை யினரெனினு மொப்புமையன் றுமைநனி மேவி நாளுங்
கரவுதவிர்ந் தினிதமருந் தன்மையுல கினுக்குணர்த்தல் கடுப்பக் காரி
யரவமுத மதிநிகர்த்தொன் றுறமுடிக்கொ ளசலேச ரடிகள் போற்றி. (௧௧)

### ஆடகேசர். வேறு.

சிறையளி சோடி யுண்ணத் தேம்பொழி தெய்வக் கஞ்சத்
திறையவன் பசுந்து ழாயோன் முதலியோர் யாரு மேத்து
மறையவன் யானே யென்று மன்னுல சுறிவிப் பான்போ
லறையழ லங்கை யேந்து மாடகே சன்றாள் போற்றி. (௧௨)

### ஆனங்தேசர். வேறு.

உடையநா யகர்சீ ரானங்தேச் சுரர்பே ருலகெலாம் பரந்தவான் புனலை
நடையறச் சுருக்கி மலர்மக னறியா நகுமுடி வைத்தென நாளும் [ன்று
விடையவா தனையிற் பரந்தவெம் மனத்தைச் சுருக்குபு விழைந்துமான் முய
மடைதர முடியா வடிமிசை வைப்ப ராதலா லவர்க்கன்பு செய்வாம். (௧௩)

### சித்தீசர். வேறு.

ஊனார் பிறவிப் பகைக்குள்ள முடைந்த டைந்தோ
ரானார் தமைக்காப் பவொன்பதற் கான்ற சான்றாத்
தேனா ரிதழி மலர்மாலைகொள் செஞ்ச டைக்கண்
வானார் பிறைவைத்த சித்தீசனை வாழ்த்தி யுய்வாம். (௧௪)

### சோமாக்கந்தர். வேறு.

அடர்பசுங்கற் பகமாதி யமைந்தபெரு விண்ணுலக மழுக்கா றெய்தப்
படர்நெடுவா ரிதியுடுத்த மண்ணுலகங் களிதூங்கப் பைந்து ழாய்மா
லிடரறுசெந் தாமரையோ னேத்தெடுப்பத் திருவாரூ ரெழிற்பூங் கோயிற்
சுடரரியா தனத்தமருஞ் சோமாக்கந் தனைநாளுந் துதித்து வாழ்வாம். (௧௫)

### வீதிவிடங்கர்.

பெண்ணரசு குடிகொளரி நிறஞ்சிறப்பன் றெனவனையான் பிணைமுன் னுய
விண்ணரசு தனைமருவி யவன்சோர்வு தெரிந்தவற்கு வெற்றி யீந்த
மண்ணரசு கொளவந்து மண்ணரசா கியவாரூர் மணிப்பூங் கோயி
லெண்ணரசு வீற்றிருக்கும் வீதிவிடங் கப்பெருமா னிருதாள் போற்றி. (௧௬)

பொன்பொலியும் வாசிகையு மணிமுடியுஞ் செவ்வந்திப் பூமென் றோடு,
மன்பொலியுஞ் செங்கழுநீர் மாலையும்பொற் குண்டலமு மணிப்பொற் பூணு,
மின்பொலியுந் திருமுகமுந் தெருண்மொழியு மருள்விழியும் விடங்கப் பெம்
மான், றென்பொலியு மாடரவங் கிண்கிணிப்பொற் பாதமும்யாஞ் சிந்தை
செய்வாம். (௧௭)

### தியாகராசர்.

கலகமற மொழியவறங் குதுகலிப்பப் பல்லுயிருங் களிப்புண் மூழ்கி
யிலகமணி முடிமுடிவைத் திருபத்தைந் தகவையுடை யேந்த லாகித்
திலகநுதல் வெண்ணீறு திகழமணிப் பூணொளிரச் செங்கோல் கைக்கொண்
டுலகமுழு தாண்டவருட் டியாகரா சப்பெருமா னொளிர்தாள் போற்றி. (௧௮)

தடவரியா தனம்போற்றி கருணைபொழி முகம்போற்றி தயங்கோர் பாக
மடவரன்மெல் லியல்போற்றி மன்னுமிளஞ் சேய்போற்றி மலர்க்கண் போற்
திடவுலக மேத்துகதிர் வாள்போற்றி நிறைசெல்வத் தியாக ராசர் [றி
நடவுதிருத் தேர்போற்றி நம்மையாட் கொளுமசபா நடனம் போற்றி. (௧௯)

## நிட்களசத்தி.

மணியொளிபூ மணம்போலா னவமிலறி வேயுருவாய் வயங்கா நிற்குந்
துணிபொருளி னகலாம லுறைந்தருளிச் சிருட்டிமுனைந் தொழிலு மாற்றிக்
கணிதமறு பல்லுயிர்க்குஞ் சன்மார்க்கப் புணர்வுமலக் கழிவுஞ் செய்தே
யணியசிவா னந்தமருள் பூரணியை யெஞ்ஞான்று மகத்துள் வைப்பாம்.(௨0)

## கமலாம்பிகை.

பலகலையா கமமறைக ளனைத்தினுக்குங் காரணமாய்ப் பகர்பா ராதி
யுலகநிகி லமுமவற்றி லுள்ளசரா சரங்களையு முதவி நாளு
மலகறுபல் போகமுமாய்க் கருணைசுரந் தாடல்செயு மம்மை செம்மைத்
திலகநுத லொருகமலாம் பிகையிருபா தமுமுளத்துச் சேர்த்து வாழ்வாம். ()

மாமேவு முக்கணிரு புயம்பசிய நிறங்கரண்ட மகுடம் வாய்ந்து
தாமேவு யோகபீ டத்திடக்கை கவானூன்றிச் சுடர்வ லக்கை
தேமேவு நறுநீலங் குட்டிகா சனத்தடிக டிருந்த மேவு
மோமேவு முயர்பரையைக் குளயேற்பல் லிதழ்க்கமலத் துன்னு வாமே.(௨௨)

## அல்லியங்கோதையம்மை. வேறு.

எல்லியங் கோதை யாழியொன் றுடைத்தே ரிரவிவெண் மதியழல் விழியோ
வல்லியங் கோதை நீத்தபாம் பேத்த மன்றினுட் டயருமா மேரு [ன்
வில்லியங் கோதை யெனப்பணி பூண்ட வித்தக விமலனோர் பாகத்
தல்லியங் கோதை யம்மைபொற் பாத மனுதினம் போற்றியேத் தெடுப்பாம்.

## வேறு.

அலர்செறிபைங் குழல்போற்றி யழகுபொழி முகம்போற்றி யருட்கண் போற்
மலரிளவெண் ணகைபோற்றி பரஞானஞ் சுரக்குமுலை வள்ளம் போற்றி [றி
பலர்புகழு மங்கலநாண் போற்றியப யந்தருங்கைப் பதுமம் போற்றி
கலரணுகற் கருஞ்சீரல் லியங்கோதை யம்மைபத கமலம் போற்றி. (௨௪)

## சபாபதி.

நகரமல ரடிமகரந் திருவுதரந் தோள்சிகர நகுபொற் றுண்டம்
வகரமுடி யகரமொரு க்கிகையக ரம்பொலிசீர் வகரம் யாரும்
பகரபய கரஞ்சிகரந் துடிமகரங் குறணகரம் பரவு சேந்தீ
நிகரருமோம் வாசிகையா மன்றினட நவில்பொருளை நினைந்து வாழ்வாம். ()

## சிவகாமசுந்தரியம்மை.

கான்மருவு செஞ்சடையி லொண்பிறைதண் புனல்புயத்திற் கடுக்கை மாலை
வான்மருவு மணியொளிப்பாம் புருவடிவீ ரொற்றுமையின் மகிழ்பூத் தாட
வான்மருவு கொடியுடையார் புரிதிருச்சிற் றம்பலப்பே ராடல் காணு
மான்மருவு மதர்நெடுங்கட் சிவகாம சுந்தரிதாள் வணக்கஞ் செய்வாம். (உசு)

பல்லுயிர்க்கு முழுதுணர்த்து பழையமுழு முதலுனென்
றெல்லுயிர்க்கும் வானுதி யெவ்வுலகு மெளிதுணரச்
சொல்லுயிர்க்குங் கலைமுனிவர் சுடரறமா திகளுணர
மல்லுயிர்க்குங் கல்லாலின் மருங்குறைகோ னடிபோற்றி. (உஎ)

## வைரவக்கடவுள். வேறு.

தன்னகை நுதற்கண் செங்கை தங்கழ லெழுந்தா லன்ன
மின்னகை வடவை தீக்கு முத்தலை வேலி னுற்குன்
பின்னகை மார்ப னுதி யிமையவ ருடம்பி னெய்த்தோர்
முன்னகை யோட்டி னேற்ற வடுகனுக் கன்பு செய்வாம். (உஅ)

## வாதாவிவிநாயகர். வேறு.

மேதாவி யருக்கிடமாய் மிளிர்திருவா ரூர்த்தளியிற்
போதாவி தொறுமலர்ந்து பொலிகலிங்க நின்றும்போந்
தாதாவி யனைத்துமினி துவந்தேத்த வுவப்புதவும்
வாதாவி மழகளிற்றை மலர்தூவி யிறைஞ்சுவாம். (உகூ)

## முருகக்கடவுள். வேறு.

கார்மலிகந் தரனுதற்கண் கருவேண்மெய் பொடித்தழகு கதிப்ப வோர்தன்
சீர்மலிகே ழொருநெல்கச் செவ்வேளென் றுதித்துவகை திகழ யார்க்கும்
போர்மலிவேல் வலனேந்திப் புத்தேளிர் பகைசவட்டிப் போக மீவான் [ற்றி.
வார்மலிபூண் முலையிருவர் மணம்புணர்ந்த சேவகன்பொன் மலர்த்தாள் போ

## திருநந்திதேவர். வேறு.

வாளா கியகண் ணுமைபாகன் மருவோ லக்கஞ் சேவிப்பா
னாளா கியமா லயன்முதலோ ரடுத்து வேண்டக் கடைக்கணித்துக்
கோளா கியவேத் திரமசைத்துக் குலவ வருளு நந்திபிரான்
றாளா கியவோ ரிருபோதுந் தலைமேற் றரிப்பா முப்போதும். (ஙக)

## அகத்தியமுனிவர். வேறு.

ஒருமலைமண் ணழுத்துபுகை யொருமலைவிற் றுகிர்மலையா
மருமலைபைந் துளவணிந்த மருமலையைப் புரிந்துகளை
பொருமலையைக் குடித்தமரர் பொருமலைமாற் றுபுபொதியத்
திருமலையில் வீற்றிருக்குஞ் செம்மலையுட் குறித்திடுவாம். (ஙஉ)

மகாமகோபாத்தியாய, டாக்டர் வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-20.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். வேறு.

ஊழிமுத லொருபாகத் துமையளித்த பரஞான வுததி மாந்திப்
பாழியுறு பரசமயக் கோடையறச் சைவநெடும் பயிர்க ளோங்க
வாழிமறைத் தமிழ்மழைபெய் மாமுகிலைப் பாலறா வாய்ப்பூங் கன்றைக்
காழிவளர் மாமணியைக் கவுணியர்தங் கற்பகத்தைக் கருத்துள் வைப்பாம்.()

## திருநாவுக்கரசுநாயனார்.

உயிர்பலவுந் தத்தமனம் வைத்துநனி சுமந்துள்ள வுள்ள பெம்மான்
றயிர்விரவு வெண்சோறு சுமந்துள்ளி யெதிர்வரவச் சாமி தாட்குச்
செயிரறுமன் புறச்சுமந்த செழுமணியை யுழவாரஞ் செறிகைத் தேவை [ம்.
யயிரினுமின் சுவையுடையொண் சிவஞானத் தமிழ்பொழிநா வரசை யுள்வா

## சுந்தரமூர்த்திநாயனார்.

கோடிவரி வண்டுழக்கிக் குடித்துவப்ப மதுப்பொழியுங் குழங்கன் மாலை
சூடியவொண் கருங்கூந்தற் பரவைமுலைக் களியானை துதைந்து பாய
நீடியவான் களிகூர்திண் புயவரைநன் னெடுந்தகையை நிமலத் தேவை
யாடியினு வணியின்முனைப் பாடிவரு பெருமுதலை யகத்துள் வைப்பாம்.(௩௫)

## திருவாதவூரடிகள்.

ஆசையடை யாவழுதி யாசையெலா மாசையுடை யார்க்கு மோங்கு
மாசையிலஞ் சூழ்புவிவா னாசையடை யார்க்குமுற வாரி வீசித்
தேசையுறு மணிவார்த்தைத் துதிபலரு முயப்புரிந்து சிவானந் தப்பே
ரோசையுறு கதியடைந்த வாதவூர் வள்ளலடி யுள்ளங் கொள்வாம். (௩௬)

## சண்டேசநாயனார். வேறு.

தருமுக மலர்பூம் பசுநறுந் தொடையற் றடநெடும் புயவலித் தேவர்க்
குருமுக வடர்வேற் குருளையம் பிகையோ டொள்ளரித் தவிசுறை தியாகர்
கருமுகங் கீளும் பங்குனித் திருநாள் காணுற வம்மினென் றினிய
திருமுக மலர்ந்து திருமுக மெழுதுஞ் சேய்ஞலூர்ப் பிள்ளைதா டொழுவாம்.()

## மற்றைநாயன்மார். வேறு.

உறுசுத்த பத்தி வயிராக்கிய மோங்க மேவித்
தெறுநத்த நேரு மலமாதி சிதர்த்தெ ழுந்து
நறுமத்த மாலை புனைவாரடி நன்க டைந்த
வறுபத்து மூவ ரடிமாமலர்க் கன்பு செய்வாம். (௩௮)

## முசுகுந்தசக்கரவர்த்தி.

தேமா றிலாப்பைந் துளவோனொடு தேவர் வேந்த
னேமாறி நிற்ப வெளியோமிறு மாந்து நிற்பக்
கோமான் விடங்கப் பெருமானையிங் குக்கொ ணர்ந்த
மாமான் முசுகுந் தனைவாழ்த்தி வணங்கு வாமே. (௩௯)

நாண்டார். வேறு.

இருண்மேவு புறச்சமய நெறியனைத்தும் வெறுமயலென் றிகழ்ந்து நீத்துப்
பொருண்மேவு சுத்தசைவ சித்தாந்த நன்னெறியைப் புணர்ந்து நாளுந்
தெருண்மேவு பூதிசா தனம்பூண்டு சிவானந்தச் செல்வ ராய [மே.
வருண்மேவு திருத்தொண்டர் திருக்கூட்டம் பணிந்தெழும்பே றடைந்தாம் யா

குருவுருவர் திருவெண்ணீ றெழுத்தைந்து வழுத்துபுகழ்க் கோயி லம்மான்
றிருவுருவ மென்றலேயே வுறுபாத மருச்சனைசெய் திறத்து நிற்றல்
பொருவிறிருத் தொண்டுசெய விவையோரெட் டினுமன்பு பொலியப் பூண்டு
மருவுமவர் யாவரா யினுமவர்தா டைவருமென் மனமெஞ் ஞான்றும். (சக)

துறைசைப் பஞ்சாக்கரதேசிகர்.

வீங்குபுகழ் மெய்கண்ட விமலனருட் சந்ததிக்கோர் விளக்க மாகு
ளோங்குதிறற் சயிலாதி திருமரபிற் குருபரன்பே ருண்மை மூர்த்தி
வாங்குகட லுலகேத்து மாவடுதண் டுறைநமச்சி வாய தேவன்
றேங்குலவு செங்கழுநீர் மலர்தவடித் தாமரைகள் சென்னி சேர்ப்பாம். (சஉ)

அம்பலவாணமுனிவர். வேறு.

மின்னுமான் மழுவும் வெவ்வழல் விழியு மிளிர்கறைக் கண்டமு மறைத்துப்
பன்னுமா னிடமாய் வந்தெனை மறைத்த பழமல வலிமுழு தொழித்து
மன்னுமா னந்தம் புணர்த்தியாள் கருணை வள்ளலா வடுதுறைப் பெருமான்
முன்னுமா தவர்சொ லம்பல வாண முனிவர னிணையடி போற்றி. (சந)

# நூல் இயற்றுதற்குக்காரணம்.

வேறு.

காரொலாந் தவழுஞ் சென்னிக் கதிர்மணி மாடந் தோறு
நீரொலா மமைந்தார் மேவு நிறைசெல்வத் திருவா ரூரிற்
பாரொலாம் புகழ்ந்து போற்றும் பங்குனித் திருவி ழாவிற்
சீரொலாந் திருந்து தேவா சிரயனுங் காவ ணத்தில். (க)

தண்ணிய குணத்தர் சுத்த சைவசித் தாந்த ராய
புண்ணியர் பலருங் கூடிப் புகழ்மிகு தியாக ராசர்
பண்ணிய வாடன் முற்றும் பாடுக தமிழா லென்று
மண்ணிய மணியே நேரும் வாய்மலர்ந் தருளி னரால். (உ)

பொற்றுணை ரிதழி வேய்ந்த புற்றிடங் கொண்ட பெம்மா
னற்றுணர் மலர்மென் றாளே நாமென் புடைய ராய
முற்றுணர் பெருமை சான்றோர் மொழிந்தசொற் றலைமேற் கொண்டு
சிற்றுணர் வுடைய யானுஞ் செப்பிட லுற்றேன் மாதோ. (௬)

# அவையடக்கம்.

தன்பெருமை தானுணராத் தன்மையனென் றெல்லோரு
முன்பெருமை யாருரைத்த துணர்ந்துமா ரூர்ப்பெருமான்
மன்பெருமை விளையாடல் வளப்பெருமை சொலத்துணிந்த
வென்பெருமை யென்னுரைக்கே னென்னகையு மடக்கரியேன். (க)

வேறு.

பாடன்மறை கதறமறைந் தப்பாலாய் விளங்கும்
பரமர்திரு வளர்கமலைப் பதித்தியா கேச
ராடல்சிறி துரைத்திடவும் யான்வல்லே னல்லே
னவரருளா லாகுமெனத் துணிந்தனனவ் வருளுங்
கூடலுறு மெலியரையுங் கூடினனி வலியுங்
கூடுறுங்கொ லென்னிலமரர் சபைநடுமு னட்ட
வாடலுறு மொருதிரண மருள்சிறிதுற் றுறுமவ்
வானர்வலி மாயவலி மருவியதியா ரறியார். (உ)

வேறு.

முகத்தினுக் குரிய வங்க முழுமையு மிலாத வொன்றைத்
தகத்திரு முகமென் றுள்வார் தழைகவிக் குரிய வங்க
மகத்துவ ஞான வாய்மை மருவிலாச் சிறியேன் பாட
லகத்திலை யெனினு நல்ல பாடலென் றெடுத்தாள் வாரால். (௩)

தட்டற வுணர்ந்தோர் ஞானச் சார்பிலாச் சிறியேன் பாட
லெட்டனை நயமி லாதா யிருக்கினு நயமிக் குள்ள
முட்டறு பாட லென்றே மொழிந்தெடுத் தாள்வர் நாளுங்
கெட்டதைப் பெருகிற் றென்று கிளப்பவர்க் கரிய தாமோ. (௪)

வேறு.

நீடுறுவா னகமேவு தெய்வமா லிகையொடுமிந் நிலத்தின் மேவும்
வாடுறாத லளிமுசன் மணக்குறைபே ரொளியின்மை வழுவு தூய்மை
கூடுறுமைங் குற்றமுடை மாலிகையும் விசேடமெனக் கொண்ட வையர்
நாடுறுசான் றோர்கவியோ டைந்தியலா சென்கவியு நயந்து கொள்வார். (௫)

வேறு.

அமிழ்தினு மினிய வாரூ ரண்ணலா ராட லன்றி
யுமிழ்சுவை யுடைநின் பாட்டு மினிக்குமோ வுலகிற் கென்னிற்
றமிழெனும் பெயர்க்கு மேலோர் சாற்றிய பொருளை யோரி
னிமிழ்திரைப் பரவை ஞாலத் தினிப்பதற் கைய மின்றே. (௬)

ஞானமார் தருதென் னூரர் நாயக னுடல் வாரி
மானமா ரதனை நாடும் வளத்தவென் பாடன் மாரி
தானமா ருணர்ச்சி மிக்க தன்மையர் மயில்க ளாரு
மீனமார் பொறுமை மிக்க யாவருங் குயில்கண் மாதோ. (௭)

ஆகத்திருவிருத்தம் - ௫௩.

# திருநாட்டுப்படலம்.

முடங்குளை மடங்க லுங்கு மொய்ம்மணித் தவிசின் முத்த
வடங்கிளர் முலையா ளோடு மானவேற் குழவி யோடும்
விடங்கர்வீற் றிருந்து நாளும் விளங்கர சியற்றப் பெற்ற
தடங்கெழு சோழ நாட்டின் வளஞ்சில சாற்ற லுற்றும். (௧)

திரைசெய்பாற் கடலிற் றுஞ்சுஞ் செங்கண்மான் மார்பி னின்றும்
விரைசெய்கற் பகநன் னாடு மேவிய தியாக ராசர்
புரைசெய்தற் சார்ந்து வேறோர் புலங்குறி யாது மேவ
வுரைசெய்நற் றவஞ்செய் துள்ள துயர்புகழ்ச் சோழ நாடு. (௨)

அவஞ்செயும் வினையி னீங்கி யாருயிர் வருக்க மெல்லா
நவஞ்செயு மின்ப மேவ நயந்துபே ரருள்சூற் கொண்டு
சிவஞ்செயுந் தன்பான் மேவித் திகழ்பரா சத்தி நாளுந்
தவஞ்செயத் தவஞ்செய் துள்ள தகையது சோழ நாடு. (௩)

மடிசுரந் திரங்குஞ் சேதா மழவிளங் கன்றிற் காகக்
கடிசெழு பைம்பூண் மார்பக் காதலற் கிடத்தி மீது
கொடிநெடுந் தடந்தே ரூர்ந்து முறைசெய்கோக் குடைக்கீழ்த் தங்கும்
படியறம் புரிந்த தம்மா படிறில்சீர்ச் சோழ நாடு. (௪)

நிறைபெருங் கல்வி யோரை நிறைபெருஞ் செல்வத் தோரைக்
குறையற விளைவு செய்யுங் குடிகளைப் பிறநாட் டுள்ள
வறைபெரும் பரமுந் தாங்கும் வன்மையை யவிர்பொன் னாதி
யுறையுமா கரத்தை நாளு முடையது சோழ நாடு. (௫)

எங்குமின் னடிசிற் சாலை யெங்குமின் சுவைநீர்ப் பந்த
ரெங்குநல் யாக சாலை யெங்குமங் கலப்பே ரோதை
யெங்கும்வண் பெருந்தீர்த் தங்க ளெங்குமொண் சிவால யங்க
ளெங்குநந் தனங்க ளாக்கொண் டிமைப்பது சோழ நாடு. (௬)

அறமலி புகழ்சால் சென்னி யாண்டகா ரணத்தா லன்றித்
திறமலி பலநாட் டிற்குஞ் சென்னிபோற் சிறத்த லானு
நிறமலி சென்னி நாடென் றொருபெயர் நிகழப் பூண்ட
துறமலி வளத்தான் மிக்க வுயர்புகழ்ச் சோழ நாடு. (௭)

ஓங்குசீர்ப் பொன்னி நன்னீ ருடையகா ரணத்தா லன்றிப்
பாங்குசா லறம்வ ழாத குணமுடைப் பயத்தி னானுந்
தேங்குசீர் நீர்நா டென்றோர் செழும்பெயர் படைத்த தம்மா
வாங்குநீர்ப் புவியுண் மிக்க வளர்தரு சோழ நாடு. (௮)

வடமொழிப் புலவ ரானு மாண்புசான் றுயர்சீர் தென்சொற்
றிடமொழிப் புலவ ரானுஞ் செறிதர மற்று முள்ள
தடமொழிப் புலவ ரானுந் தனித்தனி புகழப் பெற்ற
திடமொழிப் புரும லோங்கி யிலங்குவான் சோழ நாடு. (௯)

மலிபசி யறாத நோய்தெம் மன்னர்செய் மறுக்க மின்மை
நலிதரு கேடொன் றின்றி நனிவிளை வுண்மை யாய
வலிகொடேக் கழுத்த மிக்கு மற்றைநா டனைத்தும் வென்று
பொலிபுகழ்ச் சோழ நாடு போல்வதோர் நாடு முண்டோ. (௧௦)

## மனைவளம். வேறு.

குரவு வார்குழற் கோற்றொடிச் சசிபுணர் கோமா
னுரவு மேவுபே ரானையா றொழுகுறு கொண்மூப்
புரவு சாலுமற் றவனுடைத் தினைவயிற் பூத்த
பரவு புண்டரீ கத்துருக் கொண்டுவான் படர்ந்து. (௧௧)

ஊரு மிந்திரன் றிசைக்கெதி ராசையா னூரவோன்
வாரு மானைகொண் மாப்பெருங் கடலக மருவிச்
சேரு நீர்வயி றடுப்பவுண் டாங்கவன் றினைக்க
ணூரு நீலமென் மலருருக் கொண்டுவா னடைந்து. (௧௨)

மன்னு நீனிறம் வாய்ந்துமா லெனும்பெயர் மருவி
மின்னு பேருல கோம்புத லாற்றடி வில்வா
ளின்னு நீர்வளை சக்கரம் விளங்குறத் தோற்றி
யின்னு லாமல ரிருக்கையா லோதிம மேறி. (௧௩)

அழலு மஞ்சுற வுயிர்க்கெலாம் வெப்பநோ யாக்கிச்
சுழலு மாமுதிர் வேனிலின் றுணையறத் தொலைத்து
கிழலு நீருமுண் டாக்குதும் யாமென நிகழ்த்துங்
கழலு ருநெடு மொழியென வருமொலி காட்டி. (௧௪)

எரிய ருமுது வேனிலென் றுரைத்திடு மிருது
விரிய நாடொறு முதவிசெய் திடுங்கொடு வெய்யோன்
றெரிய மீமிசைச் செல்வதோ வெனச்சினந் தென்ன
வரிய மற்றவன் பேரொளி மாய்தர மாய்த்து. (௧௫)

குவாலு டைப்பயி ராதிக டழைதரக் கூடித்
தவாத வெப்பறப் பெருமழை பொழிந்துபின் றம்மா
லுவாவு றப்புரி தண்மையை வாரிரு ழுலக
மவாவ முன்னரோ தெரித்தெனத் தண்மைமிக் கடைந்து. (௧௬)

செறித மக்கிறை மகள்புணர் சேவகன் றிணையு
நெறிசெ யம்மக பதியவன் பின்னவ னிலமுங்
குறிகொ டம்முடைப் பசிதெறு கடல்குடி கொண்ட
வெறிசெய் கானலந் தலையுமம் பயன்பெற விரிந்து. (௧௭)

வந்து வந்துலாம் வந்துநீ பொரேன்மகிழ் வாய்நீ
யுந்து மேற்றுமா னினங்கள்பேய்த் தேர்தொடர்ந் துணங்கிச்
சிந்து மற்றது சிந்தியென் றதுதிரிந் துழன்று
நந்து ருமனற் றணிதமா கியமொழி நவிற்றி. (௧௮)

மருவி யாற்றிடைச் செல்பவர் முதலிய மாக்க
ளொருவி யவ்விடம் விரைந்தரண் புகக்குறி யொன்று
கருவி யாயதாங் கருணையாற் றெரிப்பது கடுப்பத்
திருவி ளங்குநா னிலத்தினும் வள்ளுறை சிதறி. (௧௯)

தங்கு மாநிலங் குழைதர விடையரூத் தாரை •
யெங்கு மாகவுட் குழையுமெய் யடியவர்க் கென்றுந்
தெங்கு மாவளை செழுங்கம லைப்பதித் தியாகர்
பொங்கு மாரருள் பொழிதல்போற் பெருமழை பொழிந்த. (௨0)

வேறு.

மற்படு வாரி சூழ்ந்த மண்ணகத் தூன்ற வானம்
மற்பல விழுது விட்டாற் போலவும் பளிக்குக் கோல்கள்
பொற்புற நிரைத்து விட்டாற் போலவு மிடைய றாது
சொற்படு தாரை தூங்கச் சொரிந்தன மழைமஞ் செல்லாம். (௨௧)

செறிபல பொருளு மெங்குஞ் சிதர்தரத் தேய மெல்லா
மறிதரப் பொழியு மாரிக் காற்றுரு தரற்றன் மான

மறிதரு மகில்சந் தாதி வாரிக்கொண் டிழியா நிற்கு
மெறிபல வருவி யோதை யெழுந்தன குன்ற மெல்லாம் (௨௨)

படுகடன் முகந்து வானம் படர்ந்துநின் றிடைய றாது
சொடுமழை பொழியா நிற்குங் கொண்டல்சூள் குழைசா லிந்த
நெடுநிலக் கிதுவே சாலு நின்மினென் றிசைத்தல் போலக்
கடுகிய கான யாறு கலித்தன கான மெங்கும். (௨௩)

தேரின்வெம் பசியோ ருண்டு தெவிட்டித்தேக் கெறிதல் போலக்
கூரிய வேனில் கொள்ளை கொளப்புலர்ந் திருந்த வோடை
சீரிய பொய்கை யேரி செழுந்தடங் குடிஞை யாவும்
வாரிவாய்ப் பெய்து தேக்கி வழியவிட் டனமென் பாற்கண். (௨௪)

அடையலர்ச் சவட்டுஞ் சூல மங்கையைத் தவர்பாற் சிற்றன்
புடையவர் கண்போன் மந்த வூறிடு மணற்புன் கேணி
தடையில்பே ரன்பு சான்றோர் தடங்கண்போல் விளைய வூறி
நடைகொளப் பரந்த தம்மா நறவிரி கானல் வைப்பில். (௨௫)

விரிதரு கொண்டன் முன்னர் விளர்த்துப்பின் பசந்த வாறே
யெரிதரு வேனி லான்முன் விளர்த்தபா ரியைநீ ருண்டு
புரிதர வங்கு ரித்த புற்களாற் பசந்த தம்மா
கரிசில்கா ரணத்தின் றன்மை காரியத் திலாது போமோ. (௨௬)

நாரரு ளடக்கஞ் சீல ஞானமுற் றவர்க ளம்மான்
பேரருள் வெள்ள மூழ்கிப் பிறவிவெப் பொழித்தல் போல
வீரருள் வீரர் தொட்ட விரிகட லுடுத்த திண்பார்
காரருள் வெள்ள மூழ்கிக் கழித்தது வேனில் வெப்பம். (௨௭)

இழிதக விறைஞ்சி யெச்சி லெம்பிரா னுண்ண நல்கி
யழிவில்பே ரின்பந் துய்த்த வன்பர்கண் ணப்ப ரேபோ
லிழிதக வுவர்நீ ரெச்சி லெழிலிக ளுண்ண நல்கி
யழிவிலின் சுவைய நன்னீ ரருந்திய தாழி மாதோ. (௨௮)

மின்னிய பொருள்க ளெல்லாம் வேண்டுநர் கொள்ள வீசி
மன்னிய சீர்த்திப் போர்வை வள்ளல்போர்த் தென்ன நாளும்
பின்னிய திரையிற் கொண்ட பெருகுமின் சுவைநீர் முற்றும்
பன்னிய புவிக்கு வீசிப் பயோதரம் விளர்த்த மாதோ. (௨௯)

விழைபொரு ளுடையார் வெள்கார் மின்னலோ டோசை குன்றார்
தழைபுன லுடைய மஞ்சு மன்னவாய்த் தகவிற் பெய்யு
மழைவள முற்றும் யாவர் வகுப்பவர் மதியான் மிக்கீர்
பிழையிலத் திணையுள் வெற்பின் வளஞ்சில பேச லுற்றும். (௩௦)

## குறிஞ்சிவளம்.

துலங்குசீர் வள்ளி யார்முன் றோன்றிய பெருமை யோர்ந்தோ
விலங்குபைந் தோகை மஞ்ஞை யினம்பயில் வளமை யோர்ந்தோ
வலங்குபூந் துணர்ச்சந் தாதி யணிவிரை யமைவ தோர்ந்தோ
மலங்குவான் சாத்த செவ்வேள் வதிதருங் குன்றந் தோறும். (௩௧)

கறைமிடற் றிறையும் போற்றுங் கடவுளா கியசெவ் வேளே
யறைகுல தெய்வ மாறு தருவிநீர் விளைவு குன்று
துறைபுனத் தேனல் செந்தே னெழுக்கறு தணைவார் கொங்கைப்
பொறையெழின் மடவா ரென்னிற் பொருப்பர்க்கோர் குறையுண் டேயோ.

புலவுறு தழல்வாய்ச் செங்கட் பொருபுலி யருப்பு ளூாழ
னிலவுகிர் வடுப்ப டாத நிறத்திற வுளாரு மில்லை
கலவுதிண் புயத்தன் ளூர்தங் கையுகிர் வடுக்க ளூளுங்
குலவுறப் படாத கொங்கைக் கொடிச்சியர் களுமங் கில்லை. (௩௩)

வரைபக வெறிந்த வெள்வேல் வலனுயர்த் தருளுஞ் செவ்வேள்
புரையற வமர்த லாலே பொங்குபே ருரிமை கொண்டு
தரைபுக ழூர்தி யாய தழைபசுந் தோகை மஞ்ஞை
யுரைசெறி யோங்கல் சூழ வுவகைபூத் தகவு மாலோ. (௩௪)

உரைசெறி யோங்க லோங்கு மொண்கழை யடைந்து மேற்போய்ப்
புரையில்வான் றருவைச் சார்ந்து சுறிக்கொடி பொலியு நாளுந்
திரைசெறி கடல்சூழ் வைப்பிற் றேரிசை யுறச்சி றந்த
வரையடை பவர்க்கு விண்போய் வாழுத லருமைத் தாமோ. (௩௫)

நறவரி குறிஞ்சி பாடு நகுதுணர்ச் சார லெங்கும்
புறவரி யணில்வான் மானப் பொலிகுர லேனல் காக்கு
மறவரி நெடுங்கண் மாதர் வனமுலைப் போகம் வேட்டுத்
திறவரி யேறு மஞ்சுந் திறலுடை யரசர் சூழ்வார். (௩௬)

பொருவரு புண்ட ரீகம் பொருந்திநால் வாயோ டெண்கை
மருவலாற் பிரம னேய்க்கு மாசுணக் கிடக்கை வாய்ந்து
பெருவலி திகிரி யேந்திப் பிறங்கலான் மாய னேய்க்குங்
கருமுகி றவழுஞ் சாரற் கருந்தினைக் குறிஞ்சி மாதோ. (௩௭)

படுமதக் களிநல் யானை பளிக்குவெற் பெதிரோ நிற்ப
நெடுவரை யதனிற் றோன்று நீழலை வேழ மென்று
முடுகுபு முழங்கிச் சீயம் பாய்ந்துமொய் யோய்ந்து வெள்கி
யடுகரி யெதிர்வந் தாலு மற்றென்றே நினைந்த டாதால். (௩௮)

சுவைபடு கவலை மூலஞ் சுரைபடு மிரும்பாற் கல்லு
நவையறு குறவர் தோன்று நகுமணி யுந்து வாரச்

செவையுறு கருவி யானந் திருப்புக ளூரி லொண்கா
சவையுழ வாரத் தூர்ந்து மாண்டடங்க யரசு போன்றார். (௩௯)

கறையடி மருப்பின் முத்துங் கழைநரன் றுகுத்த முத்து
நிறைபுனத் தேனல் காப்பார் நெடுங்கவ ணிறீஇமேற் போம்புண்
மிறையுற வீசுந் தோறும் விண்ணிடைப் பதிந்து நாளு
முறைவன வறியா மண்ணோ ருடுக்களென் றுரைப்பா ரின்னும். (௪0)

வளமலைச் சார லூரு மதிப்பிறை வழுக்கி யாங்க
ணுளமலர்ச் சுனையில் வீழ வுவந்துமற் றதினீ ரர்டுங்
கிளர்முலைக் கொடிச்சி மார்கள் கிடைத்தது தோணி யென்று
தளரிடை யொசியச் சென்று தாவிமீ தேறு வாரால். (௪௧)

சுட்டபொற் றகடு போன்ற தொடிபலாச் சுளையுஞ் செந்தேன்
விட்டசெந் தினையின் மாவும் விண்ணவர் களும்வா யூறத்
தொட்டகை மணப்ப வார்வர் பொருப்பரச் சுவையு ணவிற்
கிட்டமுற் றன்றோ நீங்கா திருக்குமாங் கிளைய சேயும். (௪௨)

கண்புதை யிருளு மெண்ணுர் கடும்புலி யாதி யெண்ணார்
விண்புதை மழையு மெண்ணார் வேந்தர்க ளிறும்பு சாய்ந்து
மண்புதை நெறிச்செல் வாரம் மங்கையர் கொங்கை வேட்டே
நண்புதை சுவர்க்க போக ஞாலத்து வெறுத்தார் யாரோ. (௪௩)

வருந்துமொண் குலிசங் கொல்லும் வரம்பெறு வான்பல் குன்றுந்
திருந்துவே லனுக்கு மொண்கட் செய்யவாய்க் கொடிச்சி கேள்வன்
பருந்துசூழ் வெள்வே லையன் பாதபங் கயங்கள் போற்றப்
பொருந்துகை பலப டைத்தாற் போன்மலர் வனசெங் காந்தள். (௪௪)

இருவியஞ் சாரற் குன்றத் திரணியம் வயிர நீலங்
குருவியல் பதும ராகக் குவான்முதற் பலவும் வாரி
யருவிகள் பரவி யெங்கு மவனியுட் பதிக்கு நாளு
மருவிமண் ணவர்முன் னோர்செய் வைப்பென மதித்துக் கொள்வார். (௪௫)

பொருதகர் மருப்பு நேரப் பொலிமுகத் திருகு ரோமத்
தருவலிக் குன்ற வாண ணவன முணங்கு முன்றில்
வெருவுமாப் பார்வை பல்ல மிடைதரக் கோட லாலே
கருதறங் காக்குஞ் சாத்தக் கடவுடன் முன்றி னேரும். (௪௬)

கறையடிக் களிநல் யானை காம்பிள முனைமு றித்து
நிறைநசைப் பிடிக்கும் பாங்கர் நீங்குருக் கயமு னிக்குங்
குறையுறு நுளகு செய்யுங் கூரிரும் படுத்துப் பின்ன
ரறைகழை யாத னேக்கி முன்னரோ யடர்க்கு மாபோல். (௪௭)

அணிவரை யாடு வேங்கை யடுத்தடுத் துரிஞ்சு மோர்பாற்
றிணிபடு வேழக் காலிற் சிங்கம் வீழ்ந் துறங்கு மோர்பான்
மணிகெழு மாக்கள் சேமேல் வயங்குவே றிமெற் றோர்பாற்
கணிதமி லில்ல மெல்லா மில்லமாய்க் கவினு மோர்பால். (௪௮)

எண்ணுமான் மார்த்த பூசைக் கிருந்தளி ராதி யேந்தி
நண்ணுநம் பெருமா னன்பர் நதிக்கரை யடைதல் போலக்
கண்ணுமொண் டளிர்வா டாது கரதலத் தன்பி னேந்தி
யண்ணுபைஞ் சாரற் பாங்க ரடைபவர் சிறப்பு மோர்பால். (௪௯)

உறத்தளித் துறைத லன்ப னுடன்செல லுயங்கி யூட
லறத்தவிர்ந் திரங்க லாய வளுரொழித் தின்ப மாய
திறத்தருங் கூட லொன்றே செறிதரக் கொளுங்கு றிஞ்சி
மறத்தலில் வளஞ்சொல் வார்யார் வனவளஞ் சிறிது சொல்வாம். (௫௦)

முல்லைவளம். வேறு.

அருநி றத்தவொண் கவுத்துவ மணிவிளக் கமைந்த
பெருநி றத்தளி விடங்கர்வீற் றிருக்கமுன் பெற்ற
கருநி றத்தமா லமர்தரப் பெற்றபைங் கானந்
திருநி றத்தவை குந்தமுற் பலவுளுஞ் சிறந்த. (௫௧)

புடவி மேனறு நிழல்படப் பொதுளியேர் பூத்த
குடவி மார்சுவைப் பானிரை செறிதரக் கொண்ட
வடவி மாவள மாய்ந்தன னுளத்தமைத் தன்றோ
கடவு ளாகியாங் குறைதருந் தாமரைக் கண்ணன். (௫௨)

விண்ட குல்லைமா தவனுமா லார்தொறு வியருந்
தண்ட வாத்தரு நீழலுந் தடஞ்சுவை யமுதும்
பண்ட மாகநற் றேனுவுங் கொண்டவிப் பரமண்
ணண்ட ரென்பதற் கியாதுமோ ரையுற வின்றே. (௫௩)

ஒன்று ஞாலத்துச் சாதன மின்றிமற் றொன்றை
நின்று சாதிப்பார் யாவரே யிடையர்பா னெடியோன்
மன்ற மேவிய பழக்கத்தாற் சிருட்டிமுன் வண்சீர்
சென்ற முத்தொழி லுளுமிடைத் தொழிலையே செய்வான். (௫௪)

நார்மு ழங்குதந் தலைவரைப் பிரிந்துறை நல்லார்
போர்மு ழங்கயிற் கண்கண்மை சிதைதரப் பொங்கிக்
கார்மு ழங்குவ வங்ஙனே தலைவரூர் கதிப்பொற்
றேர்மு ழங்குவ சிதைந்தமை முன்னையிற் றிருந்த. (௫௫)

குலவு கொல்லர்பொன் சுடுந்தொறு மளவையிற் குறைந்து
நிலவு மாற்றுயர்ந் தாலென வாய்ச்சியர் நிறைபால்
சுலவு தீயின்வைத் தடுந்தொறு மளவையிற் சுருங்கிக்
கலவு மின்சுவை யுயரும்வா னமுதமுங் கைப்ப. (ருசு)

தக்க நெற்றிரி பொரியெனப் பாறிரி தயிரைத்
தொக்க பாடிமே வாய்ச்சியர் கடைந்திடு சும்மை
திக்க டங்கலுஞ் செறியுமா மதித்திடத் திரளு
மிக்க பாற்கடல் கடைபொழு தமுதென வெண்ணெய். (ருஎ)

வல்ல வாமுலை யறம்வளர்த் தவளிர வலர்கைப்
புல்ல வாலரிப் பதத்திரள் வீசுசீர் பொருவ
வல்ல வாங்குழற் றொறுவியர் கொள்பவ ரங்கைச்
செல்ல வீசுவர் சுவைநவ நீதமென் றிரளை. (ருஅ)

பெருந்து றைச்சிவ ஞானபோ தகங்கையிற் பிறங்க
விருந்த வத்துமெய் யடியரோ டிருந்தவ ரேய்ப்பத்
திருந்து மாணவ ரொடுங்கையிற் புத்தகஞ் சிவணக்
குருந்த நீழன்மா தவருறை வார்களி கூர்ந்தே. (ருகூ)

பொலந றுங்குமிழ் மீதுதாய்க் குழையொடும் பொருதே
யலர்ந றுங்குழ லாய்ச்சியர் கண்ணென வமர்மான்
மலர ணங்கெனு மான்புணர் மான்மகிழ் வயினென்
றிலக வோர்ந்துகொல் லோவவ ணீங்குறு வென்றும். (சுo)

அணவு கானகத் தொருவர்த முயற்சியா லமைந்த
வுணவு நீருநீத் தாங்கவை யொன்றினை யொன்று
தணவு றாதமை தரநெறிந் தார்ந்துறத் தழையுங்
குணவு வாமுயற் றன்மைசொற் றிடினருங் குறைத்தே. (சுக)

கூடு மாய்ச்சிமார் கொங்கைபின் றழுவுதல் குறிப்பி
னீடுபாடியோ ரறிதர நேர்தெரிப் பார்போற்
பாடு வாய்த்திரு கோடுகூர் படைத்துமெய் பணைத்த
நாடு மேற்றிமி றழுவுவார் குறும்பொறை நாடர். (சுஉ)

உற்ற கோவலர் கொன்றைவேய்ங் குழலெடுத் தூதப்
பெற்ற முற்பல வுயிர்களு முருகுவ பிழைமற்
றற்ற மங்கையிற் றோன்றிய தெய்வவா ளுயர்
பொற்ற தீங்குழ லிசைக்குரு கெம்பிரான் போன்றே. (சுங)

இலங்கு காசைதன் னொருபுடை நனிமலர்ந் திலைய
வலங்கு பொன்னெனப் பூத்தபூங் கொன்றையாங் கமருந்

துலங்கு பேருல கீன்றநா யகியொடுந் துகடீர்
வலங்கு லாமழு வேந்தியோ னமர்வது மானும். (சுச)

நிலவு சேவொன்று பூத்தசொன் றையினடி நிற்பக்
குலவு காசையொன் றதற்கெதிர் வளைந்துறல் குறிப்பி
னுலவு பெற்றமேற் சிவபிரான் காட்சிதந் தூதவக்
கலவு மாயவ னுங்கெதிர் வணங்குதல் கடுக்கும். (சுரு)

ஆய கொன்றையே ராய்ச்சியர் கருங்குழ லதன்கீழ்ப்
பாய பூங்குமிழ் மூக்கதன் கீழுறப் படர்ந்த •
தூய முல்லைபன் மற்றதன் கீழுறத் துவன்றி
மேய கோபமற் றவரிதழ் நிகர்தர விளங்கும. (சுசு)

அடிசி லாம்வர காதிய பலவுமற் றவைக்குப்
படியி லாவுப கரணமாம் பயறுமுற் பலவுங்
கடிவில் சாகமு மோரிடத் தொக்கவே கலந்தா
நெடிய மாநில மஃதன்றி நேடின்மற் றியாதே. (சுஎ)

முயல்வி சைத்தெழு மொருபுற மதற்குமேன் முடுகி
யியல்கொ ளான்பசுங் கன்றெழு மதற்குமே லெழுந்தா
யயன்ம ருண்டுமோ னஃதுணர்ந் ததற்குமே லஞ்சிச்
செயல மைந்தகான் வாரணம் பறந்தெழுஞ் சிறப்ப. (சுஅ)

அரிய கானகப் பெருவள நோக்கவாங் கடைந்தோ
ரிரிய வெண்ணெயிவ் விடமெலாஞ் சிதறிய தென்னை
யுரிய வாய்ச்சிய ரென்றுளத் தையுற வொளிரும்
பரிய காருறைத் திடவெழு மாமபிகள் பலவும். (சுகூ)

பொருவில் வானவர் பலருந்தம் முறுப்புற்றுப் பொலியூ
வெருவின் மேன்மைசான் றொளிருமான் செறிவன மிகுசீர்
கருத வுங்கடை யுறுதெனி லியாவரே கரைவார்
மருத வேலியின் வளஞ்சில தெரிந்தவா வகுப்பாம். (எ0)

**மருதவளம். வேறு.**

குலவுநதி யலையெறியுங் குருமணிபொன் றிருமலரிற் குடக்கூன் சங்கி
னிலவுகுலை யிருபாலு நிரம்பியொளிர் தரக்கண்ட நெடிய வானோ
ருலவுபுக ழிருநிதியம் பலபடைத்த திந்நிலமென் றுவக்கும் பானல்
கலவுவனப் பாயிரம்பூங் கண்ணுடையான் காவல்செயக் கஞலு மாலோ. ()

கற்பகமா திகளமைந்த காமருசீர் விண்ணுலகங் காவல் பூண்ட
வெற்பகநா னூறுதோளான் றழைந்தபணைக் காவல்செய விழைந்த வாறு
பற்பலவா மதன்மேன்மை யுணர்ந்தன்றே யாயிரங்கண் படைத்த வாறும
பொற்பலர்மற் றதன்வளமை நோக்குதற்கென் றலினியாம புகல்வதென்னே.

தருவமர்தா னமுஞ்சுரா பானமுஞ்செவ் விதழரம்பை தணவா நோக்கு
முருவலமு நீர்வளமு மொழியாதின் சொல்வளர்க்கு மூக்கப் பாடு
மருவலரஞ் சிடியேறு கொடியேற வைத்தவன்றாள் வணங்கும் வீறும்
பெருகவுங்கொண் டமர்மருத மாக்கணெடு வானவரிற் பிறங்கு வாரால். ()

பழுதின்மக நூறியற்றி முடிசூடி வானுடர் பலரும் போற்றச்
செழுமலர்க்கற் பகநீழல் வீற்றிருக்கும் புனிதனெனுந் தெய்வ வேந்தன்
றொழுதகுதே வாய்த்தம்மு ளொருவனுமா யுறப்பெற்ற தொழுவர் நன்னீர்
தழுவியினி தாஞ்செஞ்சொல் வழங்கிடவுங் கடையரெனச் சாற்ற லென்னே.

சுரும்புசெறி கோகனக மலர்நடுவ ணறனின்றுந் துள்ளி வீழ்ந்த
பருங்கயல்பைந் தருக்கிளையிற் குருகெடுத்துத் தாதகலப் படர்நீர் தோய்த்த
விருந்தைசெறி யழனடுவ ணியைத்தவிர சதக்கட்டி யிணைப்பொற் கொல்லன்
றிருந்தியசைக் குறடெடுத்து வெப்பமற நீர்தோய்க்குந் திறமே மானும். (எரு)

செய்யதா மரைநடுவட் சேவலன முறைதன்மறை தேர்ந்த வன்னம்
பையரா வணியர்முடி காணவழல் புகுந்துதவம் பண்ணல் போலு
மையறு விழிக்கலைமான் பணிபுரிதல் கருதியயல் வதிதன் மான
வையபேட் டனம்வெண்டா மரைமலர்மே லருகுறையு மாவி மேவும். (எசு)

கோணுறுபல் கழைகடொறு மடியெழுந்து நுனிபிணித்த கொடியி னுப்பட்
காணுறுமாந் துணர்பொருந்தி மந்தமா ருதத்தசைதல் காம னென்பான்
மாணுறுபல் சிலைவளைத்தே விடல்பொருவு மெதிர்பசிய வயலை தோன்ற
லேணுறுகு தக்கணையாற் பசலையுட லுறுமாத ரேய்க்கு மாலோ. (எஎ)

நந்திரவி நம்முனிரு ளிலையென்பார் தோன்றியதென் ஞாலத் தென்னு
வுந்திரத மிசையிருந்தா சங்கையுற வாங்குலவு முலைப்பின் மேதி
யிந்திரனு லணையின்விண்மே லியங்குகரு முகின்மண்மே லியங்கல் போன்ற
சந்தமடித் தலம்பொழி[illegible]லனையமுகில் பொழியுமழைத் தாரை போன்ற ()

பேறுதரு சேதாக்கள் பின்னவனேம் பியதுணர்ந்து பிறங்கு நாஞ்சி
லேறுபுய முன்னவன்பல் லுருக்கொடோ ராக்கள்புரந் திடவந் தென்னச்
சாறுகடை வாயொழுக விரும்புகரும் புகள்கறித்துச் சாய்த்து மென்று
வீறுதட மருப்பெருமை யோம்புவா ரலமேந்தும் வியன்றேண் மள்ளர். ()

மறைமுதலன் புயர்ஞான முடையரிடஞ் சித்திகளும் வந்து கூடு
நிறையிடம்பொன் னேவலுடை நல்வினைய ரிடஞ்சேம நிதியுங் கூடு
மறையுமிவை போலநனி யாறுகுள மோடைதட மாதி யாலே
குறைவில்புன லுடைமருத வாணரிட மனைக்கிணறுங் கூடி மேவும். (அ0)

வேறு.

தேவிற் சிறந்த கிண்கிணித்தாட் சிங்கா தனசிந் தாமணிபோற்
பூவிற் சிறந்த தாமரையும் புள்ளிற் சிறந்த வோதிமமுங்

காவிற் சிறந்த பசுந்தென்னங் காவும் பொலியு வளங்குலவு
நாவிற் சிறந்த கலைவல்லோர் நன்கு புகழப் படுமருதம். (௮௧)

அம்பார் விழியாள் புரிபூசை யளப்பா னம்மா னருளின்வரு
கம்பா நதியு மொருகுறணீர்க் காதல் கழிப்பான் கடுகிவரு
வம்பார் வையைப் பெருநதியு மாறுப் பெருக்கிற் குளநாண
வெம்பா தகமூழ் கினர்க்கொழிக்கும் விரிநீ ருடைக்கா விரிபெருகும். (௮௨)

ஓது கழிகா முகர்க்குவனப் புறந்த கணிகை மாரிடத்துங்
காது பவத்தின் றொடர்களையக் கருதி வருந்து பக்குவருக்
காத லமைந்த மெய்ஞ்ஞான வருளா சிரியர் தம்மிடத்துங்
காதல் பெருகு மதுபோலக் கடுகிப் பெருகுங் காவிரியே. (௮௩)

பழுதி லபயன் றிருநாடு பரவு பொன்னி யுடையதென
வழுதி நாடும் பொருநையுடைத் தெனிலவ் வழுதி வளநாடு
செழுநீர் நாடன் றிதுபோலச் சென்று சென்று பலநதியா
யொழுகா வளங்கள் பலவாக்கு முயர்வு முளதோ வதற்குணர்வீர். (௮௪)

வந்து மூழ்கு மவர்புறத்தே மிடைந்த மாசு மண்ணுதல்போ
னந்து மகத்தே மிடைந்தகொடு மாசுங் கழுவி நாளூரு
முந்து மதுமீட் டடையாம லறமாம் வேலி யுறவுறுத்தி
முந்து விளங்குங் காவிரிபோற் றீர்த்த முதுபா ரிடத்தியாதே. (௮௫)

வெள்ளத் தெழுந்த பெருவாளை விசும்பு கிழித்து விண்ணகம்புக்
கெள்ளற் கரிய கங்கையடைந் தினிதி னுலவி விளையாடு
மள்ளற் பழனச் சோணாட்டி னலைநீர்ப் பொன்னி படிந்தவர்க
ளுள்ளப் படுபொன் னுலகமடைந் துவக்குந் தன்மை யுணர்த்துதல்போல். ()

வெடிகொண் டெழுந்த பலாஞ்சிலா மீன்க ளோ[illegible]காலேரி
கடிகொண் டலர்ந்த பூம்பொய்கை கலந்து திரிவ கங்கைமுதி
முடிகொண் டமரும் பிரான்கருணை முறையிற் சிருட்டி யுறுமுயிர்கள்
படிகொண் டமர்தம் வினைக்கேற்ற பற்ப வுடலங் கலப்பபோல். (௮௭)

பிறப்பொன் றடைந்து மற்றதினும் பெருந்துன் பறிந்து கருணைதழீஇச்
சிறப்பொன் றுயிர்கள் சிவமடையுந் திறம்போற் பொய்கை யடைமீன்க
ளறப்பொன் றறன்மற் றதன்சிறுமை யறிந்து பெருங்கா லொன்றுதழீஇ
நிறப்பொன் றயங்கு பெரும்பொன்னி நீத்த மடைந்துள் ளுவப்பனவால். ()

பிறவி யனுரென் னுதுவினைப் பெருக்கின் வழிபோய்ச் சிவகதியின்
மறவி யடைந்து பலயோனி மருவு முயிர்போ லவலூறுநீர்ச்
சிறுமை யுணரா துறுகாலின் வழியே சென்று செழும்பொன்னி
வறுமை யடையாப் புனன்மறந்து வயல்: திகளிற் புகும்பலமீன். (௮௯)

வானங் குடிகொண் டினிதிருந்து வயிரஞ் செறிமால் வரைவீழ்ந்தத்
தானந் தவறி வழுக்கிநெடுந் தரையி னவலுற் றுறச்சுழன்று
கானந் திரிந்து வருதலின்முன் கலங்கிப் பின்னர்த் தெளிந்ததான்
மானங் குலவு காவிரிநீர் மன்னு முயிர்கள் பயன்பெறவே. (௬௦)

வேறு.

இருமுது குரவர் வார்த்தை யெறிந்தெழு கொடுஞ்சே யென்ன
விருமுது கரையி னேக்க மெறிந்தெழு பொன்னி நீத்த
மொருமையின் மள்ளர் கூடி யுடைப்பெலா மடைத்து மாற்ற
வொருமையிற் குலமின் னூர்போ லொழுகிய தடங்கி மாதோ. (௬௧)

திரைபடு பொன்னி நீத்தந் திறலுடை வாண னொத்த
துரையிரு கரைப்பா லுள்ள வுடைப்பவன் கைக ளொத்த
விரையவவ் வுடைப்பு மாய்த்த களமர்தம் வினையவ் வாணன்
வரைகர மாய்த்த கண்ணன் வல்வினை யொத்த தன்றே. (௬௨)

உமையொரு பாகத் தம்மா னோங்கரு ளடியார் மாட்டுக்
கமைமிகு மன்பிற் கேற்பக் கலந்திலங் குவது மான
வமைசுவைப் பொன்னி நீத்த மகன்பணை யாதி மாட்டுச்
சமைதரு ஞெள்ளற் கேற்பக் கலந்துமேற் றதும்பிற் றம்மா. (௬௩)

அருவநான் குருவ நான்கோ ரருவுரு விவையொன் பானும்
பொருவிலி கலந்து வேறு வேறுபேர் புனைந்தாற் போல
மருவுகா லோடை யேரி வயல்குளம் பலவும் பொன்னிப்
பருவநீர் கலந்து வேறு வேறுபேர் படைத்த தம்மா. (௬௪)

ஒற்றுமைப் படாத வெவ்வே றுலோகங்க டமைப்பற் றுசிட்
டொற்றுமைப் படுத்து வார்போ லுறுபுனல் வண்ட றன்னை
யொற்றுமைப் படாத செய்யின் விடரெலா முறுத்தி மேன்மே
லொற்றுமைப் படுத்திற் றீமா வுடையவ ருவகை பூப்ப. (௬௫)

பழுதறு மெழில்வா யன்பிற் பாவைய ருவள கத்தற்
பொழுதுற விடாதுங் கேள்வர் புணர்தொழில் விளைதல் போல
வெழுபெரும் பொன்னி நீர்செய் யிடைத்தகு பருவ மேவ
வொழுகுவன் கருவி மள்ள ருழுதொழில் விளைவர் மாதோ. (௬௬)

வெள்ளிய விடையு கைக்கும் விமலமா தேவ னன்பர்
வெள்ளிய தெய்வ நீறு மெய்யினுத் தூளித் தென்ன
வெள்ளிய புனல்ப ரந்த மென்மலர்ச் செறுவு ளுஞ்சில்
வெள்ளிய வாயின் மள்ளர் சுமந்தனர் மேயி னூரால். (௬௭)

கருகிரும் பனைய கோட்டுக் கடாப்பிடர் நுகம்பொ ருத்தித்
திருகுரு வேர்க்கா லுப்பட் செறிதர வடம சைத்தாங்

கருகுற விடக்கை மேழி பற்றிமற் றடல்வ லக்கை
யொருகுறு முட்கோல் வாங்கி யுரப்பின ருழுவார் மள்ளர். (௯௮)

இசைபடு பருப்பொ ருட்டா மிலக்கியஞ் சென்ற வாறே
வசைதவிர் நுண்பொ ருட்டா மிலக்கணம் வயங்கிச் செல்லு
நசையுண ரொருவன் மாட்டு நறும்புனல் வயலின் மாட்டு
மசைவிறிண் கொழுச்செல் லாறே துன்னூசி யழகிற் செல்லும். (௯௯)

தன்படை தனக்கூ றுமோர் சமயத்தென் றறிஞர் கூறு
மன்படை வார்த்தை மெய்யே யரியொரு பிறப்பிற் கொண்ட
வன்படை கீண்டே யன்னான் மற்றிரு பிறப்பின் கேளாய்
முன்படை யாவு மாய முருக்குவ முழுநீர்ச் செய்யில். (௧௦௦)

உழுதொழில் வல்ல மள்ளர் கோலிய வுறுவி ளாக்கள்
செழுமுலை சுமந்த மாதர் சீறடிச் சிலம்பு நேருங்
கொழுநிலங் கிழித்துச் செல்போ தெழுந்தவிர் குலக்கா செல்லாம்
பழுதக லச்சி லம்பிற் பதித்தபன் மணியே நேரும். (௧௦௧)

ஒருமதக் கோலை மற்றை யொருமதக் கோன்ம றுத்தாங்
கொருபடைச் சாலை மற்றை யொருபடைச் சால ழிக்கு
மொருமதத் தாலும் வேறற் கொண்கிலாச் சைவ மொத்த
தொருபடைச் சாலும் பின்ன ருருக்கடை யுறுப டைச்சால். (௧௦௨)

வளங்கனி மருத மாக்க ளுஞ்சிலான் மாறி மாறி
யுளங்கனிந் துழுதல் செய்ய வொருங்குபுல் லாதி மாய்ந்து
களங்கனி குழைத்தா லென்னச் சேறுபட் டஃதோர் கன்றால்
விளங்கனி யுகுத்த வண்ணன் மெய்க்கரு நிறமு நாண. (௧௦௩)

வயலுறு சீர்த்தி தாமு மருவுற வுள்ளங் கொண்டங்
கியலுறு வரம்பு தாழ்ந்தவ் விரும்புனல் வயலே யாக
வயலுறு நுமக்கச் சீர்த்தி யடாதெனக் கழிப்பார் போலச்
செயலுறு கங்க ரிந்து திருத்துவர் தொழுவர் யாரும். (௧௦௪)

முழுவனப் புடைமின் னார்க்கு முற்றிழை தரித்தல் போலுந்
தொழுவெண்ணீற் றணியி னார்க்குக் கண்மணி சூட்டல் போலு
மெழுசுடர்ச் சிகைத்த ழற்காங் கியையநெய் விடுதல் போலுஞ்
செழுநன்னீர்ப் பணைக்கு மள்ளர் சிதரெருத் தூள்பெய் வாரால். (௧௦௫)

இளைதிளைச் சுவைப்பா லாழி யிடையொரு திவலை யாய
பிளையுறி லதுமற் றெங்கும் பரவல்போற் பெருஞ்செய் யெங்கு
முளையொரு திவலை நீரும் பரவுமா றெருப்புக் காண்பார்
களைபெரும் பரம்பு பூட்டி யூருவர் களமர் மாதோ. (௧௦௬)

வளையுடைக் கருந்தோண் மள்ளர் வாழிய வயலெ லாமென்
றிளையுடை வான வேந்த னிணையடி தொழுது வெள்ளை
முளையுடை நறுஞ்செஞ் சாலி முழுவதும் விதைத்தார் மூலத்
தளையுடை யுயிரைக் கங்கா தரன்பவத் திடுதன் மான. (க0எ)

கடையர்வெண் முளைய செய்யிற் கலங்கனீர் தெளிந்த போதே
மடைகவிழ்த் தந்நீர் முற்றும் வடிப்பரா லம்ம பற்றற்
குடையதோர் பருவஞ் சார வுயிர்க்குட லாதி போக
மடைதர வருள்வான் சொல்லோ வரியயற் கரிய பெம்மான். (க0அ)

வின்முளை மதிநேர் நெற்றி வெள்ளிய வுருவ வாணி
பன்முளை யிமய மீன்ற பச்சுரு வுமைசா ரூப
மின்முளை முகிலு நாண விருப்பமுற் றடைந்தா லென்னச்
சொன்முளை விளர்த்து முன்னர்த் தோன்றின பசந்து பின்னர். (க0கூ)

விந்துவை கரிமுன் மாயை மேவுறு மராக மாதி
முந்துமவ் வியத்த மம்ம முக்குண மாதி தோன்றத்
தந்து நின்றெனவொவ் வொன்று தான்பல தருங்கா ணன்னீர்
சிந்துரு வண்ண மள்ளர் செறுத்தொறும் பாய்ச்சு வாரால். (கக0)

பலர்பயங் கொள்ள நல்கும் பண்புடை யவரே போற்செய்
பலபயங் கொள்ள நல்கும் பண்புடைக் கால்கள் பல்ல
சிலர்பயங் கொள்ள நல்குந் தன்மையர் சிவணச் செய்யுட்
சிலபயங் கொள்ள நல்குங் கால்களுஞ் சில்ல மாதோ. (ககக)

மறுவறக் கேட்ட பாடம் போற்றுமா ணாக்கர் போலு
முறுதவ மாற்றி யீன்ற சேயையோம் பிடுவார் போலுந்
தெறுவலித் திண்டோண் மள்ளர் செறுவெலாம் போற்றி யோம்பக்
குறுமுளைத் தன்மை நீங்கி வளர்ந்தன குலவு பைங்கூழ். (ககஉ)

ஒருமனை யுதித்த மாந்த ருற்றபன் மனைக டோறு
மருவினர் வாழ்தல் போல வயலொன்றி னுதித்த பைங்கூழ்
பொருவில்பல் கழனி தோறும் போய்ப்பதிந் தினிது வாழப்
பருவலி மள்ளர் நாறு பறித்தனர் நடுதல் செய்வார். (ககஙு)

குறியுறத் தோன்றும் போது கோணறத் தோன்றிப் பின்னர்
வெறிவயற் பதித்த போது சிறிதுசாய் வடைந்து மீட்டு
மறிதர நிமிர்ந்த பைங்கூ ழரியயன் முதலோ ரேத்துஞ்
செறிவளத் திருப்ப னந்தாட் சிவலிங்கப் பெருமா னேரும். (ககச)

மடைவழிப் புகுவாய் நன்னீர் வாய்மடுத் துண்டு தேக்கி
யுடையவ ருவகை பூப்ப வொன்றுபல் கிளைக ளாக

வடையவுங் கிளைத்துத் தோன்று முதலெலா மவிர்பூஞ் சோலை
புடைவளை தருமே ரண்ட புரத்துறை முதலை நேரும். (கக௫)

வேறு.

நாம மார்தவ நன்கு புரிநரைக்
காம மாதி கலந்தடர்ந் தாலென
வேம மார்பைம் பயிர்க்கிடர் செய்வன
தாம மாயலர் தாங்கு களைகளே. (ககசு)

பதும மேவிய பானலு மேவிய
விதுவ வாமரக் காம்பலு மேவிய
முதுநன் னீர்வயற் பைம்பயிர் மும்மலங்
கதுவு மாருயிர் நேருங் கருதினே. (ககஎ)

விளைசெ ழும்பரு வத்துயிர் வெம்மலங்
களைய முந்து குரவனிற் காற்பணை
விளைசெ ழும்பரு வப்பயிர் வெம்பகை
களைய முந்தின ரெண்ப கடைசியர். (ககஅ)

தொழும்பு யிர்க்ககப் பற்றுத் தொலையுங்கால்
விழும்பு றப்பற் றனைத்தும் விலகியே
செழும்ப யிர்க்குட் களைதெறுங் காற்புறந்
தெழும்பு றக்களை யாய வினங்கொள்வீ (கக௯)

சாது வெம்பகை காணில் விடுவரோ
மோது பைங்கொடி வள்ளை முருக்கினா
ரோது கண்ணெதி ருற்று லுவப்பரோ
போது சேர்நறு நீலமும் போக்கினார். (கஉ0)

அரிய காற்பகை யாய வனிச்சமும்
வரிய ணைப்பகை யாய வயலையு
மிரிய மாய்த்தன ரெட்டுணை யும்பகை
யுரிய தாக்கொண் டொருருல கத்தெவர். (கஉக)

ஆம்பல் செற்றர விந்தஞ் சவட்டியே
ராம்ப னீல மடர்த்தனிச் சங்குமைத்
தாம்பல் குங்கொடி வள்ளை யறுத்தன
ராம்பன் மாதர் மலமைந் தடுநர்போல். (கஉஉ)

கண்ட வாஞ்சொற் கடைக்குல மான்களாற்
கொண்ட காதற் குவலயம் பொன்றுமேற்
புண்ட ரீகமு மாம்பலும் பொன்றுதற்
கெண்ட வாதவங் கெத்தடை யுண்டரோ. (கஉ௩)

அன்ன மென்னடை யாற்றுக்கா லாட்டியர்
பன்ன லங்கை குளிர்ப்ல பற்றுவ
மன்னு கின்ற வறுங்கட கக்கைகண்
மின்னு கற்கட கத்தை விடுங்கொலோ. (கஉச)

நுணலை யார விருஞெள்ளை நாகுசே
றணவு ருக்கவைக் காலுந் தடிவராற்
புணரு நீர்ப்பயி ரன்றிப் புறத்திஞென்
றணவ வுள்ளம் பொறேமென் றகற்றல்போல். (கஉரு)

வேறு.

செயல்வினை முடித லாலே சின்னப்பூச் சூடி யாங்கு
வயஞெறுங் கட்ட மென்பூ வகையுளொவ் வொன்று சூடிக்
கயன்முத லாகப் பெற்ற யாவையுங் கைக்கொண் டம்ம
வியன்மயி லாற்றுக் காலாட் டியர்புறத் தேகு வாரால். (கஉசு)

வாதலூ ரிறையோர் மூகை வாய்திறந் திடப்பல் புத்த
ரேதவா யடைப்பச் செய்த வின்ஞெழில் பொருவ மள்ளர்
சீதநீர் மடைவா யொன்று திறந்துபல் குளிரி மைழத்த
காதநீர் புழைவாய் முற்று மடைப்பர்கங் கெங்கு மோர்ந்தே. (கஉஎ)

கடைக்குல மகளிர் தங்கால் கைபடப் பெற்ற போதே
மடைச்செறு வகத்து மேய வான்பயிர் பணைத்த வென்று
லுடைத்தலை வியர்தந் தாள்பட் டொண்கரந் தழுவ மேவும்
விடைத்தனித் தவர்ப ணைத்தல் விளம்பவும் வேண்டுங் கொல்லோ. (கஉஅ)

பரவிய பயிரா ரூரிற் பங்கயக் கண்ணன் மேனி
விரவுபச் சொளியின் மூழ்கி நாணற நிமிர்ந்த வில்லிற்
கரவரு நிறைசூற் கொண்டு கழுக்கடை வயிரத் தாற்றி
மரகத வறைநி லைத்தா லெனக்கதிர் வயங்க வீன்ற. (கஉகூ)

ஈன்றபைங் கதிர்கள் யாவு மியைதமைத் தாங்கும் பூமிக்
கான்றபொன் னிறமே தாமு மமைந்தெனச் சிவந்து தோன்றி
மீன்றவழ் பாலி சூழும் விரிஞ்சைமா நகரத் தெம்மான்
றான்றலை வளைத்த தேய்ப்பத் தலைவளைப் பனமு திர்ந்தே. (கங0)

மேக்குநோக் கியசெஞ் சாலி விளைந்தன கிழக்கு நோக்க
வூக்கமார் களமர் நோக்கி யுவந்துடன் குயங்க ளாய்வா
ராக்குத லியற்றி ஞர்முன் னளித்தனர் பின்னர் மீட்டும்
போக்குதல் செய்வா ரன்ஞர் புகழ்பிரான் புகழே போலும். (கஙக)

ஆக்குறு போது நாஞ்சின் மண்டொடு கருவி யம்ம
சாக்குறு போது கொண்டு களித்ததன் மேலு மள்ளர்

போக்குறு போது மின்னூர் குயங்கைக்கொண் டுவகை பூத்தார்
யார்க்குமின் னூர்கு யங்கைப் படினுவப் பெய்தி டாதோ. (௧௩௨)

கோடிய பிறைநேர் வெள்வாய்க் குயங்கரங் கொண்டு மள்ளர்
நீடிய நறுஞ்செஞ் சாலி நிரைமுத றடிந்து சாய்த்துப்
பாடியல் கற்றை சேர்த்து வழாவகை யசைத்துப் பண்ணை
மாடியல் களத்துச் சேர்ப்பார் தலைமிசைச் சுமந்து மாதோ. (௧௩௩)

பக்கமுன் மாய்த்தோன் றேத்துப் படர்ந்தினி திருப்பி னம்பான்
மிக்கபே ரருள்கூர் வானென் றெண்ணிவெற் பினங்க ளெல்லா
மொக்கவந் தமர்ந்தா லென்ன வரியெலா மொன்றப் பல்போ
ரக்கணஞ் செய்தா ரென்ப வாவிசான் மருத மாக்கள். (௧௩௪)

வரைபல சாய்த்து மேலான் மழைபல குமைக்கு மாறு
புரைபல விளங்கு தானம் புரப்பவ னடத்தி யாங்குக்
கரைபல போருஞ் சாய்த்துக் கடாப்பல பிணைத்தல் செய்த
நிரைபல குமைக்கு மாறு நடத்துவார் நெடிய மள்ளர். (௧௩௫)

முன்புசெ னுமக்கு முன்பு தோன்றிய முழுவைக் கோலும்
பின்புசெ லெமக்குப் பின்பு தோன்றிய பிறங்கு நெல்லு
மின்புக ழாகுங் கோட லெனக்கடாக் களுக்கு வையு
மன்புறு தமக்கு நெல்லு மாகவே பகுத்தார் மள்ளர். (௧௩௬)

தொண்டையஞ் செவ்வாய் வெண்பற் றுடியிடை யுமையா ளோடு
குண்டையூர் தம்பி ரானூர் குண்டையூர்க் கிழவர் தம்பாற்
பண்டைநா ளளித்த செந்நெல் வரையெனப் பதடி போக்கி
யிண்டையார் மருத மாக்களெங் கணுங் குவிப்பார் செந்நெல். (௧௩௭)

முற்றவு மளவு கண்டு மூவிரு பாகத் தொன்று
கொற்றவர் கடமை கொள்ளக் கொடுத்தன்பிற் பிறவு நல்கி
மற்றைய மனையிற் சேர்ப்பார் குண்டையூர் வளநெல் வீரிப்
பற்றலர்த் தெறுபூந் தங்கள் பரவையா ரிற்சேர்த் தென்ன. (௧௩௮)

ஆன்றசெஞ் சாலி யிவ்வா றுக்குநர் தொழுதி யோர்பா
லேன்றநன் மஞ்சளாதி யெடுப்பவ ரிராசி யோர்பான்
மான்றசெங் கழையின் சாறு வடிப்பவர் குப்பை யோர்பாற்
சான்றவம் மடவா ரூட னணிப்பவர் சங்க மோர்பால். (௧௩௯)

ஆலைய மாதி யோரொன் றைவேலி கொண்ட பெம்மான்
மாலையங் கழுநீர் பானன் மருவலோர்ந் தவாவு மென்னிற்
பாலையோர் புலவீ ரன்ன பானலின் வளஞ்சொல் வார்யார்
வேலையங் கழிசூழ் நெய்தல் வளஞ்சில விளம்பு வாமே. (௧௪௦)

### நெய்தல்வளம். வேறு.

அறைவ லைப்பெரு வளம்பெற வடற்சுறாக் கோடு
முறைநி றுத்துபு வலைஞர்பூ சனைசெய முந்நீ
ரிறையு தித்தவர்க் கின்னருள் வழங்குதற் கிடமாய்
நிறைவ ளத்தது கானல்சூழ் சருங்கழி நெய்தல். (௧௪௧)

பரவு தன்னடி தொழுதெழு பரதவர் பாக்க
முரவு நீரலை புகுந்தழி யாவகை யுததி
விரவு நாயக னியற்றிய வேலியே விழையப்
புரவு வேலைமே னிரைநிரை மிடைவன போந்தே. (௧௪௨)

தலைவ ரைத்தணந் திரங்குறு தாழ்குழன் மடவா
ரலைது யர்க்கெதி ராற்றுறா தரற்றுதன் மான
நலமு டைக்கடல் பெருமுழக் கஞ்செயு நாவாய்
பலப டைத்திடிற் பெருமுழக் கஞ்செயப் படாதோ. (௧௪௩)

சொற்ற மாரவேள் கைக்கொளக் கழிதருங் கொலையே
வுற்ற வேலையாங் குதவுறு மற்றவற் குடைவா
டொற்ற வார்முர சவன்குடை கொடியெழத் தோற்று
மற்ற மோவுபோர் புரிபவர்க் கிடமஃ தன்றே. (௧௪௪)

ஓங்கு தம்பிரான் றோழரொண் பரவையா ருவப்ப
வீங்கு தெய்வத வாவியுட் குளித்துறை மிளிர்பொ
னாங்கெ டுத்தெனப் பரதவ ராழியுட் குளியாப்
பாங்கு முத்தரித் தெடுப்பர்வண் பரத்திய ருவப்ப. (௧௪௫)

தண்டு போற்புயப் பரதவர் வலையெறி சலதி
மண்டு பேரலை பலவெடுத் தெறியும்வண் சங்கம்
விண்டு தேன்வழிந் திழிகழி மலர்மிசை வீழ்வ
வண்டு வீழ்வதற் புதங்கொலோ தேனுடை மலர்மேல். (௧௪௬)

ஆழ்த டங்கட லலையெடுத் தெறியுமீ னணிமாம்
போழ்பொ ருங்கணம் பரத்திய ருணக்குமீன் புலத்தே
வீழ்வ மற்றவ ருவப்புற நனிவிழை பொருளா
சூழ மைந்தவர்க் கொருமுய லின்றியு முறுமே. (௧௪௭)

துப்பு நேர்சடை யெம்பிரா னம்புயிர்த் தொகையின்
வெப்பு மாமலம் வேறுறப் பிரித்தென விள்ழுந்து
செப்பு நீர்நின்றும் வேறுறப் பிரித்தனர் சிறப்ப
வுப்பு நல்குவ ருமணர்கண் முகிற்குமா றுற்றே. (௧௪௮)

பரதர் நீள்வலை வீசுபு மீன்படப் படுத்தல்
சரத மாயினு மவரிழிந் தவரெனச் சாற்றேம்

விரத மாதவர் தொழுதெழு மாலவாய் மேய
வரத னேவெனின் மற்றவர்க் கென்சொல வல்லேம். (கசகூ)

கடலு டைத்திணை மாக்கள்பன் மீனனி கவர்த
லுடல்பி ளத்தலுப் பிடுதென்மற் றுணக்குத லோம்பல்
விடலி வற்றுளொன் றுயினும் வழாவகை வினைசெய்
தடல்ப டைத்தன ரறுதொழி லாளரோ வறியேம். (கரு)

தெளியு நீரினர்க் கெழுபழி நட்டவர் தெறல்போல்
வெளிய வான்றிரைக் கடற்புல வலர்மணம் வீசும்
புளின ஞாழலும் புன்னையுந் தாழையும் போக்கு
மளிவி ராயவர்க் கத்தொழி லடுத்ததே யன்றோ. (கருக)

வண்டர் பாண்செய மலர்கரும் புன்னைநீர் வாரி
யுண்ட கார்முகி லொக்குமப் புன்னைமே லுதறி
யெண்ட வாத்துகிர்க் கொடிபடர்ந் திலைமறைந் திமைத்தல்
விண்ட வாதவம் முகில்படு மின்னலே விழையும். (கருஉ)

கரையி னுட்புற வாலுகப் பரப்பினிற் கவின்ற
புரையில் கொக்கரை யூர்தலிற் பொலிதரு சுவட்டிற்
றிரையெ டுத்துவந் தூன்றிய துகிர்க்கொடி திகழு
முரைய லப்படைச் சாலெழு சீதையை யொத்தே. (கருஙு)

பாடு வண்டுசூழ் புன்னைமேற் பரவைமீன் றுவலி
நீடுவண்சினை யரும்புகுத் திடவவை நிலத்தொண்
கோடு சூழ்தரக் கிடப்பவக் கோட்டுமுத் தெனநீ
ராடு மாக்கள்சென் றள்ளுவர் நாணுவ ரம்மா. (கருச)

கூடு வான்புகழ்ச் சண்பைநா வலர்கொடும் பாலை
நீடு வேறுறப் புரிபவர் தன்னையே நினைக்கப்
பாடு சான்றநீர் நெய்தலின் வளம்பகர் பவர்யார்
நாடு கன்னிவாழ் பாலையின் வளஞ்சில நவில்வாம். (கருரு)

## பாலைவளம். வேறு.

மன்னு நானில மருங்கு மெல்லையா
முன்னு வெம்பரன் முரம்பு பற்றியே
பன்னு வேனினண் பகலிற் கூர்த்திடு
மின்னு கொற்றவை மேவு பாலையே. (கருசா)

கடையில் வீரமே கல்லின் மேவுசீ
ருடைய தஃதிவ ணுறையி னையையா
லடைய லாநனி யென்ற றுஞ்சுரத்
திடைவி ராவுமா லெயினச் சாதியே. (கருஎ)

வெய்ய கள்ளிகள் வீசு மொள்ளழ
லைய வாசமு மலர்ந்த பாடலீச்,
செய்ய வாசமுஞ் செம்பொற் கோங்கலர்த்
தூய்ய வாசமுஞ் சூழ்வ வானினும். (௧௫௮)

தலைவர் பின்செல்வார் தளங்கொ டாள்பரற்
கலைய லணந்தனர் காணு றாதுகாய்த்
தொலைவில் பஞ்சியாற் றூர்க்கு மற்றவர்
முலைந லங்கொளா முகிழ்க்குங் கோங்கமே. (௧௫௯)

துடியொ டேம்பகற் சூறை யாடுவார்
குடிகொ ளுஞ்சிறு குறும்பு சூழ்வரக்
கடிகொ ளீந்துதீங் கனியு குப்பவாங்
கடியின் மேயினர் யாருங் கைக்கொள. (௧௬௦)

தொழுசி வக்குறித் தொகுதி போன்மெனப்
பழுதில் வேம்புகள் பழுத்து நின்றிடு
மெழுகொ ழும்பரன் முரம்பி னெல்லையிற்
கழுகு சூழ்வன கழுக்குன் றேவென. (௧௬௧)

கணவர் பின்செலுங் கற்பு மாதரார்க்
கணவு நீர்நசை யாற்று நெல்லியிற்
புணரு மின்கனி பொலிய மற்றவர்க்
கிணர்கொ ளுங்குரா வீயும் பாவையே. (௧௬௨)

கொற்றி மேவுறு கோட்ட மேவினோர்
வெற்றி யெய்துதன் மெய்ம்மை யாதலாற்
றுற்றி யன்னவர் தோளின் மேவுதல்
பற்றிப் பூப்பன பாங்கர் வாகையே. (௧௬௩)

வேனி லன்பதூஉல் வெம்மை பாலைநீப்
போனி ரம்பினும் புகழ்தற் பாலதே
யானி றீரரு ளான நட்டழன்
மேனி யெந்தையை வெறுத்து ளாரெவர். (௧௬௪)

துணையில் வாளுடைத் துர்க்கை யென்னுமா
யிணையில் பேரர சியற்றும் வெஞ்சுரத்
தணையு நல்வள மறைய முற்றுமோ
திணைம யக்கமுஞ் செப்பு வாஞ்சில. (௧௬௫)

## திணைமயக்கம்.

### குறிஞ்சி, முல்லை. வேறு.

தந்தவளா வாரணம்பைந் தினைமேய்ந்து கரநீட்டித் தழைகான் யாறு
தந்தபுனன் முகந்துண்டுங் கானவா ரணமிறுங்கு தகக்கொ றித்தே

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



தந்தபமென் களநீட்டி மால்வரையை வனங்கொறித்துந் தகைசால் போகந்
தந்தனிமி னூர்பரமி னூரிடத்து நுகர்தலைவர் தன்மை தேற்றும். (௧௧௫)

கருவரையிற் கடிமிளகு கறித்தனுரிற் கண்பனிக்குங் கடுவன் பாங்க [ணைய்
ரொருபுறவப் பாடியிற்பாய்ந் திலைபடுத்த மனைபுகுந்தாங் குறியின் வெண்
பொருவிலெழிற் கண்ணனென நுகருமுரி யார்முடிக்கப் பொருக்கென் றோடி
யருகுதள வக்கொடியிற் றுவக்குணுமற் றவன்றுவக்குண் டதனை மான. (௧௧௭)

## குறிஞ்சி, மருதம்.

வரையுதித்த களிற்றிளங்கன் றவணின்று நடந்துசற்றே மருத நீழற்,
றரையுதித்த மேதிமுலை யுருவியுணு வளர்ந்துகண்ணன் றன்மை காட்டும்,
விரையுதித்த பணைப்பதும மலர்வரைச்செவ் வேளுருவின் மென்றூண் மேற்
சாய்ந், துரையுதித்த வீழிநகர்த் தம்பிரான் றிருவடிக்க ணுவமை காட்டும்.()

கரியவரை யொருவேழ நுனியையொரு செருவேழங் கையாற் பற்றிப்
பரியகறை யடிதோய வளைத்துவிட வதனுனிமேற் படருங் காலை
விரிமலர்மென் பணைத்தெங்கங் குலைமோத வக்குலைக்காய் மேற்போய் வீழ்வ
தெரிவரிய பரனுரு ரொருவினுனி யால்வீழ்ந்த சென்னி மானும். (௧௧௯)

## குறிஞ்சி, நெய்தல்.

ஓங்குவரை யகில்விடபத் தேத்தடைகீண் டொழுகிநற வொலிக்குங் கார்கோ
டேங்குபுன லுவர்மாற்றி யுயிர்மலமாற் றிடுகுரவர் திறமிற் றென்றும்
வீங்குமண ரளங்குவித்த வுப்புவரை சரிந்துசுனை விரிநீர் வீழ்ந்து
தேங்குசுட ரொளிச்சிவத்தோ டுயிர்கலத்த லிற்றென்றுந் தெரிக்கு மாதோ.

## நானிலங்களும்.

குறுமுயலாய்ச் சியரளித்துப் பரத்தியர்க்கப் பரத்தியர்பாற் கொழுநன்
மீனு, நறுநுதற்பூங் கொடிச்சியரொண் மயிலுழத்தி மார்க்களித்து நயந்தன்
னோர்பான், மறுவறுவெள் ளோதிமமுங் கொடிச்சியர்பரி வருத்தனையா வயன்
மா வாழை, யுறுகனிகற் றேக்குடத்துங் கானிரைப்பாற் குடத்துமுறை யுகு
க்கு மோர்பால். (௧௭௧)

தேன்மேய வரைக்கிளிகான் றெறுவியர்வாய் தொண்டையெனச் செவ்
வா யூறுங், கான்மேய குயில்வரைநீன் மணிப்பாறை யெழிலியெனக் கலங்கி
வாடு, மீன்மேய கடற்றாளச் சுடர்நிலவென் றரக்காம்பல் விள்ளுஞ் செய்
யுண், மான்மேய கனவைநன வெனவிரும்பு வார்துயர்வார் மகிழ்வார் மான.

சீர்மருவு சம்பந்தர் திருநாவுக் கரசர்புகழ் திகழ்வன் றொண்டர்
பேர்மருவு திருப்பாடற் சுவைநுகரு மருந்தவத்துப் பெரியோர் மானக்
கார்மருவு வரைத்தேனும் விரைக்கான நிரைப்பாலுங் கழனி மேய
வார்மருவு கழைச்சாறுங் கழிமருவ நுகருமவண் மருவு மன்னம். (௧௭௩)

சொற்றநா னிலவரைப்பிற் பலவகைய பெருங்குடியுந் துவன்றி மேன்மை
யுற்றநான் மறைகளைதத் தமக்குரிய வொழுக்கொருவா துறைய நாளும்
பெற்றநா யகவளவன் றிருநாட்டின் வளமுழுதும் பேச முற்றக்
கற்றநா வலரும்வெரிங் கொடுப்பாரேல் யானேயோ கழற வல்லேன். (௧௭௪)

முழுதுலகுங் கொண்டாடப் புற்றிடங்கொண் டவராரூர் முதலாப் பற்பல்
பழுதிறலந் தன்னகத்துட் டழுவியடங் காப்பெருஞ்சீர் படைத்த செல்வச்
செழுவளவன் றிருநாட்டுச் சிறப்பினையா னென்னுரைத்தேன் றிகழவ் வாரூ
ரெழுதருஞ்சீ ருளுஞ்சிறிது தொகுத்துரைப்ப லரிறபநூல் யாவு மோர்ந்தீர்.()

ஆகத்திருவிருத்தம் - ௨௨௮.

# திருநகரப்படலம்.

பூமலி பேரன் பறமெனுங் களைநீர் பொருந்திய சென்னிநா டெனுமின்
றேமலி தடத்துட் பன்னக ரெனும்பல் செழுமலர் சூழ்தர நாப்பட்
பாமலி யண்டம் பற்பல வீன்ற பனையெனு மோதிமங் குடிகொண்
மாமலி செந்தா மரையென விளங்கு மறைமுதற் றலமெனு மாரூர். (௧)

செழுநறுங் கமல முகைமுறுக் குடையச் செங்கதிர் விரித்தெழு செல்வன்
பழுதறு குலக்கோ நாடொரு சங்கப் பலகையை யொக்குமற் றதன்மேல்
வழுவறு தேர்ச்சிப் புலவரை யொக்கும் வளநகர் பலவுமற் றவர்தங்
குழுநடுப் பொலிந்த விறையவ னொக்குங் குணமலி தமிழ்த்திரு வாரூர். (௨)

வலைபுகழ் வளவர் கோன்றிரு நாடு வானக நிகருமவ் வானிற்
புனைகதி ருடுக்க ணிகருமாங் குடுத்த புரமெலா மவ்வுடுக் கணத்து
ணினைதரு மமுதக் கதிர்விரித் தெழுந்து நிலவுறு நிறைமதி நிகருந்
தனைநிக ருலக புருடற்கு மூலா தாரமா கியதிரு வாரூர். (௩)

முடங்குளை மடங்கன் முழுமணித் தவிசின் முற்றிலா முலையொடும் வலியின்
மடங்கலர் நடுங்கும் வைந்நுதி நெடுவேன் மகவொடும் வீரகிண் கிணிக்கால்
விடங்கரெஞ் ஞான்றும் பிரிதரா துறைய மிகுதவ முடைமையான் மாயோ
னிடங்கெழு நிறத்தை யிந்திர புரத்தை யெள்ளிய தொருதிரு வாரூர். (௪)

பதுமமென் மலரிற் றிருமகள் வளமை பழுத்தபொன் னகரினைந் தருவொண்
முதுபுகழ் மலயப் பறம்பிலின் றமிழ்மா முனிகனி நலத்தமான் மார்பிற்[டிற்
புதுவெயில் விரிக்குங் கதிர்மணி பொருவப் பொலிதரும் பொன்னிநன் னாட்
சதுமறைக் கரிய புற்றிடங் கொண்ட தம்பிரா னுறைதிரு வாரூர். (௫)

உளைசெறி மாயோன் கண்மலர் வருடு முமைதிருக் கைம்மல ரயன்வெள்
வளைநிகர் களிற்றூன் வானவர் மோலி வனைமல ரடியருண் மலர்நன்
புனைமதி யமுத மறைமுடி நாளும் பொலிதர நாறுமொண் செந்தா
மரைமலர் நாறு மறுகுமுற் பலபொன் மறுகுடை யதுதிரு வாரூர். (௬)

மறந்தவழ் திகிரி வலத்தவன் கலைமான் மணத்தவன் வானவர்க் கிறைவ [வுஞ்
ணிறந்தழை யமரர் வந்துவந் திறைஞ்ச நெடுந்தொடை யுதிர்ந்தபைந் துள
சிறந்தபங் கயமுங் கற்பக மலருஞ் சீர்மலி யெல்லையுந் தெருவு
முறந்தன மணப்ப வருண்மணந் தொளிரு முதித்தவ ருதித்திடா வாரூர். (௭)

வளமறை யந்த மறையின தந்தம் வயங்குமா கமமுபா கமங்க
ளுளமலி புராண முபபுரா ணங்க ளுரைக்குமற் றுள்ளநூல் யாவும்
பளகறு மன்பிற் பறையறைந் தெண்ணப் பஃறரந் துதிசெயப் பொலிவ
தளவில்பல் லுயிருங் களியுற விருந்தா டழகர்வீற் றிருந்தரு ளாரூர். (அ)

பறைவளை யிழப்ப வச்சிரம் விதிர்த்த பாகசா தனன்றிரு நகரும்
பொறைமலி நிதிய நனிபடைத் துயர்ந்த புருடவா கனன்றிரு நகரு
நிறைதரு வனப்பாற் கல்வியாற் பொருளா னீதியான் மற்றுமுள் ளவையா
லறைதரிற் சிற்றூ ரேயெனப் பேரூ ராய்ப்பொலி தருந்திரு வாரூர். (௯)

அருநல மணிப்பூ ணல்லியங் கோதை யம்மையோ டெம்மையா ளுடையான்
பெருநல மருவி வீற்றிருந் தருளப் பெற்றுமால் செருக்கறக் கருக்கித்
திருநல மலர்மேற் றிருவுறப் பெருக்கிச் சினந்தெழு கலிவலி முருக்கி
யுருநலங் கனிந்த தெய்வவா ரூரை யொப்பதோர் நகரம்யாங் குளதே. (௧௦)

வேறு.

ஒருங்கட லமைந்த வாரூ ரொண்மணி கொழிக்கும் வெண்பா
லிருங்கட லால முண்ட விணையிலி பொருவ வாரிக்
கருங்கட லால முண்பான் கைத்துணை நீட்டி யாங்கு
மருங்கட லமைந்து செல்லு மாப்புகழ்ப் பொன்னி மாதோ. (௧௧)

திருமலி யாரூ ரென்னுந் தெய்வதம் புனைந்த தெய்வ
மருமலி தொடைய னேரு மலருடை யிருபா லாறுங்
குருமலி யவனி மங்கை குழல்வகிர்ந் திட்டா லென்னக்
கருமலி யறலொ ழுக்கங் கலுழுவ விரண்டு பாலும். (௧௨)

பெரும்புக ழந்த ணாரூர்ப் பெருவள நாளு நோக்க
விரும்பியுள் ளொழுகு மாபோல் விரிந்திரு பாலுஞ் செல்லுங்
கரும்பினு மினிய தெண்ணீர்க் காவிரி யனைய வாரூர்க்
கரும்பிடை கலையை மற்றைப் பிங்கலை யிணையொப் பாமால். (௧௩)

உறையொரு தான நாற்கோட் டொருத்தலு முலவாக் காட்டை
நிறையுமுத் தான நால்வாய் நெடுங்களிக் கொடுங்கை மாவு

நறைகமழ் குளகு கொள்ள நாகமே லுயர்ந்து போகிக்
கறைதபப் பரந்த தம்மா கமலைசூழ் காமர் சோலை. (கச)

சண்ணக ரூரர் சூழ்ந்த கடிகமழ் காமர் சோலை
வண்ணவான் கிழித்து மேற்போய் மழைகவிழ்ந் தனைய தாகித்
தண்ணமர் நீழல் செய்யுந் தன்மையா லன்றோ நாளும்
விண்ணவர் வெயர்வு தோன்றா மேனிய ராகி வாழ்வார். (கரு)

மன்றுடை யடிகள் வான மங்கையர் மணிவார் கூந்த
றுன்றுதென் கமலைச் சோலை துதைமலர் நாற்றஞ் சார்வ
தென்றறி யார்போற் கீர னெதிர்சினந் தனரன் றோர்முன்
னின்றியாங் கேட்போ நெற்றி நெருப்பிலா திருப்ப ராயின். (கசு)

மறைமுதற் றலஞ்சூழ் சோலை மலர்நறு மாந்த லாலே
சிறையளிக் குலங்கள் வானச் செழுந்தரு மதுவெ றுத்த
கறைமிடற் றிறைவன் பூந்தாட் கமழ்சுவை யின்ப மார்வோர்
குறையுடை மற்றை வானோர் குழாத்தின்பம் விழைவர் கொல்லோ. (கஎ)

மடையெலாஞ் சங்க மூரும் வயலுடை வளவர் நாட்டி
னடையெலாந் திருந்து மாரூர் நன்னக ருடுத்த சோலைச்
சடையெலாம் புடவி கீண்டு தாழ்ந்துபோ யொருபா தாளப்
புடையெலா முறுமாங் குள்ள புயங்கரா சியைநி கர்த்தே. (கஅ)

தீதுள வெமக்கொ ழிக்குந் தியாகேசப் பெருமா னூரர்ப்
போதுள பொங்கர் தோறும் பொம்மல்வெம் முலையந் நல்லார்
தாதுள மலர்க்கை யேந்தித் தயங்குபந் தாட னோக்கி
மாதுளங் கனிப றித்து மந்தியு மாடு மாலோ. (ககூ)

தளரிடைப் பணைத்த கொங்கைத் தையலார் தாங்க லாற்றா
வொளிர்மணி வடம்பூஞ் சோலை யொருபசுங் கோட்டிற் றூக்கிக்
கிளர்மணி யூச லாடக் கேழ்கிளர் மஞ்ஞை யோர்ந்தந்
நளிர்வட நாப்ப ணேறி நன்கிருந் தாடு மாலோ. (உ0)

பன்னுசீ ருயிர்க ளோத்திப் பயனுறப் பரம னூரு
மன்னுதா பரத்துஞ் சங்க மத்துநன் குறைத லேய்ப்ப
வுன்னுவான் றன்மை யாரு முவப்புறத் தடநீர் மாட்டுந்
துன்னுகா னதிநீர் மாட்டுந் துதைதருங் கமலை வைப்பில். (உக)

பொழில்விளை யாடு மாதர் பொன்னணங்கர் துகங்கை தப்பி
யொழுகய லாற்றின் வீழ்ந்தாங் கொருமத கூடு போயோர்
செழுமணித் தடத்திற் றோன்றுந் திருமணி முத்தாற் றிட்ட
கதிர்சுடர் நிதியந் தெய்வக் கயத்தினிற் றோன்றிற் றென்ன. (உஉ

பன்மலர் வாவி யெல்லாம் பன்மலர்க் கூடை யொக்கு
மன்மலர் களையக் கூடை வாய்விளிம் பொக்கு மாங்கோர்
மென்மலர்க் கொடிகட் டுண்டோர் மென்கொம்பு துவள லந்த
நன்மலர்க் கூடை தூக்கு நாணுடைக் கொம்ப ரொக்கும். (உ௩)

பாசடை வாவித் தோன்றும் பங்கய வரும்பைக் கோட்டு
வாசமென் மலர்ப்பூங் கொன்றை வண்சினை வருடுந் தோற்ற
மாசில்பைங் காயா மேனி வாய்ந்தமோ கினிமென் கொங்கை
யேசிலெம் பெருமான் கையால் வருடுத லேய்க்கு மாலோ. (உ௪)

குலைமலி தேமா வாழை கொழும்பல வாதி யீன்ற
நலமலி கனியு மென்பூ நறவமு நிறையும் பொய்கை
கலைமலி யந்த ணாளூர்க் கம்பிக்கா தழகர்க் காட்டி
மலர்தரக் கலந்து சேர்நின் மாலியத் தான நேரும். (உ௫)

குங்குமக் கொங்கை நல்லார் குடைந்தபூந் தடத்து மூழ்கிப்
பொங்குமெய்ம் முழுதுஞ் செம்மை போர்த்தபேட் டன்னஞ் சாரத்
தங்குமொண் சேவ லையந் தலைக்கொண்டு தழுவ வஞ்சு
மங்கண்மா ஞாலத் தியாரே சிவந்தபோ தவாவிப் புல்வார். (உ௬)

பற்பல சுரும்பு மொய்த்துப் பகர்சுவை நறவ மாந்திப்
பற்பல பண்ணும் பாடப் பற்பல மலரு மல்கிப்
பற்பல காத நாறும் பரவுநந் தனங்க ளம்மா
பற்பல நாளுங் கண்டோ ருள்ளத்தைப் பறித்தல் செய்யும். (உ௭)

மாவியல் கருங்க ணல்லார் மருங்குறேம் புறந டந்து
பூவியல் பொழிலைச் சார்ந்து பொலிநல மகிழ்ந ரோடும்
வாவிபுக் காடு வார்கண் மற்றதை விடவுள் ளெண்ணு
ராவியை விடவுள் ளெண்ணங் கொள்ளுவா ரகிலத் தியாரோ. (உ௮)

இசைபடு கங்கை மேனன் கேற்றுபஃ றீப மான
வசைதவி ரோடை தோறு மலர்வசெங் கழுநீ ரன்ன
திசைகமழ் பூவின் சீர்யார் தெரிபவர் நாத விந்து
மிசையமர் வலப்பொற் பூந்தாள் விமலனை யன்றி மாதோ. (உ௯)

தடையற வுணர்ந்தோ ராலுஞ் சாற்றுதற் கருஞ்சீர் வாய்ந்து
நடைமலி யந்த ணாளூர் நதிமலர்ச் சோலை யாதி
யடைவளஞ் சிறிது சொற்று மாண்டறா வுணர்ச்சி மிக்கோர்
புடைநகர் வளத்திற் சில்ல புகலுதுந் தொகுத்து மாதோ. (௩0)

## புறநகர்வளம்.

### யானைகள். வேறு.

விரைகமழ் கழுநீர் மாலிகைத் தடந்தோள் வித்தகன் பொன்னடி பரசி
வரையெலாந் தெய்வப் பிலவழி யடைத்த வரைவெளி வரப்புரிந் தாழித்
தரையுயிர்க் குவப்பு மிந்திரற் கனுருந் தமக்கொரு புகழுமுண் டாக்கிப்
புரையற வந்து சூழ்ந்தெனச் சூழ்வ புகர்முகப் பொருகளி யானை. (௫௧)

கருதுதென் னாரூர் வாரியுண் மிடைந்த கறையடிக் களிற்றொடு மிகலிப்
பொருதினைத் தோடி யொருவரை தடுப்பப் போகிட மின்றிமற் றாங்கே
மருவிய களிற்றைத் திசைக்களி றென்பர் வானகத் தோடிமெய் விளர்த்த
வெருவரு களிற்றை வெண்களி றென்பர் மேதினி யிடத்தவர் நாளும் (௫௨)

வெளிறபுத் தெழுந்து கூர்ங்கழை முறித்து வெருத்தவிர்ந் தெழுமத
வொருத்தர, லளிகண்மொய்த் திரைக்கு மம்மதப் பெருக்கா லளறெழு னுள்
ளல்வீழ்ந் தழுந்திக், களிதவிர்த் துழன்று கரைமிசை யிவருங் கண்ணக னுல
வாய்க் கிடங்கி, னுளிபதைத் தழுந்த வீழ்ந்தொரு வழுதி யொண்கரை யேறிய
தொப்ப. (௫௩)

தடநெடு வாரி மீமிசை யடைந்து தவழ்கமஞ் சூலுடை முகிலைக்
கடநெடுங் களிறு கைக்கொடு பற்றிக் காத்திரங் கொடுத்து மெய்ம் முறுக்கி
யடல்கொடு பிழிந்து நீர்நசைப் பிடிக்காங் கருத்துவ வொன்னலர் முடிமேற்
படலைகை வாங்கிச் சுவையுடைக் குளகாப் பரிந்தினி தூட்டுவ மாதோ. ()

தண்டுகை வாங்கிக் கூற்றமு நடுங்கச் சாடுமொய்த் தரியலர் சென்னி
மண்டுவெண் மூளை சிதர்தரக் கையால் வளைத்துமுன் காலினுற் குமைக்கும்
விண்டுபைங் குருதி வழிதர நிறத்து வெந்நுனை மருப்பினுற் குத்தும் [கள்.
வண்டுமொய்த் திரைப்பக் கவுண்மடை திறந்து மதம்பொழி மாணவெங் கரி

சூற்கரு மேகப் பெருங்குரீற் சிறுகட் டொடுகட லுடுத்தமண் டிழாங்கை
மாற்கருங் களிறு பற்பல யாத்த வான்றொடு வாரியின் பாங்கர்க்
காற்கடுப் பினைத்தங் காற்கடுப் பினுக்கோர் காற்கடுப் பாக்கிய குசைய
வாற்கடும் புரவி நிரைநிரை யாத்த மந்திரம் பற்பல வயங்கும். (௫௬)

### குதிரைகள்.

புற்றிடங் கொண்ட தம்பிரான் றேழுர் பொருசினக் களிறிவர்ந் தியார்க்கும்
பற்றிட மாய வெள்ளிவெண் கயிலைப் பருப்பத மடைந்தரா ளவர்முன்
விற்றட நெடுந்தோ ளுதியர்கோ வுகைத்த விண்மிசை வாவுவெம் புரவி
பொற்றடங் கமலைப் புரவியு ளொன்று போலுமெய்ந் நூற்பொரு ளுணர்ந்தீர்.

மதுவிரி கமல முகைமுறுக் குடைய மழவிளங் கதிர்விரித் தெழுவோன்
முதுபுக ழாரூர்ப் புரவியுட் கழித்த மூப்புடை யொன்றுபெற் றிடினும்

புதுவெயில் படுமோர் காலுடைத் தேர்க்கேழ் புரவியும் பூட்டுவன் கொல்லோ
பதுமமென் றொடையார்கைப்புனற்கெதிர் தீரன்பார்க்கவும்வேண்டுவதின்றே.

கழைகுழைத் தளிநாண் பூட்டுபு நறவக் கணைபல தொடுக்கும்வெங் காமன், விழைபுகழ்க் கமலைப் புரவியு ளொன்று வெஃகினன் பெருமையானுந், தழையுமப் புரவி யோரபி தானச் சார்புடைத் தன்மையுள் ளோர்ந்தே, யுழையமை செவ்வாய்ப் பைஞ்சிறைக் கிள்ளை யூருவா னென்செய்வான் மாதோ. (௩௯)

சதமக னிழைத்த புற்றிடங் கொண்ட தம்பிரான் புரமடு காலை
மதனுடை யவனி வையமீர்த் திடவம் மாநகர்க் கொடும்பரி பூட்டா
னுதவிய முதிய வைதிகப் பாக னுடலுமப் பரிவிட வல்லா
விதமுணர்ந் தன்றோ வவனொடு பழக்க மேவிய மறைப்பரி கொண்டான். ()

வனத்தினுங் கொடிய சுரத்தினு முழன்ற வளர்புகழ் நளனெனுமன்னன்
கனத்தினுங் கரிய கண்டனை யண்டர் கருதுதென் கமலையிற் றொழுநாண்
மனத்தினுங் கடுக வாம்பரி விடுக்கும் வளமலி விஞ்சைவெண் மணிபற்
பனத்தினும் படுநீ ரந்நகர்ப் புரவிப் பாகர்பாற் பெற்றனன் போலும். (௪௧)

துன்னலர் மோலி துகளெழக் குமைத்துத் தொடுகட லேழையும் வாவும்
பொன்னணி மணிவெம் புரவிகள் யாத்த போகுயர் மந்திரப் பாங்கர்
மின்னகு கதிரோன் விழிமுகிழ்ப் பெய்த வியன்மணிக் கொடிஞ்சிவில் வீசுந்
தன்னிகர் நெடுந்தே ரளவறச் செறித்த தடநிலை பற்பல மாதோ. (௪௨)

## தேர்கள்.

கொய்சுவற் புரவி வாய்விடு விலாழிக் குளிர்புனல் கூன்பிறைக் கோட்டு
மொய்வயக் களிற்று மும்மதப் புனலின் முடுகுபு கலந்துபே ராறுய்ச்
செய்தவக் கமலைப் புறநகர்ப் பெரிய தெருவிடைப் பெருகிவெங் கணைகொண்
டெய்திறற் குமரர் கடவுதேர்ச் சில்லி யிருஞ்சுவட் டாறுபோய் வடியும். ()

நல்லியற் கமலைப் பழங்குய வினையு நகுகதிர்க் குயவுநே ராதா
லெல்லிய லொருகா லேயுள தஃதுற் றிணைந்தபல் காலுள திஃது
செல்லுமோ ராறே யஃதுபல் லாறுஞ் செல்லுவ திஃதுவெவ் வசுரர்
புல்லுவெம் பகைய தஃதிஃ தனைய பொருபகை யில்லது மாதோ. (௪௪)

ஆழியங் கொடிஞ்சி யறைகுரன் மணித்தே ரணிமறு கிடைச்செலுந் தோறும்
வாழியம் பொன்னந் துகிற்கொடி யசைதன் மதித்திடா தம்மவாம் புரவி
சூழியங் களிற்றோ டெதிரினு நீவிர் துகள்படு வீர்கடி தென்றப்
பாழியந் தடந்தேர் பணைக்கர நீட்டிப் பகைஞரை விலக்குதல் பொருவும். ()

கலினவெம் புரவி சிலபல பூண்டு கனைகுரற் கெழிலியு முட்க
வலியவெம் பகைஞர் கால்விசைத் தோடி மறுகுற மறுகிடைச் செல்லும்

பொனீபசும் பொற்றேர் நிலைகளின் பாங்கர்ப் பொங்கெழில் வீரர்கள் குழுமி
மலிபல படைகைக் கொண்டனர் பயில வயங்குகல் லூரியும் பலவால். ()

**வீரர்கள்.**

முருக்கலர்த் துவர்வாய் முருந்திள மூரன் முகிழ்முலைத் திருவுறை மார்பன்
செருக்குறூற் றொழிய வாங்கிய கமலைத் தெய்வதஞ் சேணுல களக்கு
மருக்கிளர் பொழில்சூ ழூர்நக ரொருவா மாப்பல வீரருக் கனைய
வெருக்கடி செருக்கை யருளிய தோவவ் வீரர்தஞ் செருக்கையா ரளப்பார். ()

அஞ்சன மேனி யிராகவன் விசய னந்தணு ரூரடைந் தமலன்
செஞ்சரண் டொழுநா ளந்நகர் வீரர் சிலைத்தொழில் பயிற்றலா னன்றே
வெஞ்சலில் புகழ்க்கோ தண்டவி ராமன் காண்டிப னெனும்பெயர் பெற்று
வெஞ்சமத் தெதிர்ந்தால் விழித்தகண் ணிமையா வீரமும் பெற்றனர் மாதோ.

**வீரர்முதலியோரிருப்பிடம்.**

வெஞ்சின மருவிற் கூற்றுவன் மேலும் வெம்புலிப் போத்தெனப் பாயும்
வஞ்சின வீரர் சேரியுங் கிடுகு வார்கொடி கூவிரஞ் சில்லி
யஞ்சுமங் குசமர் தனமில கடம்பண் ணரணமத் திகையுளை கலினந்
துஞ்சுவன் சிரகங் கச்சமா திகள்செய் தொழிலினர் சேரியு மநந்தம். (௪௯)

மழுமுனி பரிதி வண்டயில் குலிசம் வசிக்குயங் கண்டகம் வட்டங்
கழுமுனூந் தகமொண் சுரிகைகூ றொஃகங் கப்பண நவியம்வன் றண்ட
மெழுமுத லமைப்போர் மிடைபுற நகரத் தியைவளம் பகரவல் லவர்யார்
முழுதுணர் புலவீ ரிடைநகர் வளமு மொழிகுதுஞ் சிலதொகுத் தம்மா. (௫௦)

**இடைநகர்வளம்.**

**வேறு.**

எயில்சூழ்திரு மணிமாளிகை யெல்லாமுதிர் வில்லா
வெயில்வீசுவ நிலவீனுவ மிளிர்மற்றவை யொருபா
லயிலார்விழி மடவார்விளை யாடும்பொழி றோறு
மயிலாடுவ குயில்கூவுவ வாறேருமு ளூருக. (௫௧)

சந்தாடுறு முலையார்நறுந் தாதாடுபு மலய
மந்தாநில மசைந்தாடுறு மாஞ்சோலைக டோறும்
பந்தாடுவர் கழங்காடுவர் பசுமர்மலர்த் தடத்து
வந்தாடுவ ரிளமைந்தர்கண் மனமுஞ்சுழன் றாட. (௫௨)

யாழைக்கனி யினைவென்றசொல் லியர்சேரிரும் பொழில்வாய்
மாழைக்கனி யொருபாலுகு மாறுக்குலை படுதேந்
தாழைக்கனி யொருபாலுகுந் தறுகட்புலி யடிக்காய்
வாழைக்கனி யொருபாலுகு-மலர்த்தேனுகு மொருபால். (௫௩)

விதுப்பூமுக மின்னாரொடு பொன்னார்கழல் வீக்கு
மதுப்பூங்கணை வேளன்னவர் வாவித்தலை மேவிப்
புதுப்பூம்புனல் விளையாடுவர் பொங்குங்கடி தங்குங்
கதுப்பேந்திய சசியிந்திரன் கலந்தாடுவ தென்ன. (௰௪)

மின்னாரிடை மடவார்சிவி றியும்வேலுடைக் கடவு
ளன்னாரொளிர் பந்துங்குளி ரங்கைக்கொடு பொங்கும்
பொன்னார்மலர்த் தடமாடுவர் புதுப்பூம்புன லாவிக்
கொன்னார்பிடி யுந்தும்பியுங் குடைந்தாடுவ தென்ன. (௰௫)

நலந்தாரணி கொண்டாடிட நனிகொண்டபன் மறுகு
மலர்தாரலர் நடப்பார்நெருங் காங்கற்றுகு முத்துங்
கலர்தார்வெறுத் தெறியுங்கடி கமழ்மாலையுந் தாரும்
புலந்தாரெறி மணிமாலையும் பொன்மாலையுங் குப்பை. (

கரும்புஞ்செழுங் காயும்பல கனியுங்கமழ் நறவு
மரும்புங்கடி மலருஞ்சுவை யனபற்பல்சிற் றுணவும்
விரும்புஞ்சுவைப் பாலும்மிடை தயிரும்மிகு நெய்யும்
பெரும்புங்கவ ரும்பெட்புற மறுகெங்கணும் பிறங்கும். (௰௭)

தலைமுட்டுவ தாண்முட்டுவ தலைமைந்தர்க டந்தோட்
சிலைமுட்டுவ கரமுட்டுவ சிலைவாணுதன் மடவார்
முலைமுட்டுவ துடைமுட்டுவ முகமுட்டுவ விடைமே
கலைமுட்டுவ முடடாதன வெவைகாமரு மறுகில். (௰௮)

குளிர்மாலிகை தாங்குங்கருங் குழல்வேய்ங்குழன் மொழியார்
களிர்மாமணி வடமாரிள நலமாமுலை தாக்கத்
தளிரார்கரம் வளைமார்புறு தகையாடவர் குழுவு
ளொளிர்வாண்முக மலர்வார்பல ருளைவார்சிலர் மாதோ. (௰௯)

முழுவாரணி முலையார்மதி முகநோக்குபு செல்வோர்
குழுவார்மறு கொளிர்மாலிகை கொழுந்தாடகை தலினால்
விழுவார்சிலர் தடுமாறுபு வீழ்போதயல் பற்றி
யெழுவார்சிலர் மேற்றூயவை யிரிப்பார்களுஞ் சிலரே. (௨௦)

வேறு.

உம்பரொண் பவன வெண்சே வுபரிகை வைக வந்தப்
பம்புப ரிகைப்ப தித்த பதுமரா கச்செஞ் சோதி
நம்பமேற் றோன்ற லம்பொன் னகத்துவெள் விடைமேற் றோன்று
மெம்பிரா னிகரும் பாங்க ரெழிலியெம் பிராட்டி நேரும். (௨௧)

வெள்ளிய பளிங்காற் செய்து விளங்கெழின் மாட மெல்லாம்
வெள்ளியங் கிரியை நேரு மேயவம் மாட மேலால்

வெள்ளிய துகில்வி ராங்கே தனத்துவின் விடைவந் தல்கல்
வெள்ளியவ் வரைமே லூன்றும் வெள்விடைக் கொடியை நேரும். (௬௨)

பொன்செயு மாடப் பாங்கர்ப் புதுமலர்ச் சூழி சார்ந்து
கொன்செயுங் குவவுத் திண்டோட் கொழுநரோ டினிதி ருடு
மின்செய்நுண் ணிடைநல் லார்க்கு விளர்க்கும்வாய் சிவக்குங் கண்க
டென்செயத் தடமு மம்மா வுவளகந் தானே தேரின். (௬௩)

ஆருஞ்செங் கமலச் சூழி யாடுவா ராடை நீங்க
வோருஞ்செங் கமலப் போதே குறிநமக் குணர்க வென்றிந்
நீருந்தோற் றிடும்பே ரன்பி னீருந்தோற் றினிரா லென்பர்
சாருந்தோட் டலைவர் கேட்ட தையலார் நாணுட் கொள்வார். (௬௪)

மலைநிகர் மாட மேலான் மாதர்கந் துகங்கொண் டாட
நிலையினின் றொருவெண் பந்து நீனிற மாட வாய்தற்
றலைநுழைந் தொளிக்குந் தோற்றந் தடாவலி வடுகப் புத்தே
ளுலைவுறு வாயுட் புக்க வொண்மழைக் கோளை நேரும். (௬௫)

ஆணிப்பொன் மாடத் தும்ப ரமைத்தமா டத்தெ ழுந்த
மாணிக்கச் சோதி நாப்பண் வான்றகர்ப் பவன மூழ்கிச்
சேணிக்க ணமர்வா ரேத்துந் தெய்வநா ரதன்யா கத்துப்
பாணித்த லின்றித் தோன்றும் பாய்தகர்த் தன்மை தேற்றும். (௬௬)

உயர்மணி மாட மீப்போய்க் குனிந்தரு குள்ள சூதப்
பெயர்பெறு கனியு மாங்கே பின்னிமிர்ந் தமரர் தாருத்
துயல்வரு கனியுங் கொண்டு துய்க்குமா ரூர ரிம்மை
யயர்வறு மறுமை யீங்கே யடைந்தவா றூரர் போன்றார். (௬௭)

நினைமணி மாட மேலா னிறுவிய கொடிப்பொற் கொம்பர்
முனைசில கற்ப கப்பான் மொய்த்தன வுரிஞ்சி நிற்பக்
கனைகழல் வானோர் நோக்கிக் கற்பகக் கொம்புட் சில்ல
புனைதளி ருறுமை யென்ன புதுமையென் றுய்ந்து நிற்பார். (௬௮)

தளிரியற் கருங்க ணல்லார் சந்திர காந்த மாடத்
தொளிர்கழன் மகிழ்ந ரோடு முஞற்றிய கலவிப் போராற்
குளிர்முகம் வெயர்வு தோன்றக் கொண்டதோர் சோக மாற்று
நளிர்வளர் புனலம் மாட நகைமதி தோன்றச் சிந்தி. (௬௯)

மாதர்மேன் மாடத் தாட மணிக்குழ லுதிர்பூங் குப்பை
சோதினி கொண்டு போக்குந் தொழிலின ரகற்றப் பின்னு
மோதுகற் பகம்பூங் குப்பை யுகுப்பன வலையர் நோக்கி
மேதினி யிழித்தும் விண்மேல் விட்டகண் ணலையே நோவார். (௭௦)

முத்தவெண் சுதையே தீற்றி முழுவனப் பமைந்த மாட
மைத்தநீன் மணிகா லியாத்த மாடத்தோ டியைந்து நிற்றல்
வித்தகர் புகழும் வீதி விடங்கர்தம் பவனி காண்பா
னுத்தம முசலி கண்ண னுடன்வந்து நிற்ற லேய்க்கும். (௭௧)

துதிசெயிந் நகர மன்ற நோக்குபு சுதன்மை யும்பன்
னிதிசெயுப் பரிகை நோக்கி வைசயந் தமுநீள் காந்தி
யுதிசெய்பொன் மாட நோக்கி யோங்கொளி வசந்த முங்கூர்
மதிசெய்வா னவர்தந் தச்சன் வாசவற் கமைத்தான் போலும். (௭௨)

திருநக ரிதனை நோக்கித் தெளிந்தமைத் ததனாற் றானப்
பெருநகர் சிறந்தி ருக்கு மென்றெவர் பேசு வாரிவ்
வொருநகர் மாயோன் மார்பத் துறைந்தகிண் கிணித்தா ளாரத்
தருநகர் வெறுத்து வந்த தன்மையே சாலுஞ் சான்றாம். (௭௩)

மருவிய தெய்வ வாரூர் வளனுண்மை சிறிது நோக்கார்
பொருவில தளகை யென்று புகழ்ந்துகொண் டாடா நிற்பர்
திருவள மல்கு சைவ சிந்தாந்தப் பொருண்மை தேரா
ரொருவுறார் பசுநூல் கைக்கொண் டுவந்துபா ராட்டல் போலாம். (௭௪)

ஓங்கொளி யடுக்கு மாட வும்பரிற் குவித்த மைத்த
பாங்கொளிர் தலையில் வைத்த பன்மணித் தசும்பு மேலால்
வீங்கொளி மதியம் வைகல் வீரகிண் கிணித்தா ளையர்
தேங்கொளி யாழித் தேர்மேற் சிறந்தவொண் கவிகை நேரும். (௭௫)

வரைகளும் வரைவ யங்கு மணிகளு மயிற்கு ழாமுங்
கரைகளி றுகளுங் கொண்மூக் கணங்களுங் காம்பின் காடும்
புரையெழின் மாடஞ் செல்வம் பூவையர் பொருதோண் மைந்த
ருரைதுகில் விடங்க மாக வுருத்திரிந் தனவோ தேரேம். (௭௬)

அலங்கொளிப் பளிங்கு மாடத் தரமியத் தலத்து நாப்பி
ணிலங்குறு பரியங் கத்தி னிட்டபூந் தளிமம் புல்லி
விலங்குறாக் கலவிப் போர்செய் தயர்ந்துமின் னார்கி டத்த
றாலங்கமே லெழுபால் வேலைத் துகிர்க்கொடி பொருவு மாலோ. (௭௭)

வணங்குநா யகர்சி ரத்து மலர்ப்பதங் கொடுபு லந்த
வணங்கனா ருதைப்பத் தோன்று மலத்தகச் சுவடு நோக்கி
யிணங்குவண் டினங்கள் செந்தா மரையித ழென்று மொய்த்தே
யுணங்குவ சிகைப்பூந் தேனு முணாசிலம் பொலித்தற் கஞ்சி. (௭௮)

ஊடிய மடவார் தாழு முறுநல மகிழ்நர் நெற்றி
யேடிய லடியா லெற்ற விலகுறு திலக நானங்

கூடியவ் வடியிற் செய்ய குசேசய விதழைப் புல்லிப்
பாடிய றவிர்ந்தோர் தும்பி பதிவுற்றுக் கிடந்த லேய்க்கும். (௭௯)

இலகுயர் மாட மேலா லிந்நகர் மைந்த ராற்றுங்
குலவுறு கலவிப் பேதங் கொடிமரங் கிழித்த வாறே
நலமிகு வேந்தன் பின்னாய் நாரண னிருந்தோர்ந் தன்றே
கலவியிற் சிறந்தோ னானன் கண்ணனா யிருந்த நாளில். (௮0)

கொடிமர நுனிய சைந்து குலவுபொற் றலத்து ரிஞ்சக்
கடிமிக நனிவி ழுந்து களினிலாங் கலிமூழ் கிச்சீ
ரொடிவில்வீ டணன்பொற் றால முதிட்டிடரற் களித்தாற் போலிப்
படிநக ரார்க்கீந் தான்கொல் பசும்பொற்றெங் கென்ன மேவும். (௮௧)

விடுசுடர் மாடத் துள்ளால் விரையுறக் காக துண்டப்
படுபுகை நிரம்பி வாரி திறந்திடப் பரவி வேகங்
கொடுவெளிப் படருந் தூமங் கூடலுக் கிரகு மார
னிடுகரு வல்லி நீக்க வெழுந்துபோங் கொண்மூ நேரும். (௮௨)

அனங்கனூர் கதுப்பிற் கூட்டு மகிற்புகை யடைந்த வானு
மணங்கொள்வெம் முலைமே லப்பும் பொற்பொடி வனைந்த மண்ணுங்
குணங்கெழு தங்கட் குள்ள குணநனி விளங்கத் தோன்றி
யிணங்குறு செயற்கை யாலே யியற்கைமா றாமை தேற்றும். (௮௩)

உரவுகொள் பளிங்கி னங்க வுறுத்திய தெனினும் வீதி
விரவுகுங் குமமொண் சாந்த மிருகருப் பூர நானம்
பரவுமென் றகர மாதி படருவார் நெருக்கிற் சிந்தி
யிரவுநண் பகலுஞ் சேறா யெங்கணும் வழுக்குண் டாமால். (௮௪)

மறைத்துநின் றவனே பின்னும் வயங்கருள் புரியு மாபோ
னிறைத்தசந் தாதி யாலே னோள்ளலை யளறு செய்த
பொறைத்தட முலையி னாரே புலந்துபன் மணிக்க லங்க
ளிறைத்துப சரிப்பர் யாரு மிடரொரீஇ நடக்கு மாறே. (௮௫)

உருவலி யமர ரூரு மூர்திகா லூரினா யாத்த
பொருவில்பன் மணியி ழைத்த பொற்புரித் தோர ணங்க
ளிருகடை மட்டும் வானத் தியைந்தன பொருந்த மற்றை
மருவுபற் றனைத்து நீத்து வானவி னான்றா லொக்கும். (௮௬)

உறையுள்வான் கீண்டு மேலு முயர்ந்தன வும்ப ரூர்தி
முறையிவர்ந் துலாவ வேறு மொழியிட மிலையென் றன்றே
நிறைநெடுந் தெருவிற் செம்பொ னெடுமக ரிகைக ளெல்லா
மறைதரு நடுவு தாழ யாத்தன ரறிவி னுய்ந்தே. (௮௭)

கரும்புசெவ் விளநீர் கூந்தல் கதலிபூ கம்பொற் கஞ்சம்
விரும்புபல் லுறுப்பு வாய்ந்து மிளிர்மணி யாரங் காம்பு
சுரும்புறு தொடைய ருங்கிச் சுடர்கிலைத் தேர்மின் னருக்
கரும்புமங் கலநாண் பாங்கர் யாத்தபொற் றேர ணங்கள். (அஅ)

நடையறி புலவீர் தேர்மி னவிலுது நாளு நாளு
மடைபவர் விரும்பிக் கொள்வா னங்கக ரிவைகண் மற்றெப்
புடையுள வெனுஞ்சி றப்புப் பொருள்பல நல்கா நிற்கு
மிடைநக ரஞ்சி றப்புப் பொருடர லியற்கை யன்றே. (அகூ)

வலிதரு மநந்த னுப்போல் வாய்த்தொகை பெற்ற போதும்
பொலிதரு மாரூர் நாப்ப ணகர்வளம் புகலப் போமோ
வொலிதரு மகழி யோடு முயர்மதி லுடுத்து மேவு
நலிதரு பகையி லாவுண் ணகர்வளஞ் சிறிது சொல்வாம். (கூ0)

## அகநகர்வளம்.

### அகழி. வேறு.

எண்ணிய வனைத்து மெண்ணியாங் கியற்று மெண்ணிலா வலியுடை யெங்கள்
புண்ணிய னண்டப் புறமென வகழும் பொருத்திய புணரியோ வுணரிற்
றண்ணிய மலர்மேல் விதிக்கிம்மா திரிகை சலதிக ளியற்றெனக் காட்டப்
பண்ணிய கடலோ வறிகில மாழ்ந்து பரந்தநீர்ப் பேரகழ்க் கிடங்கு. (கூக)

வளமலி தெய்வப் பிலத்தினை முன்னோர் வான்றவழ் விலங்கல்கொண் டடைத்த, கிளரொளிக் குலிசப் படையினு னுழ்ந்த கிடங்கிது தன்னையு மடைப்பா, னுளமுறக் கொண்டான் முடிதரா மையுமற் றுன்னினு னாரு ருழந்தா, னளவரு நீரா லிடங்கரால் யாரு மாங்கிறங் காரெனக் களித்தான்.

அருகலி லனைய பாம்புரி நன்னீ ராயிர மலயமா முனிவர்
பருகினுஞ் சிறிது குறைந்ததென் பவர்யார் பரவையுண் மண்டளி மேய
வொருவர்தூ வாயர் தாமுமஞ் சுவரே வுறைத்தவக் கிடங்கறல் வீக்கங்
கருமுகில் பருகிச் சுவற்றிடு மென்றல் கழிமட னலதுவே றின்றே. (கூங)

கொடியவன் மீனம் வருத்துமு றென்னிற் குவலயத் தியாவரு மூழ்கி
நெடியபா தலம்புக் கராமணி பலவு நிரம்புற வாருபு மீள்வார்
கடியவக் கிடங்கிற் கொக்கனை யுயிர்த்த கதிர்மணி தாழ்தலா னன்றே
தொடியகைந் நாக மடந்தையர் கோத்துத் துணைமுலை மேலலங் கரிப்பார். ()

கரமலர்ப் புனலுட் டோன்றிய மீனைக் கங்கைகின் றெடுத்தொ ருபுணரி
விரவுற விட்ட மனுவெனும் பெரியோன் வீரையு மிடங்கொடா தென்னிற்
சுரர்புக ழாரூ ரகழியின் விடலே துணிபெனக் கருதினு னென்பர்
பரவுறு முன்னோ ரென்னினக் கிடங்கின் பரப்பையா ரளவிடற் பாலார். ()

### மதில்.

பாதல வடியி னடிநிலை பொருந்திப் பார்முழு வதுங்கிழித் தூன்றி
மீதல முடியின் முடியுற வெழுந்த வியன்மதி லோக்கம்யாம் புகழப்
பூதல நாப்பட் புற்றகத் தெழுந்த பொங்கொளி யோக்கமோ வனைய
மாதல முதித்த வான்றவ முடையார் வண்புக ழோக்கமோ வறியேம். (கசரு)

ஆயபே ரிஞ்சி யமைந்தபே ரண்டத் தளவையே கீழொடு மேலும்
போயதப் பாலும் போயதேற் செம்பொற் புற்றிடங் கொண்டமர் தெய்வ
நாயகற் குவமை கூறலா மந்த நாயக னிணையிலி யெனும்பேர்
மேயவ னென்றே கரைகட வாத வீரைபோற் கடந்தில தண்டம். (கசஎ)

நேமிமால் வரையு மற்றுள வரையு நிரனிறை நொச்சியும் பதணந்
தோமிலுஞ் சிலுமாத் திரிந்தன வெனலே துணிவுமற் றவ்வரை மேய
காமிகு மடங்க லறுகுவன் றாக்கு நான்றவாய்க் களிறுவெம் பாந்த
ளாமிவை யனைத்தும் பொறியெனத் திரிந்த வமைகொடி மரமெனத் திரிந்த.

குருமணி யிமைக்கு மதிற்றலை யளவில் கோசமும் பிலமொரீஇ யனந்த
னுருமணி யமைபல் படம்விரித் தெழுந்த தொக்குமா லுலகமூன் றளந்த
கருமணி வண்ணன் சென்னிமே லிருசெங் கைகுவித் தடையுமா றுயர்ந்து
பருமணிப் புதவுற் றொளிர்வன பந்தும் பாவையுந் தூங்குறு வாய்தல். (கசகூ)

புறக்கட னேமி வரையெனுங் குழவி போந்திட வீன்றதா யென்னச்
சிறக்குநீ ருடுவுங் கடகமுஞ் சொற்றுஞ் செறிந்தபே ராசையர் நாளு
மறக்கரும் வெளிமேல் வயங்கொரு சுவர்க்க மறந்திடை வெளிமிசை யிரண்டு
பிறக்கமார் சுவர்க்கந் தழுவுமா றுசை பெருக்குவார் சேரிசொற் றிடுவாம். ()

### பரத்தையர்வீதி.

புல்லிய முறுவ லொடுமருட் பார்வை புரிந்துவெம் முலைமுகத் தொருபால்
வில்லியல் கலைசற் றொதுக்குபு மறைத்து மிகுபொறி யாடவர்ப் பற்றி
நல்லிய லமுதுங் கைப்புற முகம னவின்றுபூந் தளிமமீ தேற்றி [பார். ()
யல்லியங் குழலா ரணைத்துமுத் தாடி யவர்பொருட் கொள்ளைகொண் டுவப்

கரிகரத் தொழில்பற் குறியுகிர்க் குறிமெய்க் களியெழ வணைத்தலின் னமுது
புரிதரத் துய்த்தல் கரங்கொடு தட்டல் புகல்கர ணங்கண்முற் பலவும்
விரிதர வோவத் தமைத்தன ரனைய விளங்கெழி லோவநோக் குநரின்
புரியவிம் மனையை வாழுநா ளவவு மோவமென் றுழலுவர் மாதோ. (சoஉ)

பொழிந்ததே மலர்வாய்க் கணிகைய ரொழுக்கம் பொதுநிகழ் பென்னி
னுஞ் சிறப்பிற், கழிந்ததாப் புகழப் படுவதே யுணர்ந்தோர் கரைதரு பொது
நிகழ் புற்று, மிழிந்தவோ ரிணைபால் பெயர்வினை கால மெச்சமுற் றிடையில்
சந்தி, மொழிந்தன வன்றி நிறைந்தலு ருணிலைய முதன்மறை நூலையென் றுரை
ர்யார். (சoங)

அடைந்தவர் பொருட்கோ ளன்றிமற் றுடலு மாவியுந் தமவெனக் கொண்டு, மிடைந்தபல் பணியும் விருப்பொடு புரிய விழிக்கடை செலுத்திவா னவர்முன், கடைந்ததென் னமுதுங் கைத்திட வுரையாக் காமரு வின்பகல் குதலாற், குடைந்துவண் டிமிர்பூங் குழற்பொது மாதர் குரவரை யொத்தனர் மாதோ. (௧0௪)

படர்புக ழாரூர்ப் பரத்தைய ராடல் பாடலும் பார்வையு நுடுப்பு, மடர்வலி மைந்தர் தமைநனி மயக்க லன்றியு மன்னவ ரளித்த, சுடர்மணிக் கலம்பொற் றூசுமுற் பலவுந் தொடிக்கையம் மாதர்மெய் யடுத்தாங், கிடர்பட மேன்மே லவரையே மயக்கு மெனிலவ ரெங்ஙன முய்வார். (௧0௫)

சிறையக மொருவார் முதற்பொருள் வேண்டார் சினைப்பொரு ளேகொடு விற்பார், குறைமொழி கிளவார் கடனெனல் குறியார் கூட்டெனல் கனவினு மறியா, ரறைபொரு ளளவைக் கதிகநூ லஞ்சா ராதரு பத்தையே யளப்பா, ருறையிவர் புரிவா ணிகமிணை யிலதென் றுரைப்பில்வா ணிகருமுள் வியப்பார்.

உற்றபொற் கலம்பெ யமுதமே யெனினு மொருவர்வாய் வைத்திடி லொற்கந், துற்றவர் களும்வாய் வைத்திடார் பலருஞ் சுவைத்திடு பொதுமட மாதர், பொற்றவா யூற லிழிந்ததென் றெள்ளிப் போயவர் செல்வருள் யாவர், மற்றதன் புனித மென்சொல்கே ணழல்வாய் வைத்துவா னோர்நுக ரவியே. ()

சோதற வணப்பா லுறுப்பினு லன்பாற் குறைவற நிறைந்தபே ருரிமை, மாதரு மிருக்க வவர்முகம் விரத்தி வந்தவர் போல நோக்காரா, யாதுகா ரணமோ விரவொடு பகலு மாடவ ருளநனி மயங்க, நீதுதீ ரனைய பரத்தையர் முன்பு செய்தவ மன்றியென் னுளதே. (௧0௭)

விரிபொழி லாரூர்ப் பரத்தையர் நாளும் வெறுப்பன செய்யினும் விருப்பென், றரியன வாக வுவப்பர்மற் றவர்பா லளித்தன யாவையு மறப்பர், வரிகெழு முறுப்பு முதலிய பிறவு மறந்திடார் கனவினு மென்றுன், முரிவிலா டவரம் மாதரைச் சீவன் முத்தரென் றெண்ணினர் போலும். (௧0௯)

உரியகா ரிகையைக் கடையிலப் பெய்ருக் குறுபொரு ளாமென வெறுத்துப், பிரியமுற் றவரை வெறுக்கைய ரென்னப் பேசொரு மொழியமர் வல்லொற், றிரிதர மெலித்துத் தொடர்மொழி செய்வா ரிருந்தெரு வளமையென் னுரைத்தா, மரியகல் லொழுக்கம் பூண்டவே ளாள ரம்மறு கியல்புசற் றுரைப்பாம். (௧௧0)

### வேளாளர்வீதி. வேறு.

வான்றரு மருந்துங் கைப்ப மடைத்தொழிற் புலவர் கூடி
யான்றநல் விருந்து நோக்கி யடுமடைப் பள்ளி வாய்தல்
கான்றகுய்ப் புகையைஞ் ஞூற்றுக் காவதங் கமழு மென்னிற்
சான்றவ ராய வேளாண் டலைவர்தந் திருவென் சொல்கேன். (௧௧௧)

ஓடிவில்சீ ரிளைசை மாற ருவந்துபன் முசமன் கூறி
யடியவர்க் கமுது நல்கி யரும்புகழ் படைத்த வாறு
வடிவம ராரூர் வேளாண் மாக்களை நோக்கி யென்றூற்
படியின்மற் றவர்போல் யார்க்கும் பரிந்தமு தளிப்பார் யாரே. (கக௨)

ஈகையி னூரூர் வேளாண் டலைவர்க ளனைய ரென்னி
லோகையின் யாரும் யாவு முரைக்குமு னுணர்ந்த ளிப்பா
ராகையி னிவரை வாய்வின் டறைந்தபி னுணர்ந்த ளிக்குஞ்
சாகையி னிறைந்த தெய்வத் தருக்கொலோ நிகரா நிற்கும். (கக௩)

உறையருள் புனிதந் தண்மை யொப்புர வொழுக்கம் வாய்மை
யறைதரு சிவசம் பந்த மரும்புக ழியல்பின் வாய்ந்து
மறைநவில் கமலை வேளாண் மாந்தர்வான் றெய்வக் கங்கை
நிறைபெருங் குலத்து தித்த நீர்மையை விளக்கி வாழ்வார். (ககச)

தனைத்தவிர் புலமை யாளர் தராதரந் தெரிதல் செம்பொன்
மனைத்தலை யமர்ந்தன் னூர்சொல் வண்டமிழ் நனிபா ராட்ட
னினைத்தவை முகம னோடு நிரம்புறக் கொடுத்த லாதி
யனைத்தினுஞ் சமான மில்லா ரதின்முதல் குறைந்த துள்ளார். (ககரு)

உடுத்தபுல் லூரியார் குண்டை யூர்க்கிழ வருக்கு முன்னாட்
கொடுத்தநெல் லவர்க ளத்தோர் குவியனெல் லேக வர்ந்து
விடுத்ததெவ் வாறென் றூலோர் பாணர்க்கா மிகுவெங் காவ
லடுத்தகை தவன்பண் டாரங் கவர்ந்தவர்க் கரிய தாமோ. (ககசு)

மறையவர் மன்னர் நாய்கர் வாழ்குந ருலகத் தென்ன
வறைதரு செஞ்சொ லன்னூ ரனமைத்தசெஞ் சொல்லா லாமே
னிறையுமற் றவர்தம் வீதி நெடுவெள மறையப் போமோ
வுறையிளங் கோக்கள் வீதி வளமையு முரைப்பாஞ் சில்ல. (ககஎ)

**வைசியர்வீதி.**

கனநிறை தெங்கு வாழை கந்தியொண் குலைசெங் கன்ன
லினநிறை யலங்க லாதி யாத்துவா னணவ மேய
சனநிறை பந்த ரோடு தழைதரு நியம நாயேன்
மனநிறை தியாக ராசர் வசந்தமண் டபமே நேரும். (ககஅ)

பல்பொருள் விலைக்கு வாங்கிப் படர்குநர் குழாங்கள் கண்டோர்
சில்பொருள் களும்வை யாது செறியவிற் றனரோ வென்பார்
செல்பொருண் மிகுதி யுள்ளுஞ் சிலநிய மத்துக் கண்டோ
ரெல்பொரு ளைய்க ரின்னு மொன்றும்விற் றிலரோ வென்பார். (ககக)

ஓடிவினீள் சரக்கு மூடை யொனறன்பி னொன்று மோத
நெடிதிரு பாலுங் கையிற் பற்றினர் நிரைந்து செல்வா

ரடியவர்க் கெளியா ராடா தாடவல் லவரெம் மையர்
வடிவமா ராழிப் பொற்றேர் வடம்பிடித் திழுப்பார் மான. (௧௨௦)

பாவிய கடன்மு கந்து பயோதரம் பொழிநீர் முற்று
மாவியல் புடவி யன்றி மற்றுமொன் றேற்ப துண்டோ
மேவிய திசைமு கங்கள் விடுபல பொருளு மேற்ப
தாவிய வாரூர் நாய்க ராவண மன்றி யின்றே. (௧௨௧)

பெருநதி விடுப்ப வேற்றும் பெய்ம்முகி லேற்ப வீந்து
மருமையின் விளங்கு மாழி யல்லதெ னுவமை சொல்கே
ளொருதிசை விடுப்ப வேற்று மொருதிசை யேற்ப வீந்தும்
பொருவற விளங்கு மாரூர்ப் புகரிலா வணத்திற் கம்மா. (௧௨௨)

இருட்டரித் தொளிரா நிற்கு மினமணித் தொகையுஞ் செங்க
திருட்டரித் திடிவிற் பூணுஞ் சிந்தின கிடத்த லாலே
யருட்டரிப் பவர்கள் சூழு மாரூர்நன் னியமம் புக்க
குருட்டரிப் பாற்கு நாமங் குபேரனென் றியம்ப லாமால். (௧௨௩)

காமரு கண்ணன் போல்வார் காதலிற் புனரு மெண்ணில்
பூமரு வோதி யார்க்கும் பொற்கல நவம ணிப்பூண்
மாமரு வியகாம் பாதி வாங்குவா னடுப்பின் முற்றுந்
தூமரு வொருவர் நல்கத் துணிவரோ ரிருத்தை தன்னில். (௧௨௪)

எப்பொருள் வினவி னூனு மினப்பொரு ளுளையா தீவா
ரொப்பொரு வருமில் லாதா ரொண்பொருட் பெரியர் மேவு
மப்பொரு விகந்த வீதி யமைதரு வளமென் சொற்றுஞ்
செப்பொரு திகிரி வேந்தர் தெருவளஞ் சிறிது சொல்வாம். (௧௨௫)

அரசர்வீதி.

விரிகதி ரம்பொன் மாடம் வெள்ளொளி வயிர மாடம்
புரிதரு கமல ராகம் பொலிதரப் பதித்த மாடங்
கரியவொண் ணீல மாடங் காமர்வை டூய மாட
மரிறப வொன்றன் மேலொன் றமருமைம் பூத மான. (௧௨௬)

மரகத மாட மோர்பால் வயங்குபொன் மாட மோர்பால்
விரவுற நாப்பண் மேவு மிளிர்சுடர்ப் பதும ராக
வரமிகு மாட மெங்கள் வழிமுத லேக பாதப்
புரவல னிடைமேற் காட்சி பொலிதரத் தந்தா லேய்க்கும். (௧௨௭)

ஆடன்மொய்க் களிற்றி னோதை யாழியர் தேரி னோதை
பாடலத் தாரி னோதை பல்லிய மியம்பு மோதை
கூடலர்க் கசனி யன்னார் குரூஉக்கழ லோதை மாத
ரேடலர்க் குழல்வண் டோதை யெழுகட லடைக்கு மோதை. (௧௨௮)

பண்ணினு மின்சொன் மாதர் பாய்புலி யனைய மைந்த
ரெண்ணினும் பலரா லன்னா ரிணர்மலர்த் தொடையல் சிந்தும்
விண்ணினு மரிய தேன்பல் வீதியும் பரவ லாலம்
மண்ணினும்,வண்டு மொய்க்கு மற்றதும் பூவே யன்றே. (கஉகூ)

சேவென்றி குறும்பூழ் வென்றி சிவல்வென்றி சிறுகட் கோட்டு
மாவென்றி சேவல் வென்றி வாம்பரி வென்றி பொற்றேர்த்
தாவென்றி பூவை வென்றி தகர்வென்றி பலவுங் கொள்வார்
தூவென்றி வேற்கை யன்ன றுணைபவர் குழாங்க ளெங்கும். (கரு௦)

மருமலர்க் கழுநீர் மாலை மணஞ்செய்திண் டோளா னெங்கள்
குருபரன் முன்ன மன்னர் கோலங்கொண் டமர்ந்த வுண்மை
யிருள்கடிந் துலகங் காக்கு மிரவிதன் குலத்து வேந்தர்
பொருண்மலி மாட வீதிப் பொலிவள நோக்கற் கன்றே. (கருக)

அறநெறி திறம்ப லில்லா வநபாயன் வழியிற் றோன்றித்
திறநெறி யுண்மை யோர்ந்து சிவநெறி சார்ந்து மற்றைப்
புறநெறி தடிந்தார் வீதிப் பொலிவள முரைக்கப் போமோ
மறநெறி யொழிந்து வாழு மறையவர் வீதி சொல்வாம். (கருஉ)

மறையவர்வீதி.

நிழன்மணி மோலி வேந்த ராதியர் நெடுங்கை கூப்பக்
கழலுறு முதன்மை வாய்ந்து கருதுபன் மறையு மோர்ந்து
தழலுரு வுடைய கோவைத் தழலிடைக் கண்டு போற்றி
யுழல்பவ மேழுஞ் சாரா தொதுக்கியந் தணர்கள் வாழ்வார். (கருங)

மதிநுத லரியா ரட்ட மாசிலின் னமுது நாளு
மதிதியர்க் கன்பி னூட்ட வப்பெயர் விருதி நீர்ந்தாந்
துதிதரு பெயரா லீன்ற சுதர்க்கினி தூட்டு வார்கள்
விதிவழி மறையோ ராற்றும் வேள்வியின் னமுது மாதோ. (கருச)

ஆக்கமு மழிவு நாவா லமைத்திட வல்லார் தெய்வத்
தேக்கமழ் கொன்றை வேணிச் சிவபிரா னடியே யுள்வார்
நீக்கமில் லாது நாளு நிகழ்பசு வுடம்ப ழித்து
மோக்கமுஞ் சுசியு மோவாத் தன்மையு முற்று வாழ்வார். (கருரு)

தண்ணிய முளரி தோளிற் றுங்கியுந் தாவா வெம்மை
யண்ணிய முளரி யங்கை யமைத்துநீண் முளரி தந்த
கண்ணிய முளரி கொண்டு காமரு தழல்வ ளர்த்தும்
புண்ணிய முளரி வாழ்க்கைப் புலவனும் புகழ வாழ்வார். (கருசு)

மாத்தட நதியிற் காலை வயங்குற மூழ்கி யீரங்
கோத்தவொண் கலைபின் போக்கு கோவணப் பொலிவிற் குழ்ந்தே

யார்த்தவிர் சிலம்பு பொங்க வந்தணர் மடவா ரம்பொ
னீர்த்தசும் பிடையிற் ருங்கி நிரைநிரை யடைசீர் மல்கும். (கஙஎ)

ஆதிசைவர்வீதி.

பொருவறு கருணை வள்ளல் பொதுச்சிறப் பெனவ குத்த
வருமறை யாக மங்க ளையமுற் ருெழிய வோர்ந்து
திருமலி பரார்த்தத் தோடான் மார்த்தமுஞ் சிறப்பப் பூசித்
தொருவில்சீர் புனைந்த வாதி சைவர்த முறையுள் பல்ல. (கஙஅ)

அந்தக ராதி சைவ ராகம பாடந்* தங்கள்
பன்னருஞ் சிருருக் கோதப் பஞ்சரக் கிள்ளை பாங்கர்
நன்னயத் துடனி ருந்து நாவுறப் பயின்று தங்கண்
முன்னர்வந் தவருக கோது முனிவரு மிறும்பூ தெய்த. (கஙக)

ஓதிய கலையி ளுன்மற் ருெழுக்கினுற் குறைபா டில்லா
வேதியர் வீதி சொற்ரு மேன்மைசா றெய்வ நீற்றுச்
சோதியர் திருக்கூட் டச்சீர்த் தூயர்தந் திரும டங்க
ளாதிய பிறவுங் கூறி யாலயச் சிறப்புஞ் சொல்வாம். (கசo)

பல்வகைக் கல்விச்சாலைகள் முதலியன, வேறு.

எழும தங்கள்பத் தழகுமுப் பாணிரண் டெத்தி
தழுவி யாங்கெடுத் தொருபது குற்றமுந் தள்ளி
முழுவி ருத்தியின் விதிவிலக் கமைதிமுற் றுணரப்
பழுதின் மாணவர்க் கிலக்கண முணர்த்துநர் பலரால். (கசக)

விடாதருரும்பதத் துறுபொரு ளுணர்தர விளக்கிக்
கடாய்வி டுத்தமை பொருளணி வனப்பெலாங் காட்டித்
தடாத நுண்மையி னறமுத ளுன்கினுந் தாழ்வு
படாத காப்பியப் பாடஞ்சொல் வார்களும் பலரால். (கசஉ)

பேய ராயுலோ காயதன் முதலியோர் பிதற்று
மாய வார்த்தைக டெரித்தவை முழுவது மறுத்தே
யாய முப்பொரு ளுண்மைதேர்ந் தமைதர வன்பிற்
பாய சாத்திர பாடமோ துநர்களும் பலரால். (கசங)

சிவபி ரான்றிரு வடியருச் சனைபுரி திறமு
முவமை தீரத ளுனுறு பயனுமற் றுள்ள
கவலை தீர்திய மம்புரி விதிகளுங் கருத்திற்
றவவி ராவுமா ருகமஞ் சாற்றுநர் பலரால். (கசச)

உற்ற சீடர்பக் குவமுணர்ந் தொண்கணு லூற்ருற்
பொற்ற வாக்கினுற் பாவனை யாற்புக லூலான்

மற்ற யோகத்தா லவுத்திரி யான்மல மாய்த்தா
சற்ற வின்பத்து ளழுத்துவார் களும்பல ராங்கண். (கசரு)

சடையர் நீற்றொளி மேனியர் கண்மணி திளைந்த
தொடைய ரைந்தெழுத் தழுத்திய மனத்தினர் தூய
நடையர் வாய்மையர் நற்றவர் நகுநறுங் காவி
யுடையர் வாழ்திரு மடங்களும் பற்பல வுளவால். (கசசு)

கடைய னேனுளும் புக்கமர் நக்கசெங் கழுநீர்த்
தொடையர் சந்நிதி யடைந்துகா லந்தொறுந் தொழுதும்
புடைம டந்தைமற் றவர்வினை யாடன்மெய்ப் புராண
மடைய வோர்ந்துநாள் கழிப்பவர் பற்பல ராங்கண். (கசஎ)

ஒப்பி லாவிறை யடியருச் சிப்பவ ரொருபா
லொப்பி லவ்வடி மனம்புதைத் துறைகுந ரொருபா
லொப்பி லாவவன் புராணநூ லுணர்பவ ரொருபா
லொப்பி லாலயப் பணிபுரிந் துவப்பவ ரொருபால். (கசஅ)

யாது சாரினு முன்புடற் குளதொடர் பென்னுஞ்
சாது நீர்மையர் தழைபர சிவத்திடை விழிப்பு
மோது மாபவஞ் சத்திடை யுறக்கமு முற்றார்
தீது நன்றுறுத் திருவினர் பற்பலர் செறிவார். (கசகூ)

கொம்மை வெம்முலைக் கோற்றொடி யார்மயல் கொண்டு
தம்மை நள்ளிருள் வலியவந் தணைப்பினுந் தாயென்
றெம்மை யாளுமற் றவர்தினைப் பாரெனி லென்னே
மும்மை ஞாலத்து மவர்க்கிணை யுண்டுகொன் மொழிய. (கருo)

சத்திரங்கள்.

தளவ ரும்புநே ரடிசிலொண் பருப்புநெய் தயிர்பால்
வளவ ருங்கறி வருக்கமின் சிற்றுணா வகைகள்
பிளவி னூறிய காய்பெருங் கனிமுதற் பிறவு
மளவில் யாவரு மருந்துசா லையும்பல வாங்கண். (கருக)

வந்து வந்தினி தருந்துவார் பலரவர் மகிழ
முந்து நின்றுப சரிப்பவர் பலர்சுவை முதிர்வி
னந்து பல்லுணப் படைப்பவர் பலர்புது நறும்பூச்
சந்து வேண்டுபு வெறுப்பநல் குநர்பலர் தழைய. (கருஉ)

குவைய தண்டுலங் களைகுநர் தொகுதியுங் குன்றாச்
சுவைய பல்கறி திருத்துநர் தொகுதியுந் தோய்ந்த
செவைய வெண்டயி ரளக்குநர் தொகுதியுஞ் செறிபா
கவைய வாவிலை நல்குநர் தொகுதியு மளவில். (கருங)

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர், சென்னை-20.



### தண்ணீர்ப்பந்தர்கள்.

நெறிய வாய்நடப் போர்முத லோர்பலர் நிரம்பச்
சிறிய தாசினி யெனப்பரந் துயர்செழும் பந்தர்
நறிய பாடல மாதிய கலந்தனு நன்னீ
ரறிய மேவுபல் லிடந்தொறும் வயங்குவ வம்மா. (௧௫௪)

நிதிவ ளத்தையே புகலுகோ நீதிமுற் றமைநுண்
மதிவ ளத்தையே புகலுகோ நுகரும்வண் போகப்
பொதிவ ளத்தையே புகலுகோ பொலிந்துபல் லறமு
முதிவ ளத்தையே புகலுகோ சிற்றறி வுடையேன். (௧௫௫)

### திருக்கோயில். வேறு.

மன்னுகட லுடுத்தபுவி மடந்தையிரு தயகமல
மென்னுநக ரதனுப்ப ணேழுலகு மெடுத்தேத்தத்
துன்னுதுணங் கறலொழியச் சுடர்விரிசெம் முழுமணியும்
பொன்னுநனி கொடுவிளங்கும் புண்ணியனூர் பூங்கோயில். (௧௫௬)

ஏற்றமிகு மாங்கடைந்தெம் மிறைவர்கழ றொழுபவர்வான்
போற்றவுயர் சிவலோகம் புக்குறைதற் கேறும்வகை
தேற்றமடைந் தமைத்தநெடுஞ் சேணிகளோ பொன்னாலுஞ்
சாற்றருநன் மணியாலுஞ் சமைத்துயர்பல் கோபுரங்கள். (௧௫௭)

திருகுசினத் தடுமறலி தென்றிசைவெந் நகர்நுழைவார்
பெருகுகருக் குழிநுழைவார் நுழையாத பெருவாய்தல்
கருகுமிரு டடியுமணிக் கதிர்செயளிந் தழுநிலையு
மருகுதலில் சுடர்ப்புதவு மமைந்துவிளங் குவநாளும். (௧௫௮)

இந்துதவ ழித்தளிமே வெங்கடியா கப்பொருளை
வந்துவழி படலன்றி வானவர்காள் கவரமன
முந்துவிரே லுடன்முறிய முட்டுவமென் றுறைவனபோ
னந்துமுயர் மணிமதின்மே னன்குறையும் விடைகள்பல.

வரமிகுதே வாசிரயன் மண்டபமென் றுளதொன்று
புரவுமணி செறியுமதன் பொற்பினையா னென்னுரைக்கேன்
விரவியதை நீங்கமன மேவாமை யானன்றோ
பரவடியர் பெருவீடும் வேண்டாது பணிபுரிவார். (௧௬௦)

மன்னிவள ரருள்பெறுவான் மாலயனிந் திரனமரர்
துன்னிவணங் குறுபோழ்து தூவுநறு மலர்பலவு
மின்னியொளிர் முன்றிலெலா மிகப்பொலியும் வளமுணர்ந்தே
பன்னினர்போ லும்புலமைப் பண்பினர்பூங் கோயிலென. (௧௬௧)

முதிரொளிசெய் வன்மீக மூலத்தெழுந்த பெருமானைக்
கதிரவன்முன் வழிபட்ட காரணத்தவே தியாகரறிவார்
வெதிரெழுமற் றவன்மேய விளங்குவிமா னம்போல
வெதிரறுசே யொளிதானு மியைந்துபரப் புதற்கன்றே. (௧௬௨)

அவித்தபொறி யாருளஞ்சே ரழகரைக் கசைத்தருள்கட்
செவித்தலைவ ரினிதுறையுந் தெய்வவா லயங்கள்பல
சவித்தகையா வரணபிர தக்கணஞ்செய் மெய்யன்பர்
குவித்தகரம் விரித்தல்செயக் கூடாது மிடைவனவால். (௧௬௩)

அங்கணுயர் சுரதடமு மமைத்தபடி மரகதவிற்
பொங்கவதி னனிமூழ்கிப் பொலிமேலைக் கோபுரமுந்
திங்களணி விடங்கர்திருச் சேவைசெய மால்படுக்கைச்
சங்கநெடுங் கடலொடுமெத் தலைவந்து நிற்றல்பொரூஉம். (௧௬௪)

தங்களிறை திருமகட்குத் தடவரைக ணனிகொடுத்த
துங்கமிகு திறையென்னச் சுடரொளிய மணிபலவு
மெங்கள்குடிக் கொருமுதலா யிலங்குகம லாம்பிகைவா
ழுங்கனக மணிக்கோயி லகம்புறமும் விளங்குவன. (௧௬௫)

புறமதின்மே கலையடுத்த புரிசைகலை யாப்புனைந்த
நிறமலிபூங் கோயிலெனு நேரிழைக்குண் மதில்வதனம்
விறன்மிகுபுற் றிடங்கொண்டார் விமானமதற் கிடக்கண்ணே
திறல்விடங்கப் பெருமாள்சோ திவிமானம் வலக்கண்ணால். (௧௬௬)

மிகுமெழிலக் கண்மணியின் மேவியசெந் தாமணியை
நகுமலர்வாழ் வுடைப்பிரமர் நாரணரிந் திரரமரர்
தொகுமுனிவர் முதற்பலருந் தொழுவதற்கு வந்துவந்து
புகுவர்தினம் வந்துவந்து புகுவதற்கு மிடமின்றி. (௧௬௭)

அருமலர்செங் கரத்தேந்தி யரியயனிந் திரன்முதலோர்
பொருவிறிரு முன்புவளி புக்கியங்கா வணநெருங்க
திருவுளத்திற் குறித்தன்றே செவ்வந்தித் தோட்டினர்கான்
மருவுறமற் றெப்புறத்தும் வாய்தலமைத் துறைகின்றார். (௧௬௮)

பிணையடியர் குறைக்கிரங்கிப் பெருமானீ யெழுந்தருளிற்
றுணையடிகள் கன்றமுனந் தூதுசென்றுற் போலடையா
துணைகுதியென் வெரிநிவர்ந்தென் றருணோக்கி நிற்பதுபோ
லிணையில்விடங் கப்பெருமா ளெதிர்நிற்கு மால்விடையே. (௧௬௯)

அம்பலத்து ணின்றாடு மடிகண்முன்மத் தளமுழக்குஞ்
செம்பதுமை மணவாளன் சிரகரகம் பிதஞ்செய்ய

நம்புமவன் மணிமார்பத் திருந்தாடு நம்பன்முனம்
வம்புமலி தொடைச்சுத்த மத்தளமேன் மேன்முழங்கும். (௧௭0)

சுத்தவித்தை முதலாகத் தூயமறை பகர்சுத்த
தத்துவங்க ளோரைந்துந் தாமென்றே பகர்சுத்த
மத்தளமு ணோரைந்து மாமுகிலின் முழங்குவவென்
சித்தமக லாதுறையுந் தியாகேசர் திருமுன்னர். (௧௭௧)

உன்னுசிவஞ் சத்தியுயி ருயிர்ச்சத்தி சகமுறையே
மின்னுமிவை யொன்றுளொன்று வியாப்பியமாய் மேவுதல்போன்
மன்னுதுவா ரங்கள்செழு மணித்தீப நிரைநிலைக
ளென்னுவன வொன்றுளொன்று சொல்லும்வியாப் பியமாகி. (௧௭௨)

நம்புபல முனிவருஞ்செய் நான்மறையி னொலியொருபாற்
றும்புருநா ரதரெழுப்புந் துகளில்யா ழொலியொருபா
லம்புவியுய் தரநால்வ ரருளியபாட் டொலியொருபா
லும்பர்முத லோர்வணங்கி யுருகியேத் தொலியொருபால். (௧௭௩)

அரியயனிந் திரன்முதலா மமரருமம் புவியாடற்
குரியமுடி வேந்தர்முத லுள்ளவரு மொண்பொன்னும்
பரியசெழு நவமணியும் பண்பினடி யுறையாவைத்
திரியவினை வணங்கமலிந் தெங்குமொளிர் வனவவையே. (௧௭௪)

பாடன்மலி யத்தளியிற் பருமணிச்சிங் காதனத்திற்
கூடலுற விடப்பாகங் கொண்டவெழிற் கொண்டியொடும்
வீடரிய வரைபோழ்ந்த வெள்ளிலைவே லம்பியொடு
மாடரவக் கிண்கிணிக்கா லையனிருந் தரசுசெயும். (௧௭௫)

ஆகத்திருவிருத்தம் - ௪௦௩.

# நைமிசப்படலம்.

மருவு தண்மையர் தூயவ ராகி வாழு மாதவப் பெரியர்மே னியின்மேல், வெருவு வெம்மையுந் தூயதன் மையினும் விரவு தன்மையு முடைய செம் பரிதி, யொருவ ருங்கதிர் படுவது தகாதென் றுள்ளி யுட்புகுந் தியங்குறா வண்ணம், பொருவில் பைந்தழை துவன்றுறச் சுமந்து பொலிந்து நிற்பது நைமிசா ரணியம். (௧)

கடல்கி ழித்தெழுந் திருள்கிழித் துலவுங் கதிர்கி ழித்தெழு காம்பொரு தூணைத், துடல்கி ழித்தெழுந் திரணியற் கிழித்தாங் குலாம டங்கல்கீண் டெழுந்தபுண் ணிகரு, மடல்கி ழித்தெழு தேமலர்க் கொன்றை மரந டுப்பிறை வயங்கல்பொற் கண்ண, ணடல்கி ழித்தெழு வன்றிவெண் மருப்பொன் றந்தி வண்ணன்மார் பலங்குதல் கடுக்கும். (௨)

சுற்றும் பீற்றுற வதனடு முளைத்த சோதி யந்தரு விரவுற வயங்கல்
பொற்ற டம்புரி சைத்திரு வாரூர்ப் புற்ற கத்தெழு சோதியை மானு
மற்ற தற்கெதி ரொருகரும் புன்னை மருங்கு சோதியி லதையொடு நிலந்தாழ்ந்
துற்றி டுஞ்செயன் மாயனு மாவு முளைத்த சோதிமுன் வணங்குதல் கடுக்கும்.()

சிறந்த தீஞ்சுளை யகம்புறஞ் சிறவாச் செறிமுள் கொண்டபா கற்கனி நாளுஞ்
சிறந்த சத்துவ மகம்புறஞ் சிறவாத் திறத்த தாமத முடையதே நிகருஞ் [கள்
சிறந்த தீஞ்சுவை புறமகஞ் சுவைகொள் சிறப்பு றுதவித் துடையமாங் கனி
சிறந்த சத்துவம் புறமகஞ் சிறவாத் திறத்த தாமத முடையமா னிகரும். (௪)

தடிசி னத்தமென் சாதுநீர் மையர்க்குத் தன்ன மாயினும் பயன்படார் சினந்து, கொடிறு டைத்திடு கூன்கையர் கொள்ளை கொள்ள வுள்ளன வெலாங்கொடுப் பார்போற், படியின் மென்பற வைக்கணுத் தனையும் பயன்படாதுழும் மதக்கொடுங் களிறு, கடித லைத்திடக் குலைகுலைந் துள்ள கனியெல் லாமுகுத் திடும்விளப் பலவால். (௫)

அருக ணூர்க்குநன் னிழல்புரி தருவென் றறைதல் போக்கவோ வணியிழை மடவார், பெருக வந்துதைத் திடறவிர்த் திடவோ பெற்ற தம்பெயர்ப் பொருட்குமா றுக, வொருக யற்பதா கையன்கரங் கொண்டே யுலகி னுக் கணு றுறுத்தறீர்த் திடவோ, முருக சோகமற் றவருறுச் சைவ முனிவர் வாழிடங் குடிபுகுந் தலரும். (௬)

வீர மாதவிர் நீவிர்வா ழிடம்யா மேவி நீள்வரி விழிமட மாத
ரார வந்துவந் தணைப்பது தவிர்ந்தே மரிய நும்மையொத் தனமென நிற்கு
மீர மார்குர வங்களு மவர்நட் பிரித்த தன்மையா னும்மைமற் றியாமுஞ்
சார வொத்தன மாலென நிற்குந் தழைத்த வேழிலைம் பாலையும் பலவால்.(௭)

உலகின் மேலவர் தமக்கியா தேனு முதவி செய்பவர் யாவரே யெனினு
மலகி லாதவர் தங்குலம் விருத்தி யாத றிண்ணமே யைம்முகத் தொருவ
ரிலகு செங்கையிற் கொளநறுங் கனியொன் றீந்த மாதுளை கோதறு கனிகள்
பலக னிந்தன வதன்குல விருத்தி பழமொன் றுள்ளவித் தாய்தரின் விளங்கும்.

மன்னு கானயா றொலித்திடப் புலியு மானுஞ் சீயமு மாமதக் களிறுந்
துன்னு நண்பொடு மருவுற மேவுந் தூய நைமிசப் பெயர்புனை யடவி
பன்னு வானயா றொலித்திட மதியும் பாம்பு நண்பொடு வதிதர மேவு
முன்னு தம்பிரான் சடாடவி புரையு முருவ மாத்திரம் வேற்றுமை மாதோ.

கூறு முற்பக றமதுருக் கொண்ட கொண்ட லூர்திகற் பகநிழல் வெறுத்து
மாறு தீர்தவம் புரியிட மென்று மயிலு மின்குரற் குயிலுந்தம் பெயர்கொள்
வீறு சேரொரு மாதவ னானு மேவு தற்கிட மென்றுபைஞ் சுகமு
மாறு போன்மது வழியுமந் துணர்சே ரவ்வ னத்திடை வாழ்வன நாளும். ()

வேறு.

வளமலி போக நல்கு மகபதி பதமும் வண்ட
ருளர்நறுங் கமலத் தண்ண லுறைதரு பதமு மாயோன்
பளகறு பதமுங் கான்ற பதமெனக் கண்டோர் மேய
வளவறு நைமி சச்சீ ரறைதர முற்றுங் கொல்லோ. (௧௧)

அனையநை மிசத்து வாழ்வா ரடர்வலிக் குலிச வேலார்
கனையலர்க் கமல மேலார் நறுவிரைத் துளவ மாலா
ரினையர்தீ மாதி யந்த மெத்தனை யோகண் டுள்ளார்
தினையள வூறுந் தாங்கள் செய்தவத் துறக்கண் டில்லார். (௧௨)

பெருகலை யருட்கொப் பாக்கிப் பிங்கலை யிடைமாற் றிக்கால்
கருகலை யுருதெ ழூப்பிக் கருங்கலை நிகர்த்தி ருப்பா
ரொருகலை யிடக்கை வானத் தொளிர்கலை முடிவைத் தார்வாய்
வருகலை யனைத்து மோர்ந்தார் வற்கலை யுடுத்த மேலார். (௧௩)

இருள்வினை யிரண்டு மில்லா ரென்றுமெவ் வுயிர்க்கு நல்லார்
மருள்படு நெறியிற் செல்லார் மறைமுழு துணர்ந்த வல்லார்
தெருள்வழி யன்றி நில்லார் தீமொழி மறந்துஞ் சொல்லா
ரருண்முறை திறம்பக் கல்லா ரவரைமற் றெவரும் வெல்லார். (௧௪)

கண்ணிய வின்ப துன்பங் கலக்குமே லுடற்கு முன்பே
யண்ணிய தெனவி ருப்பு வெறுப்புறு தமைந்த மாண்பார்
புண்ணிய நீறு பூசிப் போற்றுகண் மணியி னோடு
தண்ணிய வருளும் பூண்பார் தமனிய மோட்டிற் காண்பார். (௧௫)

தகவுதித் தொடுங்கும் வெய்யோன் சகமெனும் புணர்மொழிக்க
ணிகர்நிலை வருமொ ழிக்கு நிகழ்பொருள் காட்ட வானத்
தகன்மதி வளர்ந்து தேய்ந்தற் றச்சக போகத தன்மை
நகலுறக் காட்டக் கண்டு நச்சுவார்க் கிரங்கு நீரார். (௧௬)

பற்றுத லொன்று மில்லார் பகையுற விரண்டு மில்லார்
முற்றுவெங் காம மாதிக் குற்றமோர் மூன்று மில்லார்
மற்றுமண் டசமுன் னாக வருகதி நான்கு மில்லா
ருற்றவா ணவமே முன்னா வுறுமல மைந்து மில்லார். (௧௭)

சஞ்சித கரும நாமஞ் சற்றுமில் லாது மாய
விஞ்சிய வருளி னேறும வினையுள தாகி னேக

வஞ்செழுத் தூச்ச ரிப்பி னடைந்தவா தனைக ணீங்க
வெஞ்சலின் முதலை யோர்மூன் றிடத்தினும் வழிபட் டுள்ளார். (௧௮)

அலங்குசெஞ் சடையா ராய மாதிமா சடையார் வெய்யில்
விலங்குபூங் குடையார் ஞானம் விளங்கும்யோ குடையார் செந்நா
வலங்கெழு படையார் நெஞ்ச வஞ்சகம் படையார் நன்னா
னலங்கெழு நடையார் குந்தி நடந்திடு நடையார் யாரும். (௧௯)

புகழ்மிகு தரும மேற்றும் பொருவினைக் கலக மாற்று
மிகழ்விறீ விரத்தை நாட்டு மிருண்மலச் செருக்கை வாட்டு
நிகழருட் பொலிவு வைக்கு நிறைசிவா னந்த முய்க்குந்
திகழ்பர சிவபு ராண சிரவண மென்றுட் கொண்டோர். (௨௦)

தண்ணிய குணத்தின் மிக்க சவுனக ராதி யாய
புண்ணிய முனிவர் பல்லோர் பொலிந்தினி திருந்த வேல்வைக்
கண்ணிய புராண மெல்லாங் கரிசற வுணர்த்த வல்லோன்
மண்ணிய மணிநேர் சூத மாமுனி வந்து புக்கான். (௨௧)

சூதமா முனிவற் கண்டு துண்ணென வெழுந்து தூய
வேதமா முனிவர் யாரும் விரைந்தெதிர் கொண்டு சென்று
பாதமா மலர்மேல் வீழ்ந்து பற்பல முகமன் கூறி
யோதமா கடலிற் பொங்கு முவகையோ டழைத்துப் புக்கார். (௨௨)

ஆதனத் தினிதி ருத்தி யருக்கிய மாதி நல்கி
மாதவ ரிரண்டு பாலும் வயங்குற நேரி ருந்து
காதலி னிணைந்த தாயைக் கண்டுளக் கவலை தீர்ந்த
கோதன மொத்தே மென்று கூறிட லுற்றார் மாதோ. (௨௩)

வனமிது பட்டம் யாங்கள் வாரிச வல்லி யெங்கண்
மனமுகை யலர்த்தும் வெய்யோன் மாதவச் சூத நீயே
யினமலி யாங்கள் பைங்கூ ழெம்மறி யாமை வேனில்
கனமுயர் சிறப்பி னீநின் காமர்சொன் மாரி யன்றோ. (௨௪)

அருண்முத லவய வங்க ளமைந்தமெய்த் தவத்தின் மிக்காய்
பொருண்மிகு நின்னை யெந்தப் புவனத்தெம் முனிவர் நேர்வார்
வெருள்கடி சுறவு லாவும் விரிதிரைக் கடனீர் வைப்பிற்
இருள்கடிந் துலவுஞ் செங்கே ழினனிகர் விளக்க மின்றே. (௨௫)

பொருவரு மனச்செம் பொன்னிற் புலவருக் குயிர ளித்த
கருமணி கண்டன் பூந்தாட் செம்மணி கலக்க வைத்தோ (௭)
யிருண்மல மென்னும் பொல்லா னின்னுயிர் கவட்ட நின்வாய்
வருமுயர் கூற்றை யன்றி மற்றுமோர் கூற்று முண்டோ. (௨௬)

புனைசடை மோலி யண்ணல் பொன்னடிக் கணைசேர்ந் துய்ய
வினையலை சுருட்டுஞ் சன்ம வேலையைக் கடந்து நாவாய்
வனைபுகழ் முனிவர் கோவே வயங்குநின் ஞுவா யென்னிற்
கனைகட லுலக மாயுங் காலத்துங் கவற்சி யின்றே. (௨௭)

வளியுளர் புவன வைப்பின் மன்பதை யெல்லா முத்தி
யெளிதுற வநந்த கோடி யிருந்தல முதன்மும் மூன்று
வளியுளர் கடுக்கை வேணி யண்ணலா ரமர்ந்தா ரன்றே
தெளிதர வவற்று ளைய சிறந்ததொன் றுரைக்க வேண்டும். (௨௮)

ஆய்ந்தினி தெமக்கு ரைக்கு மத்தல மோத்தின் சென்னி
யேய்ந்ததாய் நெடுந்தூ ரத்தே யிருந்துளத் தெண்ணி னுலும்
வாய்ந்திட நேர்கண் டாலும் வாயுரைத் தாலுந் தீமை
காய்ந்துபல் போக மெல்லாங் காதலிற் கொடுப்ப தாகி. (௨௯)

திகழ்சிவ ஞான வுண்மை செறிப்பதா யொன்றி ரண்டற்
றிகழ்வற விளங்கு முத்தி யின்பமும் புணர்ப்ப தாய்மெய்ப்
புகழ்மிகுந் திருக்க வேண்டும் புனிதவாய் மலர்தி புன்மை
யகழ்தரு மான்மி யத்தோ டையவென் றிரந்தா ரையர். (௩௦)

ஐயர்த மாற்றங் கேட்ட வையனு முவகை துள்ளச்
செய்யமற் றென்னைச் சொல்வான் சிறந்தமற் றெனைச்சொல் வானென்
றுய்யவந் தருள்பு ராண முள்ளன வெலாமுட் டுள்ள
மெய்யவிர் தரும னத்துச் சிறிதுபோ தெண்ணி விள்வான். (௩௧)

புண்ணிய முனிவிர் போதம் பூத்தொளிர் தருநும் முள்ளத்
தெண்ணிய தழகி தாகு மிடித்திடித் துரைத்த போதும்
பண்ணிய தவமுன் னில்லார் பற்றிடார் சிவபு ராணங்
கண்ணிய வினைத்துங் கூட்டுங் காரண மதுவே யாமால். (௩௨)

புகழ்மிகு மநந்த சன்ம புண்ணிய மிகுதி யார்க்கே
திகழ்பர சிவபு ராண சிரவண வாஞ்சை யுண்டா
மிகழ்தரு மநந்த சன்ம மியற்றிய பாத கத்தோர்
நிகழ்தரு சிவபு ராண நிந்தையே கூறி மாய்வார். (௩௩)

நிறையருட் சிவபு ராண நிந்தைகூ றியவன் மூடர்
கறைதவி ராக மத்தைக் கண்ணிய மறையை யந்த
மறைமுடி யமரு முக்கண் வள்ளலை நிந்தித் தோரா
யறைநெடுங் கால மெல்லா நரகமு மழுந்தி மாய்வார். (௩௪)

ஆதலிற் சிவபு ராண சிரவணத் தாசை மேவன்
மேதகு முனிவீ ரெல்லா வேதமு மரிய தென்னுங்

காதலிற் புனைந்து போற்றுக் கவர்த்திடா மனங்கொண் டம்ம
நீதறக் கேட்க மேவ லதனினு மரிது செப்பின். (௩௫)

அருந்தவப் பெரியீர் நீவி ரறியாத தொன்று மில்லை
திருந்தமற் றெனைச்சொ லென்று தெளிந்தநீர் வினவு மாற்றம்
பொருந்துமற் றெனக்கு மிக்க புண்ணியம் புணர்த்தற் கன்றோ
பெருந்திற லினைய செய்கை பெரியவர்க் குரிய மாண்பே. (௩௬)

வலம்புரி கழனி நீரூர் வளவர்கோ னூட்டிற் காரூர்
நலம்புரி மாடந் தேரூர் நகுமறு குடைய சீரூர்
கலம்புரி முலையார் போரூர் கணையடு சிலையார் சேரூர்
நிலம்புரி தெய்வப் பேரூர் நிறைசெல்வத் திருவா ரூரே. (௩௭)

பொழியரு ளந்த ணூரூர்ப் பொலிவைவயென் புகல்கோ நாளு
மழிவிலத் தலத்துக் கொப்பா வமர்தல மெங்கு மின்று
கழிதரு மபிமா னத்தாற் கமலைக்கு மொப்புண் டென்று
மொழிபவர் நெடுமறைக்கு முழுவிரோ தியர்க ளாவார். (௩௮)

கடையுற லென்று மில்லாக் கமலையை யடைந்த மேலோ
ரடைதரு தவத்தீ ரப்பே ரமைந்தவக் கரமோர் மூன்று
ளிடைகடைப் பொருள்போற் றோற்ற மெய்துவ ராதி யந்த
நடைமுழு துணர்வ ராதி நடுப்பொரு ளூற்று வாழ்வார். (௩௯)

காருரு நெடிய மாயோன் கஞ்சனிந் திரன்முன் னோனோர்
பேருரு நினைத்து நெஞ்சம் பெட்டன யாவு மெய்து
மோருரு வேனு மில்லா னுருவெனுந் தேவ தீர்த்த
நீருரு நோக்கு வோர்க்கு நெருப்புரு வினைக்காட் டிற்கே. (௪0)

கமலமார் தெய்வ வாவிக் கமலமூழ் கிடுவோர் சங்கங்
கமலமா நிதிகொள் வார்கட் கமலமா யிரமெய்க் கொள்வார்
கமலமே லிருக்கை கொள்வார் கமலமென் கரங்க ளாற்கால்
கமலமான் வருட நாட்டக் கமலநித் திரைகொள் வாரால். (௪௧)

சீலமி லமணர் பாலே குருடுநற் சீலம் பூண்ட
சாலமெய் யன்பர் பாலே விழிப்புமுன் றந்த தெய்வக்
கோலநீர் பவஞ்சப் பாலே குருடுமெய்ப் பரசி வத்தின்
பாலவாம் விழிப்பு நல்க லரிதுகொல் படிந்து ளார்க்கே. (௪௨)

புற்றிடங் கொண்ட மூர்த்தி பூசைகைக் கொண்டு பன்னூல்
கற்றிடங் கொண்ட நெஞ்சீர் கருப்பைசா ராதொ ழிந்தோர்
மற்றிடங் கொண்ட வாரி மணலினும் வயங்க வானத்
துற்றிடங் கொண்ட வெண்ணி லுடுவினும் பலரான் மன்னோ. (௪௩)

களங்கறை யாணி யற்றப் போகிவாழ் வதுக ழிந்து
வளங்கெழு போகி யாற்றக் களங்கறை யாண்வாழ் கின்ற
விளங்குறு புற்றுச் சூழு மிக்கவன் புற்றுச் சூழ்வா
ருளங்குடி கொண்டு பாச மொறுத்திடு மிலிங்கம் பல்ல. (௪௪)

## வேறு.

நலம்பூத்த கயிலாய மேயபிரான் பாற்றெளிந்த நந்திப் புத்தேள்
வலம்பூத்த சனற்குமா ரனுக்குமகிழ்ந் துரைத்திடவம் மதியான் மிக்கோன்
புலம்பூத்த வாதரா யணற்குரைப்ப வவனெனக்குப் புகல்பு ராணம்
பலம்பூத்த மூவாறு ளிருநான்கே னையர்க்கரற்கோர் பத்து மாதோ. (௪௫)

சிறந்தவொரு பத்தினுளு மோரிலக்கங் கிரந்தமுடைச் சீர்சால் காந்தத்
துறந்தபுகழ் நாகரகண் டங்கமலா லயப்பெருமை யுரைக்கு மந்த
மறந்தடிமான் மியமாதி யுத்தரமென் றிருவகையாம் வயங்க வற்று
ளறந்தழைமா தவத்தீர்பூ ருவபாக முன்னர்நுமக் கறைந்த தாகும். (௪௬)

உரைசெறியுத் தரபாக மிதுகாறு மொருவருக்கு முரைத்த தில்லை
தரைபுகழ்மற் றதுவொன்றே யிம்மைமறு மையுங்கதியுந் தானே நல்கு
நிரைபொழியுந் தீம்பாலுந் தேம்பாகு மின்னமிழ்து நிகரு றாத
விரைகமழுஞ் சுவைபொழியு மற்றதுதான் முற்றுறவென் விளம்பு மென்னின்.

நாஞ்செய்த தவத்தால்வா னுலகுதலை கவிழமறை நான்கு மேத்த
வாஞ்செய்த பணைசூழத் தலத்தரியா சனத்தயில்வே லண்ண லோடுந்
தேஞ்செய்த மலர்க்கூந்தற் றேவியொடும் வீற்றிருக்குந் தியாக ராசர்
தாஞ்செய்த விளையாட லொருமுந்நூற் றறுபதவை சாற்று மாலோ. (௪௮)

வளையாடல் பயில்குடங்கை மாயன்மணி மார்பகமு மதுப்பூ மல்கிக் [ஞெண்
கிளையாடல் கொளுந்தருவா னமும்வெறுத்துப் பெடையினொடு கெழுமி யே
டளையாடல் புரிபணையா ரூரமர்நந் தியாகேச ரருளிச் செய்த
விளையாடல் போல்வதொரு மான்மியமு மெங்குளது விள்ளுங் காலே. (௪௯)

புண்ணியமார் தருமாரூ ராடரவக் கிண்கிணிக்காற் புலவர் கோமான்
பண்ணியவிவ் விளையாட லெனக்குரைக்குங் கான்முதிர்ந்த பத்தி வாய்ந்து
கண்ணியநற் றவத்தார்க்கே யுரைக்கெனவென் னாசிரியன் கரைந்தா னவ்வா
றண்ணியமெய்த் தவத்தீர்நீ ராதலினு லறைகுவனென் றருளுஞ் சூதன். (௫௦)

ஆகத்திருவிருத்தம் - ௪௫௱.

## முதலாவது.

வன்றொண்டை மதகயநேர் மைந்தரொடு பந்துகொடு
நின்றொண்டை யலராடு நிறைபாலிப் பெருந்திருநா
டின்றொண்டை வாயுமையா ளிடப்பாகத் தெம்பெருமான்
றன்றொண்டை யுளநாடு தமிழ்த்தொண்டை வளநாடு. (க)

நன்காஞ்சி முதலைந்தே நாப்பயிலங் காட்டுநடுக்
கொன்காஞ்சி யுமைதழுவக் குழைந்தபிரான் விழைந்தபதி
மென்காஞ்சி காமரப்பண் மிடறுதிறந் தளிபாடுந்
தென்காஞ்சி மரப்பொழில்சூழ் திருக்காஞ்சி மாநகரம். (உ)

அந்நகர மின்றுறைவா னுதித்தன் குலத்துதித்தான்
மின்னகரம் பொருவடிவேல் வேந்தருக்கு ளக்கரத்துண்
மன்னகரம் போற்சிறந்தான் மழைக்குதவு தொழில்பயிற்றத்
தன்னகரங் கலையமைத்தான் சங்கரசே வகச்சோழன். (௩)

தவலருமெய்ப் புகழ்க்கூடற் றமிழ்ச்சங்கத் தினிதிருந்த
நவலருமாண் புலவருக்கு நுண்பொருளாஞ் செய்யுள்விரும்
பவலருந்தன் கருத்தினுக்குப் பருப்பொருள்யாப் பாமாறு
கவலருநுண் மதியினாற் கலைபலவுங் கற்றுணர்ந்தான். (௪)

விதிர்த்தவடி வாள்பொருவ விளங்குவிழிப் பரமாதர்
கதிர்த்தவனப் பிளநகிற்கண் காணரிய முன்பாலா
னதிர்த்தமுர சொடுங்கடனே ரனிகமொடு மாகவப்பா
ரெதிர்த்ததரி யலர்முகக்க ணெய்தரிய பின்பாலான். (௫)

வாடுதலில் வனமாலை மணிமார்பின் புறமிருவி
நீடுதுயி லடைந்திழந்த நெடியமா லேமாற
வாடரவக் கிண்கிணிக்கா லையனைத்த னகமிருவி
நாடுவிழிப் படைந்தோம்பி நாடோறு மிறுமாப்பான். (௬)

கரைகுறுக நிமிர்வெள்ளக் கடல்குறுக நிமிர்படையான்
றரைகுறுக நிமிர்மன்னர் தலைகுறுக நிமிர்கழலான்
வரைகுறுக நிமிர்புயத்தான் மதிகுறுக நிமிர்குடையா
னுரைகுறுக நிமிர்புகழா னூழ்குறுக நிமிரொளியான். (௭)

பொய்யாத பெருவாய்மைப் புரவலன்கை வேல்கண்டு
நையாத பகையில்லை நானிலத்தி லெங்குமவன்
செய்யாத வறமில்லை நீவகத்துப் பொருளுளவ
னெய்யாத பொருளில்லை யெங்குமவற் கிணையில்லை. (அ)

இத்தகைய வளவர்பிரா னெவ்வுயிருங் கொண்டாட
வுத்தமனன் னெறிவழுவா துலகுபுரந் தருணாளின்
முத்தநகை மனைவயிற்றோர் முனையுமுதி யாத்துயராற்
சித்தமுறு களிப்பின்றித் தெருமந்து தேம்புவான். (௯)

புரையிலா மழலைமொழிப் பொருளிலா மனைவாழ்க்கை
விரையிலா வொண்மலரும் விதுவிலா வானகமுங்
கரையிலா மலர்த்தடமுங் கருணையிலாத் தவமுஞ்சீ
ருரையிலா வுற்பவமு மொக்குமென வுளைநவான். (௧௦)

புத்திரனென் றியம்புபெயர்ப் பொருளுணர்ந்து முணரான்போ
லித்தனைநாள் காறுமக வெண்ணாமுடி யாதிருந்தேன்
வித்தகர்பொற் கிண்கிணிக்கால் விமலவிடங் கரைக்கருது
முத்தமர்க்கு முடியாத துண்டுகொலோ வென்றெழுந்தான். (௧௧)

குன்றகமுங் கான்யாறுங் கொடுஞ்சுரமுங் குலநதியும்
பொன்றயங்கு மணிமாடப் புரங்களும்பின் னிடநடந்து
மன்றன்மலர்த் தடந்தோய்ந்து மாலைமனை முன்றிற்றோறுந்
தென்றலிளங் கன்றுலவுந் தென்றிருவா ரூரடைந்தான். (௧௨)

தோய்ந்தெழுவார் வினையொழிக்குஞ் சுரவாவி படிந்தமலம்
வாய்ந்தெழுவெண் ணீற்றொடுகண் மணியும்வயங் கத்தரித்துப்
பாய்ந்தெழுவெம் பரிகரிதேர் படைஞரொடு மெதிர்ந்தாரைக்
காய்ந்தெழுவெள் வேல்வளவன் கைகுவித்தா லயம்புகுந்தான். (௧௩)

வரந்தருதே வாசிரயன் மண்டபமுன் வணங்கியருள்
சுரந்தருள்பூங் கோயில்வலஞ் சூழ்ந்துதொழு தெழுவார்முன்
கரந்தருளா வாதாவிக் களிற்றினடி தாழ்ந்தெனக்குந்
திரந்தருபுற் றிடங்கொண்ட தேவர்திரு வடிபணிந்து. (௧௪)

அரதனசிங் காதனத்தி லகிலமுமுய்ந் திடவபய
வரதமிரு மலர்க்கைமறி மான்மழுமற் றிருநறும்பூங்
கரதலமுற் றிடவடிவேற் காளையொடுங் கரும்பனுக்கு
மிரதமொழி யுமையொடும்வீற் றிருந்தபிரான் முன்சென்றான். (௧௫)

விழிகுளிர நேர்கண்டு மெய்சிலிர்ப்பப் பணிந்தெழுந்து
கொழிசுவையன் பூற்றெடுப்பக் குடந்தம்பட் டெதிர்நின்று
மொழிகுழறி யடியார்கண் முன்னியயா வையுமுடிப்பாய்
கழிமடன்யா னினையடைந்தேன் கருணைபுரி யென்றிரந்து. (௧௬)

அரிதுபுறம் போந்துகம லாம்பிகைபொற் றாள்வணங்கித்
தரியலரே றனையானத் தலத்திலொரு சார்குறுகிப்

பரிவுமிக வமைத்தவொரு பன்னசா லையினிருந்தாங்
குரியமகப் பேறவா யுணவாதி பலநீத்து. (௧௭)

பிரியமிகு விடங்கர்கழல் பெயராது மனத்திருத்தி
யரியதவம் புரிகாலை யாடரவக் கிண்கிணிக்கா
லுரியவர்முன் றோன்றினை துள்ளமுணர்ந் தனமுலகம்
புரியுமக வளித்தனநீ போதுதியென் றருள்புரிந்தார். (௧௮)

அருள்புரிந்த கம்பிக்கா தழகர்மறைந் திடவுணர்ந்து
தெருள்புரிந்த மனத்தரசன் சிந்தனைமுற் றியதென்றுப்
பொருள்புரிந்த புயம்வீங்கப் புளகமெழ வவணின்று
சுருள்புரிந்த மரைவாவி சூழ்காஞ்சி நகரடைந்தான். (௧௯)

பெருந்தேவி மனமகிழப் பெற்றவர மெடுத்தியம்பி
யிருந்தேமன் னவனுலக மினிதுபுரந் தருளுளிற்
கருந்தேன்மொய்த் தடைகிடந்து செந்தேன்வாய் கமழ்தரவைத்
தருந்தேர்கொள் செங்கழுநீ ரணிந்தவர்தந் திருவருளால். (௨௦)

கற்புமனை வயிற்றினொரு காதலன்றோன் றினனாக
வெற்புநிகர் புயத்தரசன் மிக்கமகிழ் பூத்தருநூ
லற்புடையார்க் கொடுசாத காதிகரு மங்குயிற்றிப்
பொற்புமிக வளர்மைந்தன் பொலிவுணர்ந்து பூரிப்பான். (௨௧)

மன்னுபுகழ் நரசிங்க வளவனெனும் பெயர்மைந்தற்
குன்னுகலை பலபயிற்றி யொத்தகுலத் தேயுதித்த
மின்னுநிகர் நுண்மருங்குல் வெற்புநிகர் பொற்புமுலைப்
பொன்னுநிக ராச்சோபா வதியைமணம் புணர்த்தினான். (௨௨)

அங்கோல மணிமகுட மமைந்தநா ளிற்கவித்துச்
செங்கோலும் வெண்குடையுந் திருந்துமகன் கைக்கொடுத்துப்
பைங்கோலக் கடற்புடவிப் பரிநீத்தா ரூர்விடங்கர்
தங்கோல நினைந்திருந்தான் சங்கரசே வகவளவன். (௨௩)

தந்தையினு மான்புடைய தக்கோனாய் மிக்கபுகழ்
மைந்தனொடு நிலம்புரந்து வருநாளி லொருநாள்வன்
கந்தடுவெங் களிற்றரசர் கடலனிகப் பெருந்தலைவர்
மந்திரரு முடன்சூழ மாவேட்டங் குறித்தெழுந்தான். (௨௪)

வடுவெறுகாட் டொடியெறிந்து வலைபிணித்து வன்கொடுவாற்
கொடுஞமலி பார்வையொடு குறுகியவன் மறவர்பல
ரடுதிறற்கைப் படையேந்தி யாங்காங்குக் கலைத்திடலு
முடுகியெழுந் தனபலமா முகிலின்முழங் குபுமாதோ. (௨௫)

அடலரச ரிளவேற்றி னடுசாபம் விடுகணைக
ளுடலுருவி யுறுப்புருவி யோடுதலு முறுவீரழ்
விடலரிய சல்லியமும் வல்லியமும் வெங்களிறுங்
கடலின்முழங் குபுவிழுந்து காலுதைந்து மாய்ந்தனவால். (௨௬)

வில்லியல்வெங் கணைபாய மெய்கிழிந்து வெங்கானம்
புல்லியபன் மிருகமெலாம் பொறிகலங்கி மாய்ந்திடலுங்
கொல்லியவந் தெழுகூற்றிற் கொதித்தெழுவெவ் வடவையினேர்
வல்லியம்வன் றேகைகொடு மண்புடைத்தாங் கெழுந்ததே. (௨௭)

எதிர்பொருவெம் படைஞருட லிருபிளவு படக்கிழியா
வதிர்குரலி னெடுஞ்சிலைகா லயின்முகவெங் கணைசிதறிக்
கதிர்வடிவேல் வளவர்குலக் காளையெதிர் பாய்ந்துதழன்
முதிர்சினமு மவனுயிரு முடியமுடித் தனையன்றே. (௨௮)

பரவுபெரு வனமிடைந்த படைஞர்முத லோருணர்ந்து
விரவுபொருட் கலங்கவிழ்ந்த வேலைநாய் கரிற்கலங்கி
யிரவுதெறு மணிமாடத் திருங்காஞ்சி நகரடைந்து
புரவலநின் றிருமைந்தன் புலிகோட்பட் டானென்றார். (௨௯)

என்றிடலுஞ் சிவாக்கினைமற் றிவ்வாறே விருந்ததென
வொன்றுபெருந் துயர்மூழ்கி யோவநிகர்த் தரசிருந்தா
னன்றுதெரி யமைச்சர்முத னல்லோர்க ணனிதெருட்ட
வன்றுயர மொருவாறு மாற்றியிஃ துரைக்கின்றான். (௩௦)

வலியநர சிங்கவுடல் வயங்குதிறற் புட்சரபம்
பொலிவழியக் கிழிப்பதலாற் புல்லுங்கீண் டிடுங்கொல்லோ
வொலிதருகிண் கிணிக்காலார்க் குறுபகையா மஃதவர்செய்
மலியருளி னற்பிறந்த மைந்தனெனக் கீண்டதுவே. (௩௧)

பொன்னுடைய கிண்கிணிக்காற் புத்தேடன் குறையன்றே
லென்னுடைய தவக்குறையே யிதற்கேது வாயகுறை
மின்னுடைய மணிமாட வியன்றிருவா ரூர்ப்பெருமான்
றன்னுடைய கழலின்னுஞ் சார்வேனென் றிசைத்தெழுந்தான். (௩௨)

வேறு.

அடுபுலிக்கோட் பட்டமகற் காற்றுமபரக்கிரியை யனைத்து மாற்றி
நெடுவிழிச்சோ பாவதிதன் வயிற்றிளஞ்சூன் மேயதுவு நெஞ்சுட் கொண்டு
படுபெருமூப் படைந்தவள வன்காஞ்சி நின்றெழுந்து பணைணப் பேரூர்
வடுவறுமா ரூரடைந்து முன்போல விருந்துதவம் வயங்கச் செய்தான். (௩௩)

அடியார்கள் புரிதவத்திற் கேயருள்கூர் கம்பிக்கா தழகன் வன்புற்
கொடியாளன் புரிதவத்திற் கிரங்கியவ னெதிர்காட்சி கொடுத்தா னாக

நெடியானு நான்முகனு மண்புகுந்தும் விண்பறந்து நேட நீண்ட
படியானைப் படித்தானை மன்னவன்கண் டெழுந்தெதிரே பணிந்து போற்றி.

ஆண்பாலென் றுரைக்கும்வலப் பாற்கேற்ப வடன்மருவு மயிர்பெண் பாலென்
மாண்பான்மற் றதற்கேற்ப விடப்பானல் லெழின்மானும் வைத்தாய் போற்றி
யேண்பாலி னெழுபொறிசே ரரிக்கருந்தாட் சமலமல ரிறைவா போற்றி
சேண்பாலெய் தோரெவரினுங் காணரிய முடிக்கங்கைத் தேவா போற்றி. (௩௫)

வானூடு வெறுத்துநெடு மண்ணூடு குடிபுகுந்த வள்ளால் போற்றி
தேனூடு செங்கழுநீர்த் தேமாலை செறிந்தபுயத் தேவா போற்றி
யானூடு கொடியுயர்த்த வம்மானே கம்பிக்கா தழகா போற்றி
பானூடு பூங்கோயி லிடமேய கிண்கிணிப்பொற் பாதா போற்றி. (௩௬)

என்றுதுதித் திருவிழிநீ ரிறைப்பமயிர் பொடிப்பவுவப் பெய்த நேரே
நின்றுதொழு வளவர்பிரான் முகநோக்கி யேழையே னெஞ்சுஞ் செம்பொன்
மன்றுமுயர் பூங்கோயின் மணியணையு மறைமுடியு மருவுங் கோமா
னன்றுனக்கு வேண்டுவர முரைத்தியெனத் தொழுதபய னவிலு மாலோ. ()

அரியணைமே லம்மையிளஞ் சேயொடினி தமர்கருணை யண்ணல் கேட்டி
பிரியமிகு மென்மருகி வயிற்றுறுபீ ளாண்மகவாய்ப் பிறக்க வேண்டுந்
தெரியவஃ தொருபதினா றகவையுறு மளவுமுயர் தேவ நீயே
யுரியமணி முடிபுனைந்து புரவலரே றாகியிருந் தோம்ப வேண்டும். (௩௮)

பண்டார மரியணைவாம் பரிகரிதேர் படைஞர்முதற் பலவு நீயே
கொண்டார வெவ்வுயிருங் களிதூங்கப் புரந்தரசு குயிற்ற வேண்டும்
விண்டார ணியுமடைதற் கரியநின்றாண் மலரடியேன் மேவி யின்ப
முண்டார வேண்டுமிவை யளித்தியென நின்றிரந்தா னுறுசீர் வேந்தன். (௩௯)

புரவலன்வா யுரைத்தவர முழுதளித்தியா மரசுபுரி போது மெம்மைப்
பரவினைந் தவர்கண்டோர் முதலியர்நந் திருவடிக்கட் பதிவ ராலென்
றரவமணிக் கிண்கிணிக்கா லையன்மறைந் தரியணைமே லமர்ந்தா னந்த
வரவளவ னனந்த மயமான பெருங்கதியை மருவி னானே. (௪௦)

ஆகத்திருவிருத்தம் - ௪௯௩.

# இரண்டாவது.

நற்புகழ் வளவன் கேட்ட நல்வர மனைத்து நல்கி
வெற்புறழ் கோபு ரங்கள் விளங்குபூங் கோயி னண்ணிப்
பொற்புற மடங்க லாங்கும் பொன்னணை யினிது மேய
வற்புத னெங்க ணந்தி யண்ணலை யழைத்துக் கூறும். (௧)

நந்திகேள் வளவ னுக்கு நல்வரங் கொடுத்த வாறே
தந்திமா வரசர் வேடந் தரித்தியாம் வருதும்பின்னர்
வெந்திறற் பொருநர் வேடம் விளங்கெமக் கேற்பக் கோடி
முந்திநீ யித்த லத்தோர் முட்டினற் றுண மோர்தி. (௨)

எந்தறன் சுற்றம் வாழ்தற் கேற்றபன் மனைசெய் வித்தி
நாந்தகம் பற்றி மேவு நாமிருந் தரசு செய்ய
வாய்ந்தசே திமஞ்செய் வித்தி வளமலி காஞ்சி யோரை
யாய்ந்திவண் வரவ ழைத்தாங் காங்குற வுறத்தா பித்தி. (௩)

குடிபுகு பலர்க்கு முள்ள குறையறுத் தரசன் முந்தைக்
கடிதலி லமைச்ச ருக்குக் காவல்செய் பவர்க்கு மேவு
மொடிவிலெம் வரவு சொற்றி யுரைத்தன வெலாமு ரைத்த
படிமுடித் தெமக்கு வல்லே பகர்தியென் றருளி னுனல். (௪)

பொருவிலி யருள நந்தி புத்தியென் றெழுந்து முந்தை
யுருமறைத் தடைந்து சேனு பதியுரு வுத்த மாங்கத்
தருமணி பலகால் யாத்தவ் வயிர்தலைச் சாத்துச் சேர்த்து
மருவுகுண் டலம்பொன் னூழி மற்றணி பலவ ணிந்து. (௫)

அலங்குகஞ் சுகமே காச மாதிய பலமெய் வாய்ந்து
நலங்குடி கொள்ளக் கண்டோர் நந்தியே யிவனென் றோர
விலங்குபொற் பிரம்புங் கையி லேந்தியக் கோயி னின்றுந்
துலங்குபல் பரிச னந்தற் சூழ்தர வெளியே வந்து. (௬)

திரைசெறி கபிலை யாற்றின் றீரமாய்த் திகழ்பூங் கோயிற்
குரைசெறி தென்கீழ்த் திக்கா யுறுமிடஞ் சிறந்த தென்று
புரையறு தெய்வத் தச்சர் பொருந்திய தொழின்மற் றுள்ளோர்
வரையற வரவ ழைத்து மற்றவர் தம்மைக் கொண்டு. (௭)

செம்பொனத் தாணி மாடஞ் சிங்கமேற் சுமந்த பீட
நம்புபன் மணிகால் யாத்த நல்லெழி லடுக்கு மாடங்
கொம்பனு ராடல் பாடல் குலவுபே ரரங்க மன்ற
மம்பரங் கொடிதோ யிஞ்சி யரமிய மவிர்செய் குன்றம். (௮)

வரிகெழு நயனச் சோபா வதிக்குவ ளகம்பூஞ் சோலை
விரிமலர்த் தடமற் றுள்ளோர் மேவுறத் தகுபன் மாடங்
கரிபரி யிரதம் வீரர் கணங்கடங் கிடங்கள் வெவ்வே
றுரியபல் பொருட்காப் பாற்று மோங்குபல் லறைகண் மாதோ. (௯)

ஒருதனி விடங்கப் புத்தேள் பணிவிடைக் குரிய ராகி
வருபரி சனங்கண் மேவு மாடமற் றியற்றும் யாவுந்

MAHAMAHOPADHYAYA
... LIBRARY

திருமலி தரமுந் நாளிற் செய்வித்தான் சீர்சா லெங்கள்
குருபரன் மரபிற் கெல்லா முதற்குரு வாய கோமான். (௧௦)

வளமலி காஞ்சி மேய மன்னவன் மருகி மற்று
முளபரி சனமுன் யாவு மொல்லையோ ரிரவிற் றூனே
பளகறு தூது போக்கி வரவழைத் தவரைப் பற்றுந்
தளர்வறுத் தினிதாங் காங்குத் தாபித்தான் மகிழ்ச்சி பூப்ப. (௧௧)

மாதுலன் கொழுந னின்றி வருந்துமோர் கருப்ப மாதை
ஞாதிகள் வந்து வந்து நலிதரா துறுகாப் பாற்றி
யாதுவேண் டுவது னக்கென் றெதிர்விணய் விடுத்த யாவுங்
கோதற வரவ ழைத்துக் கொடுத்தவட் குவப்புச் செய்தான். (௧௨)

குணமலி யமைச்ச னீதி குதுகல னென்பாற் கூவி
மணமலி சமுநீர் மாலை வள்ளலே யுலகங் காக்கத்
தணவறு கருணை யாலே சார்தரும் பயமெய்ப் பத்தி
புணர்தர நடப்போ ரெல்லாப் போகமு மடைவ ரென்று. (௧௩)

முடியுடை மன்னர் தேர முடங்கலுந் தூதும் போக்கிப்
படிமுழு வதுங்கைக் கொண்டு மாறுபட் டவரைத் தண்டித்
தொடிவறு தண்ட மாற்றற் குடன்படா தவரைத் தள்ளிக்
கடிதுற வேறு வைத்துக் கழிமகிழ் யார்க்குஞ் செய்தான். (௧௪)

கதியருள் விடங்கப் பெம்மான் கட்டளை யிட்ட வாறே
மதிமலி யுலக நோக்கி மகிழ்ந்திட முடிவு செய்து
துதிசெயப் பிரான்முன் சென்று தொழுதுவிண் ணப்பஞ் செய்தான்
பதியவென் மனத்தி னுள்ளும் பாதங்கள் பதிக்க வல்லான். (௧௫)

ஆகத்திருவிருத்தம் - ௫௦௮.

## மூன்றாவது.

வித்தக நந்திப் புத்தேள் விண்ணப்பம் விமல வேத
மத்தக முண்மை ஞான மாதவ ருள்ளம் போலென்
சித்தமு மருவு மைய்ன் றிருச்செவி யேற்றுச் சீர்சா
லுத்தம நீதிச் செங்கோ லுழவர்த முருவங் கொள்ளும். (௧)

இருபத்தைந் தினுக்கு மப்பா லிறையவ னின்று கொண்ட
விருபத்தைந் துடனே மாய விலக்கண மேனி மூர்த்தி
யிருபத்தைந் தனையும் வென்ற தேற்றஞ்சால் வனப்பா லென்ன
விருபத்தைந் தகவை வாய்பப வெதிர்ந்தகண் விருந்து கொள்ள. (௨)

புனைபுக ழிறையை யொப்பப் பொலிதிரு முகமுஞ் செவ்வாய்
வினைதபு கருணை நாட்ட மிளிர்கபோ லஞ்சீர் நாசி
நினைபுயந் தடக்கை மற்று நிகரற வயங்க லாலே
யெனையது முதன்மற் றம்ம வனையதே சினையு மென்ன. (௫)

பாடகப் பதுமச் செங்காற் பார்ப்பன மகளிர் முன்ன
நீடக நிறையி லாத நீர்மைய ராய வாவத்
தேடரும் வனப்பிற் கொண்ட திருமேனி போலா தின்ன
தாடவர் பலரும் பெண்மை யவாவுறக் கொண்ட தென்ன.

அடங்கரும் புகழ்சான் மேனி யழகியா னழகி யானென்
றிடங்கெழு நாவிற் பல்கால் யாமெடுத் திசைப்ப தென்னே
மடங்கலந் தவிசின் மேய வள்ளலை மதியான் மிக்கோர்
விடங்கனென் றுரைத்த துணிம் மெய்வனப் பாற்று னென்ன. (௬)

உருவொடு மிருந்து வேளிவ் வொளியுரு நோக்கு வானேற்
பெருகுதன் வனப்பை யெள்ளு மெள்ளவே பிறங்கு நெற்றி
யொருவிழித் தீயு நாண வுடன்றெழு சோகத் தீயான்
மருவுடல் புழுங்கி வெந்து மாய்தருங் கணத்தி லென்ன. (௭)

முனிவரை மயக்கி நின்ற முராரிமோ கினிவ னப்புக்
கனிதரு மிணைய மேனி காணிலென் படுமோ வென்னப்
பனிமலர்த் தவிசின் மேலான் படைப்புமொண் பதுமை புல்லும்
புனிதமால் காப்பும் வேண்டாப் புகழ்த்திரு வுருவொன் றுற்று. (௭)

பொருவில்பொன் னொளியும் பற்பல் பொலிமணிப் புள்ளி யுங்கொண்
டருவிலை யுடைத்தாய் மெத்தென் றவிரடி யுரிக்கு மாடை
யொருபுலி யதண்மன் சேயை யொழித்தவெம் புலியை வைய
மருவரை முதற்கான் மட்டு மறைதர மாட்டி யாத்து. (௮)

பொருபவ ரிதுபோ லாவர் புண்டரீ கத்தாள் போற்றி
வருபவ ரிதுபோற் றண்மை மருவுவ ரெனத்தெ ரித்தாங்
கருமதி யிரேகை நெற்றி யவிர்தர மூன்று வெண்ணீற்
றொருவில்புண் டரமுங் கீறு சந்தமு முறத்த ரித்து. (௯)

திருநுதற் றகளி மேய செந்தழ லயனத் தீப
மருவுத றகாதா லென்று மாய்க்கவு மனைய தீபம்
பெருகநின் றெரிந்த தேத்துப் பெயருத லின்றி யம்ம
கருமையுற் றுறைந்தா லென்னக் கருநிறப் பொட்டொன் றிட்டு. (௧௦)

நறியகற் பகப்பூ வாதி விடினுநம் மொடுமீங் குற்றே
யறிதர வெவரு நம்போ லைவேலி யிடமுங் கொண்ட

வெறியமற் றிதனை யென்றும் விடேமெனச் சூடல் போலச்
செறிகருங் குஞ்சி மீதோர் செங்கழு நீர்ப்பூச் சூடி. (௧௧)

திருமுகத் திருக்கண் ணாகிச் சேர்ந்துறை நம்மு னீயே
சுருதிசொ லெகினங் காணச் சுடர்முடி யுற்று வாழ்ந்தா
யொருவழ வினியான் வாழ்வ லென்றொரு மதியைத் தள்ளி
மருவுசெங் கதிருற் றென்ன மாணிக்க மகுடஞ் சூடி. (௧௨)

புரிவளை யூச லாடிப் பொலிதரு மிடத்தி லந்த
வரிவளை யீன்ற முத்த மருவியவ் வளையைத் தள்ளி
யரியதிவ் விடமென் றூச லாடல்போற் றரளங் கோத்த
பரியகுண் டலந்தோ டோயப் பரவிரு செவியிற் றூக்கி. (௧௩)

அந்தமில் கடவு ளென்றற் கறிகுறி யாய வென்னைச்
சந்தநின் மிடற்றி னீக்க றகுதியன் றென்று காதின்
மந்தணம் பேச வால மாமலர் வடிவந் தாங்கி
யுந்தவந் துறைத லொப்ப வுற்பலஞ் செவியிற் சேர்த்து. (௧௪)

மாற்றருஞ் செய்ய வானின் மயங்கிய கருவா னொப்ப
வாற்றல்சால் செய்ய மார்பத் தவிர்கரு நானம் பூசி
வேற்றுரு வமைந்த போதும் விளங்குநம் மேனி காண்ட
லேற்றதன் றெனத்தெ ரித்தாங் கிலங்குபொற் கவசம் பூண்டு. (௧௫)

உன்னுதற் குழைத்த வன்மை யுணர்ந்துமா மேருக் குன்றந்
துன்னுதன் பாங்க ருள்ள மணியொடுந் தொடர்ந்து வந்து
மின்னுபு மேன்மேல் வீங்கும் வீக்கத்தைத் தடுப்பான் கௌவி
மன்னுபு கிடத்த லேய்ப்ப வாகுவில் வலயஞ் சேர்த்து. (௧௬)

சேகரங் கிடந்த தூய சிறுபிறை செய்ய மார்பே
யாகர மென்ற மர்ந்தாங் கவிர்பிறை வடமு மந்த
மாகவண் பிறையை யன்பின் வயங்குடுக் கணஞ்சூழ்ந் தென்ன
யோகவெண் டரளத் தாரு மொண்ணிறம் பொலியச் சூடி. (௧௭)

கடமுனி யுண்ட காலைக் கடலகம் பொருவ வம்பொற்
றடநெடு மார்பி னென்பான் மணிக்கலந் தயங்கப் பூண்டு
விடலரி தெனக்க ளத்து விளங்குகண் மணித ரித்து
மடலவிழ் நறும்பூந் தாரு மாலையும் வயங்கச் சூடி. (௧௮)

அருவுரு வவற்றின் கூட்ட மாகிய வவையொன் பானு
மருவுமுத் தொழிலு முள்ளே மென்பது வயக்கி யாங்கு
முருகலர் மார்பி னென்பா னிழைகொளுான் மூன்று தாங்கி
மருவணா யனைய தோண்மே லம்பொனுத் தரியஞ் சாத்தி. (௧௯)

சினமுற நீவிர் யாது செய்யினுந் திருக்கை காள்பல்
லின்மற வடர்த்தல் செய்யீ ரெனக்கதிர் பன்னி ரண்டு
மனமுற வடுத்தா லொப்ப மணிசெய்கங் கணமி ரண்டுங்
கண்மணி யாழி பத்துங் கைவிர றொறுமி யைத்து. (௨௦)

மாதர்மும் மடிப்பு வாய்ந்த வயிற்றடி வயங்கு செம்பொற்
காதன்மே கலைவில் வீசக் கைபுனைந் ததற்கு மேலா
மேதகு மழைக்கோ டன்னை வெளியினும் வைத்த தொப்பத்
தீதகல் வயிரக் கச்சைத் திகழுடை வாள்வைத் தார்த்து. (௨௧)

உறுபகை யுறுப்பால் வெல்லு முனக்கிவை மிகையே யென்னச்
செறுநர்த முடலம் போழ்ந்து செழுந்தடி குதட்டிச் செந்நீ
ரறுதிய தாக மாந்தி யகன்கடை வாயு நக்கு
மறுவில்பொற் றடற்று வைவாய் வாளிரு பாலுந் தூக்கி. (௨௨)

தன்றிருப் பெயர்மேற் கொண்டு தயங்குபொற் றொடர்கீழ்க் கொண்ட
வென்றிய தட்டு வென்னிட் டரவக்கிண் கிணிமென் றாளில்
வன்றிறற் கழலுங் கட்டி வளைதரு கருவி யோடு
நின்றபல் லுயிரு மேத்து நெடியசெங் கோல்கைக் கொண்டு. (௨௩)

திருப்பூணு மறைமு ளைத்த சிறுமுறு வற்செவ் வாயின்
மருப்பூமென் கூந்தற் பாகம் வைகுவா ளளித்த தேயோ
கருப்பூர மேலஞ் சாதிக் காயில வங்க மிக்க
விருப்பூர்தக் கோலஞ் சேர்த்த வெள்ளிலை பாகு மென்று. (௨௪)

காதல்செ யடியார் தம்மைக் காத்தல்செய் கடன்மை பூண்டோ
னோதலின் வாம னீங்கா வம்மையை முருக வேளை
மேதகா தனத்தே வைத்து வெளிக்கருக் கிருகநின்று
மாதரத் துடனே வந்தா னரியயற் கரிய வம்மான். (௨௫)

திருவடிக் கமலம் வேதச் செய்யபா துகைமேற் சூட்டி
மருவுறு களிப்பின் மந்த மால்விடை போன டந்து
தருணவன் மீக நாதர் சந்நிதி வந்து நின்றான்
கருணையி னடியே னெஞ்சங் கனிதரக் குழைத்தாட் கொள்வோன். (௨௬)

ஆகத்திருவிருத்தம் - இ௩௪.

## நான்காவது.

பகாருந்திப் பியபோக நீத்தரச போகமனு பவிப்போ னாகி
நிகாரும்புற் றிடங்கொண்டார் சந்நிதியி னிருபாலு நிலவு தீபந்
தகாருமெய்ப் புகழ்படைத்த சிவகணத்தா ருட்குண்ட சண்ட ரேந்த
துகாருந்தெள் ளமுதனையா னின்றுதளி யுறைவானை நோக்கிக் கூறும். (௧)

மணிதிகழ்பூங் கோயிலுறை வீர்வம்மின் யாம்புகலு மாற்றங் கேண்மி
னணிதிகழ்யா மரசிலமர்ந் தபயனெனப் பொலிந்துபதி னூருண் டெல்லைத்
தணிவரிய பேரருளின் முழுதுலகும் புரந்தருளச் சமைந்து செல்வே
நணியரசு புரிபொழுதுந் தியாகேச ரெனும்பெயரோ நாமம் வேறில். (௨)

விழையவுக மும்புறமு மருவுமியா நிருபரா தனத்தே மேவிப்
பிழையறுதே வாலயமந் தணருறையு டைமைநாளும் பெருகச் செய்வேந்
தழைதருமெம் மாலான்ம சொரூபமாய் மூலலிங்கந் தானாய் மேய
வுழையமர்கைம் மாதேவ னுறைதருமித் தளியுநனி யொளிரு மாலோ. (௩)

அகளமாய்ச் சகளமா யரிபிரமா திகளுக்கு மதிக மாய்ச்சீர்
திகழ்தரவுள் ளவரெவரோ வவரோயா மியநாம்பஃறேய மேய
புகழ்நிருபர் தமக்கதிக மாயிருந்து பெருங்கருணை பொலிய நாளுந்
துகளறவெவ் வுயிர்க்குநனி மகிழ்ச்சிபுரி குவமென்று சொல்லி மாதோ. (௪)

பேரழகு வாரிதியாய்ச் சகளமாய் நின்றதனிப் பெருமான் யாரு
மாரழகு தவநோக்கிக் கண்படைத்த பயனைநனி யடைய வான்றோர்
தேரழகு பொலிநந்தி குண்டணிற்கும் வலப்பாகத் திருக்கை யேந்தப்
பாரழகு கொளவமர்பூங் கோயினின்றும் வெளிவந்தான் பலரும் வாழ்த்த. (௫)

கார்பூத்த கயிலையென விடையுருமா றியதென்னக் காஞ்சி மேய
சீர்பூத்த மன்னகர மண்டனப்பேர் மால்களிற்றைத் திருந்தப் பண்ணி
யேர்பூத்த திருமுன்னர்க் கொடுவந்து பாகுதொழு தெழக்கண் சாத்திப்
பார்பூத்த திருவடியொண் படிபூப்ப வைத்தமரர் பணிப்பூத் தூற்ற. (௬)

மறைமுடியிற் களிற்றின்முது கம்பொனில கடத்தமர்ந்து வல்ல பாக
னிறைமகிழ்வி னெடுநடத்த வமைச்சர்புரோ கிதர்முதலோர் நெருங்கிச் சூழ
வறைதருமந் நகர்வலம்வந் தரசமா ளிகைமுனடைந் தியானை நின்று
முறையினிழிந் துட்புகுந்தான் முன்னுவா ருளம்புகுநன் மூர்த்தி மாதோ. (௭)

ஆகத்திருவிருத்தம் - இசக.

# ஐந்தாவது.

சிறந்த பவனத் தகம்புகுந்த தியாக ராசப் பெருமான்பே
ரறந்த வாத வுவளகத்தை யடைந்து விளைந்தாங் கமர்ந்தவனப்
புறந்த மடவார் பலரொடெதி ருற்று வணங்கி யெழுந்துதுயர்
மறந்த சோபா வதிகருப்பம் புரக்கும் விருப்ப மனங்கொண்டான். (௧)

படிக்கும் புகழ்மா மறையயன்மால் பற்றற் கரிய பாதநிலக்
கொடிக்குங் கிடைப்ப வருக்கொண்டோன் கொண்ட கோலந் தனக்கேற்ப

நடிக்குங் கள்வ னுதலினு னங்கை கருவிற் குறுமிடையூ
றிடிக்குந் திரியம் பகயாக மென்ப தொன்று செய்விப்பான். (௨)

பஞ்சு சேர்மெல் லடிப்பரா பனைமந் திரமெந்திரம் வல்ல
நெஞ்சு தூய மூந்நூறு நீதி மறையோர்க் கொண்டுபுகழ்
விஞ்சு மகச்சா லையினுப்பண் விளங்கு கடந்தா பித்ததனிற்
சிஞ்சு மார மெனமறைசொ றெய்வந் தனையா வாகித்து. (௩)

பாய பூசை புரிந்துசெபம் பகரு மோம மருச்சனைசீர்
மேய நாள்பன் னிரண்டளவும் விருப்பி னூற்றி வேறுவினை
யோய நாம பராயணத்திற் கொருநூ றந்த ணரைச்செபத்திற்
காய பனவர் சோதிடநூ லாய்ந்தோர் நூற்று வரைவைத்து. (௪)

அந்த மறையோர் தமைப்பூசை யாற்றி யவர்க்குத் தனித்தனியே
யுந்த நூறு பொன்னளித்தாங் குவக்கும் பூர ணாகுதிசெய்
தெந்த வுலகும் புகழ்திரியம் பகமந் திரத்தா லியைகருப்ப
நந்த லறச்சோ பாவதிதன் னகுகை யுறக்கங் கணந்தரித்து. (௫)

பரவு சுவைமோ தகமொருமுப் பதினா யிரமும் பகரினிமை
விரவு தெங்கங் காய்பதினா யிரமு மொருவெண் பிறைநிகர்கோட்
டிரவு வேழ முகப்பெருமா னுவப்பிற் கொள்ள நிவேதித்துக்
கரவு தவிர வருமுருகக் கடவு ளனையும் பூசித்து. (௬)

தாய பூத பிரேதபிசா சங்க ளுவப்பப் பலிகொடுத்துத்
தேய நகரங் கிராமமமர் தெய்வ மகிழச் சந்தனஞ்சேர்ந்
தாய தயிலம் பலிபிறவு மமையக் கொடுத்துப் பல்லிடமு
மேய பரமன் சினகரங்கள் விளங்க விளக்கம் பலவமைத்து. (௭)

பல்லார் புகழும் புகழ்வளவன் பண்டா ரச்செம் பொருள்கொண்டு
கல்லாருளம்பு காச்சோமாக் கந்தராய மூலலிங்க
நல்லார் மணிப்புற் றிடங்கொண்ட நாய னருக் கபிடேக
மெல்லார் விளக்க நிவேதனமற் றினிய யாவு நனிசெய்து. (௮)

சென்னி மருகி திருவயிற்றிற் செறிந்த கருப்பந் திங்கடொறுந்
துன்னி வருமூ றெழுந்துபெருஞ் சுகத்தின் விருத்தி யாமாறு
மன்னி வளருஞ் சங்கரனை மாலைத் தந்தை தாயென்றே
யுன்னி விரும்பு சீலமறை யோரே ரிலக்கர் தமக்கம்மா. (௯)

அருப்பு முல்லை நிகர்பதமு மமைந்த பருப்புங் குய்கமழ்ந்த
விருப்பு வளர்பல் கறியும்பல் விதச்சிற் றுணவும் பலகனியும்
பொருப்பு நிகரக் குவித்துவிலாப் புடைவீங் கிடமா றருத்தினு
னிருப்பு நிகர்வன் மனத்தேற்கு மின்ப வமுத மருத்துபிரான். (௧௦)

ஆகத்திருவிருத்தம் - ௬௬௧.

## ஆறுவது.

மானிட மடங்க னும வளவன்மா தேவி பீட்குத்
தானிட ரகல வாற்றுஞ் சடங்கெலா முடித்த பின்ன
ரூனிட ரெனக்குந் தீர்த்தா னுத்தம னுறையிட் டென்ன
வானிடம் படியத் தாணி வாயெழுந் தருள வெண்ணி. (௧)

அகலநீ ளங்கு ரோச மமையவோ ரேழு கொண்டு
பகலவ னெனவில் வீசும் பைம்பொனத் தாணி மாடத்
திகலமா மணிச்சோ பான மிரண்டுதன் றலையி லிட்ட
வுகலரு முப்பான் மேலா யொளிரரி யாச னத்தே. (௨)

சிறந்தநாள் சிறந்த வோரை தேர்ந்துமே தினியோர் போற்ற
வறந்தவா முனிவர் சாற்ற வாசிவா னவர்பூத் தூற்ற
வுறந்தவான் களியி னேறி யுற்றுவீற் றிருந்த பின்னர்
மறந்தவா வளவன் சேனை வருகவென் றருளினானே. (௩)

மழைதவழ் கான மென்ன வாரிதி யென்ன வந்த
பிழைதபு படையை நோக்கிப் பெருந்திரு நகர வீதி
விழையுலாப் போந்து மீள விரும்புபு முறையிற் செல்லத்
தழையுமப் படையை யேவித் தான்வெளி வந்து நின்றான். (௪)

உறைதரு தலைச்சாத் தாதி யுற்றபல் சிறப்பின் மிக்கோ
ரறைதரு செம்பொ னாற்செய் தவிர்நெடுந் தண்டங் கொண்டோர்
கறைதபு வீரம் பூண்டோர் கட்டியத் தொழின்மேற் கொண்டோர்
முறையினா யிரத்தோ ரம்ம முன்செல வவர்க்குப் பின்னர். (௫)

தண்ணுமை படகந் தக்கை தடாரிதூ ரியமு ழாமுன்
னெண்ணுமொன் பதிற் றிரட்டி யியத்துளோவ் வொன்றி னுக்கு
நண்ணுமோர் பப்பத் தாக நரலையு முகிலு நாணத்
தண்ணுறக் கொண்டி யம்பு மவர்செல வவர்க்குப் பின்னர். (௬)

மாற்றருங் கடுப்பி னீர்க்கும் வாசிய வயிர வச்சுஞ்
சாற்றரு மொளிப்பொற் காலுந் தடமணித் தட்டு முள்ள
காற்றடந் திசையுஞ் செல்வ நகுமுடி வானம் போழ்வ
வேற்றமா ரிரத மையா யிரஞ்செல வவைக்குப் பின்னர். (௭)

பிறையிரண் டனைய கோட்ட பெய்யுமத் தான யாற்ற
ஞறநிகர் கால மண்டோய் கையநீள் வரையின் மெய்ய
வறைதரு முகிலு நாண வதிர்பெருங் குரல வாசோ
ரிறையுமில் யானை யையா யிரஞ்செல வவைக்குப் பின்னர். (௮)

விரவுபைங் கடல்சூழ் வைப்பில் வெறுப்படைந் தென்ன நோக்கா
துரவுகொள் வான நோக்கி யுறுசூழ்த் தெடுத்துச் செல்வ
பரவுகூன் புறத்த கைப்புப் பற்றுபு குதட்டும் வாய
விரவணத் தொகையோ ரேழா யிரஞ்செல வவைக்குப் பின்னர். (௯)

விரும்புபொற்றூர வான மீச்செலும் வலிய வீர
மரும்புமைங் கதிய தெவ்வ ரணிமுடி யூன்றுந் தாள
கரும்புயர் மொழிநல் லாரிற் கவிழ்தரு முகத்த வாய
விரும்புர விகளொன் பானு யிரஞ்செல வவைக்குப் பின்னர். (௧௦)

வில்லினர் வீர வாளர் வெய்யபோ ரெனின்வீங் குந்தோட்
கல்லினர் கூற்றி னேருங் கண்சிவந் தறவென் கானு
மல்லினர் சாலி கைக்குண் மறைந்தவர் வரிவ யப்பூ
ணெல்லின ரிருப திற்று யிரர்செல வவர்க்குப் பின்னர். (௧௧)

வந்துபோர் புரிக வென்று மறலிக்கு முடங்கல் போக்கி
முந்துநே ரெழுவேற் கண்ணூர் முழுவரை யனைத்தும் வென்ற
நந்துபூண் முலையார் காம நலமுழு வதும்வி லைக்கே
யுந்துவா ரிருநூற் றேர்மொய்த் துடன்வர வவர்க்குப் பின்னர். (௧௨)

கலைநிறை மதியைப் பற்றிக் களங்முற் றொழிய வெற்றி
மலைவரத் திரட்டி நீட்டி வயங்குறக் கொண்டா லன்ன
தலைமைசால் வெண்பொன் செய்த தண்டங்கைக் கொண்ட வீர
ரிலைமுகப் பூணி ரண்டா யிரர்செல வவர்க்குப் பின்னர். (௧௩)

படர்பெருஞ் சேனைக் கெல்லாம் பதியென நின்ற வண்ண
லிடாறுத் தென்னை யாளு மிரும்புகழ் நந்திப் புத்தே
டொடர்மணிப் பொற்றூர் பூண்ட சுந்தரப் பரியொன் றேறி
யடர்களிப் போடுஞ் செல்ல வண்ணமெய் யறிஞன் பின்னர். (௧௪)

வானமு மண்ணு நோக்கி மகிழ்ச்சியம் புணரி மூழ்க
வீனமில் குண்ட சண்ட ரிருபுறம் பற்றிச் செல்ல
வானபன் மணியுங் கால்யாத் தலங்குபொன் செய்த தெய்வ
யானமே லேறிச் சென்று னென்னுளத் தேறி நின்றான். (௧௫)

மறைநெறி முடியே யாகி வயங்குமச் சிவிகை வாமத்
துறையுரு வியவாள் கைக்கொண் டொளிர்பரி யேறி யச்ச
மிறையுமில் வீரர் மூன்றூற் றிரட்டியர் செலவ லத்துங்
கறையிலத் தொகைய வீரர் கலாந்தவவ் வாறே செல்ல. (௧௬)

அருட்கட லுகைக்குந் தெய்வ வவிர்மணி யானப் பின்னர்க்
குருக்கிளர் மணிப்பூ ணீதி குதுகல ளுதி யாய

திருப்பொலி யமைச்சர் பன்னூ றோர்ந்தவர் செம்பொற் றார்பூண்
டுருப்பொலி புரவி யேறி யுவகையிற் சென்றார் மாதோ. (கஎ)

பொன்செய்காற் கவரி நூறு பொலியும்வெண் கவிகை நூறு
மின்செய்சாந் தாற்றி நூறு மிளிர்மணிக் களாசி நூறு
மன்செய்கே தனங்க ணூறு வளமலி யொலிய ணூறு
முன்செலு மற்ற யாவு மொய்த்தன முன்பு செல்ல. (கஅ)

தழையுமிச் சிறப்பி னெம்மான் றண்பனி நீர்தெ ளித்து
மழைதவழ் பந்த ரிட்டு மகரிகை கதலி கந்தி
விழைபசுங் கன்னல் யாத்து விரைநறுந் தாரு நாற்றிப்
பிழையறப் புனைந்த வாரூர்ப் பெருந்திரு வீதி சூழ்ந்து. (கக)

மதிதவழ் முகட்டுச் செம்பொன் மாமணிப் பவன மேவி
நிதிதவழ் தெய்வ யான நின்றிழிந் தான்ற சான்றோர்
துதிதவ ழத்தா ணிக்கட் சுடரரி யணையி ருந்தான்
கதிதவழ் மலர்த்தா ளையேன் கருந்தலைக் கணியாச் செய்வோன். (௨௦)

ஆகத்திருவிருத்தம் - ருஎக.

## ஏ ழா வ து.

அரியணை மீது தென்முக மாகி யமர்ந்தருள் வீரகிண் கிணிக்காற்
பெரியவ னந்தி யண்ணலை நோக்கிப் பெட்டமைக் காணுமா றடைந்த
வுரியமெய்ச் சீல மறைக்குலத் தவரை யொல்லையின் வருவியென் றருளத்
தரியலர்க் கிடியே றுயமற் றவனந் தணர்புகப் புகுத்தினன் றிருமுன். (க)

மறைமுழு துணர்ந்தோர் மறைநெடு முடியு மாயனும் பிரமனுங் காணு
நிறைபரம் பொருளை முன்புதாஞ் செய்த நெடுந்தவ வலியினாற் கண்டே
யுறையுப வீதம் பூரண கும்ப மக்கதை யறமலி நீறு
கறையறு கனிகண் முதலிய பிறவுங் கையுறை கொடுத்துள மகிழ்ந்தார். (௨)

நினைத்திடி னிறும்பூ தல்லதென் னுண்டா நிறைந்தபல்
லும், வினைத்திறந் தடிவான் மேயவந் தணரை மேருவுஞ் சமழ்ப்புறு தோ
ளிற், கனைத்துவண் டிமிர்பூந் தார்புனைந் தரசாய்க் கவினரி யணையிருந்
துலகத், தனைத்தையு முணரு மண்ணலுக் கெதிர்நின் றமைச்சியல் பூண்டவ
னுணர்த்தும். (ங.)

கறையடி மருப்புஞ் சந்தனக் குறடுங் காழகிற் றுண்டமுஞ் செம்மை
நிறைசெழு மணியும் வயிரமு முத்து நீலமுங் கையரிக் கொண்டு
துறைதுறை யொதுக்கிக் கிழிதர வயிறு தொடுகட லகம்புகுந் துலவு
மறைபுனற் பொன்னி யிருகரைப் புறத்து மமருமந் தணர்கண்மற் றிவரால்.

வாலிய மருப்புப் பொருப்பொடு கருப்புல் வான்றவழ் பொருப்பையு முருட்டி
கோலிய வுவரி திடர்பட வெறிந்து கொழுமணிக் குப்பைகை வாரிக் [க்
காலியல் கழனிக் கதலியுங் கமுகுங் கழுத்தொடி தரவெறிந் தார்க்கும்
பாலிசூழ் காஞ்சி மாநகர் முதற்பல் பதியுறை வேதிய ரிவரால். (ரு)

செழுநலம் பயக்குஞ் செந்தமிழ் மணக்குஞ் செய்யவாய்க் குறுமுனி யுறையு
முழுமணிச் சிகரப் பொதியினின் றிழிந்து மூரிவா னின்றறங் கருதி
வழுவறு தாரா கணம்புகுந் தாடி வயங்குற மேலெழுந் தென்னப் [ல். (சு)
பழுதில்வெண் டரள் மெடுத்தெறி பொருநை படிந்தெழு பனவர்மற் றிவரா

அடர்பிணர் மருப்புப் புனிற்றிளங் கவரி யதிர்தரு கனைப்பொடு பாய
விடர்தபுத் தெழுந்து வளர்ந்தகற் பகத்தி னிருங்கழுத் தொடிதர வெருவிப்
படர்பெரு நீத்தத் தெழுதகட் டகட்டுப் பகட்டிள வாளைமேற் பாயுந்
தொடர்புகழ்க் கோதா வரிக்கரை யமருந் தூமறைக் குலத்தவ ரிவரால். (எ)

அரவினுற் கொள்ளப் பட்டபைந் தேனை யவ்வராப் பூணவும் பெருமீ
னுரவினுற் கொள்ளப் பட்டபுன் சிறுமீ னெல்லையம் மீன்விழி யென்பு
பரவினுற் பொலிகை விரலணி தரவும் பரம்பரன் றிருவுரு நல்கும்
புரவினுற் பொலிந்த கங்கையங் கரைவாழ் புண்ணியப் பூசுர ரிவரால். (அ)

இவர்கடற் றீரத் துறைபவ ரைய விவர்மறை நான்கினும் வல்ல
ரவருபா கமமா கமங்களில் வல்ல ரவர்புரா ணங்களில் வல்ல
ருவர்கியா யத்து வல்லரெண் வல்ல ருவரென வமைச்சுணர்த் திடலுந்
தவர்குழாம் புக்ழாண் டகைசிறு முறுவ றந்துசற் றேமுடி யசைத்து. (கூ)

தகவவர் கொணர்ந்த யாவையு மமரர் தங்குல தெய்வமாய் நின்ற
நிகரறு செம்பொற் புற்றிடங் கொண்ட நிருமலற் காகெனப் போக்கிப்
புகரறு மறையீர் நும்மனை வியரும் புதல்வரு மற்றுள யாரு
மிகவலி யினர்கொ லெனவினு யனையர் விடுத்தசொ லுணர்ந்துவந் துரைக்கும்.

வலிநர மடங்கற் பெயருடைக் கிள்ளி மைந்தனு யினியவ தரிப்போன்
பொலிவரி கழற்காற் றிறவ்வரோ றனையான் புகழ்ச்சிவ தத்தமா வளவன்
மலிதரு கருமம் பார்க்கும்யாம் புற்றில் வயங்குநா யகனரு ளாலு
மெலிவரு நுங்க ளாசியி னுலு மேதினி காத்துமென் றுரைத்து. (கக)

நன்னிதிக் கிழவன் றேழனு கியகோ னரசிங்க வபயனுக் கினிச்சீர்
மன்னிய வுதிக்கு மகன்சிவ தத்தன் மனிதனு யிருந்துல களிப்போந்
துன்னிய நீவிர் யாவரு நன்கு சூழ்ந்துணர்ந் திடுமின்மற் றிவ்வா [குர்.
றின்னியற் றியாக ராசனொன் றுறுகை யெழுத்தொடு மெண்ணின்மன் னருக்

முடங்கலம் மறையோர் தங்கையிற் கொடுத்தம் முடங்கலுள் வரைந்திடு மாற்
மடங்கலு மவர்க்கு வெளிப்பட வுரைத்தாங் கமர்தரு மிடம்புக வனுப்பி [ற

மடங்கலா தனத்தே வீற்றினி திருந்தான் மாயவன் மாமணி மார்பும்
கடங்கலு ழுயிரா வதப்பெரும் பாகன் கற்பக நாடும்வீற் றிருந்தோன். (௧௫)

ஆகத்திருவிருத்தம் - ௫௮௪.

## எட்டாவது.

மறையவர் தத்த மிடம்புகச் செலுத்தி மணிசெயத் தாணிமண் டபத்திற்
கறைதபுத் தளவின் மணிகுயின் றமைத்த கனகசிங் காதனம் பொலிய
வறைபுகழ் நந்தி யண்ணலு நீதி யமைச்சனு மிருபுடை நிற்பக்
குறைதவிர் கருணை வீரகிண் கிணிக்காற் கொற்றவ னிருந்தருள் காலை. (௧)

வேதியர் கொடுத்த முடங்கலைக் கையேற்று விருப்பொடு பூசித்து வாசித்
தாதியம் பரன்கைத் திட்டொடும் வரைந்த வினைத்தையு நன்குணர்ந் தெழு
நீதிய நிருபர் யாவரும் விரைந்து நிரைந்துத மூர்திமேற் கொண்டு [ந்து
சோதியங் கமலைத் திருநக ரகம்வான் றொடுமுடிப் பவனமு னடைந்தார். (௨)

சந்தமன் னவர்சே ணுபதிப் பெருமான் றன்னருள் பெற்றகம் புகுந்து
பந்தமில் பரம யோகியை முன்செய் பளகறு தவத்தினாற் கண்டு
குந்தவல் வினைதீர் தரப்பணிந் தெழுந்து குடந்தமுற் றெதிர்நிரை நின்று
ரந்தவெல் லையின்வந் திறைஞ்சிமந் திரரோ றுங்கவர் தமையிறைக் குணர்த்தும்.

பிணர்படு மருப்புக் கவையடிக் கயவாய்ப் பெருங்கரு மேதிசெஞ் சாலி
வணர்படு நறிய பசுங்கதிர் மேய்ந்து மதுமலர் முண்டகங் குதட்டிப்
புணர்படு மதுரக் கழைகறித் தருந்திப் புனிற்றிளங் கன்றொடுங் கவிழ்பூந்
துணர்படு தேமா நறுநிழ லுறங்குந் துளுவநாட் டரசனித் தோன்றல். (௪)

வழிமதுக் கமல வாவியின் றெழுந்த வாளையம் போத்துவிண் ணுலகத்
தொழுதலில் சுரபி மடித்தல முட்ட வுகளிளங் கன்றென நினைந்து [த்துப்
பொழிநறுந் தீம்பால் பெருகியொண் சாலிப் போரையும் பொழிலையும் பெயர்
பழிதபு மணிவா ரியிற்புக வெறியும் பாண்டிய நாடனிவ் வேந்தன். (௫)

தறியிற முறித்துப் பாகுடல் பிளந்து தகைநெடுங் கூர்ங்கழை சுளித்து
மறிவரு நிழலைப் பகையெனக் குமைத்து மாமழை யினுமத மொழுக்கிச்
செறிதர விழும்பல் விளரிவண் டோச்சித் தியுரு மேறென முழங்கி
நெறிதவச் சினந்துகுஞ்சரந் திரியு நெடுமலை நாடனிந் நிருபன். (௬)

யானையி னடைந்து கடற்புனல் பருகி யானையி னெழுந்துவிண் பரந்து
வானிய றடித்துக் கான்றற முழங்கி வண்கதி ரோனையு மறைத்தே
யொளியின் மழைத்தா ரைகள்சள சளவென் றொலியெழ வொழிவற வெழிலி
கோளிய னிலைக டிரியினும் பொழியுங் குடகநாட் டரசனிக் கோமான். (௭)

கலவுநெற் கதிர்செங் கரும்பின்மேற் சாயக் கரும்புபைங் கமுகின்மேற் சாய
மலர்தலைக் கமுகு வாழைமேற் சாய வாழையூதே மாவின்மேற் சாயப்
பலமலி தேமாப் பலாவின்மேற் சாயப் பலாவிலாங் கலியின்மேற் சாயக்
குலவிலாங் கலிகற் பகத்தின்மேற் சாயுங் கோசல நாடணிக் கோமான். (அ)

ஒழுகுறு மதுவெண் டாமரை மலரை யொருபுறச் சிறகர்தை வந்தோர்
செழுமட நாரை நடந்திட வேற்றுச் சிறுபெடை தழுவிய திதுவென்
றழுதழு திரங்கு முயிர்ப்பெடை துணைத்தா ளடிக்கடி பணிந்துவெம் புலவி
பழுதற வொழித்துத் தழுவுறு மருதப் பல்லவ நாடணித் தோன்றல். (௯)

வடிவெகிர் விழியார் தண்டலை மட்டில் வாய்க்கரைத் தகற்றிய கழுநீ
ரடிபுலி யடிக்காய்க் கூன்குலை யரம்பை யடியறச் சாய்த்துமுத் தரும்பிப்
படிமர கதங்காய்த் தந்துகிர் பழுத்த பற்பல பூகமுந் தள்ளி
நெடுநிலங் கிழித்துக் கடற்புகுந் தடங்கு நிடதநாட் டரசனிந் நிருபன். (௧௦)

வருத்துவிர் யானே பொறேன்பொறே னுயிரும் வாழ்கலே னென்றிடை வரு
பருத்திறு மாந்து சுணங்குபூத் தொளிரும் படாமுலைத் துணைமட மாதர் [ந்தப்
கருத்துற வடிமில் புகுந்தினி தடிபெல் கழிக்கிடு குய்ப்புகை யெவரு
மருத்தியுற் றிடப்பல் காவதங் கமழு மவந்திநாட் டரசனிவ் வண்ணல். (௧௧)

கருவிழிச் செவ்வாய் வெண்ணகைப் பசுந்தோட் கரும்பினு மினியசொன் மடவார், மருவுபு குடைந்த விடத்துநின் றெழுந்த மஞ்சணீர் பெருக்கெடுத் தியாரும், பொருவறு புடவி பொன்னிற மெனநூல் புகறன்மெய் யென்றி றும் பூது, தருமகிழ் வடையப் பரவுறும் வளக்காந் தாரநாட் டரசனித் தலை வன். (௧௨)

கடமருண் முலைமேற் சந்தமும் புழுகுங் களைதரக் கருங்குழல் சரிய
மடநடை யஞ்சொன் மடந்தையர் குடைந்த மலர்த்தட நின்றெழு வாளை
படர்நெடு வான நதியடைந் துழக்கப் பகருமந் நதியரம் பையர்க்கத்
தடமண மயிர்ப்ப நல்குறும் வளப்பாஞ் சாலநாட் டரசனித் தலைவன். (௧௩)

கருமுகிற் படலஞ் சூலுடைந் ததிரக் கவன்றுதா ராகண முதிர
வருமுலைத் துவர்வாய் மடந்தையர் பொன்செய் மாமணி யூசலாட் டிவக்குந்
திருமலர்ப் பொழிலிற் கனிபல சிந்தத் திரிந்துவாய் முழங்குபு வானத்
தருமயற் கலைமேன் முசுக்கலை பாயு மங்கநாட் டரசனிவ் வண்ணல். (௧௪)

கருமுக மந்தி மிதித்திட வுதிர்தெங் கம்பழங் களைந்தவழ் கமுகின்
மருவுசெம் பழங்க ளுருக்குநெட் டரம்பை வண்சுவைப் பழக்குலை முறித்துப்
பெருகிய வருக்கைப் பழங்கிழித் தருகு பிறங்குதே மாம்பழஞ் சிந்திப்
பொருவில்புண் டரிகத் தடமிதந் திடுகோம் போசநாட் டரசனிப் பூமான். ()

இன்னண நீதி குதுகல னென்பா னெதிர்நிரை நின்றபஃ றேய
மன்னவர் தம்மை யுணர்த்திட வுணர்ந்தம் மன்னவர் யாரையு நோக்கிப்
பொன்னகு வீர கிண்கிணிப் பூந்தாட் புரவலன் றிருமுடி யசைத்து
நன்னலம் பொலியம் மந்திரிக் கிழானை நந்தியை நோக்கியீ துரைக்கும்.(கசு)

பொருவில்சீர் வளவற் கினியமன் னவரால் பூமியெவ் வளவுமற் றின்னு
மருவவவ் வள்வீந் தடற்சிவ தத்த வளவன்றன் பூமியென் றவரை
யொருவரு காவல் புரிந்திடச் செய்ம்மி னுறபகை யாய்மனு திகளால்
வெருவரு துரோகஞ் செய்தமன் னவராண் மேதினி முழுவதுங் கவர்மின்.()

மற்றவர் தமக்குத் தண்டமும் புரிமின் வளவனாற் றண்டிக்கப் பட்ட
குற்றமிக் குடையோர் தமைச்சிறைச் சாலை குறுகுறப் புகுத்துமின் விரைவி
னுற்றவச் சாலை வறிதிருந் தவர்தாட் குறுகரு வல்லிசேர்த் திடுமின்
றுற்றகார் வல்லி பூண்டுறைந் தாரைத் துரத்துமின் றேயம்விட் டகல. (கஅ)

முன்னர்நம் வளவன் யாவரை நீதி முறையினாற் றண்டிக்க விலையோ
வன்னவர் தமையு நீதிநூ லறைந்த வவைக்குமா றாகியே நடக்கு
மன்னவர் தமையு நந்திரு முன்னர் வல்லையிற் கொடுவந்து விடுமின்
றன்னமு நீதி திறம்புத லில்லாச் சங்கர சேவகச் சோழன். (ககூ)

அறைதரு தேய காலவி ரோதத் தாலெவர் தம்மையா யினுநன்
முறைதபத் தண்டித் திருக்குமே லவரை முகமனோ டிங்கழைத் திடுமி
னிறைசமா தானஞ் செய்தும்யா மின்னு நீதிபோ லீட்டுவா னுயு
மறைதரு சுவேச்சை யுடையவ னுயு மங்கையி லிலாதவன் போன்றும்.(உ0)

படிமிசை யுறைவோன் யாவனோ வரச பலாதிக னினையன்மற் றவன்றன்
முடிவறு பொருளைக் கவர்ந்துநம் முடைய முழுப்பெருங் கோசத்துச் சேர்மின்
கடிதலின் மகவி ல்லாமையான் வைத்த காஞ்சன மோர்ந்தறம் புரிமின் [மான்.
கொடியபா தகர்தம் பொருள்கவர்ந் திடுமி னென்றனன் குணப்பெருங் கோ

ஆகத் திருவிருத்தம் - சு0கு.

## ஒன்பதாவது.

புனையுநல மலியருட்பூங் கோயிலகத் தரியணைமேற் புவன மீன்ற
தனைநிகரும் பெருங்கருணை யம்மையிளங் குழவியொடுந் தனித்து வைக
வனைபவனத் தரியணைமேல் வீற்றிருக்குங் கிண்கிணிக்கால் வள்ளற் கோமான்
வினைதபுசே னுபதியை மந்திரக்கொத் தினைநோக்கி மீட்டுங் கூறும். (க)

வளவனுக்கு முனமறகூற் றொருபாகந் திறைகொடுத்து வந்த வேந்த
ருளமகிழ வின்றமுத னுவிலொரு பாகமளந் துதவல் வேண்டுந்

தளர்வுறுவ ரெனிற்பூமி யின்றுமுத லதிகபலந் தவச்சு ரக்கும்
கிளர்தருநுண் மதிமிக்கீ ராதலால் யாவருக்குங் கேடின் முமால். (உ)

வருமொருகூற் றினைநான்கு கூறாக்கி யொருகூறு மாதே வற்கும்
பொருவரியீர் மற்றொருகூ றன்னதா னத்தினுக்கும் புகன்மற் றோர்கூ
றொருவரிய சேவகஞ்செய் பவர்க்குமினி துதவுமின்மற் றுளவோர் கூற்றை
மருவவிரு கூறுசெய்தொன் றூற்பவனத் துறுசெலவை வயங்கச் செய்மின். ()

மற்றொருகூற் றினைக்கோசஞ் செறித்திடுமி னிவ்வாறு மதியந் தோறுங்
குற்றமற நடத்திடுமின் முயன்றுபுவி யசழ்ந்தெடுத்துக் கொள்ளுஞ் செம்பொ
னுற்றகொடுஞ் சூதாடு மவர்பொருண்மற் றுரியரிலா தொழிந்த வாசை
முற்றவிவை கொண்டுசிவா லயந்தொறுமண் டபஞ்சிகரி முதல செய்மின். ()

ஒடிவில்பெருந் தீவினின்றும் வருமொண்பொ னபராதத் தூற்ற செம்பொன்
கடிவிலறம் புரியவுரி யாரலாச் சங்கரசா தியர்கைக் காண
நெடியசிவ ஞானத்தால் வெறுத்தபொரு ளிவைகொண்டு நிரம்ப நாளும்
படியின்மறை யோர்க்குவிலாப் புடைவீங்க வருத்திடுமின் பதமிக் காயே. ()

தருவளவன் வனப்பலம்விற் றும்பொருளால் வித்தியா சாலை செய்மின்
மருவுமுலோ பியர்பொருள்வெஞ் சோரர்பொருள் புத்திரியின் மன்னர் மாதர்
பெருகுறுசீ தனப்பொருளா னடைவையினீர்ப் பந்தர்தடம் பிறங்கச் செய்மின்
றிருமறையோர் பொருளுளதே லவர்க்கேகல் குமினென்றான் றேவ தேவன்.

ஆகத்திருவிருத்தம் - சுகக.

## பத்தாவது.

பொருந்தா நெறியிற் புக்குழலும் பொறியி னேனுள் ளமும்புகுந்த
திருந்தா டரவக் கிண்கிணிக்காற் றியாக ராசச் சிவபெருமான்
பெருந்தா ரணிகொண் டாடுறுசீர் பெற்ற சயிலா திலையநீதி
யிருந்தார் புனைமந் திரரோற்றை நோக்கி மீட்டு மிஃதுரைக்கும். (க)

மறையோர் பொருணம் பண்டார மருவு மெனின்மற் றதனையள
விறையா யினும்வை யாதவர்க்கே யீமி னீயு முறைகேண்மின்
பொறையீர் சாமா னியமொன்னிற் போற்றி யவரை வரவழைத்துக்
கறைதீர் பசும்பொ னெவ்வளவவ் வளவே கொடுமின் கனிவாயே. (உ)

தக்க தரும சாத்திரந்தேர்ந் தவர்க்குப் பாக மிரண்டதனோ
டொக்க நீதி நூலுணர்ந்தார்க் கொருமுப் பாக மவையொடுசீர்
நக்க புராண முணர்ந்தார்க்கு நான்கு பாக மிதிகாசந்
தொக்க வவற்றோ டுணர்ந்தார்க்கைம் பாகங் கொடுமின் சோராமே. (ங)

மறையுந் தெரிந்தார்க் கறுபாக மறையொண் பதமுந் தெரிந்தார்க்கு
நிறையும் பாக மேழ்கிரம நெறியுந் தெரிந்தார்க் கெண்பாக
மறையும் வேதாங் கமுந்தெரிந்த வவர்க்குப் பாக மோரொன்பான்
குறைவில் சடையுந் தெரிந்தார்க்கோர் பத்துப் பாகங் கொடுத்திடுமின். (ச)

சொற்ற சிறப்பி னொடுசிவ யோகந் துலங்க வுடையாருக்
குற்ற பாகம் பதினொன்று லொளிரா கமமு முணர்ந்தாக்குப்
பற்று பாகம் பன்னிரண்டு பகரு ஞான மாசார
மற்றும் பூண்டு சிவமுணர்ந்தார்க் கொருறூ றன்பின் வழாதீமின். (ரு)

பார்பா லடைந்து பொருளேற்றல் பதமுன் டிடுகை யில்லாத
வரமார் நியம நனிமருவி மாதே வனையு முணர்ந்தார்க்குத்
திரமார் தருமா யிரம்பாகஞ் சேரக் கொடுமி னிவ்வாறு
கரவா தினிது நடமினெனக் கனிவாய் மலர்ந்தான் கமலேசன். (சு)

நோயன் பதிதன் குணமில்லா னொனு வீனன் பேராசைத்
தீயன் றந்தை கொலைமுதலாச் செறிபா தகத்தன் றீமொழிசேர்
வாய னெனினு மறையோனேல் வையா தவன்பொ னளித்திடுக
மாயன் முதலோர் கவர்ந்தாலும் வழங்குங் கேடப் பொருளுணர்வீர். (எ)

தரையின் மருவு மெவ்வகைய சாதி யாருந் தொழத்தக்கோர்
புரையின் மலிந்த பூசுரரோ போற்ற வேது வென்னையெனிற்
கரைபு ராணந் தருமநூல் கழுவாய் மனுமுற் பலவுமவ
ருரையி னுதித்த லாலென்று ரைப்பி லாநந் தியாகேசன். (அ)

ஆகத்திருவிருத்தம் - சுகக.

## பதினொன்றாவது.

சிறுவிதிசெய் மகஞ்சிதைத்துத் தலைதடிந்து தகர்த்தலைபின் சேர்த்துச் சற்றே
கறுவியவற் சார்ந்தார்க்குந் தகுதண்டம் புரிந்தபெருங் கருணை மூர்த்தி
மறுவறயா வர்க்குமுறு தண்டமினும் புரிந்தாள வல்லோ னன்பர்
பெறுபொருளா கியவிடங்க னமைச்சன்முக நோக்கியிது பேசு மாலோ. (க)

தூயபெரு நீதியுணர்ந் தொள்ளறிவின் மிகுசீர்த்தித் துணைவ கேண்மோ
பாயபகை மன்னர்பெரு நகரமுறை தருகரிகள் பரிக ளுண்மை
மேயவியற் புலவரிசைப் புலவர்கணி கையர்பசுக்கண் மிடலார் சேக்க
ளாயவிவை வறிதிரா தேகுபுகைக் கொண்டிநக ரடங்கச் சேர்த்தி. (உ)

அன்னவற்றுண் மால்கரியும் வாம்பரியும் புற்றிடங்கொ ளமல மூர்த்தி [ன்
மின்னகுவீ தியிற்பவனி யெழுச்சியின்முன் செலுமாறும் விறலான் வென்மே

மன்னவிரு முரசுசுமர் துடன்செலுமா றும்பசுக்கள் வயங்கம் மூர்த்தி
சென்னிமிசை யாட்டகறும் பால்பொழியு மாறுமுடன் சிறப்பச் செய்தி. (௩)

மன்னுமியற் புலவரையு மருவுமிசைப் புலவரையும் வண்பூங் கோயி
றுன்னுகம லாம்பிகைதன் சந்நிதியி னிருபாலுந் துலங்க மேவி
மின்னுமவள் புகழ்பாடிக் கொண்டிருக்கச் செய்திநெடு வேல்போ லொண்கட்
பன்னுகணி கையரையுமக் கோயிலிடை நடஙவிலப் பண்ணு வாயே. (௪)

பகையரச ருடனுறவு கொண்டிருந்த மூர்க்கரெலாம் பங்க யப்பூ
முகைமருவு சுரவாவிச் சோபான மெலாங்கட்டி முடியு மாறு
திகைமருவு மிட்டிகைகள் சுமந்தெடுத்துக் கொடுக்கும்வகை செய்தி பொய்தீர்
தகைமருவ வெந்நாலு மையமறுத் துணர்ந்துதெளி தன்மை யோயே. (௫)

வழிமருவிப் பதிகர்பொருள் பறிப்போரை யாவரையும வருத்து வோரை
மொழிபுகழித் திருவாரூர்த் திருவீதி மயலகற்றி முகந்து தூசீ
ரொழிவறவெங் கணுந்தெளித்து மேடவல்சற் றேறுமிலா தொப்புக் காணுங்
கழிபெருவே லையினமைத்தி யெந்நாலு மையமறக் கற்று ளோயே. (௬)

நியாயமா றுரைப்போரு மனத்தொன்று வாக்கொன்று நிகழ்த்து வோரு
முயாதபே ரிடருறச்செக் காதியியந் திரங்களிழுத் துழலச் செய்தி
தயாவினு லிவ்வாறு தருதண்டம் யாமெடுத்துச் சாற்றி னேமகேண்
மியாவெனு வாய்மலர்ந்தான் றியாகரா சப்பெயர்கொள் விமல வேந்தன். (எ)

ஆகத்திருவிருத்தம் - கஉக.

## ப ன் னி ர ண் டா வ து.

இன்னருக் கின்ன தண்ட மியற்றிடக் கடவ தென்று
மன்னரு ளால்வ குத்த மன்னவர் பிரானைக் காண்பான்
பன்னரு மறைமுற் றோர்ந்த பனவன்மெய்த் தவத்த ளூசு
தன்னமு மில்லா னம்பா சங்கர னென்பான் வந்தான். (க)

வந்தவன் றனைநூல் வல்ல மந்திரக் கிழவ னாதி
யர்தமில் பரம யோகி யருட்டிரு முன்ன ருய்ப்பக்
கந்தமென் மலரோன் மாயோன் காணரும் பொருளை முன்செய்
பந்தமி றவத்தாற் கண்டு பகரருங் களிப்பி னாழ்ந்தான். (உ)

தண்ணிய மறையோ னம்பா சங்கரப் பெயரோன் மிக்க
புண்ணிய சீலன் காணப் போந்தன னென்று தேர்ச்சி
நண்ணிய துணைவன் கூற நயந்துகல் லார மென்பூங்
கண்ணிய னருள்வ ழங்கிக் களிசிறந் திருக்குங் காலை. (௩)

கடமருள் செருத்தன் மேதி கன்னலம் படப்பை மேய்ந்து
மடன்மலர்த் தடமூ ழுக்க வாளையம் பகடு தாவிப்
படர்மூகி லணவு தெங்கிற் பிற்றுமுப் புடைக்காய் சிந்து
மிடமுயர் புகழ்க்காம் போச மென்றொரு தேய மாதோ. (ச)

அன்னத னுதிசித் திக்கி னடருமாங் கனிச்சா றோடிக்
கன்னலம் படப்பை சாய்த்துக் கதலியங் தடவை மாய்த்துச்
செந்நெலங் கழனி மூடித் திரைக்கடற் புலவு மாற்று
நன்னர்கொள் கலிங்க மென்றோர் நகுவளத் தேய முண்டால். (இ)

இத்தகு தேய நாப்ப ணெய்தகோ லிடைசெ லாது
மொய்த்தபா தவப்பைங் கானு முகிறவழ் விந்த மாதி
குத்திரக் குழுவுஞ் சந்தக் குறடுங்கா ழகிலும் வாரி
யொத்திரு கரைப்பால் வீசி யோடுகொள் யாறும் பல்ல. (கூ)

மாற்றருங் கான மாதி வயங்கிய வனைய பூமி
சாற்றரும் வளக்காம் போசந் தடமதிற் கலிங்க மென்னும்
பாற்றருந் தேய வெல்லை பகுத்தினி துணரும் வண்ண
மேற்றதோ ரடையா ளங்கொண் டிருந்தில தின்னுங் கேண்மின். (எ)

திருந்திய புகழ்க்காம் போச தேயத்தைச் சார்ந்த தென்று
மருந்திறன் மதிற்க லிங்க மதனையே சார்ந்த தென்றும்
வருந்திற னுணரு நன்னூல் வல்லரு மதித்தல் செய்யப்
பொருந்துத லுறுச்சந் தேக பூமியா யிருத்த லாலே. (அ)

என்னது பூமி யென்று மென்னது பூமி யென்றுஞ்
சொன்னவத் தேய மன்ன ரிருவருந் தோன்றக் கூறிப்
பின்னரொன் றுங்கொல் லோவிப் பெருவழக் கென்றெல் லோரு
முன்னமேன் மேற்க லாய்த்தர் றுறுபகை பூண்டு மாதேர். (கூ)

வரைமருள் புயக்காம் போசன் வளர்கலிங் கேசற் பார்த்தித்
தரையென தெனதே யென்று சாதித்து முடிப்ப லென்றான்
புரைவளக் கலிங்கர் கோன்காம் போசநாட் டரசை நோக்கி
விரைசெய்மென் பூவன் றேநீ மேதக முடித்தற் கென்றான். (கo)

மாநிலக் கலிங்கர் கோனிம் மகியென தென்தே யென்று
கூறுவ தெவன்யான் கட்டிக் கொள்ளுவ லறிதி யென்றான்
பாறுறு வேற்காம் போசப் பார்த்திவன் கலிங்க முள்ளா
யூறடை யாது கட்டிக் கொள்ளுதற் குறுதோ வென்றான். (கக)

ஒருவருக் கொருவ ரிவ்வா றோதினர் சினக்குங் காலைப்
பொருவின்மந் திரக்கி ழார்நன் புரோகிதர் முதலோர் கூடி

யிருவருங் கலாய்த்த னன்றன் றெப்பெரு வழக்குந் தீர்க்கும்
பெருமிதத் தியாக ராசப் பிரானடி யடைமி னென்றார். (௧௨)

என்னலு நன்று நன்றென் றிருவரு மயன்மா லென்னு
மன்னவ ராலுந் தீரா வடுபவ வழக்குந் தீர்க்கு
முன்னவ ரிவ்வ ழக்கு முடித்திட லரிதோ வென்று
நன்னர்மங் கலங்கூத் தாடு நந்திரு வாரூர் சார்ந்தார். (௧௩)

வளியுளர் பூவன வாய்தன் மருவிமந் திரக்கி ழான்பாற்
களியுறு தாங்கள் வந்த காரிய மெடுத்துக் கூற
வொளிர்மதி யவனன் னோரை யொருங்கழைத் தொழிவு றாது
தெளிபவர்க் கினிக்கு மெங்க டியாகேசன் றிருமுன் சென்றான். (௧௪)

பெருமறை முடியுந் தீண்டப் பெறாதகின் கிணியொ லிக்குந்
திருவடி யானு மெய்தச் சிறக்கணித் தருளு வானை
மருவுமா லயன்வ ணங்க வந்துகாத் திருக்குங் கோனை
யிருவரும் வணங்கி நின்றா ரிறைஞ்சினின் றமைச்சுக் கூறும். (௧௫)

பொருவறு தியாக ராசப் புரவல கேட்டி யின்னோன்
மருவுகாம் போச மன்னன் மற்றவன் கலிங்க மன்ன
னிருவர்த நாடுந் தெற்கும் வடக்குமற் றிவைக்கு நாப்ப
ணொருவருங் காண மாதி யுற்றதோர் பூமி யுண்டால். (௧௬)

இத்தகு தேயஞ் சார்ந்த தெனக்குறி யொன்று மில்லா
வத்தகு பூமி யென்ன தென்னதென் றறைந்திவ் வேந்த
ருத்தம திருமுன் வந்தா ரொன்றெடுத் துரைப்ப வெங்கள்
வித்தக னுள்ளத் தோர்ந்து மென்முக மலர்ந்து கூறும். (௧௭)

மதிவலாய் கேளக் கான வாசிக ளாகி யுள்ள
முதியமா தவர்யா காதி முயன்றவண் முற்றச் செய்தி
யதிகமாம் புண்ணி யத்தா லாறிலொன் றம்மண் ணுள்ள
கொதிகொள்வே லரச னுக்குக் கூடுமற் றதுதான் கூட. (௧௮)

தேசுமெய் யறிவு மிக்க சித்தியும் வந்து கூடு
மாசுதீ ரவைதாம் யானா யடையுமவ் வடைவை யோர்தி
பேசுமவ் வடைவை யுள்ளோன் பிறங்குமம் மண்ணுள் ளோனென்
றேசுதீர் தாத்தா பித்தி யீதுசம் மதமாம் யார்க்கும். (௧௯)

என்றருண் மூர்த்தி கூற விருவரு முவந்து செய்ய
பொன்றயங் குறுதாள் போற்றிப் புறவிடை கொண்டு போனார்
நன்றென வமைச்சர் கோவு நாயக னுரைத்த வாறே
சென்றற வோரைக் கொண்டோர் சிறந்தமா மகஞ்செய் வித்து. (௨௦)

தராதிப் ரிருவ ருக்குந் தவப்பய னுற்ற தோர்ந்து
விராவுதென் பாற்காம் போசன் மிளிர்வட பாற்க லிங்கன்
பராவுகான் கொள்ள நாப்பண் பகுத்துப்பா டாணந் தாபித்
தராவொளிர் வலத்தா ளான்ற னடைந்துவிண் ணப்பஞ் செய்தான். ()

ஆகத்திருவிருத்தம் - ௬௬எ.

## பதின்மூன்றாவது.

கன்றேறு செங்கை யயிராணி கலந்து மார்பத்
தென்றேறு பூணு னயிராவத மேற லேய்ப்பக்
குன்றேறு வெண்மா ளிகைமீதுமின் கொண்ட கொண்டல்
சென்றேறு சீர்ப்போ சலமென்றொரு தேய முண்டால். (௧)

அத்தேய வேந்த னருங்கல்வி யமைந்த சீரான்
வைத்தே யுடைமை யிழப்புற்றுழல் வன்கண் மன்னர்
பித்தேய நின்றா ரெனவெள்ளி பிறங்கு செம்பொ
னெத்தேய நின்று வருவோர்க்குநன் கீத்து வப்பான். (௨)

அன்னான் வறியோர் வெறுப்பக்கொடுப் பான வாவித்
தன்னு னிலத்துட் பொருள்வைப்புறு தான மாய்ந்தே
நன்னுளி லகழ்ந்துகைக் கொள்ள நயந்தி ருந்தான்
றன்னு வதனை யுணர்ந்தார்கொடுஞ் சோரர் சில்லோர். (௩)

வஞ்சம் புரிய வலர்நள்ளிருள் வந்த காலை
நெஞ்சங் களிப்பார் சிறிதாம்புழை நேரு மேனு
மஞ்சங் ககற்றி நுழைவாரெதி ராய பேரை
நஞ்சங் கலந்தா லெனச்சாடுவர் நாளு நாளும். (௪)

அனையா ரரசன் மனஞ்சார்ந்துறை யவ்வி டஞ்சார்ந்
தினையா தவராய்க் கருநள்ளிரு ளிற்று ணிந்து
வினையார் கருவி கரங்கொண்டு விரைந்த கழ்ந்தார்
புனையா வவர்கண் ணெதிர்ப்பட்டது பொன்வைப் பொன்று. (௫)

தலஞ்சார்ந்த மேரு வரையேயெனத் தக்க வைப்பை
வலஞ்சார்ந்த கள்வ ரகழ்ந்தார்வெளி வைத்து வைப்பார்
நலஞ்சார்ந்த வீகை யரசன்பொரு ளுங்க வர்ந்தோம்
புலஞ்சார்ந்த மேலோர் வெறுப்பாருறல் பூணல் வேண்டும். (௬)

என்றே தலைமேற் சுமந்தார்முகி லேறு கோட்டுக்
குன்றே மருதத் தரையேயிரு சோட்டு நல்லான்

கன்றேய் வனமே சுரமேகடந் திட்டு வல்லே
சென்றே யுறவைத் தனர்கொங்கண தேயத் தெல்லை. (௭)

மோகம் புரிவல் லிருண்மாய முருக்கு மண்ண
னாகஞ் செழுமும் பொழுதாகவுண் னாடு கள்வர்
பாகம் புரிதற் கியலாமையிற் பைம்பொ னெல்லாம்
போகம் பொலியோர் வரைச்சாரற் புதைத்துப் போனார். (௮)

உறுகால மன்னன் குழியாரவ னுற்றி ராமன்
சிறுகா லெதிருந் துவள்சிற்றிடைச் சீதை மேவப்
பெறுகா னடைந்தங் கிலளாகப் பிறழ்வுற் றென்ன
மறுகா வுறுபீழை யுட்கொண்டு மயங்கி னானல். (௯)

செஞ்சாலி விஞ்சு செறுப்போசல தேய மன்ன
னெஞ்சாத செம்பொன் பிலத்தின்னள வின்மை நோக்கி
நஞ்சா ரடைவார் பொருண்மன்னனி யாய பொன்ம
னஞ்சா திதுகொண் டவர்யாரென வாய்ந்தி ருந்தான். (௧௦)

சின்னாள் கழியக் களவாண்டு திரியுந் தீயர்
பொன்னாடி யங்குற் றெடுத்தார்களப் போது கண்டு
மின்னார் படைக்கா வலர்பற்றி விரைந்தத் தேய
மன்னா னவன்முன் விடுத்தார்கள்பொன் வைப்பி னோடும். (௧௧)

பொழிநீர் வயற்கொங் கணவேந்திறும் பூது கொண்டு
பழிதீர்மை யாளர் முகநோக்கியிப் பைம்பொ னெங்குற்
றொழிநீர்மை மேவக் கவர்ந்தீருண்மை யோது மென்ன
வழிநீ ரவருங் கரைந்தார்கள்பட் டாங்கு மன்னோ. (௧௨)

வண்போ சலவேந் தனிச்செய்தி வழியு ரைப்போர்
நண்போ டுரைப்ப வுணர்ந்தானகு விற்பு•ரூர
வொண்போ ரயிற்கட் டுணைச்சீதையை யுற்றுக் கண்ட
கண்போ லனுமான் மொழிகேட்டவிற் காளை போன்றான். (௧௩)

உடனே யவணின்று விரைந்தெழுந் தூர்தி மேற்கொண்
டடனேர் படைசூழ்வரக் கொங்கண மங்க னுற்றான்
மடனேரு மாலை யவனும்மெதிர் வந்து செய்யுங்
கடனே ருபுவந் ததுகூறக் கடவை யென்றான். (௧௪)

என்னாட்டு மேய புதையற்பொரு ளெய்த வவ்வி
யுன்னாட்டு மேய கரவோரையவ் வொண்பொ னோடு
மின்னாட்டு வெள்வே லுயர்த்தோய்பெற வேண்டி யின்று
கன்னாட்டு வட்டை கடந்துற்றனன் காண்டி யென்றான். (௧௫)

ஓராசை யும்மில் புகழோய்பிற ரொண்பொ ருட்கிப்
பேராசை கொள்வ தெவனேவைப் பிறங்கு பொன்னெம்
பாராசை யென்று றறியாதவர் பார்த்தி நீயிக்
கூராசை யேசென் றவர்தொட்- குழியை யென்றான். (கசு)

குழிபார்த் தகல்வேனு மலேன்பிறர் கொள்பொன் மேவும்
வழிபார்த்து நிற்பேனு மலேன்பொருள் வைத்துக் காப்பார்
விழிபார்த்து வவ்வு மவரோடுபொன் வேண்டு மூனும்
பழிபார்த் திடாத தெவனென்று பகரும் பின்னும். (கஎ)

பேரா வளக்கொங் கணமன்ன பிறர்தம் வேங்கை
யாரா ரளியா ரதனுல்வண் டடாத வேங்கை
போராடி யார நினைத்தோரையும் போழும் வேங்கை
சோரா தொருவன் றனதென்று தொடினும் வேங்கை. (கஅ)

வியனு னிலத்தி லயலார்தம் வெறுக்கை யென்னின்
மயனுடு நெஞ்சர் பெயரென்று மதிப்ப ரின்பப்
பயனுர் தொழிலின் பெயரொன்று பகர்வ ரோர்தி
கயனுனு நீங்கா வயற்கொங்கணக் காவ லோயே. (ககூ)

என்று வயற்போ சலமன்ன னிசைப்ப வஞ்ச
முன்று வுடையான் பலநீமொழிந் தென்கொ லென்பார்
மன்னுசை யான்கொண் டனன்மற்றோர் வழக்கு முண்டோ
பொன்னுசை கொண்டு திரிவாயொழி போதி யென்றான். (உ0)

இவ்வா றிருவர் கலாஞ்செய்திக லேற்ற காலை
யொவ்வா திதுவென் றறிவானுயர்ந் தோர்வி லக்கிச்
செவ்வா னுறமுந் திருமேனித் தியாக ராசர்
நவ்வா ரிசத்தா ளடைமின்னென நன்கு சொற்றார். (உக)

நன்றென் றிருவேந் தருஞ்சோரரு நாடு மம்பொற்
குன்றென்று கூறு நிதியோடு குலாவு செம்பொன்
மன்றென்று நாயேன் மனத்தும்பொலி வள்ளன் மேய
வென்றென்று நாண்விற் றளியாரு ரிடம்பு குந்தார். (உஉ)

தேவாதி தேவ ரரியாசனத் தியாக ராசர்
பாவாதி நூலின் முடியொத்த பவன முன்கைம்
மாவாதி நின்று முழங்குந்திரு வாயில் சார்ந்தா
ரோவாதி யன்மந் திரற்குற்ற துணர்த்தி னரால். (உங)

மூதுமந் திரரே றனையானிறை முன்பு குத்த
விதுமந் தரநீ டறிமத்தென வேலை நட்டோன்

பதுமந் தவிசோன் வணங்கற்கரும் பண்ண வன்றன்
மதுமந்தி மாந்து மலர்ப்பாதம் வணங்கி நின்றார். (௨௪)

மதியா ரமைச்ச னிறைமுன்னர் வணங்கி நின்று
கதியார் கழலா யிவன்போசலங் காவல் செய்வோன்
றுதியா ரிவனுட் டுறுகைப்புச் சுவணம் வஞ்சப்
பொதியார் சிலசோரர் கவர்ந்தனர் போயி னாராம்.

கொடுபோய கள்வ ரவனுடெனுங் கொங்க ணத்தி
னடுவோர் வரைச்சார் புதைத்துச்சில நாள்க ழித்துத்
தடுமாறு றாது கவர்ப்போதவற் சார்ந்த காப்போ
ரடுபாசம் வீக்கப் பொருளோடு மடைந்து ளாராம். (௨௫)

கள்ளுந் தொழிலோருமெய் யென்றனர் கல்லிச் செம்பொன்
கொள்ளும் பொழுது தெரிந்தென்புலிக் கோட லால்யா
னள்ளுந் தகையே னெனுமன்னவ னல்கிற் றென்பார்
விள்ளும் மதனு லெனதென்று விளம்பு மின்னோன். (௨௭)

இருவோர் வழக்கு மிதுகள்வரு மெய்தி னுரொாப்
பொருவோர் வரையிற் பொருளும்முட னுற்ற தென்றான்
மருவோர் நலமு மிலாதேற்கும் வலப்பொற் பாதந்
தருவோர் முறுவல் புரிந்தின்னது சாற்று வாரால். (௨௮)

சுடர்நூல் பலவு முணர்தேர்ச்சித் துணைவ கேண்மோ
படர்நீ ரொருநாட் டிறைமற்றொரு பார்த்தி வன்பொ
னிடர்கூர் கரவர் கவர்ந்துற்றன ரொன்னிற் பற்றித்
திடரா வுரியா னிடம்பொன்னொடு சேர்க்க வேண்டும். (௨௯)

தெரியா னெனின்மற் றுரியானைத் தெரியு மட்டுஞ்
சரியாது காப்புச் செயல்வேண்டுந் தமனி யத்திற்
குரியா னுயர்போ சலமன்னவ னோர்தி யென்றான்
பெரியா னதுகேட் டிறைஞ்சாவொன்றும் பேசி லானாய். (௩௦)

போந்தான் பொழிற்கொங் கணமன்னவன் போச லக்கோன்
றேந்தாழ் குழற்சீ தையைமீட்ட சிலைவ லானிற்
சூழ்ந்தா ருவப்பப் பொருண்மீட்டுவெஞ் சோரர் துன்பத்
தாழ்ந்தார் திடப்பத் தனதூரடைந் தாற்றி வாழ்ந்தான். (௩௧)

ஆகத்திருவிருத்தம் - ௮௭௮.

## பதினொன்காவது.

ஆயும் பொன்னுடை யார்முக மேல்விலைக்
கேயு மாத ரிருவிழி பாங்கல்போல்
வேயு மொண்கலை விண்மதி மேற்கயல்
பாயு நீர்வயற் பாண்டிநன் னாட்டிடை. (க)

மன்னு நீள்பனி மால்வரை போன்மென
மின்னு பூழியர் மேவுபொன் மாடமும்
பன்னு மற்றைப் பறம்பின்மற் றேரிலுந்
துன்னு சீர்ம துரைத்திரு மாநகர். (உ)

என்ன வோர்தல முண்டதில் யாவருந்
துன்ன நீட்டருட் சுந்தர நாயக
னன்ன மென்னடை யங்கயற் கண்ணியோ
டின்ன ருங்கதி நல்கி யுறையுமால். (ங)

பரவ வற்குப் பசுபதி யென்றோர்பேர்
விரவ லிப்பசு மிக்கமை யாற்கொலென்
றுரவு மண்சொல வுண்டுகண் ணிற்பக
லிரவு சேர்கதி ரேய்தரப் பெற்றவான். (ச)

தூய பேரருட் சுந்தர நாயகன்
பாய கோயிற் பசுக்களை நோக்குந
ராய வெள்ளங்கொ லாம்பல் பதுமங்கொ
லேய தாமரை யேகொலென் றெண்ணுவார். (ரு)

ஆய வான்புல் லறன்மலி கான்புகூஉப்
பாய வானுடு மானப் பரவிமேய்ந்
தேய வேபழி னுஞ்ஞொளோர் நாளிரீஇப்
போய தாலொரு பூங்கன்று தப்பியே. (சு)

தப்பிப் போயது தண்கயி லைக்குலாச்
செப்பிப் போயுநஞ் சேரன் குலத்தனும்
பப்பிப் போய படைஞன் பசுக்குழாத்
தொப்பிப் போய்விர வுற்று வளர்ந்ததே. (எ)

ஆல வாயரு ளண்ணல தென்பதற்
கேல வோரடை யாளமு மின்மையாற்
சால நாடன் னிரையொடுஞ் சார்தலாற்
கால வேலுதி யன்கலப் போர்கிலான். (அ)

ஒருதி னத்தொரு வேதிய னொண்கிளி
மருதின் வாழு மதுரையி னுள்ளவன்
கருதி வஞ்சியர் கோன்கடை புக்கனன்
வருதி யென்று மகிழ்ந்தவ் வுதியனும். (௯)

கூடன் மேய குருமணி யேற்றொடு
மாடன் மேயதன் னவினு னஞ்சில
பாடன் மேய பனவற் குதவினா
னீடன் மேய நிமிர்மணி மோலியான். (க0)

கோதை நல்கிய வாக்கலைக் கொண்டுதண்
போதை நல்கு புனற்பெருங் கூடல்சார்ந்
தோதை நல்குமவ் வூரொரு நாய்கன்பான்
மேதை நல்கு மறையவன் விற்றனன். (கக)

கன்று போய்நெடு நாள்சென் றுங் காண்கிலா
மென்று நாடி யிருந்தவ ரோர்தின
நன்று சால்பசு வாணிக னன்மனைச்
சென்று கண்டையந் தீரத் தெளிந்தனர். (கஉ)

மணிம திற்றிரு மாமது ரைத்தளிப்
பணிவி டைக்குரி யாரிற் பலர்குழீஇ
யணித வப்பசு வாணிகத் தான்மனை
நணிய வற்குத் தெரித்துநல் லானையே. (கங)

இந்த வான்மது ரேசற் குரியது
வந்த வாறுனக் கெங்ஙன் வகுக்கென
வந்த நாய்க னகல்விலைப் பாற்கொண்டேன்
சந்த நான்மறை யோன்றலை யென்றனன். (கச)

ரய னொடுடவ் வந்தணன் பாற்புகூஉ
வினைய வான்மது ரேசர தென்றலும்
புனையும் வானவன் போற்றிக் கொடுத்திட
கினையு மீதுபெற் றேனிச மேயென்றான். (க௫)

மறைவ லானொடும் வாணிகன் றன்னொடுங்
குறைவி லாரொடுங் கோதைதன் பாற்புகூஉ
விறைவ னேயிஃ தெம்பெரு மானதா
னிறையு நீமறை யோற்கெங்ங னேர்ந்தனை. (க௬)

என்று கேட்ப விறைவன தாகிலென்
குன்று றுத்தொழு வத்துறக் கூடுமோ

வொன்று பேரடை யாளமொன் றுண்டுகொ
ணன்று நீவிர் நடந்து வருந்தினீர். (கஎ)

நஞ்சி னுங்கொடி தாகும் பண்பொரு
ளஞ்சி டாது கவர்பவர் யவர்யான்
வஞ்சி யேன்வஞ்சி யேனென வஞ்சியான்
றுஞ்சி டாத சினங்கொடு சொற்றனன். (கஅ)

சொற்ற போழ்தச் சுடர்முடி வேந்தனு
மற்ற யாவருஞ் சூழவல் லானொடு
மற்ற மோவிய வாரு ரடைந்தனர்
கொற்ற மார்மதிற் கூடலில் வாழ்நரே. (கக)

சீர்த்தி மேய தியாகப் பராபர
மூர்த்தி கோயிலின் வாயிலின் முன்னினுர்
பார்த்தி பன்முத லாயவர் பண்பெலா
மார்த்தி மிக்க வமைச்சற் குரைத்தனர். (உ0)

முழுது நன்கு தெரிந்துமுன் னூலெலாம்
பழுது தீரப் பயின்ற மதிவலா
னெழுது சீர்த்தி யிறைமு னவரொடுந்
தொழுது புக்குத் துதித்து மொழிவனல். (உக)

ஆகத்திருவிருத்தம் - கூகக.

---

உ

# திருநாவுக்கரசுநாயனுர்.

## திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தா
லுணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
யயிரா வணமேறா தானே றேறி
யமரர்நா டாளாதே யாரு ராண்ட
வயிரா வணமேயென் னம்மா னேநின்
னருட்கண்ணா னோக்காதா ரல்லா தாரே.

திருச்சிற்றம்பலம்.

# தியாகராசலீலைக் குறிப்புரை.

## கடவுள் வாழ்த்து.

க. குடிலை - பிரணவம். பிரணவப் பொருள் திருமாலும் பிரமருமல்லர்; இவரோ யென்று உயர்ந்தோருணர. கொன்றைமலர் பிரணவ புஷ்பமென்று கூறப்படும்.

உ. படர் - துன்பம். கழிநசை - மிக்க விருப்பம். அறமாதிகளையெய்த. வழிபடுவோர்க்கு அறக்கருணையையும் வழிபடாதோர்க்கு மறக்கருணையையும் ஆற்றி.

ங. கவுள் - கன்னம்.

ச. தரு வேர் - மரத்தின்வேரை. நிரியாணம் - யானையின்கடைக்கண். உரவு சிதர் - வன்மையைச் சிந்துகின்ற. புரவு - காத்தல். இச்செய்யுளில் ஐம்பூதப்பெயர்களும் முறையே அமைந்திருத்தல் காண்க.

ரு. சீர்த்தவளை முழுதவளை எடுத்தவர் - சிறப்புற்ற மேருமலையாகிய பெரிய வில்லைத் தாங்கியவரும், ஐ வண்டு உடை வேள் செயல் போய் மாயப் பார்த்தவர் - ஐந்து அம்புகளையுடைய மன்மதனது செயல் கெட்டொழியும்வண்ணம் அவனை நெற்றிக்கண்ணாற் பார்த்தவரும், ஐ முகத்தவர் - ஐந்துமுகங்களை யுடையவருமாகிய சிவபெருமானது, ஐ உறு மார்பில் - அழகு மிக்க திருமார்பில், துழாய் கமடம் பார ஓடு சேர்த்தவளை - திருத்துழாயையணிந்த திருமாலாகிய ஆமையின் பாரமிக்க ஓட்டினைச்சேர்த்தவரும், உடு தவளை எடுத்து ஓர் அரவு ஆர்த்தவளை-நக்ஷத்திரங்களின் நாயகனாகிய சந்திரனை அணிந்து ஒப்பற்ற பாம்பினை அரைஞாணாகக் கட்டியவரும், நார் தீராது ஓங்கும் தவளை ஆள் நடுக்கம் தீர்த்தவளை. அன்பு நீங்காமல் ஓங்கப்பெற்ற முனிவரரை ஆண்டருளும் நடுக்கந்தீர்த்தவரென்னும் திருநாமத்தை யுடையவருமாகிய விநாயகக்கடவுளை, அடைந்து அவரை நாம் உள்வாம்—; 'அடைந்தவரை' என ஒரு சொல்லாக்கி, அவரை அடைந்த மெய்யன்பர்களை நாம் சிந்திப்பாமெனினும் பொருந்தும். திருமாலாகிய கூர்மத்தை விநாயகக்கடவுள் வென்றகதை இங்கே அறியற்பாலது.

சு. 'தந்தையிலாத்தந்தை' என்றது சிவபெருமானை. எந்தைபிரானாகிய ஆரூரன் - சுந்தரமூர்த்திநாயனார். அவர், திருமுதுகுன்றத்திற் பெற்று ஆற்றிலிட்டபொன்னை இத்தலத்திற் கமலாலயத்தில் முழுகி எடுத்தபொழுது, அதனை உரைத்து, இவ்விநாயகர் மாற்றுக்காட்டிய சரிதம் இங்கே அறியத்தக்கது.

எ. கோசங்கள்-புத்தகங்கள். மூஷிகமாகவந்த அசுரனுடைய கொடிய செய்கைகளையும் அம்மூஷிகத்தின்சாதித்தொழிலையும் ஒற்றுமைப்படுத்தி இச்செய்யுளிற் கூறியிருத்தல் பாராட்டற்பாலது.

அ. அறிவினும் அறியாமையினும் - புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாகவும். அறம் சார - புண்ணியஞ்சேர. சுரத்தல் கதிக்கு அடை.

கூ. நிறை வானும் தயங்கு காசு - நிறைந்த வானுலகத்திலும் விளங்கப்பெற்ற மாணிக்கத்தை. கடுப்பு-வேகம்.

க0. ஒரு பாம்பு தொழ - பதஞ்சலி முனிவர் வணங்க. ஒருபாம்பு உயிர்

த்த-வாசுகிகக்கிய. வன்மீகநாதர், புற்றிடங்கொண்ட மணியென்றும் வழங்கப்பெறுவாராதலின், 'வன்மீகமென்னுமொருமாமணியை' என்றார்; "ஒன்றதொரு புற்றினகத்தே மறையரவங் காண்றதொரு மாணிக்கக் கட்டியே" என்பது, திருவாரூருலா, கஎ0. இதிற் சிவபெருமான் புற்றிடம் கொண்டருளியதற்குக் காரணங்கூறிய அழகு மிகப்பாராட்டற்பாலது.

கக. அன்றாமை - பகையின்மை. காரி - விடம். போற்றி - பாதுகாத்தருள்க; வியங்கோள்.

கஉ. மறையவரதுகையில் அக்கினியுள்ளதென்பது நூற்கொள்கை; தேவர்களுள்ளே சிவபெருமானைப் பிராமணனொன்று வேதம் கூறுமாதலின், இங்ஙனம் கூறினார்; "பிராமணனே கடவுளர் தம்முட் பிஞ்ஞகா" என்பதனுமுணர்க; காஞ்சிப்புராணம், காரோணப்படலம், கூ.

கரு. பூங்கோயில் - ஸ்ரீ வன்மீகநாதருடைய ஆலயம்; இது பூமிதேவியின் இதயகமலமாதலின், இங்ஙனம் வழங்கப் பெறுமென்பர்; "மேதினிக், காதன்மங்கையிதயகமலமா, மாதொர்பாகனாராரூர்மலர்ந்ததால்" என்பது பெரியபுராணம், திருமலைச்சிறப்பு, ௩௩; "பூமிநெஞ்சக, மன்றலங்கமலமாங் கமலைமாநகர்" என்பது திருவாரூர்ப் புராணம், தலமகிமைச் சருக்கம், ௫௪. சோமாக்கந்தரென்பது, ஒரு சிவலிங்கப்பெருமான் திருநாமம்; இந்நூல் ௫ - வது லீலை அ - ம் செய்யுளைப் பார்க்க.

கசு. பெண்ணரசு-திருமகள். நிறம்-மார்பு. பிணை முன்னுய - விரும்புகின்ற தமையனுகிய. மண்ணரசு - முசுகுந்த சக்கரவர்த்தி. வீதிவிடங்கப்பெருமான் - தியாகேசர்.

கஅ. இது, சிவதத்தமாவளவன் பொருட்டு அரசாட்சிசெய்தவரும் இக்காப்பியத்தலைவருமாகிய ஸ்ரீ தியாகராச மூர்த்தியின் துதி. அகவை-பிராயம்.

உ0. சன்மார்க்கம் - ஞானமார்க்கம்; திருவானைக்காப்புராணம், கடவுள்வாழ்த்து, ௩: "ஆணவ மகன்ற சுத்த வறிவல்லா துருவ மில்லாத், தாணுவி னகற லின்றிச் சகத்தினைத் தொழிலு மாற்றிக், கோணவ மனைத்து நீக்கிக் குறுகிய வுயிர்கட் கெல்லாம், பூணவ வின்ப நல்கும் பூரணிக் கன்பு செய்வாம்" என்னும் திருவிருத்தத்தைத்தழுவி இக்கவி அமைந்திருத்தல்காண்க.

உக. நிகிலம் - எல்லாம்.

உஉ. கமலாம்பிகையின் மகுடம் கரண்டமகுடமென்றும், ஆசனம் குட்டிகாசனமென்றும் கூறப்பெறும். குளம் - நெற்றி, தடாகம்; சிலேடை. இச்செய்யுளின்கருத்தைப் பின்னுள்ளதான கமலாம்பிகையின் தியான சுலோகத்தாலுணர்க:

த்ரிநேத்ராம் ஶிவஜாயாம் ஶ்ரி
யம் கமலகராம்பிதாம், ஸுவா
ஸநாம் ஸோமசூடாம் ஸர்வா
ங்க ஸம்ஸ்திதாம், நீலோத்பலாபாம்
தேவீம் பாஶாங்குஶகரஸநாம்
ஸர்வாஶ்ரயேஷ் வராசக்திம் ஸ
ர்வயித்வா விஶேஷத:

உ௩. எல் இயங்கு ஓதை ஆழி ஒன்று - ஒளிவிளங்கப்பெற்ற ஓசையையுடைய ஒருருளையை. வல்லியம் கோதை நீத்த பாம்பு - வியாக்கிரபாதமுனிவரும் குற்றத்தைநீக்கிய பதஞ்சலிமுனிவரும். வில்லி - வில்லையுடையவர். அம் கோதை என - அழகியமாலையாக. அல்லியங்கோதை - நீலோத்பலாம்பிகை.

உ௪. பரஞானம் - மேலானஞானம்; பிரத்தியக்ஷஞானம். கலர்-கீழோர்.

உ௫. இச்செய்யுளில், 'கவிகையகரம் பொலிசீர்வகரம்'என்றிருப்பதை, 'கவிகைவகரம் பொலிசீர்யகரம்' எனத் திருத்திப் படித்துக்கொள்க. துண்டம்-முகம். உண்மைவிளக்கம், ௩௪, ௩௫-ம் செய்யுட்களைப் பார்க்க.

உகூ. கடுக்கை-கொன்றை. உருவடிவு ஈரொற்றுமை-உருவொற்றுமையும் வடிவொற்றுமையுமாகிய இரண்டு; உரு - நிறம்.

உஎ. ஆலமரத்தின் பெயராகிய தொன்மரமென்பது இங்கே அறியற்பாலது; தொன்மை - பழமை.

உஅ. நகையிலும் ஒளிர்நகையிலும் செங்கையிலும் தங்கிய அழல்கள் மூன்றும் சூலத்தின் மூன்றுசிகைகளுக்கு உவமை. முன்னகை-முதன்மையான ஒளி. சூன்று - தோண்டி. இன் நகைமார்பன் - திருமால். மன்னகை - நிலைபெற்ற சிரிப்பு.

உகூ. மேதாவியர்-அறிவுடையோர். ஆவிதொறும் போதுஅலர்ந்து பொலி; ஆவி-தடாகம். கலிங்கம்-ஒருதேயம். வேற்றரசருடைய கலககாலமொன்றில், இவ்விநாயகர் மற்றைப்பொருள்களோடு தம்மையும் கவர்ந்து கலிங்கதேயஞ்சென்ற சில திருடர்களுக்குப் பலவகைத் துன்பங்களை உண்டுபண்ணிவிட்டு, அப்பால், இத்தலத்திற்கு மீண்டருளினரென்பது கர்ணபரம்பரைச் செய்தி.

௩௦. நுதற்கண், எழுவாய். பொடித்து-பொடிசெய்து. தன்கேழ்-செம்மைநிறம். நுதற்கண் நல்க. சவட்டி-அழித்து.

௩௧. வேத்திரம் - பிரம்பு. போது - மலர், காலம்,

௩௨. ஒருமலை-விந்தகிரி. கை ஒருமலைவில் துகிர் மலையா - கையில் ஒப்பற்ற மேருமலையாகிய வில்லையேந்திய பவழமலைபோன்ற திருமேனியையுடைய சிவபெருமானுக. மருமலைபைந்துளவு அணிந்து அமரும் மலையை-வாசனையைச்சுமந்த பசியதிருத்துழாயை அணிந்து எழுந்தருளியிருந்த திருமாலை; இம்முனிவர் திருக்குற்றாலத்தில் திருமாலைச் சிவபிரானுக்கியது கூறியபடி. களையைப்பொரும் அலை-கடல். செம்மல் - பெருமையிற் சிறந்தவர்.

௩௩. ஊழிமுதல் - சிவபெருமான். ௩௪. சுமந்து உள்ள-சுமந்து தியாகனிக்கும்படி. சிவபெருமான் தயிரன்னம் அளித்தது, இவர் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும்வழியில். அயிர் - சருக்கரை.

௩௫. ஆடியின் ஆ அணியின் - கண்ணாடியிலே உண்டான அழகோடு; இதில் ஆடியும் ஆவணியுமென்கின்ற மாதப்பெயர்கள் தொனித்தல்காண்க.

௩௬. ஆசை அடையா - குற்றத்தை அடையாத. ஆசையெலாம்-பொன்னையெல்லாம். ஆசை உடையாருக்கும் - திக்காகிய ஆடையை உடைய சிவபெருமானுக்கும். மா சைலம் - பெரிய சக்கரவாளகிரி. தேசை-ஒளியை.

௩௭. கீழும் - கிழிக்கும். இத்தலத்தில் தியாகேசருடைய திருவிழாத் திருமுகத்தை எவ்விடத்திற்கும் சண்டேசநாயனுர் அனுப்புதல் மரபு; இதனை, திருவாரூர்ப்புராணம், பாயிரம், கக-ம் செய்யுளாலும், ஷை புராணம் திருவிழாச்சருக்கம், உ - ம் செய்யுளாலும் உணர்க.

௩௮. நத்தம் - இருள். சிதர்த்து - சிதரச்செய்து.

௩௯. மாமான் - பெரியமஹான்.

௪௦. சாதனம் - உருத்திராக்கம்.

௪௨. துறைசை-திருவாவடுதுறை. பஞ்சாக்கரதேசிகர் - நமச்சிவாயதேசிகர். சைலாதி - சிலாதமுனிவர் புத்திரர்; திருநந்திதேவர். மலைந்த-சூடிய.

௪௩. அம்பலவாண முனிவரென்பவர், இந்நூலாசிரியர் பாடிய பிள்ளைத்தமிழ், கலம்பகமென்னும் பிரபந்தங்களைப் பெற்ற அம்பலவாண தேசிகரல்லர்; இளமைப்பருவத்தில் இந்நூலாசிரியர்க்குச் சில சைவநூல்களுக்குப் பொருள் கூறியவர்.

## நூல் இயற்றுதற்குக் காரணம்.

க. தேவாசிரயனும் காவணம் - ஆயிரக்கால் மண்டபம்; "தேவாசிரயனெனுந்திருக் காவணம்" என்பது, பெரிய புராணம், திருக்கூட்டச் சிறப்பு, உ.

## அவையடக்கம்.

க. "தன்பெருமை தானறியாத் தன்மையன் காண்" என்பது திருவாசகம், திருச்சாழல், கக. எல்லோரும் உன்னுகின்ற பெருமை யார் - ஸ்ரீமாணிக்கவாசகர்.

உ. முன்பு தேவர்களிற் பலர் செருக்குற்றுத் தம்முட் பிணங்கியகாலத்தில், சிவபெருமான், ஓரியக்கவடிவங் கொண்டு சென்று, அவர்களுக்கு முன்னே ஒருதுரும்பைநாட்டி, அவர்களை நோக்கி, 'உங்களில், இத்துரும்பை அசைக்கவல்லவர் எவரோ அவரே சிறந்தவர்' என்ன, அவர்களுள் ஒவ்வொருவரும் தத்தம் படைக்கலங்களை விடுத்து அதனை அசைக்க வலியிலராயினரென்பது இச்செய்யுளிற் குறித்துள்ள கதை; இதனை, (கந்தபுராணம், காமதகனப்படலம், சுக) "செம்மாந்து தற்புகழுந் தேவர் குழு வும்மருள, வெம்மான் பிறன் போ லிருந்தோர் துரும்புநிறீஇ, யம் மாதன் செய்கை யனைத்துமெனக் காட்டினனே, நம்மாலு முற்றுஞ் சில வென்கை நாணன்றோ" என்னும் திருவிருத்தத்தா லுணர்க; இவ்வரலாறு கேநோப நிடதத்திற் கூறப்பட்டுள்ள தென்பர்.

ங. முகத்தினுக்கு உரிய அங்கம் - கண் முதலியவைகள். ஒன்றை - பனையோலையை.

சு. தட்டு - தடை. எள் தனை - எள்ளளவு. கெட்டதைப்பெருகிற்றென்றல், 'திருமங்கலியம் பெருகிற்று' என்னும் மங்கல வழக்கா லுணரப்படும்.

ரு. ஐந்து இயல் ஆசு - ஐந்திலக்கணக்குற்றம்.

சு. 'தமிழ்' என்பதற்குப் பொருள் இங்கே இனிமையென்பது.

## திருநாட்டுப்படலம்.

க. ஸ்ரீ பராசத்தி, திருவாரூரில் வாணி தீர்த்தத்தின் வடகரையில் அநாதியாய் உலகுய்யத் தவஞ்செய்தருளுகின்றனளென்பது, திருவாரூர்ப்புராண வரலாறு; பராசத்திச் சருக்கம், உ: "சித்திரம் பழுத்த தெய்வத் திருந்தெழில் வாணி தீர்த்தத், துத்தர திசையின் பாங்க ரநாதியா யுலகமுய்ய, வத்தனு ரூர னெண்டோ ளாதித னமல ஞான, சத்திதா னூழி யூழி தவம்புரிந் துறையு மன்றே" எனவும், ஷை புராணம், வன்மீகநாதச்சருக்கம், கக. "அறப்பசுங் கொடிதவ மாற்று மிந்நகர்" எனவும் வருவனவற்றா லுணர்க.

ச. தம்முடைய பிள்ளையை உருளையின்கீழேயிடத்தி அவன்மீது தேரைச் செலுத்திய மனுநீதிகண்ட சோழர் அரசாண்ட விசேடம் இச்செய்யுளிற் கூறப்பட்டது. இக்கதையின் விரிவைப் பெரியபுராணத்துள்ள திருவாரூர்ச் சிறப்பாலுணர்க. திருவாரூர்ப்புராணம், திருநகரச்சிறப்பு, கரு அ-ம் செய்யுளைப் பார்க்க.

ரு. இச்செய்யுள், "தள்ளா விளையுளும்", "பொறையொருங்கு", "கேடறியா" என்னுந் திருக்குறள்களின் கருத்தைத் தழுவியதென்றறிக; எங்க, எங்ங, எங்சு.

எ. சென்னி - சோழன், தலை.

அ. நீர் - தீர்த்தம், குணம்.

கய. எக்கழுத்தம் - தலையெடுப்பு. இதன் முதலடியில், திருக்குறள்: "உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ், சேரா தியல்வது நாடு" என்பதன்கருத்தும், இரண்டாமடியில், "கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா, நாடென்ப நாட்டிற் றலை" என்பதன்கருத்தும் அமைந்துள்ளன.

கக. குரவு - நறுமணம். உரவு - வலி. புண்டரீகம் - வெண்டாமரை.

கஉ. எதிர் ஆசை - மேற்குத்திசை. அவன் இணை - நெய்தனிலம்.

கங. மேகத்திற்கும் திருமாலுக்கும் சிலேடை: மால் - மேகம், திருமால். தடி வில் வாள் துன்று நீர்வளை சக்கரம் விளங்குறத் தோற்றி - (மேகத்

திற்கு) மின்னலும் வில்லும் ஆகிய ... ின் ஒளிகளை மிக்க நீரையுடைய கடல்சூழ்ந்த உலகம் விளங்குறும் வண்ணம் தோற்றி, (திருமாலுக்கு) தண்டம், வில், கட்கம், மிக்க நீரிற்றோன்றிய சங்கம், சக்கரப்படை என்னும் இவற்றை விளங்கத் தோற்றி. 'அலரிருக்கையா லோதிமமேறி' என்பது மேகத்திற்கும் பிரமனுக்கும் சிலேடை: தன்பால் நீரிருத்தலோடுகூடி மலைமேலேறியெனவும் தான் பூவிலிருத்தலோடுகூடி அன்னத்தின்மேலேறி யெனவும் இதற்குப் பொருள்கொள்க.

கச. வேனில், விளி. நெடுமொழி- தன்னுடைய மேம்பாடுகளைச் சொல்லுஞ்சொல்.

கரு. மாய்த்து - மறைத்து.

கசு. குவால் - குவியல். உவா - நிறைவு.

கஎ. தமக்கிறை - இந்திரன்; அவன்மகள் - தெய்வயானை; சேவகன் - முருகக்கடவுள்;அவர் திணை,குறிஞ்சி. அம்மகபதிநிலம், மருதம்; அவன் பின்னவன் - உபேந்திரர்; திருமால்; அவர்நிலம், முல்லை. கானலந்தலை - நெய்தல்.

கஅ. வந்துவந்து, அடுக்கு. உலாம் வந்து - உலாவும் காற்றே; விளி. காற்றின்வாகனம், கலைமான். தனிதம் - மேககர்ஜனை.

கக. அவ்விடம் ஒருவி. கருவி-கூட்டம். வள்ளுறை - பெருமையையுடைய துளிகளை.

உக. சொல் - புகழ், நெல். படுதல்- உண்டாதல்.

உச. தேரின் - ஆராய்ந்தால். தேக்கெறிதல் - ஏப்பம்விடுதல். குடிஞை-ஆறு. வாரி - நீர். தேக்கி-நிறைத்து.

உரு. மந்த-மெல்ல; "மந்தமந்த மணந்தது வாடையே" என்பர் கம்பர்; கிளைகண்டு நீங்குபடலம், சச.

உசு. அங்குரித்த - முளைத்த.

உக. புகழின்நிறம் வெண்மை.

ருக. மயில், குறிஞ்சிக் கருப்பொருள்.

ருரு. ஞாழல்-புலிநகக்கொன்றை; அதன் அரும்பு புலிநகத்திற்கு உவமை. உகிர்-நகம்; புலியுகிரென்க.

ருடு. இசையுறச்சிறந்தவரையடைபவர்க்கு-புகழ்மிகும்படி சிறப்புற்றோர்களை அடைபவர்களுக்கு, ஒலிமிகச் சிறந்த மூங்கிலை அடைந்தகொடிக்கு. இச்செய்யுள், "முருகுவிரி மலர்க்கொடிகண் மூங்கின்மிசைப் பதிந்து போய்ப், பொருவரிய துறக்கத்துப் புகுந்துவளர் கற்பகமா, மரமுழுதும் படர்ந்துலவும் வளர்மதியின் மேலாய, பெரியவரை யடைந்தொழுகப் பெறிற்றுறக்கம் புகலரிதோ" (திருக்காளத்திபுராணம், தென்கைலாயச்சருக்கம், கக) என்பதைத் தழுவியிருத்தல் காண்க.

ருசு. வரி - வண்டு. தினைக்கதிர்க்கு அணில்வால் உவமை.

ருஎ. புண்டரீகம் - புலி, தாமரை. நால்வாய்-யானை, நான்குவாய். எண்கை - கரடியை, எட்டுக்கைகள். மாசுணக்கிடக்கை - பாம்பின்கண்ணே சயனித்தல், பெரும்பாம்புகள் கிடத்தல். வளை திகிரி - வளைந்தமூங்கில், சங்கும் சக்கரமும்.

ருஅ. மொய் - வலி.

ருக. கவலைமூலம்-கவலைக்கிழங்கு. சுரைபடும் இரும்பு - உட்டுளைபொருந்திய இருப்புப்பாரை; பெரும்பாணாற்றுப்படை, கூச, கூஉ-ம் அடிகளையும் அவற்றின் உரையையும் பார்க்க. அரசு - திருநாவுக்கரசுநாயனார்.

சo. நரன்று - ஒலித்து. நிறீஇ-நிறுத்தி. மிறை - நடுக்கம்.

சஉ. இளையசேய் - முருகக்கடவுள்.

சங. இறும்பு - குறுங்காடு. சுவர்க்கம் - கொங்கைகள், தேவருலகம்.

சச. குலிசம் - வச்சிராயுதத்தை. வேல் அனுக்கும் - வேற்படையைக் கெடுக்கும். கொடிச்சி - வள்ளிநாயகியார்.

௪௫. இருவி-தினையரிந்ததாள். குரு-நிறம்.

௪௬. தகர் மருப்பு - ஆட்டுக்கிடாயின் கொம்பு. முகத் திருகு ரோமம்-மீசை. ஐவனம் - மலைநெல். சாத்தன் கடவுள் - ஐயனார்.

௪௭. நாம்பு இள முளை-மூங்கிலின் இளையமுளை. கயமுனி - யானைக்கன்று. குளகு-விலங்கினுணவு. கழை - குத்துக்கோல்.

௪௮. வேங்கை - புலியும் வேங்கை மரமும். வேழக்கால் - யானையின் காலும், மூங்கிலின் அடியும். ஆக்கள் - பசுக்களும் ஆச்சாமரங்களும். சே - இடபமும் சேமரமும். இல்லம்-வீடும், தேற்றுமரமும். இதிலுள்ள வாக்கியங்கள் வியக்கற்பாலன. காஞ்சிப்புராணம், திருநாட்டுப்படலம், ௪௭, ௪௮ - ம் செய்யுட்களைப் பார்க்க.

௫௦. தனித்துறைதல் முல்லைக்கும், உடன் செல்லல் பாலைக்கும், ஊடல் மருதத்திற்கும், இரங்கல் நெய்தலுக்கும், கூடல் குறிஞ்சிக்கும் உரிப்பொருள்கள்.

௫௧. நிறத் தளி - மார்பாகிய கோயில். விடங்கர் - தியாகேசர். முல்லை நிலத்திற்குத் தெய்வம், திருமால்.

௫௨. குடவிமார் - இடைச்சியர்.

௫௩. குல்லை-திருத்துழாய். இப்பர்-இடையர். இக்கவி சிலேடை.

௫௪. 'சாதனமின்றி' என்று திருத்திக்கொள்க; "சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகி லில்லை" என்பது, கைவல்யநவநீதம். இடைத்தொழில் - இடைச்சாதிக்குரிய தொழில், முத்தொழில்களுள் நடுத்தொழிலாகிய காத்தல்.

௫௫. மை - அஞ்சனம்.

௫௮. அறம் வளர்த்தவள் - முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்தவராகிய உமாதேவியார். வால் அரி பதம்-வெள்ளிய அரிசியாலாகிய சோறு.

௬௦. மலரணங்கு எனும் மான்புணர்மால்-திருமகளென்கிற மானைச் சேர்ந்த திருமால்; மான்புணர் மாலென்பதும் ஒருபொருள். முதலடி சிலேடை. குமிழ் - குமிழமரம், மூக்கு. குழை - தளிர், காது.

௬௧. முயல்கள், ஒருவர் முயற்சியாலுண்டாகிய பயிரையும் ஒருவர் வெட்டிய குளத்துநீரையும் உண்ணா வென்பர்; இதனை, "மயரற வொருவர் தொட்ட வண்குளப் புனலும் வேண்டா, வியனிலப் பயிரு மேயா வேலியுங் கடத்தல் செய்யா, முயலினம் வாழா நின்ற முறைதிறம் பாமை நன்றென், றுயவுறு மனத்தார் நோக்கி யுவப்பன கரிய கானம்" என்னும் திருவானைக்காப்புராணத்தாலும் உணர்க; திருநாட்டுச் சிறப்பு, ௩௨. அருங்குறைத்து - அருமையையுடையது.

௬௨. ஏறு இமில். குறும்பொறை நாடர் - முல்லைநிலத்தலைவர்.

௬௩. கொன்றை வேய்ங்குழல் - கொன்றைப்பூவைச் செருகிய புல்லாங்குழல்; வேய்ங்குழலென்பதை வங்கியத்திற்குப் பெயராக்கிக் கொன்றைப்பழத்தைத் துருவித் துளைத்த குழல் என்று கூறுதலும் பொருந்தும்; சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை, "கன்றுகுணிலா" என்பது முதலிய செய்யுட்களையும் அவற்றின் உரைகளையும் பார்க்க. மங்கை - மங்கலமென்னுமூர். பொற்ற - பொலிவுபெற்ற.

௬௫. சே - இடபம். காசை - காயாமரம்.

௬௬. கொன்றை - கொன்றைக்காய்; ஆகுபெயர். கோபம் - இந்திரகோபம்.

௬௭. சாகம் - கீரை.

௬௮. தாய் - தாவி.

௬௯. ஆம்பிகள் - காளான்கள்.

௭௧. பானல் - மருதநிலம். கலவுதல் - கலத்தல்.

௭௨. பணை - மருதநிலம்.

௭௩. மருதநிலமாக்களுக்கும் தேவர்களுக்கும் சிலேடை.

௭௪. ஸ்ரீதியாகராச மூர்த்தியைத் தானே வைத்துக் கொண்டுபூசியாது

மூசுகுந்த சக்கரவர்த்தியிடம் கொடுத்துவிட்ட கொடும்பாவத்தால், இந்திரன், தன்னுடைய பெருஞ் செல்வத்தை இழந்து புலையனாகி, அப்பாவத்தைப் போக்கிக்கொள்ளுதற்பொருட்டுத் திருவாரூரையடைந்து, 'தரிசனத்திற்கு எல்லா ஊராரும்வருக' என்று திருவிழாக்காலத்தில் யானைமீதேறி முரசறைந்து திருவீதியைச் சூழ்ந்துவந்தானென்பர்; இதனை, கந்தபுராணம், கந்தவிரதப்படலம், ௧௨0, ௧௨௧-ம் திருவிருத்தங்களாலும், ஷை புராணம், தெய்வயானையம்மை திருமணப்படலம் ௬௧-ம் திருவிருத்தத்தாலுமுணர்க. 'யானையேறும் பெரும்பறையன்' என்னும் வழக்கமுமுண்டு. இதுபற்றியே இச்செய்யுளில் இந்திரனை மள்ளருள் ஒருவனாகக்கூறினர்.

எ௫. இருந்தை - கரி.

எ௬. மறைதேர்ந்த அன்னம்-பிரமனாகிய அன்னம். கலைமான்-ஸரஸ்வதிதேவி.

எஎ. வயலை - பசலைக்கொடி.

எ௯. பின்னவன் - கண்ணபிரான். நாஞ்சில்-கலப்பை. முன்னவன் - பலராமர். காராக்கள் - எருமைகள்.

அ௧. கிண்கிணித்தாட்சிங்காதன சிந்தாமணி - தியாகராசர்.

அ௨. ஒருகுறள் - குண்டோதரன்.

அ௩. கழிகாமுகர்-மிக்கசாமத்தையுடையோர். உறந்த - மிக்க.

அ௪. பிள்ளையவர்கள் இந்நூல் இயற்றுகையில் இந்நாட்டுச்சிறப்பிலுள்ள சில பாடல்களைக்கேட்டு அழுக்காறுற்ற புலவரொருவர், 'நீங்கள் சோழநாட்டை எவ்வாறு சிறப்பிப்பினும் பாண்டிநாட்டின் பெருமை இதற்கு வாராது' என்று பல நியாயங்களைக் கூறி, "பன்னுசீர்க்கிள்ளிநாடும்....... கான்றிடாதே" (சேதுபுராணம், திருநாட்டுச்சிறப்பு-௧0எ) என்னும் செய்யுளைச் சொல்லிக்காட்டியவுடன், அவர் கூறியவற்றைப் பற்பல ஆதாரங்களைக் கொண்டு மறுத்துக்கூறியபின், இச்செய்யுள் இயற்றப்பெற்றதென்பர்.

அஎ. பலாம் சிலாம் மீன்கள் - பலவும் சிலவுமாகிய மீன்கள்; "பலவற்றிறுதி நீடுமொழி யுளவே, செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான." (தொல். உயிர்மயங். ௧௧-ம் சூ.) என்பது இதற்குவிதி; "களைகிட ராதி மாட்டுங் கலப்பன பலாஞ்சி லாமே." என்பது திருவானைக்காப்புராணம், திருநாட்டுச்சிறப்பு, ௪௫.

அ௯. அவல் - பள்ளம்.

௯0. கலங்கியென்பது - சிலேடை.

௯௧. இருமுதுகுரவர் - தாய்தந்தையர். ஓக்கம் - உயர்ச்சி.

௯௩. ஞெள்ளல் - பள்ளம்.

௯௪. அருவம்நான்கு - நாதம், விந்து, சத்தி, சிவம். உருவம்நான்கு-பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன். அருவுருவொன்று-சதாசிவன்.

௯௫. பற்றுசு-உலோகங்களைப்பொருத்தும் மெல்லியதகடு; 'ஒற்றுமைப்படாத உலோகங்களை ஒற்றுமைப்படப் பற்றுசிட்டு விளக்கினாற்போல முதற்குறட்பாவின் இறுதிக்கண் ஒன்றும் இரண்டும் அசைகூட்டி உச்சரிக்கப்படும்'(யாப்பருங்கலக்காரிகை,செய்யுளியல் ௩-ம் செய்யுள் உரை.) என்னும் வாக்கியம் இங்கே அறியற்பாலது.

௯௬. உவளகம் - அந்தப்புரம்.

௯௯. பருப்பொருட்டாம் - ஸ்தூலமான பொருளையுடையதாகிய, நுண்பொருட்டாம் - நுண்பொருளையுடையதாகிய; 'பருப்பொருட்டாகிய பாயிரங்கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்' என்பதும், 'கொழுச்சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமாறுபோல' என்பதும் (தொல். பாயிரம், நச்சினார்க்கினியம்) ஈண்டு அறியற்பாலன; துன்னூசி - கலப்பையிலுள்ள ஓருறுப்பு.

௧00. அன்பு அடை வார்த்தை. அரியொரு பிறப்பு-பலராமாவதாரம். வன்படை - கலப்பை. இருபிறப்பு - மச்சமும் கூர்மமும்.

௧0௪. சங்கு - வரம்பின்பக்கம்.

௧௦௬. பாம்பு-கழனிதிருத்தும் பலகை.

௧௦௭. இளை - தலைக்காவல். மூலத்தளை - மூலபந்தம்.

௧௦௯. பன்முளை - பலமூங்கில்.

௧௧௦. விந்து - சுத்தமாயை. வைகரி - ஒருவாக்கு. மாயை - அசுத்தமாயை. அவ்வியத்தம் - பிரகிருதிமாயை. விந்து வைகரிமுதலியவற்றையும், மாயை அராகமுதலியவற்றையும், அவ்வியத்தம் முக்குணமுதலியவற்றையும் தந்தாற்போல, ஒருகால்

௧௧௧. பயம் - பிரயோசனம், நீர். செய்யுள் - வயல்களுள்.

௧௧௨. பிரபுலிங்கலீலை, மாயையுற்பத்திகதி, ௪௯-ம் செய்யுளைப் பார்க்க.

௧௧௩. நாறு - நாற்று.

௧௧௪. திருப்பனந்தாளிற் சிவலிங்கப்பெருமான், முதலில் நேராகத்தோன்றி அப்பால் தாடகையென்னும்மாதின்மாலையை அணிந்து கொள்ளுதற்குவளைந்து பின்பு குங்குலியக்கலையநாயனருக்கு நிமிர்ந்தருளியகதை ஈண்டுணரற்பாலது.

௧௧௫. எரண்டபுரம் - கொட்டையூர்.

௧௧௭. விது - சந்திரன்.

௧௧௮. குரவனில்-ஆசிரியன்போல.

௧௧௯. வீ - பறவை; வீ எழும்.

௧௨௦. காது வெம்பகை யென்பதற்குக் காதுகின்ற வெம்பகையென்றும், காதினது வெம்பகையென்றும் பொருள்கொள்க.

௧௨௧. காற்பகை, அரைப்பகையென்பன சிலேடை: காலினதுபகை, காலளவாகியபகை; இடையினதுபகை, அரையளவாகியபகை யென்பன பொருள்.

௧௨௨. ஏர் ஆம் பல் நீலம் - அழகு உண்டான பலவாகிய நீலப்பூ. ஆம்பல்கும் - நீரிற் பெருகிய. ஆம்பல் மாதர் - ஆம்பலென்னும் அரவினராகிய மகளிர்.

௧௨௩. குவலயம், புண்டரீகம், ஆம்பலென்பன சிலேடைகள்.

௧௨௪. பன்னல் - பஞ்சு.

௧௨௫. நுணலை - ஒருவகைத் தவளை; நுணலெனவும் வழங்கும்; "உடும்பு கொலீஇ வரிநுணலகழ்ந்து" என்பது நற்றிணை, ௫௯; "வரிநுணல் கறங்கத் தேரை தெவிட்ட" என்பது ஐங்குறுநூறு, ௪௬௮. நொள்ளைநாகு-குருட்டு நத்தை. கவைக்கால் - நண்டு.

௧௨௬. சின்னப்பூ-அடையாளப்பூ. கட்ட - களைந்த. ஆற்றுக் காலாட்டியர் - உழத்தியர்.

௧௨௭. குளிர்-நண்டு.

௧௨௯. கழுக்கடை-ஈட்டி. 'மரகதவுறை' என்று திருத்திக்கொள்க.

௧௩௦. பூமி பொன்னிற முடையதென்பர்; "பொன்பார் புனல் வெண்மை" (உண்மைவிளக்கம், ௬) என்பதனுலுணர்க. பாலி - பாலாறு. விரிஞ்சை - திருவிரிஞ்சிபுரம். அத்தலத்தில், திருமஞ்சனஞ் செய்கையில், திருமுடி எட்டாதது பற்றிக் குந்திக்குந்தி வருந்திய சிவசருமாவென்னும் ஆதிசைவச் சிறுவருக்காகச் சிவபெருமான் திருமுடியை வளைத்தருளினர். இவ்வருமைச் சரிதையை, டி விரிஞ்சைத் தலபுராணத்துள்ள பாலனுக்குத் திருமுடிவளைத்த சருக்கத்தாலுணர்க.

௧௩௧. மேக்கு - மேல். கிழக்கு - கீழ். குயம் - அரிவாள்.

௧௩௨. மண்டொடுகருவி-மண்வெட்டி. மின்னுர் குயம்-ஒளிபொருந்திய அரிவாள், மகளிருடைய கொங்கை.

௧௩௪. பக்கம் - இறகு. மாய்த்தோன் - இந்திரன். அரி-நெற்கதிர். ஆவி-தடாகம்.

௧௩௫. தானம் - தேவருலகம். எருமைக்கடாக்களுக்கு மேகங்கள் உவமை.

௧௩௬. வை - வைக்கோல்.

௧௩௭. குண்டை ஊர் தம்பிரானர்-இடபத்தை ஊரும் சிவபெருமான். குண்டையூர்க்கிழவர் - பரவையாரு

க்கு நெற்பொதி யளித்துவந்தவர். இண்டை - தாமரை.

கருகூ. தொழுதி, இராசி, குப்பை, சங்கம், கூட்டமென்பன ஒருபொருட் சொற்கள்.

கசo. திருவாரூரில், திருக்கோயில், தேவதீர்த்தம், செங்கழுநீரோடை இவை ஐவைந்து வேலிகளென்பர்; இந்நூல் மூன்றாவதுலீலை கக - ம்பாடல் பார்க்க; "அஞ்சனை வேலி யாரூ ரா தரித் திடங்கொண் டாரே" என்பது தேவாரம்; திருநா. "குழல்வலங்கொண்ட"-எ; "குளம் வாவிமதி, லைவேலியாந்திரு வாரூர்த் தியாகர்" என்பது திருவாரூர்க்கோவை.

கசக. நெய்தனிலமாக்கள் சுறாமீன் கொம்பை நாட்டிப் பூசிக்க, அதில்வருணன்தோன்றி அவர்களுக்கு அருள்செய்வானென்று பண்டைத் தமிழ்நூல்கள் தெரிவிக்கின்றன; "சினைச் சுறவின் கோடுநட்டு, மனைச்சேர்த்திய வல்லணங்கினால்" என்பது பட்டினப்பாலை, அசு - அஎ. திருவானைக்காப்புராணம், திருநாட்டுச்சிறப்பு, கூசு-ம் திருவிருத்தமும் இதனை நன்குபுலப்படுத்தும்.

கசஉ. பாக்கம் - நெய்தனிலத்தூர்; கடற்பக்கத்திலுள்ளதென்றபடி. விழைய -ஒப்ப. போந்து - பனை.

கசங. நாவாய் - கப்பல்; நாவையுடைய வாய்.

கசச. கொலை ஏ - (மன்மதனுடைய) கொலைப்பாணம்; என்றது நீலோற்பலத்தை. துற்ற - நெருங்கிய. அற்றம் - சோர்வு. மன்மதனுக்கு உடைவாள் தாழை. அவன்முரசு கடல். அவன்குடை சந்திரன். அவன்கொடி மீன். நெய்தனிலம் போர்செய்தற்கு உரிய இடமென்பது புறப்பொருணூற்கொள்கை.

கசரு. தம்பிரான்றோழர் - சுந்தரமூர்த்திநாயனார். தெய்வதவாவி - கமலாலயதீர்த்தம்.

கசசு. வண்டு - பிரமரமும் சங்கமும்.

கசஎ. மாம்போழ் - மாவடுவின்பிளவு. ஆகுஊழ் - வளர்ச்சிக்குக்காரணமாகிய ஊழ். முயல் - முயற்சி.

கருo. விடல் - விற்றல்.

கருக. அளி - வண்டு, அன்பு.

கருங. கொக்கனை - சங்கு.

கருச. கோடு - சங்கு.

கருரு. சண்பைநாவலர்-திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். 'தன்னை' என்றது நெய்தனிலத்தை; திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநனிபள்ளிக்கு எழுந்தருளியபோது அத்தலம் பாலையாக இருத்தலையும் அதனால் உயிர்கள்வருந்துதலையும் அறிந்து, அதனை நெய்தனிலமாகச் செய்தருளினரென்று பெரியோர் கூறுகின்றனர்; "பாலைநெய்தல்பாடியதும்" என்னுந் திருக்களிற்றுப்படியாரும் இதனை வலியுறுத்தும். கஉ.

கருகூ. பரல்முரம்பு-பருக்கைக்கற்களாலாகிய மேடு.

கருஎ. முடிவில்லாத வீரமாவது கல்லினிடத்தேமேவும் சிறப்பையுடையது; வீரர் போர்க்களத்திற் பின்னிடாது யுத்தஞ்செய்து இறந்தால், அவர்கள்பெயரையும் பெருமைகளையும் ஒருகல்லில் எழுதி அதனை நட்டு அவரை அதிற் பிரதிஷ்டிப்பித்துத் தெய்வமாகநினைந்து வழிபடுதல் இத்தமிழ்நாட்டுப் பண்டைவழக்கம்; இதனைப் புறநானூறு முதலியவற்றாலுணர்க. அத்தெய்வம் வீரனெனவும் அக்கல் வீரக்கல்லெனவும் வழங்கும்.

கருஅ. அகில் கள்ளியிலிருந்துஉண்டாவது.

கருகூ. கலை - கல்வினை. கொளா - கொண்டு.

கசுo. குறை - கொள்ளை. குறும்பு - பாலைநிலத்தூர்.

கசுக. சிவக்குறி - சிவலிங்கம்.

கசுஉ. அணவுதல்-அணுகுதல். குராமரத்தின்பூ பாவையாகக்கூறப்படும்; "நறும்பூங் குரவம் பயந்த, செய்யாப் பாவை கொய்யும்பொழுதே"

(ஐங்குறுநூறு, ஙஃசஃ) என்பதிஞனு முணர்க.

கசுங. கொற்றி-துர்க்கை. கோட்டம்-கோயில். வாகை - வெற்றிக்குரியது.

கசுச. ஆனி - குறைவு. தழல்மேனி எந்தை - சிவபெருமான்.

கசுரு. ஆய் - தாய்.

கசுசு. தந்த வரை வாரணம் - தந்தத்தையுடைய மலைபோலும் யானை. கானவாரணம் - காட்டுக்கோழி. இறுங்கு - சோளம். ஏதம் தப - துன்பம் நீங்க. ஐவனம் - மலைநெல். யானை, தினை, ஐவனம் இவைகள் குறிஞ்சிக்குரியன. கான்யாறு, கானவாரணம், இறுங்கு இவைகள் முல்லைக்குரியன.

கசுஎ. கடுவன் - ஆண்குரங்கு.

கசுஅ. வீழி - திருவீழிமிழலை. அத்தலத்தில் சக்கராயுதம் பெறுதற்குத் திருமால் சிவபெருமான்திருவடியில் தமது கண்ணைச் சாத்தினரென்பது அத்தலபுராணவரலாறு.

கசுகூ. வேழம் - மூங்கில், யானை. வில்-ஐசுவரமென்னும்வில். சென்னி-திருமால் தலை.

கஎ0. விடபம் - மரக்கிளை. தேத்தடை - தேனடை.

கஎக. கல் - மலை. தேக்குடம் - தேன்குடம்.

## திருநகரப் படலம்.

க. அண்டம் - சிலேடை. மறை முதல் தலமெனும் ஆரூர் - பிரணவ ஸ்தலமென்று கூறப்படும் திருவாரூர். மறைமுதல் - பிரணவம்; 'மறை முதற்றலம்' என்பர் பின்னும்; கஎ. "வேதமூலம் வெளிப்படும் ......... ஆரூர் மலர்ந்ததால்" என்பது பெரிய புராணம்; திருமலைச்சிறப்பு, ஙங.

ங. விராட்புருஷனுக்கு மூலாதாரஸ்தானமாதலின், திருவாரூர் மூலாதாரஸ்தலமென்று கூறப்படும்; "அண்டத் தனிப்புத்தேள், மூலா தாரமாதலினுன் மூலா தார மென்மொழிவார்" என்பது திருவாரூர்ப் புராணம், தலமகிமைச் சருக்கம், கஎ; "திருவள ராரூர்மூலம்" என்பது திருவிளையாடல், வெள்ளியம்பலத் திருக்கூத் தாடியபடலம், கூ.

கூ. மாயோன் கண்மலர் முதலியவைகள் மணக்கும் செந்தாமரையென்றது சிவபெருமான் திருவடிகளை. சுந்தரமூர்த்தி நாயனுர் பொருட்டுப் பரவையார்வீட்டிற்குச் சிவபெருமான் தூதாக நடந்தருளியவீதி செந்தாமரைநாறிய திருவீதியென வழங்கும். மற்றவீதிகளாவன: அடிமுடிநேடிய திருவீதி, பொன்பரப்பிய திருவீதி, புகழாபரணத்திருவீதி முதலியன; இருபத்தைந்து வீதிகளென்று சொல்லுதலுமுண்டு.

எ. பிறக்க முத்திதருவதாதலின், 'உதித்தவ ருதித்திடா வாரூர்'என்றுர்.

அ. பளகு - குற்றம். இருந்தாடழகர் - தியாகராசர்.

கூ. பறை-இறகு. புருடவாகனன் - குபேரன்.

க0. மால் - திருமால். மலர்மேற்றிரு திருநலமுறப் பெருக்கி. கலிக்கு அஞ்சிய சில முனிவர்வந்து அதன்றுன்பமொழிந்து தவஞ்செய்து மேம்பட்டமையின், 'கலிவலி முருக்கி' என்றுர்.

கக. ஆலம் - விடம், நீர். இத்தலத்தின் வடக்கும் தெற்கும், காவிரியினின்றும் பிரிந்த இரண்டு ஆறுகள் உள்ளன. அவற்றிற்கு இக்காலத்தில் வழங்கும் பெயர்கள், முறையே மணிமுத்தாநதி(சுக்காறு), கபிலநதி(ஓடம் போக்கி) யென்பன.

கச. காட்டை - திசை.

கஅ. சடை - வேர்.

உக. இத்தலத்தில், தடாக முதலிய நீர் நிலைகளிலும் ஆறு முதலிய வற்றிலும் நீர் மிகவும் குளிர்ந்ததென்பதை, 'திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் தேவாரங்களுள், "பருக்கையானை" என்னும் பதிகத்தில் பல செய்யுட்களில், 'அந்தணூரூர்' என்று கூறியிரு

த்தலும் இங்ஙனமே மற்றையோர் கூறியிருத்தலும் வலியுறுத்தும்.

உரு. கம்பிக்காதழகர் - தியாகேசர்.

உசு. சிவந்தபோது - கோபித்தகாலம், புஷ்பித்த காலம்.

உஅ. ஆவி - குளம், உயிர்.

உகூ. கங்காநதியின் மேல் தீபங்களை விடுத்தல் வடநாட்டு வழக்கம். விமலன் - தியாகேசர்.

ஙக. தெய்வப்பிலம் - இத்தலத்தில் புற்றிடங்கொண்டார் கோயிலுக்குத் தென்கீழ்த் திசையிலுள்ள நாகபிலம். அதில் எழுந்தருளிய ஆடகேசரைத் தரிசித்துப் பூமியிலுள்ளார் எல்லோரும் சுவர்க்கத்தை அடைந்தமையால் அவ்வுலகம் இடமில்லாமற் போனதை யுணர்ந்த இந்திரன் அரதனசிருங்கம் என்கின்றமலையொன்றால் மேற்கூறிய பிலத்தை அடைத்தனனென்பது வரலாறு. இதனை, திருவாரூர்ப் புராணத்துள்ள ஆடகேச்சுரச் சருக்கத்தாலுணர்க.

ஙஉ. வாரி - யானைக்கூடம். ஒருவரை - சக்கரவாளகிரி.

ஙச. படலை - தழைவிரவித்தொடுத்தமாலை. குளகு - விலங்கினுணவு.

ஙசு. கால் - காற்று, அடி, ஒரு சிற்றெண். கடுப்பு - வேகம்.

ஙஎ. உதியர்கோன் - சேரமான் பெருமாள் நாயனார்.

ஙகூ. உழை - ஒருபண். கிள்ளை - குதிரை, கிளி. இக்கவி, நைடதம், அன்னத்தைத் தூதுவிட்டபடலத்துள்ள, "வண்டார்வஞ்செய்து" என்னும் கூரு - ம் செய்யுளின் கருத்தை அனுஸரித்தது.

சo. சதமகனிழைத்தபுற்று - இந்திரனுண்டாக்கியபுற்று; இந்நூல் நைமிசப்படலம் சச - ம் செய்யுளைப் பார்க்க; "அகலிரு விசும்பிற் கோமானாக்கிய புற்று" என்பது திருவாரூர்ப் புராணம், தலமகிமைச் சருக்கம், கச. அவனி வையம் - பூமியாகியதேர். வைதிகப் பாகன் - பிரமனாகிய பாகன். வல்லா - வல்லமையில்லாத.

சக. விஞ்சை - வித்தை. வெண்மணி பறபல் நத்தினும் படும் - முத்துக்கள் பலபலவாகிய சங்குகளிலும் உண்டாகும். இத்தலத்தில் நளன்வந்து பூசித்ததைத் திருவாரூர்ப் புராணம், நளச்சருக்கத்தாலுணர்க.

சஉ. போகுயர் - மிக்குயர்ந்த.

சங. சில்லி - தேருருளை.

சச. குயவு - தேர்.

சசு. கல்லூரி - கல்விச்சாலை.

சஎ. முன்னொருகாலத்தில் திருமாலுக் குண்டாகிய செருக்கை இத்தலம் தீர்த்ததென்பர்; இதனைத் திருவாரூர்ப் புராணத்துள்ள வன்மீகநாதச் சருக்கத்தாலுணர்க. 'மால் செருக்கறக்கருக்கி' என்றார் முன்னும்; கo.

சஅ. இராமரும் அருச்சுனனும் பூசித்தார்களென்பது இத்தலபுராணவரலாறு.

சகூ. புலிப்போத்து - ஆண்புலி. மந்தனம் - யானைமுகபடாம். பண் - குதிரைக்கல்லணை. அரணம் - கவசம். சிரகம் - தலைச்சீரா.

ருo. முனி - வில். வண்டு - அம்பு. வசி - கூர்மை. கப்பணம் - யானைநெருஞ்சிமுள் வடிவாக இரும்பாற் செய்தகருவி.

ருரு. சிவிறி, பந்தென்பன நீர்வீசுங்கருவி விசேடம்.

ருசு. அலந்தாரலர் - மெலியாதவராய்.

சூo. தாய் - தாவி.

சூக. பவனவெண்சே-இடபராசி.

சூங. சூழி - தடாகம். உவளகம் - தடாகம், அந்தப்புரம்.

சூச. நீர், சிலேடை; திருவருணைக் கலம்பகம், சூங - ம்பாடல் பார்க்க. ஐம்பூதங்களுள் அப்புவின் குறி தாமரைப்பூ. இதனை, "குறிகுலிசங் கோகனகம்" என்னும் உண்மைவிளக்கத்தாலுணர்க; எ.

சூரு. தடா - தடுக்கப்படாத. முன்னொருகாலத்துச் செருக்குற்றிருந்த சுக்கிரனை வைரவக்கடவுள் விழுங்கினாரென்பது சிவபுராணகதை.

௬௬. தகர்ப் பவனம்-மேடராசி. நாரதமுனிவர்செய்த யாகத்தில் ஆடு தோற்றியதைக் கந்தபுராணத்துள்ள தகரேறுபடலத்தாலுணர்க.

௬௭. ஆரூரர்-திருவாரூரிலுள்ளவர்; சுந்தரமூர்த்திநாயனார்.

௭௦. சோதினி - துடைப்பம். கண்ணன், பாரிசாதத்தைப் பூமியிற்கொணர்ந்தது இங்கே அறியற்பாலது.

௭௧. முசலி - பலராமர்.

௭௨. சுதன்மை - இந்திரனது அவைக்களம். வைசயந்தம்-அவன்உப்பரிகை. வசந்தம்-அவனுடையமாடம்.

௭௬. விடங்கம் - கொடி.

௭௭. தளிமம் - மெத்தை.

௭௯. குசேசயம் - தாமரை.

௮௦. வேந்தன்பின்னாய் - இந்திரன் தம்பியாகி; உபேந்திரனாகி.

௮௧. பொற்றாலம்-பொற்பனை. தருமபுத்திரருடைய இராசசூயயாகத்திற்கு விபீஷணன் பொற்பனைமரங்கள் கொடுத்தானென்பது பாரதகதை.

௮௨. காகதுண்டம்-அகில். வாரி - கதவு. வல்லி - விலங்கு.

௮௫. ஆகாயம் புகைநிறம், மண் பொன்னிறமுடையனவென்பர்; "பொன்பார் புனல்வெண்மை பொங்கு மனல்சிவப்பு, வன்கால் கருமை வளர் வான்றூமம்" என்பது உண்மை விளக்கம், ௬.

௮௬. நாலுதல் - தொங்குதல்.

௮௭. ஊர்தி - விமானம்.

௮௮. கூந்தல் - கூநீதற்கமுகு. காம்பு - பட்டு. நிலைத்தேர்மின்னாருக்கு - நிலைத்தேராகிய மகளிருக்கு.

௮௯. இடைநகரம்-நடுநகரம், மெய்யெழுத்துக்களுள் நடுவேயுள்ள தந்நகரம். 'ந' என்பதற்குச் சிறப்பென்பதுபொருள்.

௯௧. மாதிரிகை-மாதிரி.

௯௨. இந்திரன் பிலத்தையடைத்தவரலாற்றை இப்படலம் ௩௧-ம் செய்யுட் குறிப்பாலுணர்க.

௯௪. பரவையுண்மண்டளி - பரவையார் வழிபட்டுவந்தஸ்தலம்; அதில் எழுந்தருளிய மூர்த்திக்குத் தூவாயனென்பது திருநாமம். இச்செய்யுளிலுள்ள 'பரவையுண்', 'தூவாயர்' என்னுமொழிகள் ஆராயத்தக்கவை.

௯௫. கரமலர் - கையாகியமலர். வீணை-கடல். திருமால் மனுவென்னும் அரசனுடைய கைப்புனலில் மச்சமாகத்தோன்றியபொழுது அவ்வரசன் அதனை ஆற்றில்விடப் பருத்து, அப்பால் அவன் கடலில்விட மிக அதிகமாகப் பருத்துக்காட்டினனென்பது பாகவதபுராணவரலாறு.

௯௬. ஓக்கம் - உயர்ச்சி.

௯௮. அமை - மூங்கில்.

௯௯. சோசம் - மதிலுறுப்பு. பகைவரை மகளிராக்கி அவர்கொண்டு விளையாடுதற்குக் கோபுரவாயிலிற் பந்தும்பாவையும் தூக்குவர்; இதனை "வரிப்புனைபந்தொடு பாவை தூங்கப், பொருநர்த்தேய்த்த போரரு வாயில்" என்னுந் திருமுருகாற்றுப்படையாலுணர்க; ௬௮-௬௯. "பந்தும் பாவையும் பசுவரிப்புட்டிலும் பலவுஞ்சென் றெறிகிற்கு, முந்தை மாதரை யியற்றுபின்றைமொய்ப் பகழிவா யிலிற்றூக்கி" என்றார் கச்சியப்பமுனிவரும்; திருத்தணி. சீபரி. ௫௮.

௧௦௦. உடு-அகழி. கடகம் - மதில்.

௧௦௧. பொறி - செல்வம்.

௧௦௨. ஓவம்-சித்திரம், ஓழியேம்.

௧௦௫. பொதுநிசழ்பு - பொதுநிகழ்ச்சி. ஊருணி - ஊராராலுண்ணப்படும் நீர்நிலை.

௧௦௬. மற்றையோர்செய்யும் வாணிகத்திற்கு இவருடைய வாணிகம் வேறாகவுள்ளதென்றபடி.

௧௦௮. விரத்திவந்தவர்-துறவிகள்.

௧௧௦. உரியகாரிகையை - மனைவியை. 'காரிகை' என்னும்பெயரிற் கடையில்லாதது காரி; அது விடம். வெறுக்கையர் - பொருளையுடையவர்; ஒருமொழி; வெறுங்கையர் - பொருளில்லாதகையினர்; தொடர்மொழி.

௧௧௨. இளைசைமாறர் - இளையான்குடிமாறநாயனார்.

௧௧௫. தனை - அளவு. அதில்-சமானமென்ற சொல்லில்; மூதல் குறைந்தது - மானம்.

௧௧௬. ஓர் பாணர்க்கா - பாணபத்திரருக்காக. கைதவன் - பாண்டியன். பண்டாரம் - பொன்னறை.

௧௧௭. செஞ்சொல் - நல்ல வார்த்தை, செவ்வியநெல்.

௧௧௮. கந்தி - கமுகு.

௧௧௯. இச்செய்யுள், "சென்றிரந்தவர்கொண் டேகுஞ் செல்வநீ ணிதியங் கண்டோ, ரொன்றறக் கொடுத்தா னென்பா ருயர்சரக்கறையி னீடும், பொன்றிரட் சும்மைகண்டோர் பொலிவினிற் குறைவுகாணு, தின்றிவ னீந்த தற்ப மிருப்பது மிகுதியென்பார்" (இலக்குமிதீர்த்தச் சருக்கம், ௨௬) என்னும் சேதுபுராணச் செய்யுளின் கருத்தைத் தழுவியது.

௧௨0. மூடை - மூட்டை. ஆடாதாட வல்லவர் - தியாகராசமூர்த்தி. ஆழிப்பொற்றேர் - அவரூருந்தேர்.

௧௨௩. செங்கதிர் - செவ்விய கிரணங்களை; உள் தரித்திடு - தம்மிடத்தே தரிக்கப்பெற்ற; 'குருட்டரிப்ப ஞர்க்குங் குபேர னென்றுபேரோ' (ஒழிவிலொடுக்கம், பொதுவிலுபதேசம், ௫) என்றபடி குருட்டரிப்பான் குபேரனென்று பெயர்பெறுதல் எக்காலத்தும் எவ்விடத்து மில்லையாயினும் நிறைசெல்வத் திருவாரூர் வீதியகஞ் செல்வானுயின் அவனும் குபேரனென்று பெயர் பெறுவதற்கு ஐயமில்லையென்று செல்வப்பெருக்கம் கூறினர்.

௧௨௬. இச்செய்யுளில் ஐம்பூதங்களின் நிறங்களைப் புலப்படுத்திப் பொன்மாட முதலியவைகள் முறையே கூறப்பட்டிருத்தல் காண்க.

௧௨௭. ஏகபாதப் புரவலன் - ஏகபாதருத்திரர்; இவருக்குப் பாதமொன்று, தலைமூன்று; "கண்ணுு தற்பிரான் மருங்கிரு கடவுளர் கப்புவிட்டெனத்தோன்றும், வண்ணமுத்தலைப்படை" என்பதனுலு முணர்க; திருவிளையாடற் புராணம், திருமணப் படலம், ௧௧௧.

௧௨௮. மொய் - வலி. பாடலத்தார் - குதிரையின் கிண்கிணிமாலை.

௧௨௯. பூ - பூமி, மலர்.

௧௩0. துணைபவர் - ஒப்பவர்.

௧௩௧. எங்கள் குருபர னென்றது தியாகராசனை.

௧௩௨. அநபாயன் - ஒருசோழர்; இவர் பெரிய புராணம் செய்வித்தவர்.

௧௩௪. அப்பெயர் - அதிதியென்பது; அதன்விகுதிதீர்ந்து ஆம் துதி தரு பெயராள் - அதிதியென்பவள்; அவள் சுதர் - தேவர்கள்.

௧௩௫. தேக்கமழ் - தேன்கமழும்.

௧௩௬. தண்ணிய முளரி - குளிர்ந்த தாமரைப்பூ. வெம்மை அண்ணிய முளரி - வெப்பம்பொருந்திய நெருப்பு. நீண்முளரி - நீண்ட காடு. கண்ணிய முளரி - கருதிய ஓமவிறகு. முளரிவாழ்க்கைப் புரவலன் - பிரமர்.

௧௩௮. வேதம் - பொது; ஆகமம் - சிறப்பு.

௧௪0. திருவாரூர்த் திருக்கூட்டத்தார் இப்படியே பலராலும் பாராட்டப்பெறுவர்; "திருவா ரூரிற் றிருக்கூட்டத்திற், றமிழ்க்கிலக் காகிய வைத்திய நாதன்" என்பது, இலக்கணக்கொத்து, பாயிரம், எ.

௧௪௨. கடாய் - வினவி. விடுத்து - விடைகூறி. தடாத - தடைப்படாத. அறமுதனன்கினும் தாழ்வுபடாத காப்பியம் - பெருங்காப்பியம்.

௧௪௩. உலோகாயதன் - ஒருவகை மதவாதி. முப்பொருள் - பதிபசுபாசம். சாத்திரபாடம்-சைவநூற்பாடம்.

௧௪௫. ஆசு அற்ற - குற்றமற்ற.

௧௪௭. கழுநீர்த்தொடையர் - தியாகராசர்.

௧௫௧. தளவு - முல்லை. பிளவின் ஊறியகாய் - ஊறுகாய்கள். யாவரும் அருந்துசாலை - அன்னசத்திரம்.

௧௫௨. சந்து - சந்தனம். வெறுப்ப - மிக.

௧௫௩. பாகு - பாக்கு. இலை - வெற்றிலை.

௧௫௪. ஆசினி சிறியதென - ஆகாயம் சிறியதென்று சொல்லும்படி.

௧௫௫. புகலுகோ - புகலுவேனோ. உதிவளம் - உதிக்கின்ற வளம்.

௧௫௬. துணங்கறல் - இருள்.

௧௫௭. சேணி - ஏணி.

௧௫௮. அளிந்தம் - கோபுரவாயிற்றிண்ணை.

௧௬0. தேவாசிரயமண்டப மெனவும் வழங்கும். இச்செய்யுளின் பின்னிரண்டடிகள், "கூடுமன்பினிற் கும்பிடலேயன்றி, வீடும்வேண்டா விறலின் விளங்கினார்" (திருக்கூட்டச்சிறப்பு, ௮.) என்னும் பெரிய புராணச் செய்யுளைத் தழுவியது.

௧௬௨. வெதிர் எழும் - மூங்கிலிற்றோன்றிய. ஸ்ரீ வன்மீக நாதரைச் சூரியன் பூசித்து வரம்பெற்றதைத் திருவாரூர்ப் புராணத்துள்ள சூரியலிங்கச் சருக்க முதலியவற்றாலுணர்க.

௧௬௩. கட்செவி - பாம்பு. சவி தகை ஆவரணம் - அழகையும் பெருமையையுமுடைய பிராகாரம்.

௧௬௬. சோதிவிமானம் - ஒளியையுடைய விமானம்.

௧௬௭. தேவசிந்தாமணி, தியாகசிந்தாமணி, சிந்தாமணி யென்பன தியாகராசருடைய திருநாமங்கள்.

௧௬௮. கால் - காற்று.

௧௬௯. தியாகராசப்பெருமாளென்றும் வழங்கும்.

௧௭௧. சுத்ததத்துவங்கள் ஐந்தாவன: சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவமென்பன. சுத்தமத்தள முதலிய ஐந்து வாத்தியங்களாவன: சுத்தமத்தளம், தாளம், எக்காளம், திருச்சின்னம், சங்கமென்பன: "மத்தளங்க டாளங்கள் சின்னம் வலோகளுட, னெத்தவெக்கா ளங்க ளுடன்குமுற" என்பது திருவாரூருலா, ௩௭௩. இச்செய்யுளிலுள்ள தாம் என்பது, படர்க்கைப் பெயராகக்கொள்ளப்படுவதன்றி மத்தளத்தியாகிய "ப்ராo" என்னும் ஒலிக்குறிப்பாகவும் இங்கே கொள்ளற்பாலது; "விடஞ்சூழரவினிடை நுடங்க மின்வாள் வீசிவிளையார் வேங், கடஞ்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடு மாதங்கி, வடஞ்சேர் கொங்கை மலை தாந்தாம் வடிக்கண் ணீல மலர்தாந் தாந், தடந்தோளிரண்டும் வேய்தாந் தா மென்னுந் தன்கைத் தண்ணுமையே" (யாப்பருங்கலக்காரிகை, செய். ௯ - ம் கலித். உதா.) எனவும், "அல்லம ரிவர்தாந் தாமென்றறிதரவறிதிராமற், சொல்லுக வெனவ டிக்குந் தோற்றம்போன் மத்தளத்தை, வல்லவ னறைத லோடும்" (பிரபுலிங். மாயைகோலா. ௨௯) எனவும் முன்னோர் பிரயோகித் திருத்தல்காண்க.

௧௭௫. தியாகேசருடைய பக்கத்துள்ள தேவியின் திருநாமம் தொண்டியென்று இச்செய்யுளால் தெரிகின்றது; திருநாவுக்கரசுநாயனாரருளிச்செய்த "கொக்கரைகுழல்" என்னும் பதிகத்தில், ௭-ம் செய்யுளிற் கொண்டியென்னும் பெயர்வந்துள்ளது.

## நைமிசப் படலம்.

௧. தூயது அன்மையினும் - தூய்மையையுடைய பொருளல்லாத வற்றிலும். வெம்மையும் தன்மையுமுடைய பரிதி.

௨. மடங்கல் - நரசிங்கம். புள் - சரபம். பொற்கண்ணன் - இரணியாக்கன். வன்றி - ஆதிவராகம்.

௩. புற்றினிடையே சிவபெருமான் சோதிலிங்கமாகத் தோன்றி வானுற வளர்ந்தருளினரென்பது வரலாறு. இதனைத், திருவாரூர்ப்புராணம், வன்மீகநாதச் சருக்கம், ௩௬ - ம் செய்யுள் முதலியவற்றாலுணர்க.

௪. பாகற்கனி - பலாப்பழம். தே - தெய்வம்;. என்றது உருத்திரரை.

௫. தன்னம் - அற்பம். கொடிறு - கன்னம். விள - விளாமரம். இதில், "ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங், கூன்கைய ரல்லாத வர்க்

கு" என்னும திருக்குறளின் கருத்தை விரித்து விளக்கியிருத்தல் காண்க.

சு. தம்பெயர்ப்பொருள் - சோகத்தை நீக்குவதென்பது. கயற் பதாகையன் - மன்மதன். திருக்கூவப்புராணம், நைமிசாரணியச்சருக்கம், எ-ம் செய்யுளைப்பார்க்க. அருஞர் - துன்பம். முருகு அசோகம். வாசனையையுடைய அசோகமரம். மற்று அவர் - அருகரும், மகளிரும், மன்மதனும். அசோகமரம், உத்தம மகளிர் உதைக்க மலர்வது.

எ. குரவமரம், உத்தம மகளிர் தழுவ மலர்வது; எழிலைப்பாலைமரம் அவர் நட்புக்கொள்ள மலர்வது.

அ. ஐம்முகத்தொருவன்-சிவபெருமான். அவர் திருக்கரத்திற் கொண்டருளிய பொருள்களுள் மாதுளங்கனி ஒன்று.

கo. தமது உரு - மயில்வடிவமும் குயில்வடிவமும். கொண்டலூர்தி - இந்திரன். மருத்தனென்னும் அரசனுடைய யாகசாலைக்கு இராவணன் சென்றபொழுது அங்கே வந்திருந்த இந்திரன் அச்சமுற்று மயில்வடிவங்கொண்டானென இராமாயணம் உத்தரகாண்டத்திலும் தக்கனுடைய யாகசாலைக்கு வீரபத்திரக்கடவுளெழுந்தருளியபொழுது அங்கே வந்திருந்த இந்திரன் குயில் வடிவங்கொண்டு ஓடினனெனக் கந்தபுராணத்திலும் சிவியென்னுமிந்திரன் தன்னுடைய செல்வம் முழுவதையும் வெறுத்து நைமிசவனத்தையடைந்து தவம்புரிந்து முத்திபெற்றனனென்று காஞ்சிப்புராண முதலியவற்றிலும் கூறியிருத்தல்காண்க; திருக்கூவப்புராணம், நைமிசாரணியச்சருக்கம், உ - ம் செய்யுளைப் பார்க்க. தம்பெயர்கொள் மாதவன் - சுகர். சுகம் - கிளி.

கக. பதம் - பதவி, சோறு.

கஉ. பெருகுஅலை-பெருகுகின்ற அலைகளையுடையகடலை. கால் கருகலை உருது எழுப்பி - காற்றுக் கெடுதலையடையாதவண்ணம் சுழுமுனைநாடி வழியேயெழுப்பி. சருங்கலை - கருங்கல்லை. ஒருகலை - ஒப்பற்றமான். வானத்துஒளிர்கலை - பிறை. முடிவைத்தார் வாய்வருகலை - வேதாகமங்கள். வற்கலை - மரவுரி.

கசு. ஐகமென்னும்தொடர்மொழியிலுள்ள நிலைமொழிவருமொழிகளுக்குப்பொருள் முறையேதோன்றுதல் ஒடுங்குதலென்று கூறுவர் வடமொழிப்புலவர். உதித்தொடுங்குகின்றசூரியன் சகம் உதித்தொடுங்கு மென்பதையும், வளர்தல் தேய்தல் ஒன்றுமில்லாமற்போதல் ஆகியமூன்றையுமுடைய சந்திரன் சகபோகம் வளர்தல் தேய்தல் ஒன்றுமில்லாமற்போதல் ஆகியமூன்றையுமுடைய தென்பதையும் காட்டுகின்றனவென்றபடி; "தேய்த லுண்மையும் பெருக லுண்மையு, மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையு, மறியா தோரையு மறியக் காட்டித், திங்கட் புத்தே டிரிதரு முலகத்து" என்பது புறநானூறு, உஎ.

கஅ. முதலை - சிவத்தை.

கக. மாசு அடையார். யோகு உடையார் - யோகத்தையுடையவர். நாவலம் கெழு படையார் - நாவாகிய வெற்றிபொருந்திய ஆயுதத்தையுடையவர்.

உங. கோதனம் - பசுக்கன்று.

உச. பட்டம் - நீரோடை.

உரு. இனன் - சூரியன்.

உசு.* மனச்செம்பொன் - மனமாகிய செவ்வியபொற்றகடு. மனமாகிய பொன்னில் தாளாகிய மாணிக்கத்தைக் கலக்கவைத்தோய். கூற்று - வார்த்தை, இயமன்.

உஎ. நாவாய் - கப்பல், நாவையுடைய வாய்.

உக. ஓத்து - வேதம்.

ஙஎ. நீர் ஊர் - நீர் பரந்துசெல்கின்ற. கார் ஊர் - மேகங்கள் ஊர்ந்து செல்கின்ற. மாடத்தையும் மறுகையுமுடைய. போர் ஊர் கணை - போர் செய்தலையுடைய அம்பு. நிலம் புரி - உலகத்தார் விரும்புகின்ற.

௩௯. இடை கடைப் பொருள் போல் - மலைபோல். தோற்றம் - பலராலும் அறியப்படுகை. ஆதியந்த நடை - கலைகளினடையை. ஆதிநடுப் பொருள் 'கம' என்பதன் பொருள்; அஃதாவது நிறைவு.

௪௧. கமலம் - தாமரை, நீர். சங்கம் கமலம் ஆம்நிதி - சங்கநிதி பதுமநிதி. தேவதீர்த்தத்தி லாடுவோர், முறையே குபேரன், இந்திரன், பிரமன், திருமாலாவார்கள்.

௪௨. மெய்யன்பர் - தண்டியடிகளுயனார். இவருக்கு விழிப்பையும் சைனர்களுக்குக் குருட்டுத் தன்மையையும் கொடுத்த சரித்திரவிரிவைப் பெரிய புராணத்துள்ள தண்டியடிகள்நாயனார் புராணத்தாலறிக.

௪௩. பூசையைக்கைக் கொண்டு கருப்பையைச் சாராதொழிந்தோரென்க. பூனையைக் கைக்கொண்டு எலியைச் சாரா தொழிந்தோர் என்பது மற்றொரு பொருள்.

௪௪. களம் கறையான்இயற்ற - இடத்தைக் கறையான்கள் செய்ய. போகிவாழ்வது-பாம்புவாழ்வது. போகி ஆற்ற - இந்திரன் இயற்ற. களம் கறையான் வாழ்கின்ற - கண்டத்தில் விடத்தையுடைய சிவபெருமான்எழுந்தருளி யிருக்கின்ற; இதனால் மற்றைப்புற்றிற்கும் இதற்குமுள்ள வேற்றுமை கூறினர். அன்பு உற்று - அன்புமிகுத்து. இலிங்கம்பல்ல புற்றைச் சூழுமென்க.

௪௫. வாதராயணன்- வியாதமுனிவர்.

௪௮. ஆம் - நீர்.

## புதலாவது.

க. வன்றொண்டை - வலிய துதிக்கை. பந்து - நீர்வீசுந்துருத்தி. நின்று ஒண் தையலர் ஆடும் - நின்றுகொண்டு ஒண்மையையுடைய மகளிர்கள் விளையாடுகின்ற. இன்தொண்டை வாய் - இனிய கொவ்வைக்கனிபோலும் வாயையுடைய.

உ. நன்கு ஆம் - உச்சரிப்போர்களுக்கு நன்மைகள் உண்டாகின்ற. சி முதல் ஐந்தே - சிகாரத்தை முதலாகக்கொண்ட ஐந்தெழுத்துக்களே; பஞ்சாக்ஷர மந்திரமே. நடு கொன் காஞ்சி-இடையில் பெருமைபொருந்திய காஞ்சியென்னும் ஆபரணத்தை யணிந்த. மென்காஞ்சி காமரப்பண்-மென்மையாகிய காஞ்சி, காமரமென்னுமிசைகளை.

௩. மின் நகு அரம் பொரு. மன் அகரம்போல் - நிலைபெற்ற அகரவுயிர்போல. தன்ன கரங்களை - தன்னுடைய கைகளை.

௪. விரும்ப அலரும். பருப்பொருள் - தூலப்பொருள். கவல் அரு - கவலுதலில்லாத.

௫. முன்பால் - மார்பு. பின்பால்- முதுகு.

எ. ஊழ் - சூரியன்.

அ. எய்யாத - அறியாத.

௯. முளை - பிள்ளை.

கo. உரை - புகழ்.

கக. புத்திரன் - புத்தென்கிற நரகத்தினின்றும் நீக்கிக்காப்பவன்.

க௫. பிரான் - தியாகேசர்.

க௯. குடந்தம்பட்டு - வழிபட்டு; வணக்கம்பட்டு என்றுமாம்; "குடந்தம்பட்டுக் கொழுமலர்சிதறி" என்பது திருமுருகாற்றுப்படை, உஉ௯.

கஅ. புரியும் - விரும்புகின்ற.

உo. பெருந்தேவி - பட்டம

உ௫. ஓடியெறிதல் - வலைகட்டுவதற்குத் தடையாகவுள்ள மரக்கிளைகளை ஒடிய எறிதல். பார்வை - பார்வை மிருகங்கள்.

உ௯. சல்லியம் - முட்பன்றி. வல்லியம் - புலி.

உஎ. தோகை - வால்.

௩க. புட்சரபம் - சரபப்புள். புல் - புலி. அஃது - அப்புலி.

௩௪. படி - திருவுருவம். படித்தானை மன்னவன் - பூமியையும் சேனையையுமுடைய அரசன்.

ரு௫. முதலிரண்டடிகள், திருக்கூவப்புராணப்பாயிரத்திலுள்ள, "கூர்கொண்ட கனன்மழுமா னுண்மையும்பெண் மையுமாய கூற்றிற்கேற்பச், சீர்கொண்ட வலனிடங்கொ ணுயகனை" என்னுஞ்செய்யுளைத்தழுவிவந்திருத்தல்காண்க. எண்-வலி. பொறிசேர் அரிக்கு - திருமகள் சேரப்பெற்ற திருமாலுக்கு; புள்ளிகள் பொருந்திய வண்டுகளுக்கென்பது மற்றொருபொருள். எகினம் - அன்னப்பறவை.

ருசு. "பகருந்திப் பியபோக நீத்தரசபோகமனு பவிப்போ னுகி" என்பர் பின்னும்; நான்காவது, க; "அமரர்நா டாளாதே யாரூராண்ட, அயிராவணமே" என்பது, திருநா. தேவாரம்; "உயிராவணம்" - க.

ருஅ. பீள் - கருப்பம். அகவை - பிராயம்.

ருகூ. விண் தாரணியும் - விண்ணுலகும் மண்ணுலகும்.

## இரண்டாவது.

உ. பொருநர் - சேனைத்தலைவர்.

ரு. நாந்தகம் - கத்தி. சேதிமம் - கோயில்.

சு. வல்லே - விரைவாக.

௫. "புத்தி" என்பது இங்கே உடன் பாட்டுக் குறிப்பையுணர்த்துவது. உத்தமாங்கம் - தலை.

சு. கஞ்சுகம் - சட்டை. ஏகாசம் - உத்தரீயம்.

எ. கபிலையாறு - கபிலரென்னு முனிவரால் வருவிக்கப்பெற்ற ஆறு; இஃது இக்காலத்து ஓடம்போக்கியென வழங்கும்.

அ. இஞ்சி - மதில்.

கo. தம்முடைய ஆசாரியஸ்தானமாகிய திருவாவடுதுறை ஆதீனமரபு, 'சைலாதிமரபு' என்பவாதலால், திருநந்திதேவரை இந்நூலாசிரியர், 'எங்கள் குருபரன் மரபிற்கெல்லா முதற்குருவாய கோமான்' என்றார்.

கஉ. மாதுலன் கொழுநன் இன்றி- மாமனும் கணவனும் இல்லாமல்.

கங. நீதிகுதுகலனென்பது சோழராசனுடைய மந்திரியின் பெயர்.

கச. முடங்கல் - திருமுகம்.

## மூன்றாவது.

க. மத்தகம் - தலை.

உ. இருபத்தைந்தினுக்கும் அப்பால் இறையவன் - இருபத்தைந்து தத்துவங்கட்கும் அப்பாலாகிய தலைவர்; "ஐயைஞ்சி னப்புறத் தானு மாரூரமர்ந்த வம்மானே" என்பது, திருநா. தேவாரம்,"பாடிளம் பூதத்தினானும்",

கo. இருபத்தைந்துடன் ஏழாய இலக்கண மேனி - முப்பத்திரண்டு இலக்கணத்தையுடைய திருமேனியானது; மூர்த்தி இருபத்தைந்தையும் - அவருடைய திருமேனிகளாகிய இருபத்தைந்து மூர்த்தங்களையும். மேனிவனப்பால் வென்றது. இருபத்தைந்து அகவை-இருபத்தைந்து பிராயம்; "தலையானை யைந்தினப் பாலானை யைந்து மெய்ச்சாமி" என்றார் சீகாழிக்கோவையிலும்; கருஅ.

ரு. இறையை ஒப்ப வயங்கலாலே- சிவபெருமானைப் போலே திருமேனியும் உறுப்புக்களும் உவமையில்லாதனவாக விளங்குதலாலே.

சு. தேவதாருவனத்திற் கொண்ட திருமேனியிலும் இது சிறந்ததென்றபடி.

௫. விடங்கன் - பேரழகர்.

சு. எள்ளும் - இகழ்வான்.

அ. அடியார்க்கும் ஆடை - கால்களாற் கழற்றும் ஆடை; "அரையிற் சரணத் துரியாடையின் மீது" (கண்ணப்ப. சுக) என்பது பெரியபுராணம். மன்சேய் - நரசிங்கவளவன்.

கூ. பொருபவர்க்கு நீறும் போற்றுபவர்க்குச் சந்தனமும் உவமை.

கக. எவரும் அறிதர. இத்தலத்தில் செங்கழு நீரோடை ஐந்து வேலிநில அளவுள்ளது; இது தேவாரங்களில் ஆம்பலம்பொய்கையென வழங்கும்; இந்நூல் திருநாட்டுப்படலம், கசo-ம் செய்யுட்குறிப்பைப் பார்க்க.

கஉ. சிவபெருமானுடைய முகக்கண்களில் வலக்கண் சூரியன் இடக்கண் சந்திரன்.

கங. புரிவளை - முகம்சுரிந்த சங்கத்தாலாகிய குண்டலம். அது பொலிதரும் இடம், காதுகள்.

கச. மந்தணம் - இரகசியம். ஆலம் - விடம்.

கரு. கருவான் - கருமையையுடைய மேகம்; கரு - கருப்பமுமாம்.

கசு. வலயம் - வாகுவலயம்.

கஎ. ஆகரம் - இடம்.

கஅ. கடமுனி - அகத்தியர். ஒன்பான் மணிக்கலம் - நவரத்தினஹாரம். தார், மாலையென்பன மார்பிலிடப்படும் மாலைவிசேடங்கள்; "தாரு மாலையு மயங்கிக் கையற்று" என்பதனுலுணர்க; சிலப். மனையறம். ருரு.

கக. அருவத்திருமேனி நான்கு, உருவத்திருமேனி நான்கு, அருவுருவத்திருமேனி ஒன்று ஆக, கூ.

உO. கதிர் பன்னிரண்டு - பன்னிரண்டு சூரியர்கள்.

உக. மாதர் - அழகு. மேகலை ஆண்பாலார்க்குமுரியது. மழைக்கோள் - சுக்கிரன். அவன் செருக்கை யடக்குவதற்கு வைரவக்கடவுள் உண்டு அவனைத் திருவுதரத்தில் வைத்துக்கொண்டனரென்பது சிவபுராணகதை.வெளியினும், உம்மை-இறந்தது தழுவியது.

உஉ. உறுப்பு - நெற்றிக்கண்,நகை, கைவிரல், கால்விரல் முதலியன. மிகையே என்ன - அதிகங்களென்றுகண்டோர் சொல்லும்படி. தடறு - உறை.

உங. பொற்றொடர் - பொற்சங்கிலி. வரைதரு கருவி - எழுத்தாணி.

உச. வெள்ளிலை - வெற்றிலை.

உரு. மேதகு - ஆதனத்தே.

உசு. பாதுகை - பாதக்குறடு. மந்த - மெல்ல.

## நான்காவது.

க. திப்பிய போகம் - தெய்வ போகம். குண்டசண்டர் - குண்டரும் சண்டரும்; இவர்களிருவரும் முறையே வலப்பக்கத்தும் இடப்பக்கத்தும் நின்று பணிசெய்பவர்கள்; "குண்டனிற்கும் வலப்பாகம்" என்பர் பின்னும்; இ.

உ. அபயன் - சோழன். நணி - நண்ணி.

ங. உழை-மான். தளி-கோயில்.

ச. அகளம் - அருவம் ; சகளம் - உருவம்.

சு. நகரமண்டனம் - பட்டத்துயானையின் பெயர். பாகு - பாகன்.

எ. இலகடம் - யானைமேற்றவிசு.

## ஐந்தாவது.

க. பவனம் - அரண்மனை.

உ. நிலக்கொடி - பூமிதேவி.

ங. சிஞ்சுமாரம் - ஒருதெய்வம் ; இத்தெய்வப்பெயர் கிர்ஷ்ண யசுர்வேதத்தில் உ-ம் பிரச்நத்தில் கூ-ம் அநுவாகத்தில் கூறப்பட்டுள்ளதென்றும், இது முதலைவடிவமாகத் தியானிக்கப்படுமென்றும் இதன்தலை தருமம், இதன் கன்னங்கள் பிரமாவும் யஜ்ஞயமும், இதன் ஹ்ருதயம் விஷ்ணு, இதன் முன்கால்கள் அசுவினி தேவர்கள், இதன் நடுவுடல் அத்திரி, இதன்பின் கால்கள் மித்திரனும் வருணனும், இதன்வாலின் முதற்பாக முதலியன அக்கினி இந்திரன் முதலிய தேவர்களென்றும் பெரியோர் கூறுவர்.

ரு. நந்தல் - கெடுதல். கங்கணத்தைத்தரித்து.

எ. தாய - தாவிய.

அ. சோமாக்கந்தரென்னும் சிவலிங்கப்பெருமான் வேறு, புற்றிடங் கொண்ட சிவலிங்கப் பெருமான்வேறு. எல் - ஒளி.

கூ. திங்கள் - மாதம்.

கO. அருப்புமுல்லை-முல்லையரும்பு.

## ஆறவது.

க. மானிடமடங்கல் நாமவளவன் - நரசிங்கச்சோழன். சடங்கு -

கிரியை. மூடியமேகத்திற்கு உறை உவமை. அத்தாணி - அரசிருக்கை.

உ. குரோசம் - ஓரளவு. சோபானம் - படி; படிகள் முப்பத்திரண்டு.

ங. ஆசி சாற்ற.

ச. உலா - பவனி.

ரு. இயம் - வாத்தியம். நரலை - கடல்; முழங்குதலை யுடையது.

அ. கறை - உரல்.

கூ. இரவணம் - ஒட்டகம்.

கக. சாலிகை - கவசம்.

கரு. தெய்வயானம் - தெய்வ ஊர்தி; இங்கே சிவிகை.

கஅ. சாந்தாற்றி - விசிறி. களாசி - காளாஞ்சி. கேதனம் - கொடி. ஒலியல் - ஈயோட்டி.

ககூ. மகரிகை - மகரதோரணம்.

உo. கருந்தலை - இழிந்ததலை.

### ஏழாவது.

க. பெட்டு - விரும்பி.

ங. சமழ்ப்பு - நாணுதல்.

ச. குறடு - கட்டை. வயிறுகிழிதர.

ரு. வாலிய மருப்புப் பொருப்பு - வெள்ளிய கொம்புகளையுடைய மலைபோன்ற யானைகள். கரு புல் வான் - கருப்பம் பொருந்திய மேகம். கால் - வாய்க்கால்.

சு. பொருநை - தாம்பிரபன்னி.

எ. பிணர் - சருச்சரை. கவரி - எருமை.

அ. திருமாலாகிய மச்சத்தின் விழி யென்பைச் சிவபெருமான் மோதிரமாக அணிந்தனரென்பது சிவபுராணவரலாறு. பரன் திருவுரு - சிவசாரூபம்.

கூ. நியாயம் - தருக்கநூல். எண் - கணிதநூல்.

கக. கிள்ளி - சோழன். கருமம் - காரியம்.

கஉ. மன்னிய - மன்னும்படி.

### எட்டாவது.

உ. கைத்தீட்டு - கையெழுத்து.

ங. பரமயோகி - தியாகராசர். குந்தவல்வினை - ஈட்டிபோன்ற வலிய வினை. குடந்தமுற்று - கைகூப்பிமெய்வளைந்து.

ச. வணர் - வளைவு.

ரு. தறி - தூண். கழை - குத்துக்கோல். சுளித்து - கோபித்து. விளரி - ஒரு பண்.

எ. யாளியின் - சிங்கம்போல வெண்மையாக. தடித்து - மின்னல். ஓளி - ஒழுங்கு.

அ. இலாங்கலி - தென்னை.

கo. புலியடியை வாழைக்காய்க்கு உவமைகூறுவது மரபு.

கங. மருள் - உவமவுருபு.

கச. படலம் - கூட்டம்.

கரு. கனம் - மேகம்.

கஅ. வல்லி - விலங்கு.

ககூ. தன்னம் - அற்பம்.

உக. அரசபலாதிகன் - அரசனுலடையவேண்டிய பலனைக்காட்டிலும் அதிகபலனையடைபவன்.

### ஒன்பதாவது.

க. வள்ளற் கோமான் - தியாகராசர். மந்திரக்கொத்து - மந்திரிகளின் தொகுதி.

ரு. காணம் - பொன்.

### பத்தாவது.

உ. இறை - அற்பம்.

சு. கனிவாய் - கனிபோன்றவாய்.

எ. நோனு - பொறுத.

அ. கழுவாய் - பிராயச்சித்தம். மனு - மனுஸ்மிருதி; மந்திரமுமாம்.

### பதினொன்றாவது.

க. சிறுவிதி - தக்கன். கறுவி - கோபித்து.

உ. சேக்கள் - காளைகள்.

ரு. இட்டிகைகள் - செங்கற்கள்.

சு. பதிகர் - வழிச்செல்வோர். மயல் - சேத்தை. அவல் - பள்ளம்.

எ. நியாயம் மாறு உரைப்போர் - குதர்க்கம்செய்பவர். கேண்மியா - கேள்; மியா - முன்னிலையசை.

### பன்னிரண்டாவது.

ரு. கல்லாரம் - செங்கழுநீர்.

அ. கன்னலம்படப்பை - கருப்பந் தோட்டம்.

ங. உதீசித்திக்கு - வடதிசை. துடவை - தோட்டம்.

ரு. எய்தசோல் - எய்தஅம்பு. குத்திரம் - மலை. காழ் - வயிரம்.

கூ. கலாய்த்தார் - விரோதித்தார்.

க0. முடிப்பல் - நிறைவேற்றுவேன். மென்பூவன்றே - நீ முடித்தற்கு இது மெல்லியமலரன்று; 'வன்பூ' என்றபடி. (வன்பூ - பூமி.)

கக. கட்டிக்கொள்ளுவல் - கைப்பற்றிக் கொள்ளுவேன்; இடையில் தரித்துக்கொள்ளுவேனென்பது மற்றொருபொருள். கலிங்கம் - ஒருதேயம், ஆடை.

கங. சிறக்கணித்து - கடைக்கண்பார்வை செய்து.

கஎ. குறி - அடையாளம். உத்தம - விளி.

உக. பாடாணம் - கல். அரா - ஆடரவம்; பதஞ்சலி.

### பதின்மூன்றாவது.

க. கன்று - வளையல். என்று - சூரியன்.

ச. இது திருடர்களுடைய இயல்பு கூறுகின்றது. புழை - துவாரம். அஞ்சு அங்கு அகற்றி - அஞ்சுதலை அங்கே யொழித்து.

ங. விளையார் கருவி - பாளை.

ரு. ஈகை அரசன் - ஈதலையுடைய அரசன். உறல்-பூணல் வேண்டும் - வருந்துன்பத்தை அனுபவித்தல் வேண்டும்.

அ. நாகம் - மலை; இங்கே உதயகிரி. பாகம் - பங்கு.

கூ. மன்னன் - மேற்கூறிய கோசலமன்னன். சிறுகால் எதிரும் - தென்றற்காற்றுக்கு முன்னும்.

க0. நம் சார் அடைவார் பொருள்மன் - இப்பொருள்கள் நம்மிடத்தே வருப்பவர்களுக்கு உரிய பொருள்களல்லவோ; இவை காணப்படாமற்போயினவே. நனியாய பொன்மன் - மிகுதியான பொருள்களல்லவோ; இவைகள் காணமற்போயினவே; மன் இரண்டும் ஒழியிசைப் பொருளன.

கக. அத்தேயம் - கொங்கணம்.

கஉ. பட்டாங்கு - நடந்தபடியே.

கச. நேருபு - நேர்ந்து

கரு. வட்டை - வழி.

கசு. ஓராசையும் - ஒருகுற்றமும். ஐ - அசைநிலை. எம் பார் ஆசையென்று - எம்முடைய பூமியிலுள்ள பொன்னென்று. ஆர் அறியாதவர் - யாவர் அறியாதவர். இ கூர் ஆசையே - இந்த மிக்க திசைவழியே. குழியைப்பார்த்தி யென்றானென்க.

கஅ. பிறர்தம் வேங்கை - பிறருடைய பொன். அளியார் ஆரார் - அன்புடையவர்கள் அனுபவியார்; அளியாரென்பதற்கு வண்டு என்பது மற்றொருபொருள்; வண்டு அடாதவேங்கை - வண்டுகள் சேராத வேங்கைமலரைப்போலும் அப்பொன்; போழும் வேங்கை - பிளக்கும் புலியாகும்; தொடினும்வேம் கை - தொடாலும் கைகள்வேம்.

ககூ. வெறுக்கை - பொன்; பெயர், வெறுத்தல், தொழிற்பெயர்.

உ0. என்பார் மன் ஆசை - எனது பூமியில் நிலைபெற்ற பொன்.

உக. கலாம் - சண்டை. ந வாரிசத்தாள் - சிறப்புற்ற தாமரை மலர்போன்ற திருவடி.

உஉ. என்று என்றும் நாண் வில் தளி - சூரியன் எக்காலத்தும் நாணுகின்ற ஒளியையுடைய கோயில்.

உரு. ஆதிநூல் - வேதம்.

உச. விது மந்தரம் நீள் தறி மத்து என - சந்திரனையும் மந்தரமலையையும் முறையே நீண்ட தூணாகவும் மத்தாகவும். பதுமம் தவிசோன் - பிரமன்; மெலித்தல். மந்தி - வண்டு.

உரு. கதி ஆர் - விளங்குதல் பொருந்திய.

உஎ. கள்ளும் தொழிலோரும் திருடரும். அல்கிற்று - தங்கியது.

உகூ. திடர் - வலிமையுடையவர்.

**பதினான்காவது.**

உ. பூழியர் - பாண்டியர். பறம்பு - மலை.

ச. பசுபதி - உயிர்களுக்குத் தலைவர்; சிவபெருமான்; ஆன்களுக்குத் தலைவரென்பது மற்றொருபொருள். பசுக்களின் வலக்கண்ணிற் சூரியனும் இடக்கண்ணிற் சந்திரனும் வாழ்வார்கள்; "தேசுடையபரிதிமதி நயனத்தில்" என்பது சிவதரு. கோபுர. கஉச.

ரு. 'கொல்' என்பதை ஆம்பலுக்கும் கூட்டுக. தாமரை - மகாபத்மம். வெள்ளம், ஆம்பல், பதுமம், தாமரையென்பன ஒவ்வொரு பேரெண்களின் பெயர்கள்.

சு. ஆய ஆன் - அந்தப் பசுக்கள். புகூஉ - புகுந்து- அறல் - நீர். உடுமான - நக்ஷத்திரங்களை ஒப்ப; "காயமீனெனக் கலந்து காளிமை, மேய" என்பது சிந்தா. கோவிந். கரு. இரீஇ- இரிந்து; கெட்டு.

எ. உலா - ஆதியுலா. நம் சேரன்- நம்முடைய சேரமான் பெருமாள் நாயனார். பப்பிப்போய - பரவிப்போகிய.

அ. உதியன் - சேரன்.

கூ. வஞ்சியர்கோன் - சேரன்; வஞ்சி - சேரன் இராசதானி.

கக. கோதை - சேரன். மேதை- அறிவு.

கரு. குழீஇ - கூடி. நணி - நண்ணி. ஆனைத் தெரித்து - பசுவைத் தெரிவித்து.

கரு. புகூஉ - புகுந்து. வானவன்- சேரன்.

கஎ. தொழுவம் - பசுக்கொட்டில்.

கஅ. வஞ்சியேன் - வஞ்சிநகரத்தையுடையேன், வஞ்சிப்பேனல்லேன். இச்செய்யுளில் வஞ்சியேனென்பது முதலியன, "வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன், வஞ்சியா னென்பதனுல் வாய்நேர்ந்தேன் - வஞ்சியான், வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான், வஞ்சியாய் வஞ்சியார் கோ" என்னும் பழையவெண்பாவின் கருத்தைத் தழுவியிருத்தல் காண்க.

---

## தியாகராசலீலையின்

# விஷய சூசிகை.

[இதிற் சிலசொற்களும் உள்ளன.]


| | பக்கம். | | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அகத்தியமுனிவர் | ரு | அநபாயன் | சசு | அருவிகள் | கஅ |
| அகப்பற்று | உரு | அப்புவின்குறி | ருஅ | அல்லியங்கோதை | ச |
| அங்கநாடு | எரு | அம்பாசங்கரன் | எகூ | அவந்திநாடு | எரு |
| அசபாநடனம் | ச | அரசபலாதிகன் | எசு | அறக்கருணை | க |
| அசலேசர் | உ | அரசர்வீதி | சரு | அறுபத்துமூவர் | சு |
| அசுத்தமாயை | உஉ | அரண்மனை | எஉ | அன்னசத்திரம் | சஅ |
| அசோகமரம் | ருஉ | அராகமுதலியன | உஉ | அன்னப்பறவை | கஅ |
| அடியுரிக்குமாடை | சுரு | அருச்சுனன் | ருசு | ஆகாசவிநாயகர் | க |

பக்கம்.

ஆடகேசர் ௩
ஆடரவக்கிண்கிணி ௩, ௫௭
ஆடாது ஆடுவார் ௪௫
ஆதிசைவர்வீதி ௪௭
ஆதியுலா ௮௬
ஆயுதவகைகள் ௩௬
ஆழித்தேர் ௩௯, ௪௫
ஆன்மார்த்தபூசை ௧௫
ஆனந்தேசர் ௩
ஆனாயநாயனார் ௧௬
இடைநகர்வளம் ௩௬
இந்திரன்செய்புற்று ௩௫
இந்திரன்மள்ளனானமை ௪௮
இந்திரவில் ௪0
இந்திரனைவணங்கல் ௨௨
இராமன்பூசித்தது ௩௬
இருந்தாடழகர் ௩௧
இலக்கணக்குற்றம் ௮
இலக்கணபாடம் ௪௭
இலக்கணம் ௨௧
இலக்கியம் ௨௧
இளைசைமாறர் ௪௪
இறையனார் ௩0
உடைவாள் ௬௭
உப்பு ௨௬
உலோகங்களைப்பற்றுசிட்டு ஒற்றுமைப்படுத்தல் ௨0
உலோகாயதன் ௪௭
எயினச்சாதி ௨௭
எருமை ௧௮, ௨0
எழுத்தாணி ௬௭
ஏகபாதஉருத்திரர் ௪௫
ஏரண்டபுரம் ௨௩
ஏழிலைம்பாலைமரம் ௫௨
ஏறுதழுவல் ௧௬
ஐந்துமலம் ௨௩
ஐயனார்சந்நிதி ௧௪
ஒட்டகங்கள் ௭௧
கங்கணம் ௬௭
கங்காகுலம் ௪௪
கங்காநதி ௭௩

பக்கம்.

கட்டியத்தொழில் ௭0
கண்ணப்பர் ௧௨
கண்ணன் ௨0, ௨௧, ௩௮
கண்மணிமாலை ௬௬
கத்தியிரண்டு ௬௭
கத்தூரிப்பூச்சு ௬௬
கபிலையாறு ௬௩
கம்பாநதி ௧௯
கம்பிக்காதழகர் ௩௩, ௬0, ௬௧
கமலாம்பிகை ௪, ௫0
கரண்டமகுடம் ௪
கருநிறப்பொட்டு ௬௫
கலன்கவிழ்த்தோர் ௬௧
கலிங்கதேசம் ௮0
கவரி ௭௨
கவலைக்கிழங்கு ௧௩
களைகள் எடுத்தல் ௨௩
காஞ்சிநகரம் ௫௮, ௭௩
காட்டுக்கோழி ௧௭
காந்தாரநாடு ௭௫
காப்பியப்பாடம் ௪௭
காம்போசநாடு ௭௫, ௮0
காயாமரம் ௧௬
காவிரி ௧௯, ௭௨
காளான் ௧௭
கிண்கிணிக்கால், ௬௨, ௭௬
கிண்கிணித்தாட்சிங்காதனசிந்தாமணி ௧௮
கிளி ௫௩
கீற்றுச்சந்தனம் ௬௫
கூட்டிகாசனம் ௪
குடகநாடு ௭௪
குண்டசண்டர் ௬௭, ௭௧
குண்டர் ௬௮
குண்டையூர்க்கிழவர், ௨௫, ௪௪
குண்டோதரன் ௧௯
குதிரைகள் ௩௪, ௭௧
குதிரைவென்றி ௪௬
குயில் ௫௩
குராமரம் ௨௮, ௫௨
குருட்டரிப்பான் ௪௫
குருந்தமரம் ௧௬

பக்கம்.

குறிஞ்சிவளம் ௧௩
குறும்பூழ்வென்றி ௪௬
கோண்டி ௫௧
கொழு ௨௧
கொன்றைமரம் ௧௬
கோங்கமரம் ௨௮
கோசலநாடு ௭௫
கோதாவரிநதி ௭௩
கோபுரங்கள் ௪௯
கோபுரவாயில்கள் ௪௯
கோழிவென்றி ௪௬
சங்கப்பலகை ௩0
சங்கப்புலவர் ௩0
சங்கரசேவகச்சோழன் ௫௮, ௭௬
சஞ்சிதமுதலியன ௫௩
சண்டேசநாயனார், திருவிழாவிற்குத்திருமுகமெழுதுதல் ௬
சந்திரஹாரம் ௬௬
சபாபதி ௪
சரக்குமூட்டை ௪௪
சரபம் ௬௧
சிஞ்சுமாரமென்னுந்தெய்வம் ௬௯
சித்தீசர் ௩
சிவகாமசுந்தரியம்மை ௫
சிவஞானபோதம் ௧௬
சிவதத்தன் ௭௩, ௭௬
சிவபுராணம் ௫௪
சிவபெருமான்வலைவீசியது ௨௭
சிவல்வென்றி ௪௬
சிவாகமபாடம் ௪௭
சின்னப்பூ ௨௪
சீதை ௨௭
சுக்கிரனைவைரவர்விழுங்கியது ௩௮, ௬௭
சுத்தத்தத்துவங்கள் ௫௧
சுத்தமத்தளமுதலியஐந்து ௫௧
சுத்தமாயை ௨௨
சுதன்மை ௩௯

பக்கம்.
சுந்தரமூர்த்திநாயனார், ௬, ௨௬, ௩௪, ௩௮
சுரூக்கொம்பின்பூசை, ௨௬
சூதமுனிவர் ௫௪
செங்கழுநீர்ப்பூ ௩, ௬௬
செங்கோல் ௬௭
செந்தாமரைநாறியதிருவீதி ௩௧
செவ்வந்தித்தோடு ௩
செவிப்பூ ௬௬
சேரமான்பெருமாணாயனார் ௩௪, ௮௬
சேவென்றி ௪௬
சைவசாஸ்திரம் ௪௭
சைவம் ௨௧
சோபாவதி ௬௦, ௬௮
சோமாக்கந்தர் ௩, ௬௯
சோழநாடு ௯
சோழவிநாயகர் ௨
தகர்வென்றி ௪௬
தண்டியடிகணாயனார்விழிபெற்றது ௫௬
தண்ணீர்ப்பந்தர்கள் ௪௯
தயிர் ௧௬
தலைச்சாத்து ௬௩
தவக்குறை ௬௧
தக்ஷிணாமூர்த்தி ௫
தாம்பிரபன்னி ௧௯, ௭௩
தாலிபெருகிற்றென்பது ௮
திணைமயக்கம் ௨௮
தியாகராசர்கோயிலிற்சாளரங்கள் ௫௦
தியாகராசர்திருவிளையாடல் முந்நூற்றறுபதென்பது ௫௭
தியாகராசர்துதி, ௩, ௬௨
தியாகராசர்வசந்தமண்டபம் ௪௪
தியாகராசர்விமானம், ௫௦
தியாகராசருடையஅரசக்கோலம் ௬௫

பக்கம்.
தியாகராசருடையஅரண்மனையினிடம் ௬௩
தியாகராசரின் நந்தி ௫௦
தியாகராசருடையவலத்திருவடி ௩௩
திரிபுண்டரம் ௬௫
திரியம்பகமந்திரம் ௬௯
திரியம்பகயாகம் ௬௯
திருக்கழுக்குன்றம் ௨௮
திருக்கோயில் ௪௯
திருக்கோயில்முதலியனஐவைந்துவேலியென்பது ௨௫
திருக்கோயிலிலுள்ளபற்பலஆலயங்கள் ௫௦
திருஞானசம்பந்தர் ௬
திருடரியல்பு ௮௨
திருநந்திதேவர் ௫, ௬௪, ௬௮, ௭௧
திருநாவுக்கரசர், ௬, ௧௪
திருப்பனந்தாட்சிவலிங்கப் பெருமான் ௨௨
திருப்புகலூர் ௧௪
திருப்பெருந்துறை ௧௬
திருமணிமுத்தாறு ௩௨
திருவாதவூரடிகள் ௬
திருவாரூர் ௩௦, ௩௧
திருவாரூர் பிரணவஸ்தலம் ௩௦
திருவாரூர் பூமிதேவியின் இதயகமலம் ௪௯
திருவாரூர் விராட்புருஷன் மூலாதாரம், ௩௦
திருவாரூர்வீதி ௭௨
திருவாரூர்த்தெய்வம் ௩௬
திருவாவடுதுறை அம்பலவாணமுனிவர் ௭
திருவாவடுதுறைப்பஞ்சாக்கரதேசிகர் ௭
திருவிரிஞ்சைச் சிவலிங்கப்பெருமான் ௨௪
திருவீழிமிழலை ௨௯

பக்கம்.
தினை ௧௩
தீக்ஷைசெய்வித்தல் ௪௭
துர்க்கை ௨௮
துரும்பைக்கொண்டு வலியையளந்தது ௮
துளுவநாடு ௭௪
துன்னூசி ௨௧
தூவாயர் ௪௧
தேர்கள் ௩௫, ௭௦
தேர்வென்றி ௪௬
தேவதீர்த்தம் ௩௨, ௫௬
தேவாசிரயம்௭, ௪௯, ௫௯
தேவாரஇனிமை ௨௯
தொண்டைநாடு ௫௮
நக்கீரர் ௩௨
நகரமண்டனம் ௬௮
நடுக்கந்தீர்த்தவிநாயகர் ௨
நந்தவனங்கள் ௩௩
நரசிங்கச்சோழன் ௬௦
நரசிங்கம் ௬௧
நவந்தருபேதம் ௨௦
நவரத்நஹாரம் ௬௬
நளன்பூசித்தது ௩௫
நாகபிலத்தை இந்திரன் அடைத்தது ௩௪
நாவாய்கள் ௨௬
நிட்களசத்தி ௪
நிட்களசிவம் ௨
நிடதநாடு ௭௫
நிலைத்தேர் ௪௧
நின்றசெல்வத்திருவாரூர் ௨, ௭, ௫௬
நீதிகுதூகலன், ௬௪, ௭௧, ௭௬
நுணலை ௨௪
நெய்தல்நிலம் சண்டைக்குறித்து ௨௬
நெல்லி ௨௮
நைமிசமுனிவர்கள் ௫௩
பங்குனித்திருநாள் ௬
பசலைக்கொடி ௧௮
பசுக்கள் ௧௭, ௮௬
பஞ்சபூதத்தினிறம் ௪௫

| | பக்கம். |
|---|---|
| பஞ்சாக்ஷரஜபம் | ௫௪ |
| படைச்சால் | ௨௧ |
| பந்தும்பாவையும் | ௪௨ |
| பரத்தையர்வீதி | ௪௨ |
| பரதர் | ௨௬ |
| பரவையுண்மண்டளி, | ௪௧ |
| பராசத்திதவம் | ௯ |
| பராபரைமந்திரம் | ௬௯ |
| பராபரையந்திரம் | ௬௩ |
| பல்லவநாடு | ௭௫ |
| பலராமர் | ௧௮ |
| பலாச்சுளை | ௧௪ |
| பழவகைகள் | ௩௬ |
| பற்றுசு | ௨௦ |
| பனைகள் | ௨௬ |
| பாஞ்சாலநாடு | ௭௫ |
| பாண்டியன் | ௩௪ |
| பாண்டிநாடு | ௭௪, ௮௬ |
| பாணபத்திரர் | ௪௪ |
| பாதிரி | ௨௮ |
| பார்வைமிருகம் | ௧௪ |
| பாலாறு | ௭௩ |
| பாலைவளம் | ௨௭ |
| பிரகிருதிமாயை | ௨௨ |
| பிரணவப்பொருள் | ௧ |
| பிறையிடுதல் | ௨௧ |
| பிள்ளையில்லாமை | ௫௯ |
| புத்தியென்றல் | ௬௩ |
| புத்திரன் | ௫௯ |
| புராணங்கள் | ௫௭ |
| புலி | ௬௧ |
| புலிநகக்கொன்றை | ௧௩ |
| புற்றிடங்கொண்டவர் | ௫௯, ௪௨ |
| புற்றிடங்கொண்டவர் விமானம் | ௫௦ |
| புற்றிலெழுந்தசோதி, | ௪௨, ௫௨ |
| புறப்பற்று | ௨௩ |
| புறவிடை | ௮௧ |
| பூங்கூடை | ௩௩ |

| | பக்கம். |
|---|---|
| பூங்கோயில் | ௪௯, ௫௯ |
| பூணூல் | ௬௬ |
| பூமிபொன்னிறம் | ௭௫ |
| பூவைவென்றி | ௪௬ |
| பேரி | ௧௬ |
| பொற்கவசம் | ௬௬ |
| மகரதோரணம் | ௪௦ |
| மங்கலமென்னுமூர் | ௧௯ |
| மடைப்புலவர் | ௪௩ |
| மதக்கொள்கைகள் | ௨௧ |
| மதில் | ௪௨ |
| மதின்மேல்இடபம் | ௪௯ |
| மதுரை | ௮௬ |
| மந்திகள் | ௩௨ |
| மயில் | ௧௩ |
| மருதவளம் | ௧௭ |
| மலைநாடு | ௭௪ |
| மலைநெல் | ௧௪ |
| மழைவளம் | ௧௦ |
| மறக்கருணை | ௧ |
| மறையவர்வீதி | ௪௬ |
| மனுநீதிகண்டசோழர், | ௯ |
| மனுவரசன் | ௪௧ |
| மனைக்கிணறு | ௧௮ |
| மாணாக்கர் | ௨௨ |
| மாணிக்கமகுடம் | ௬௬ |
| மாணிக்கவாசகர் ஊமையைப் பேசுவித்தது முதலியன | ௨௪ |
| மாதுளைமரம் | ௫௨ |
| மாம்பழம் | ௫௨ |
| மாலைக்குரிய ஐங்குற்றங்கள் | ௮ |
| மாற்றுரைத்த விநாயகர் | ௨ |
| மான் | ௧௬ |
| மீளகுகொடி | ௧௩ |
| மீசை | ௧௪ |
| மீன்கள் | ௧௯ |
| முசுகுந்தசக்கரவர்த்தி | ௬ |
| முத்துக்குண்டலம் | ௬௬ |

| | பக்கம். |
|---|---|
| முத்துமாலை | ௬௬ |
| மும்மலம் | ௨௩ |
| முயலின்தன்மை | ௧௬ |
| முருகக்கடவுள் | ௫ |
| மேகலை | ௬௭ |
| மேழி | ௨௧ |
| மேஷராசி | ௩௮ |
| மோதிரம் | ௬௭ |
| யானைகள் | ௩௪, ௭௦ |
| யானைவென்றி | ௪௬ |
| யோகபீடம் | ௪ |
| வசந்தம் | ௩௯ |
| வஞ்சிநகரம் | ௮௮ |
| வயிரக்கச்சை | ௬௭ |
| வன்மீகநாதர் | ௨ |
| வாகுவலயம் | ௬௬ |
| வாகை | ௨௮ |
| வாணாசுரன் | ௨௦ |
| வாத்தியங்கள் | ௭௦ |
| வாதாவிவிநாயகர், | ௧, ௫, ௫௯ |
| வாய்க்கால்கள் | ௨௨ |
| விசிறி | ௭௨ |
| விட்டவாயில்விநாயகர், | ௧ |
| விடைக்கொடி | ௩௮ |
| விளாக்கோலுதல் | ௨௧ |
| விளாமரம் | ௫௨ |
| வீதிவிடங்கர் | ௩ |
| வீதிவிடங்கர் பவனி, | ௩௯ |
| வீரகிண்கிணிக்கால், | ௭௨, ௭௪, ௭௬ |
| வீரர்கள் | ௩௬, ௭௧ |
| வெண்ணெய் | ௧௬ |
| வேட்டை | ௬௦ |
| வேம்பு | ௨௮ |
| வேய்ங்குழல் | ௧௬ |
| வேளாளர்வீதி | ௪௩ |
| வைகரிமுதலியன | ௨௨ |
| வைசயந்தம் | ௩௯ |
| வைசியர்வீதி | ௪௪ |
| வையைநதி | ௧௯ |
| வைரவக்கடவுள் | ௫ |